
www.padippakam.com

டிசம்பர் - 2005
ரூ.15

# புதிய கோடாங்கி



# வரலாற்றில் யூகங்கள்



நேர் காணல்
**கெய்ல் ஓம்வெட்**

படிப்பகம்

www.padippakam.com

# தேசிய கருத்தரங்கு

நிகழ்ச்சி ஏற்பாடு : சத்யபாமா நிகர்நிலை பல்கலைக் கழகம் மற்றும்
பன்னாட்டு தலித் ஆய்வு மய்யம்

நாள் : 18, 19 டிசம்பர் 2005

இடம் : சத்யபாமா நிகர்நிலை பல்கலைக்கழக வளாகம், சென்னை

பொருள் : **தலித் நிலவுரிமை மற்றும் தனியார் துறையில் ஒதுக்கீடு**

கருத்துரையாளர்கள் :

முனைவர் **ஆனந்த் டெல்டும்பே**, மும்பை

**கோபால் குரு**, புது தில்லி

**அசோக் பாரதி**, புது தில்லி

**மீனா கந்தசாமி**, சென்னை

முனைவர் **தங்கராஜ்**, சென்னை

**மு. சந்ரு**, சென்னை

**தங்கராஜ்** IAS, பெங்களூர்

பேரா. **ஜாஃபட்**, பெங்களூர்

**கே. கோபால் ஐயர்**, சண்டிகர்

**லக்ஷ்மையா**, ஐதராபாத்

**சிவகாமி**, சென்னை

ஒருங்கிணைப்பு : புதிய கோடாங்கி

*குறிப்பு : சுமார் 300 பேருக்கு உணவு உறையுள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சென்னை நகரமல்லாத பிறபகுதியிலிருந்து வருபவர்களுக்கு தங்கும் வசதியில் முன்னுரிமை அளிக்கப்படும்.*

**துவக்க விழாவில் ஆயிரம் பேர் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

தொடர்புக்கு :

ராஜா , 98842-88550

10, டிசம்பர் 2005 க்கு முன்பாக பதிவு செய்ய வேண்டுகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com




புதிய

கோடாங்கி

மலர் 5 - இதழ் 6
டிசம்பர் 2005

*ஆசிரியர்*
ஆட்ரி ஜேனட் ஜோசப்

*இதழ் வடிவமைப்பு*
யாக்கன்

*சந்தா*
ஆண்டுக் கட்டணம் - ரூ. 150/-
வாழ்நாள் கட்டணம் - ரூ. 1,000/-

அயல் நாட்டினருக்கு
தனி இதழ்: US $ 2

ஆண்டுக் கட்டணம்
US $ 20

*விளம்பரம்*
அரைப்பக்கம் ரூ. 10,000/-
முழுப்பக்கம் ரூ. 20,000/-
பின்/உள் அட்டை ரூ. 50,000/-



*தொடர்பு முகவரி*
705, 101-ஆவது தெரு
15-ஆவது செக்டார்
கே.கே. நகர்
சென்னை 600078
Mobile : 98404 - 49204
puthiakodangi@yahoo.co.in


தினசரியாகட்டும், தொலைக்காட்சியாகட்டும், தொடர்ந்து தீவிரவாதத்தில் ஈடுபடுபவர்கள் இஸ்லாமியர்கள் மற்றும் சமூகத்தால் கடுமையாக ஒடுக்கப்படும் பிரிவினர்கள் என்ற பிரச்சாரம் வெளிப்படுகிறது. ஜனநாயக வழிகள் அடைக்கப்படும்போதுதான் தீவிரவாதம் தலையெடுக்கிறது. சமத்துவமும் சகோதரத்துவமும் இருந்தால்தான் ஜனநாயகம் தழைக்கும். இந்தப் பிரச்சாரங்களைப் பார்க்கும்போது சமத்துவத்தைக் கொணர்ந்து சகோதரத்துவத்திற்கு வழிவகுப்பதில் நமது அரசுகள் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து வருகிறது என்பது புலனாகிறது.

இந்துத்துவமும் சாதியமும்தான் இதற்கான காரணங்கள் என்றும் சொல்லாமலே விளங்குகிறது. பன்மைத் தன்மையை எல்லாவிதங்களிலும் கடைப்பிடிப்பதும், அதை எல்லாத் தளங்களிலும் நியதியாக்குவதும்தான் சகோதரத்தும் தழைக்க வழி செய்வதாகும். பன்மைத் தன்மை என்பது வாய்ப்புகளையும் வளங்களையும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிப்பதே. இந்துத்துவப் பிரச்சார பீரங்கிகளாக செயல்படும் நாளேடுகள் நடுநிலையாக இருந்து இவற்றையும் எழுதுவார்களா?

தலித் நிலவுரிமை பிரச்சாரம் டிசம்பர் 12-ஐ ஒட்டி பரவலாக தமிழகமெங்கும் நடந்து வருகிறது. துண்டறிக்கைகள் இவ்விதழில் பிரசுரமாகின்றன. புதிய கோடாங்கி வாசகர்கள் அந்தந்த மாவட்டங்களில் நடக்கும் நிலவுரிமை கருத்தரங்கில் கலந்து கொள்ளவேண்டும்.

சத்யபாமா நிகர்நிலை பல்கலைக்கழக வளாகத்தில் தலித் நில உரிமை மற்றும் தனியார் துறையில் ஒதுக்கீடு என்ற பொருளில் டிசம்பர் 18 மற்றும் 19 தேதிகளில் நடக்கும் தேசிய கருத்தரங்கில் புதிய கோடாங்கி வாசகர்களை கலந்து கொள்ள அழைப்பு விடுக்கின்றோம். தங்கள் வருகையை டிசம்பர் 10 தேதிக்கு முன்பாக பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

●

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளே...



| | | |
|---|---|---|
| செவந்தான் - சிறுகதை | உஞ்சை அரசன் | 3 |
| வரலாற்றில் யூகங்கள் - தொடர் | சிவகாமி | 8 |
| நாடு - கவிதை | வை. சரண்யா | 11 |
| நாரங்க என்னத்தீங் சாமி சொல்றது - சிறுகதை | வா.மு. கோபு | 13 |
| வலி - மொழிபெயர்ப்புக் கவிதை | பொன். குமார் | 15 |
| வரலாறு யாரை விடுதலை செய்யும் - தொடர் | அ. ராமசாமி | 16 |
| ஆண்கள், பெண்கள், முதியவர்கள் | கோபு | 18 |
| கணிதம் நம் உடைமை - தொடர் | சந்திரன் | 20 |
| பிரிவினை வளர்க்கும் உட்சாதி | அ. தயாளன் | 22 |
| காலியான பாட்டில்கள் - சிறுகதை | புதிய மாதவி | 24 |
| கெய்ல் ஓம்வெட்டுடன் ஓர் நேர்காணல் | மீனா கந்தசாமி | 30 |
| கேள்வி பதில் | முனிமா | 36 |
| கற்பூரம் - சிறுகதை | வசந்த கன்னியப்பன் | 37 |
| மக்கள் அறியாத அம்பேத்கர் - தொடர் | சந்திரன் | 41 |
| வரலாற்றை மொழிதல் - தொடர் | ஸ்டாலின் ராஜாங்கம் | 44 |
| கடைசி குடிமகன் | சந்திரன் | 46 |
| மாறுவேசம் - தொடர்கதை | சந்திரன் | 50 |
| பெண்ணியப் பார்வையில் நாடகங்கள் | கே.ஏ. குணசேகரன் | 53 |
| தமிழக பழங்குடியினர் நிலவுரிமை | சிவகாமி | 57 |


படிப்பகம்

www.padippakam.com

# செவந்தான்

■ உஞ்சை அரசன்



ஆசாரி செவந்தான்னா எல்லாருக்கும் தெரியும். குஞ்சு குலுப்பான் முதல் கூன் விழுந்த கெழம் வரைக்கும் ஆசாரி செவந்தான், இல்லேன்னா செவந்தான் ஆசாரின்னே தான் அழைப்பாக. செவந்தானுக்குத் தெரியாத தொழில்ன்னு எதுவுமில்லை. ஓடும்புள்ளெ மாதிரி தொட்டதுக்கெல் லாம் இவருதான். பொறந்த குழந்தைக்குப் புதுச் சட்டை வாங்கணும்ன்னாலும், இறந்தவுகளுக்கு எழவு சொல்ல னும்ன்னாலும் செவந்தானாசாரிதான். எண்பது வயதானா லும் இடுப்பு அசந்து உட்கார மாட்டாரு. அருவேலை பெருவேலைன்னாலும் அசதிகொள்ள மாட்டாரு. அது வும் ஆத்திலெ தண்ணி வந்துட்டா ஆசாரிக்கு ஓய்வு ஒழிச்சல் இருக்காது. வண்டி, கலப்பை, நோத்தடி, மம் பட்டி அது இதுன்னு மரவேலை பூரா இவருதான் பார்க்க ணும். மம்பட்டி புடி போட்டார்ன்னா வெட்ட வெட்ட கை சளைக்காது. அப்புடி வாகா இருக்கும். தச்ச வேலை மட்டுமில்லே, கொல்லு வேலையிலேயிருந்து கொசு வேலை வரைக்கும் தெரிஞ்சவரு. செய்நேர்த்தி தெரிஞ்ச செவந்தானாசாரின்னு ஊரே மெச்சும்.

ஊருன்னா இதுவொரு ஊருதான்ய்யா. நல்ல வளமான பூமி. வெள்ளாமை வெளைச்சல் நெறஞ்சி மக்க மனுச வயிறாரச் சாப்புடுற ஊரு. குடிபடைக அதிக முண்டு. ஏழெட்டுச் சாதிக. வெள்ளாளச் சாதிதான் அதிகம். ஆதிக்கமெல்லாம். வலைய வீடு, பறைய வீடு, குசு வீடு, வண்ணா வீடு, ஆசாரி, பரியாரின்னு தேவைக்குத் தக்கன இருந்தாக. யாருக்கும் வேலையில்லேன்னு இல்லை. எல்லாருக்கும் வேலை இருக்கும். வகுத்து வச்சபடி அவரவர் வேலை அவரவர்க்கு. வெள்ளாளச் சாதிதான் வெவசாயமெல்லாம். சில பேருக்கு கொஞ்சம் வெவ சாயம் இருந்தாலும் மத்த சாதிக அனைத்தும் குடிவேலை பாக்குறவுகதான். ஆண்டுக்கு இம்புட்டுன்னு கூலி. ஆதி காலந்தொட்டு இதான் வழக்கம். அளக்காமல் போறவு களுமுண்டு. கேள்வி நாயமில்லை. தர்றதை வாங்கிக்க ணும். இல்லேன்னா ஊரு ஒதுக்கி வச்சிரும். அப்புறம் தொண்டை வறண்டாக்கூட ஒரு வாய் தண்ணிக் கிடைக் காது. வாயோட வார்த்தை பேச மாட்டாக. அப்படி யொரு கட்டுப்பாடு.

தெருன்னு சொல்ற அளவுக்கு வீடுகளில்லை. முப் பது நாப்பது வீடுகளிருந்தாலும் இந்த ஐந்தாறு வீடுக மட்டும் தனித்தாப்புல இருக்குதுக. அதுனாலேயோ என்னவோ இதைவொரு தெருன்னுதான் சொல்லுற வழக்கம். ஆசாரி செவந்தானெ மொதன்மையா வச்சி ஆசாரி தெருன்னு ஆச்சு. செவந்தான்தான் தலைமை. இவருக்கு கீழே ரெண்டு பேரு எடுபிடிகளாட்டம். ஊருலெ உள்ள வேலைக பூரா வந்து குவியும். ராத்திரி பகன்னு இல்லாம பட்டறையில வேலை நடக்கும். அரக் கப்பறக்க வேலை பார்த்தாலும் தங்கிப் போகும் வேலை. நடவு நின்னு போச்சின்னு கண்டபடிக்குத் திட்டுவாக. பயந்து பயந்து வேலை பாக்கணும். இடுப்பை ஆத்த முடி யாது. உசிரைக் கொடுத்து ஒழைச்சாலும் பெருந்தனக் காரகளுஞ்சரி, சிறுதனக்காரகளுஞ்சரி, எல்லாரும் ஒரே மாதிரிதான் அளப்பாக. கட்டுப்படியாகாத கூலிதான். பத்து ஏர்க்காரவுகளும் ரெண்டு ஏர்க்காரவுகளுஞ் சரி... ஒரே மாதிரி அளக்கிறியளென்னா ஊரு கூடும். வரம்பு மீறிப் பேசுனதா வம்புக்கு நிப்பாக. பயந்து பயந்துதான் வாழணும். இப்படியேதான் எல்லாத் தொழில்காரவு களுக்கும். அளக்கிறத வாங்கிக்கிட்டு அடங்கிப் போக ணும். கேட்டாக்க இந்த ஊருல மட்டுமில்லப்பா... எல்லா ஊர்லேயும் இப்படித்தான்னு சாட்சிக்கு காட்டுவாக.

இப்படிக் கட்டுபடியாகமெத்தான் வீரையா ஆசாரி வகையறா ஊரெவிட்டே போயிட்டாக. வேலை சேந்து போனா வீரையா ஆசாரி செவந்தானத்தான் ஒதவி ஒத்தா சைக்கு வச்சிக்குவார். இப்படி எடுபுடியா இருந்த செவந் தானுக்கு ஆசாரி வேலை அத்துப்படியாச்சு. கூட மாட வந்த செவந்தான் வகையறாக்களுக்கும் வேலை தெரிஞ்சி போச்சு. வீரையா ஆசாரிக்கி வேலை மேலெ வெறுப்புத் தான் வந்திச்சு. தம் புள்ளெகளெ எப்படியும் படிக்க வைக்கணும்ன்னும் இந்தக் குலத்தொழிலை வாரிசுக செய்யக்கூடாதுன்னும் வைராக்கியமா சாதிச்சுட்டாரு. வீரையா ஆசாரி ஆளு இல்லேங்கிற கொறை வைக்காமெ செவந்தானுக்கு கத்துக் குடுத்திட்டாரு. செவந்தானும் படிப்படியா வெட்டுமெ வேலைக்கிப் போறதை விட்டுட்டு பட்டறையிலே நேரத்தைக் கழிச்சாரு. செவந்தானும் ஒடந்தையா நின்ன உறவுக்காரர்களும் பறையன்ங்கதான்



படிப்பகம்

www.padippakam.com

னாலும் ஆசாரிங்கிற பட்டம் அரவணைத்துக்கிடுச்சி. பறத்தெருன்னாலோ, பறையன்னாலோ பெல்லாக் கோவம் வரும் செவந்தானுக்கு ஆசாரிங்கனும், இல்லேன்னா ஆசாரி தெருவாசிங்கனும்ன்னு. ரொம்பவும் கௌரவம் பார்த்தார் செவந்தானாசாரி.

செவந்தான் வகையறாக்களை தவிர மத்த பறையன்ங்க குடும்பத்தை பறத்தெருன்னுதான் அழைப்பாக. பறத்தெரு ரெண்டாகிப் போய் பழங்கதையானது. ஆசாரின்னு அழைக்கிறதிலெ பூரிச்சுப் போனாலும் எட்டுலெ தப்புலெ குடி வேலைக்கும் போறதுண்டு. பங்கு உரிமையெ விட்டுக் குடுக்க மனசு வராது. அதுவுங் கோயில்ன்னா விட்டே குடுக்க மாட்டார். பொங்கப் பானையும் வெட்டுத் தலையும் கட்டாயம் வந்தேயாகணும். அதுக்காகவே, பந்த வேலை, சப்பர வேலைன்னு பாத்தாலும் தப்படிக் கிறதெ விடமாட்டார் செவந்தான்.

நல்ல நா, பெரிய நாளைக்கி வேளாயி கூப்புடாமெ இருக்காது. வேலைப் பளுவா வீட்டிலெ இருந்தாலும் வேளாயி விடாது. வேளானும் கத்துவார். தப்பித்தவறி போகாமெ இருந்தாக்கூட ஆளுவிட்டு கூப்புடும் வேளாயி. அப்படித்தான் ஒருநா, அதான் போன தீபாவளிக்கி, செவந்தான் குடிவேளாண் வீட்டுக்குப் போகலெ. தீபாவளியும் அதுவுமா வெல்லனாவே தம் பொஞ்சாதியோட மக வீட்டுக்குப் போயிட்டாரு. அன்னைக்கி முழுவதும் காணாம். மய்க்கா நா காலையிலே வேளாண் பொண்டாட்டி ஆளுவிட்டுக் கூப்பிட்டு இருக்கு. வேளாண் வீட்டுலெ கூப்புடுறாகன்னவொடனெ என்னமோ ஏதோன்னு ஆசாரி போயிருக்கு. நேத்தைக்கி ஏன் வரலேன்னு கேட்டுப் புட்டு ஒனக்காக வச்சிருந்தேன்... செவந்தான் திண்ணு டான்னு... வேளாயி கொஞ்சம் பலகாரம் கொடுத்திருக்கு. எடுத்துப் புட்டுப் பாத்தா எல்லாம் ஊசிப் போயிருந் திருக்கு... ஏத்தா வேளாயி... குடிப்பறையன்ன சொணை கெட்டவனா... என்னதான் நீங்க குடுக்கிறதெ வாங்கித் தின்றவனா இருந்தாலும் குப்பையிலெ கொட்ட வேண் டியதெல்லாம் தின்ங்கச் சொல்றியலென்னு கேட்டுப் புட்டு விர்ருன்னு போயி குப்பையிலெ கொட்டுனது ஊருக்கே தெரிஞ்சி போச்சு. ஆனாலெ... செவந்தான் முன்னை மாதிரி இல்லேப்பா அவன்ம் பேச்சும் செயலும் ரொம்ப மாறிப் போச்சின்னு குடியானவுகளெல்லாம் பேசிக்கிட்டாக. மாணிக்க வேளாண் நேராகவே கேட்டும் புட்டார். ஒரு குடியானவெம் பொண்டாட்டி குடுத்த பலகாரத்தை நல்லால்லேன்னு அவுக முன்னாடியே குப்பையிலே கொட்டுனது வேளாய்யெ அவமதிச்சாப்லெ இல்லென்னார். வேளாரே... எங்க தேசங்கு இருந்தானெ... அவன் எப்படிச் செத்தான்னு ஒங்களுக்கு தெரியாத தில்லே. கோயிந்தக் கோனாரு பொஞ்சாதி குடுத்த பழைய தொட்டுக்கிறலை திண்ணுட்டுத்தான் வயிறு ஊதிச் செத்தான். நாங்க என்ன நாயெ விடக் கேவலமான வன்ங்களாய்யா...ன்னு கேட்டு வேளாண் வாயெ அடைச் சாரு.

செவந்தான் ஆசாரிக்கிட்டெ எல்லாரும் கொஞ்சம் எச்சரிக்கையாய்ப் பேசுவாக. எடக்குமொடக்கப் பேசிப் புடுவாரு. அப்படித்தான் ஒருநா சின்னதும் பெரியதுமா ரெண்டு பாயெ நெஞ்சி எடுத்துக்கிட்டு விக்கலாமுன்னு வேளாந்தெருவுக்குள்ளெ போயிருக்காரு. பெரம வேளாண்ம் பொண்டாட்டி இவரெக் கூப்புட்டு பாய் விக்கிறியான்னு கேட்டிருக்கு. இல்லெ வாங்கிட்டு வாரேன். ஒங்க வீட்

**முன்னெ ஒரு நா மூக்கன் மகன் செருப்புப் போட்டுக்கிட்டு கடைக்கி வந்தாங்கிறதுக்காக செருப்ப தலையிலேயே தூக்கிட்டு நடக்கச் சொல்லி அடிச்ச மாதிரி ஊர்வலம் போக வச்சிப்புடுவேன்...**

டிலெ ரெண்டு பாயிருந்தாக் குடுத்தா...ன்றிருக்கார். ஒங் கிண்டலும் கேலியும் ஒஞ் சாவோடதான்ம் போகும்ன்னு சரி... சரி... வெலையெச் சொல்லு... ன்னிச்சு வேளாயி. ஆமாமா எஞ்சாவோட போயி எம் பேயோட வரும். அப்ப பாய் விக்க மாட்டேன், பாடைதான் விப்பேன் னார்... அங்கேயும் ஆசாரி வேலைதானா... சரி... வெலை யெச் சொல்லு செவந்தான்னிச்சு. வெலையா... வெலை... கோரையும் பாயும் கொம்புலெ ஏறி நிக்கி. சோடி அறு வது ரூவா... ன்னார். சோடி அறுவதா? செவந்தான்? நீ சந்தை கடைக்கிப் போயிருக்கியா, இல்லையா? சோடி இருவத்தஞ்சுன்னு சிரிப்பா சிரிக்குது. நீ என்னடான்னா கொல்லு கொலைக்கி அஞ்சாமெ வெலை சொல் றேன்னு வேளாயி சொன்னதுதான் பாத்துக்க... ஒடனே, கொண்டு வந்த பாய் ரெண்டையும் பக்கத்திலெ இருந்த தென்னை மரத்திலெ கட்டிவச்சி, ஒப்புராவன ஒப்பந் தன்னானே... வக்காளெ ஒலி பாயெ... நான் ஆறு கொள முன்னு அலைஞ்சி திரிஞ்சி, கோரையறுத்து, காடு கரை யின்னு பாக்காமெ கல்லுலையும் முள்ளுலையும் கத் தாளெ கிழிச்சி, பக்குவப்படுத்தி, குக்குன காலெ நீட்டாமெ பாயெ நெஞ்சி வச்சா நீ கொழுப்பெடுத்துப்போய் சந்தையிலெ நின்னு சிரிப்பா சிரிக்கிற...ன்னு சொல்லிக் கிட்டே, எடவாறைக் கழட்டி மே மூச்சு சீ மூச்சு வாங்குற வரைக்கும் அடிச்சிருக்காரு. வேளாயி அப்படியே விக்கித் துப் போய் செலையாட்டம் நின்னுருச்சி. இப்படி செவந் தான் ஆசாரி சொல்லாலும் செயலாலும் உணர்த்தக் கூடியவர்.

எவ்வருசமுமில்லாமெ இந்த வருசம் ஆத்திலெ தண்ணி வந்திச்சு. கூலிக்காரன் குடியானவன் எல்லாருக் கும் அம்புட்டு மகிழ்ச்சி. இந்த வருசமாவது நாலு பூத்துப் போகும். வயிறாற கஞ்சி குடிக்கலாம்...ன்னு ஆளாளுக்குப் பரபரத்தாங்க. குப்பையடிக்கிறதென்ன, வெதை நெல்லு வாங்குறதென்னன்னு விவசாய வேலை தொடங்கிருச்சி. ரெண்டு மூனு வருச்மா வெள்ளாமெ இல்லே. சாத்தின கலப்பை நோத்தடியெ இந்த வருசந்தான் விவசாயிங்க எடுக்குறாங்க. ஒவ்வொரு வருசமும் விவசாயம் தொடங்கு றப்ப விவசாயக் கருவிகளெ சீர்பண்ணுவதும் தேவைக் கேத்த மாதிரி புதிய கலப்பை, மோத்தடி, மம்பட்டி இதுகளெ செஞ்சிக்கிறதும் வழக்கம்.

எல்லாரும் இப்ப செவந்தான் ஆசாரிக்கிட்டதான் மரவேலை பாத்துக்கணும். ஆத்திலெ தண்ணி வந்திட்டா செவந்தான் ரொம்பச் சுறுசுறுப்பாயிடுவார். சுத்துப்பட்டு



படிப்பகம்

www.padippakam.com

**செவந்தான்ம் போட்ட கேசுதான்ய்யான்னும், வப்பாட்டி பல தடவெ சொத்தெழுதிக் கேட்டுப் பாத்திட்டு கடைசியா பொறுமையிழந்து கொன்னு தூக்கிட்டாய்யான்னும் பேச்சு கசிஞ்சிச்சு.**

ஆளுகளெல்லாம் மம்பட்டிப்புடி போட செவந்தான் கிட்டேதான் வருவாக. அப்படி எழைச்சி எழைச்சி போடு வார். அதுக்காகத்தான் மாணிக்க வேளாண் மம்பட்டிப் போட செவந்தான் ஆசாரிக்கிட்டே வந்தார். மாணிக்க வேளாண் ஊர்லெ பெரிய ஆளு. ஆணு பொண்ணு அத்தனையும் பயப்படும். அப்பேற்பட்டவர். யாருக்கும் எதுக்கும் பயப்பட மாட்டார். தான் வச்சதுதான் சட்டம்னு சொல்லுவார். போலீசு கோர்ட்டுன்னு படியேறுன தில்லை. அப்பன் பாட்டன் சொத்து மட்டுமில்லாமெ அடாவடியாச் சேத்த சொத்து இவருக்கு ஏராளம். குடி கூத்தின்னு ஏகப்பிரபலமானவர். அசலூர்லெ நெரந்தரமா ஒருத்தியோட சேத்தி. இப்படியான விசயத்தை இவரு மாதிரி ஆளுகக்கிட்டே ரொம்ப பெருமையாய் பீத்து வாரு. அறுவது வயதானாலும் ஆசை கொறையாதவர். ஒரு படி உமியெக் கையாலெ அள்ளித் தூக்குற பலமிருக் கிற வரைக்கும் பொண்டுக சகவாசம் வச்சிக்கலாம்பார்.

செவந்தான் ஆசாரி, மம்பட்டிக் கழியெ வாங்கி தான் வச்சிருந்த அளவு குச்சியால் அளந்து பாத்தார். கழி நல்ல வைரம் பாஞ்ச கழி. புடிக்கி நல்லா வரும். போட்டுத் தர்றேன். ஆனா இந்தாப் பாருங்க வேளாண். ஏகப்பட்ட வேலை. இந்த வருஷம் எல்லாரும் ஒட்டுமொத்தமா வேலை தொடங்குனதாலெ எனக்கு நெருக்கடியாயிருச்சி. புடியெப் போட்டுட்டுப் போங்க. ரெண்டு மூணு நாளா வது ஆகும்ன்னு வதவதன்னு பேசி முடிச்சார் ஆசாரி.

ஓம் புத்தியைக் காட்டுறெ. பறவாழ்வு கொறை வாழ்வுடா. ஆனா நீ ஆசாரியாயிட்டே. அதான்ங் கெடு வக்கிறே. எல்லாருக்கிட்டேயும் நீ சொல்றது சரிடா செவந்தான். ஆனா என்ங்கிட்டேயும் சொல்றியெ, சரியாடா! நாளைக்கி ஓம் பங்காளிகதான் வரப்பு வெட்ட வர்றான்ங்க. அஞ்சாளு. அஞ்சாளுக்கும் மம்பட்டி தேவைன்னா பாத்துக்க. எந்தச் சராவுஞ் சொல்லாமெ நாளைக்கி மம்பட்டி வந்திடணும்... ன்னு எப்போதும் போலவே மாணிக்க வேளாண் பேசினார். வேளாண் நீங்க கராறாப் பேசுறதுன்னா எங்கேயாச்சும் எடுத்துக் கிட்டுப் போங்க. என்னெயக் கொறை சொல்லப்புடாது. ஒங்களுக்காகத்தான் ஒருவாரம் ஆகுங்கிறதெ ரெண்டு நாள்லெ தர்றேங்கிறேன். மம்பட்டியெ மட்டும் நானே கைப்படப் பாக்குறதாலெ ரெண்டு நாங்கிறது அதிக மில்லே. மறக்காமெ மம்பட்டிய குடுத்து விடுங்க. பழுக்கக் காச்சி கச்சிதமா கூவெ வளைச்சி சும்மா நச்ன்னு போட்டுத்தாறேன். காசு இருந்தா பத்தோ இருவதோ குடுத்திட்டு போங்க. வாயெல்லாம் நமநமங்குது. ரெண்டு கொவளை ஊத்துனாத்தான் சரிப்பட்டு வரும்...ன்னார் செவந்தான். பத்தியா அடி மடியிலெ கையெ வைக்கிற. ஏண்டா செவந்தா்ன், இருக்கிற கடனெ என்னை வச்சி தீத்துக்கலாம்ன்னு பாக்குறியா. வெட்டு ஒன்னு துண்டு ரெண்டு எல்லாருக்கிட்டேயும் பேசுற மாதிரி என்ங்கிட்டே பேசாதே. நான் சொன்னாச் சொன்னது தான்னு சொல்லிக்கிட்டே சுருட்டை வாயிலெ வச்சி ஆழ இழுத்து புகையெ ஊதுனபடியே நடந்தார்.

என்னதானானாலும் செவந்தானால் முன்னே மாதிரி வேலை செய்ய முடியலெ. பல வேலை. கட்டை வண்டி, கலப்பை, மம்பட்டி, அது இதுன்னு சிறு வேலை பெரு வேலைன்னு நெருக்குதலாயிருத்துச்சு. சொன்னாச் சொன்னபடி வேலையெ முடிச்சுக்குடுக்க முடியலெ. மாணிக்க வேளாண் சொன்ன ஒரு நாளும் போயி, செவந் தானாசாரி சொன்ன ரெண்டாம் நாளும் போயிரிச்சு. மாணிக்க வேளாண் பொல்லா ஆளு பொசுக்குனு கை நீட்டுவாரு. மரியாதை போயிரும்ன்னு செவந்தானாசாரி மனசு பதைபதைத்தார். ஊருக்கு ஒருத்தன் செவந்தான். ஊரு வேலை பூராவும் பாக்கிறதுன்னா இந்தளவுக்காவது கெஞ்சி... அடுத்தவூருக்குத் தூக்கிட்டுப் போகாமெ தாங்கிக்கிறானேன்னு பாராட்டவுஞ் செய்யிறவுகளு முண்டு. இந்த மாதிரி எல்லாம் புரிஞ்சிக்கிறவரில்லை மாணிக்க வேளாண். தனக்குப் பின்தான் எல்லாம் என் றெண்ணுபவர். இன்னும் புடி போட்டுத்தரலையேன்னு ரொம்ப அவசரப்பட்டார், செவந்தான் மேலே ஆத்திரப் பட்டார்.

மாரிக்கண்ணு, மாரிக்கண்ணுன்னு ஒரு பொண்ணு இருக்கா. மாணிக்க வேளாண்முட்டு குறுவை நடவுக்கு வர்றதா ஒத்துக்கிட்டா. அன்னைக்கின்னு பார்த்து மகனுக்கு சரியான காய்ச்சல். மாணிக்க வேளாணைப் பத்தி மாரிக்கு நல்லாத்தெரியும். சொந்தஞ் சோளின்னு கூடப் பாக்காமெ சண்டைக்கு நிக்கிறவரு. கருப்பன்ஞ் சாம்பான் மகளாச்செ. சும்மாவா விடுவாரு. அப்படியும் மாரிக்கண்ணு தனக்குப் பதிலா பூங்கொடியெ கெஞ்சிக் கூத்தாடி நடவுக்கு அனுப்பியிருந்தா. அப்படியிருந்தும் மாணிக்க வேளாண் சும்மா விடலெ. மாரிக்கண்ணு ஒருநா பாலக்கட்டைக்கு குளிக்க போகையிலெ, ஆம்புள பொம்புளெ நிக்கிறாகன்னு பாக்காமெ நடவு எனக் குன்னு தெரிஞ்சும் வரலெயெடி பறமுண்டெ... ஒனக்கு அம்புட்டுத் துமுரா...ன்னு சொல்லிக்கிட்டே மாரியோட சீலையெப் புடிச்சி உறிஞ்சி ஆத்திலெ வீசிப்புட்டாரு. கொண்டுபோன பாவாடையெ மேலாக்காப் போட்டுக் கிட்டு அழுதுகிட்டே வந்திருக்கா. கருவுலெ நின்ன மரத்தை வெலைபேசிக்கிட்டு நின்ன செவந்தான் மாரிக்கண்ணெ வழிமறிச்சி என்னன்னு கேட்டுப்புட்டு வேளாண் மேலெ ரொம்பவும் ஆத்திரப்பட்டிருக்கார். அத்தோட மாரிக்கண்ணு ஊருக்குள்ளெ கூலிவேலைக் கிப் போறதையே நிறுத்திப்புட்டு சித்தாளு வேலைக்கு போயிடுறா. அப்பேற்பட்ட ஆளு மாணிக்க வேளாண்.

காலுத்தோட மம்பட்டியை அடிச்சித் தரலியேன்னு செவந்தான் மேலெ கோவமா இருந்தாரு வேளாண். மம்பட்டிப்புடியெல்லாம் நல்லா எழைச்சி துளைகிளை யெல்லாம் போட்டுட்டாரு செவந்தான். பட்டறை பத்த வைக்கயிலெ இதையுஞ் சேத்து அடிக்கலாமுன்னு வச்சிட்டாரு. அனேகமா இன்னைக்கிச் சாய்ந்தரம் முடிஞ்சிடும். கையோட மணியார் வீட்லெ கெடக்கிற பூவரசங்கட்டையெப் பாத்திட்டு வந்திடலாமுன்னு அளவு குச்சியெ எடுத்துக்கிட்டுப் போனார். அளவு குச்சின்னுதான் பேரு. ஆனா கழி மாதிரி கைப்புடிங்கிற



படிப்பகம்

www.padippakam.com

அளவுக்கு கனம். இந்தக் குச்சி செவந்தானுக்கு அளவு கோல் மட்டுமில்லே. ஊன்றுகோலும் இதுதான். செவந்தானுக்கு சுருட்டுப்பழக்கம். வாயெல்லாம் நமநமத்தது ராவுத்தரு கடைவழியாப் போனா தேவலாம். ராவுத்தருக் கிட்டே வழக்கமா வாங்குற விசிறி சுருட்டு ஒன்னு கேட்டார். இந்த ஒரு சுருட்டு ரெண்டு நாளைக்கி தேறும். வாங்கிட்டு திரும்புனார். என்னடா செவந்தான். மம்பட்டி அடிச்சிட்டியா, இல்லெ முடிச்சிட்டியான்னு வேளாண் கேட்க... அப்பத்தான் வேளாண் இருக்கிறதெ செவந்தான் பார்த்திருக்கிறார். சாயங்காலம் வாங்க வேளாண். ஒங்களெ வச்சிக்கிட்டு வாரு வாத்து அடிக்கலாம்ன்னு வச்சிட்டேன்...ன்னு சொன்னதுதான் பாருங்க. வக்காள ஒலி, எதுத்தாடா பேசுரெ... பறக்கூதி... தப்படிக்கிற பறப்பயலுக்கு ஆசாரிப் பட்டங் கொடுத்தா அம்புட்டுத் துமுரான்னு சொன்னவாக்கில் செவந்தான் வச்சிருந்த அளவு குச்சியெப் புடுங்கிட்டு மடார் மடார்ன்னு நாளைஞ்சி அடி அடிச்சிருக்காரு. செய்யிர வேலையெ ஒழுங்காச் செய்யணும். யாருன்ன நெனைச்செ எங்கிட்டேயே ஒன் ஆட்டத்தைக் காட்டுறியா? மரியாதையா இன்னம் ஒரு மணி நேரத்திலெ மம்பட்டி வர்லெ... முன்னெ ஒரு நா மூக்கன் மகன் செருப்புப் போட்டுக்கிட்டு கடைக்கி வந்தாங்கிறதுக்காக செருப்ப தலையிலேயே தூக்கிட்டு நடக்கச் சொல்லி அடிச்ச மாதிரி ஊர்வலம் போக வச்சிப்புடுவேன்...ன்னு ஆத்திரம் அடங்கத் திட்டித் தீர்த்துப்புட்டு ராவத்தரு கடையிலெ சோடாவெ எடுத்து மூஞ்சியெக் கழுவிப்புட்டு ஒன்னுமே நடக்காத மாதிரி சாவகாசமாய் போனார்.

நிலை தடுமாறிய செவந்தான் ஆசாரிக்கி ஒன்னுமே புரியலெ. துக்கித்து போய் நின்னுட்டார். எல்லாரும் வேடிக்கை பாத்தாகலேயொழிய ஒருத்தரும் வந்து வெலக்கலெ. அடிக்காதீங்க வேளாண்ன்னு சொல்லல. இது ஒரு தப்பாய்யா? சாயங்காலம் வாங்கன்னது தப்பா? வார்த்தை வரலெ. ஆத்திரம் நெஞ்சை அடைத்தது. கோவம் கோவமா வந்திச்சு. வெளிக்காட்டிக்க முடியலெ. எந்தத் தப்புஞ் செய்யாத என்னை அனாதை மாதிரி அடிச்சுப்புட்டானெ. எந்தெருக்காரன்ங்களோட சண்டை போட்டப்பக்கூட அடிவாங்கினதில்லையே. அப்படியென்ன தப்புப் பண்ணிட்டேன்னு... நினைக்க நினைக்க செவந்தானுக்கு அழுகை அழுகையா வந்திருச்சி. கடைக் கல்லுக்கால்லெ அப்படியே சாய்ஞ்சிக்கிட்டு உக்காந்திட்டார். ரொம்ப நேரம் பேசாமெயே உக்காந்திருந்தவரு நெடுமூச்செறிஞ்சப்படியே எந்திரிச்சி துண்டை ஒதறி தோள்ளெ போட்டவரு... ஒப்புறானெ ஒப்பந்தன்னானெ... இந்தச் செவந்தான் ஆசாரி யாருன்னு காட்டுறேன்...னு சொன்னபடியே வீட்டுக்கு போனார்.

ராத்திரி ரொம்ப நேரமாகியும் ஆசாரிக்கு தூக்கம் வரலெ. பொரண்டு பெரண்டு படுத்தார். துக்கம் தொண்டையை அடைத்தது. மனசு கனத்தது. என்னென்னமோ நெனவுலெ வந்திச்சு. அவன் வீட்டுக்கு எம்புட்டு ஒழைச்சிருப்பேன். போன வருசம் வெள்ளாமை நல்லாயில்லேடான்னு பாதி கூலியாக கொடுத்தப்பக்கூட நம்ம வேளாண் தான்னு மறுவார்த்தை பேசாமெ விட்டுக் குடுத்தேனே... வக்காள ஒலியை திருப்பி அடிக்க முடியாமையா. ஊர்லெ நாலுபேரு நாலுதெப்பேசுவாகலேன்னு... யாண்டா செவந்தான்... அந்தாளுதான் மொறட்டுப் புத்திக்காரனாச்செ... நீ கொஞ்சம் தாழ்ந்து போகக் கூடாதுன்னு கேப்பாகலேன்னு விட்டது தப்பாப் போச்சே. இப்

**ஆத்திரம் நெஞ்சை அடைத்தது.**
**கோவம் கோவமா வந்திச்சு.**
**வெளிக்காட்டிக்க முடியலெ.**
**எந்தத் தப்புஞ் செய்யாத என்னை**
**அனாதை மாதிரி அடிச்**
**சுப்புட்டானெ.**
**எந்தெருக்காரன்ங்களோட**
**சண்டை போட்டப்பக்கூட**
**அடிவாங்கினதில்லையே.**
**அப்படி யென்ன தப்புப்**
**பண்ணிட்டேன்னு... நினைக்க**
**நினைக்க செவந்தானுக்கு**
**அழுகை அழுகையா வந்திருச்சி.**

படியே விட்டு விட்டுப் பழக்கமாப் போச்சு. மாரிக்கண்ணு மாராப்பெப் புடிச்சி இழுத்தன்னக்கே அவனெ மானங் கெடுத்திருக்கணும்... அவனுக்கும் ஒரு உசிரு... நமக்கும் ஒரு உசிரு. அவன்ங் கொரவலையெ கடிச்சி ரெத்தத்தை உறிஞ்சி இருக்கணும். ச்.ச்.செ... அவமானமால்ல போச்சு...ன்னு பலமாதிரி நெனவுக ஆசாரியெ அரிச்சுத் தின்னிச்சு. என்னமோ ஒரு முடிவெடுத்தவருமாதிரி அசந்திட்டாரு. மொதக் கோழி கூவுறப்பவே எந்திருச்சிறவர் மருமக வெண்ணிலா எழுப்புனப்பத்தான் எந்திரிச்சார்.

கொடத்தடிக்குப் போய் ஒரு வாய் தண்ணி அள்ளிக் கொப்பளித்துவிட்டு ஈரக் கையாலெ மொகத்தைத் துடைச்சிக்கிட்டு மேத்துண்டால துடைத்துக் கொண்டார். மடியிலிருந்த மடிச்சிலைப்பையை எடுத்து முடிச்சை அவிழ்த்தார். நேத்து வச்ச ரூவாயெ எடுத்துப் பாத்துப்புட்டு மறுபடியும் பைக்குள் வச்சிக்கிட்டார். இன்னேரம் காரு வந்தாலும் வந்திரும்னு பரபரத்தார். மருமகக்கிட்டே ஒரு செம்பு நீராகாரத்தை வாங்கிக் குடிச்சிட்டு போலீசுக்குப் போரேத்தா... தம்பிக்கிட்டே சொல்லிப்புடுன்னு விருவிருன்னு நடந்தார். என்ன எதுக்குன்னு சொல்லாமெப் போவுதே. மச்சான்ங் கேட்டா என்ன சொல்லறதுன்னு மருமக நெனச்சா.

காவல் நிலைய வாசல்லெ போய் நின்னுட்டார். ஆசாரி. குடுப்பமா வேணாமான்னு மனசுக்குள்ளே ரொம்பவும் குழம்பினார். பங்காளி பகுத்தாளிக சண்டைன்னு நாளஞ்சி தடவெ கச்சேரிக்கி வந்திருக்காரே யொழிய வேரெ வெவரமொன்னுந் தெரியாது. என்ன எழுதரது, எப்புடி எழுதுரது... யாரெ வச்சி எழுதரதுன்னு புரியலெ. காலங்காத்தாலேங்கிறதாலெ வெளியாளுக யாருமில்லே. ஆசாரி மட்டுந்தான். மத்தபடி நாளைஞ்சி போலீசுகளும் ஒரு பொம்பளெப் போலீசும் இருந்திருக்காக. ஊரெ நெனைச்சி கொஞ்சம் பயம் வந்தாலும் போலீசெ நெனச்சி ரொம்பப் பயமா இருந்திச்சு. பலவாறா கேப்பாகலேன்னு திக்திக்குன்னு இருந்திச்சு. போயிறலாமான்னு தோணிச்சு ஆசாரிக்கு. அதுக்குள்ளே ஏட்டையா வாய்யா பெரியவரேன்னு கூப்புட்டாரு. ஆனது ஆகட்டும்ன்னு ஆசாரி உள்ளே போயிட்டாரு.

கும்புடுரேன்ஞ் சாமின்னு சொன்னவரு, போலீசுக



படிப்பகம்

www.padippakam.com

கேட்டதுக்கெல்லாம் பதிலுச் சொல்லிப்புட்டு, நேத்து மாணிக்க வேளாண்ஞ் செஞ்ச செயலெப்பத்தி வெவரமாச் சொல்லியிருக்காரு. கொஞ்சம் யொசிச்ச ஏட்டையா கட.கடன்னு மனுவெ எழுதி இவருகிட்டே ஒரு கையெழுத்தெ வாங்கிட்டு நூறு ரூவா பணங்குடுய்யான்னும்வாங்கிகிட்டார். அய்யா எங்க சாதியெப்பத்திப்பேசுனா சட்டமிருக்காமுல்ல அந்தக் கேசுலெ போட்டியலாய் யான்னு வெவரமுங் கேட்டுக்கிட்டாரு

ஊரே அமளி துமளி பட்டுப் போச்சி. மாணிக்க வேளாண் மேலே ஆசாரி கேசு போட்டானாமுல்ல. அதுவுந் தீண்டாமைக் கேசாம். போலீசு வந்திட்டுப் போச்சாம். மாட்டுனான்ய்யா மாணிக்கவேளாண்... கச்சேரி கோர்ட்டெல்லாம் கால்தூசிக்குச் சமம்ன்னு பேசுனான்ய்யா வேளாண். செவந்தான் வச்சான்ய்யா ஆப்புன்னு ஆளாளுக்குப் பேசிக்கிட்டாக. என்னதான் இருந்தாலும் ஊர்லெ சொல்லி ஞாயம் கேட்டிருக்கலாம். ஆசாரி அவசரப்பட்டுட்டான்ய்யான்னும்... என்ன செவந்தான் பெரிய தப்பு பண்ணிட்டான். பெரிய மனுசன்னு பாக்காமெ எட்டி ஒதைச்சா யாருக்குத்தான் ஆத்திரம் வராது.. பொறுத்துப் பொறுத்துப் பாத்தான்ங்க. கடைசியா போட்டு விட்டான்ங்க. இனி யாச்சும் மாணிக்க வேளாண் மாதிரி ஆளுங்க அடங்குறான்ங்களான்னு பாப்போம்ன்னு ஊரே ரெண்டுபடச் பேசிச்சு.

ரெண்டு நாளாயிருச்சு. மாணிக்க வேளாண் ஊருலெ இல்லெ. ஊருக்குள்ளே ஒளிஞ்சுக்கிட்டாரா, ஊரெவிட்டே ஓடிப் போயிட்டாரான்னு தெரியலெ. போலீசு வர்றதும்... பஞ்சாயத்துத் தலைவருக்கிட்டே வரச் சொல்லுங்க, சுமுகமாக முடிக்கப் பாருங்கன்னு சொல்றதுமா இருந்துச்சு. மாணிக்க வேளாண் வந்தபாடில்லெ. ஒரு தகவலுங் கெடைக்கலெ. கடைசியா அசலூர்லெ அவரு வப்பாட்டி வீட்லெ இருக்கிறதா குசு குசுன்னு பேச்சு அடிபட்டது. போலீசு விடுறமாதிரி இல்லே. ஆசாரி செவந்தானுக்கு நாளாக நாளாக பயம்புடிச்சிப் போச்சி. போலீசு இப்படியே விட்டுருமா... ஊராளுக வேறெ மெரட்டுறாக...ன்னு பல மாதிரி ஆசாரிக்கு எண்ணம் ஓடிச்சு. ஆசாரி தெருக்காரவுகளுக்கும் அச்சம் ஏற்பட்டுச்சு. இனியாச்சும் நம்மளுக்கு விடிவு வரும்ய்யா? சத்தெ அமைதியா இருங்கன்னு எளந்தாரிக தைரியப் படுத்தினாக.

டீக்கடையிலெ கசாமுசான்னு காதுங்காதுமாப் பேசிக் கிட்டாக. கொஞ்ச நேரத்திலெ வழக்குத்து மாறா டீக்கடை வாசல்லெ கூட்டம். மாணிக்கவேளாண் தூக்கு மாட்டிக்கிட்டது உண்மைதான்ய்யான்னு ராம வேளாண் எல்லாரோட சந்தேகத்தையும் போக்கிட்டாரு. எல்லாருக்கும் நம்ப முடியலெ. அம்புட்டுத் துணிச்சல்கார்ரு மாணிக்க வேளாண். எல்லாத்துக்குங் காரணம் செவந்தான்ம் போட்ட கேசுதான்ய்யான்னும், வப்பாட்டி பல தடவெ சொத்தெழுதிக் கேட்டுப் பாத்திட்டு கடைசியா பொறுமையிழந்து கொன்னு தூக்கிட்டாய்யான்னும் பேச்சு கசிஞ்சிச்சு. உண்மையிலேயே ஆசாரி செவந்தானும் தெருவுக்காரவுகளும் ரொம்பவும் பயந்து போனாக.

எப்படித்தான் போலீசுக்குத் தெரியுமோ, யாருதான் சொன்னாகளோ, திமுதிமுன்னு ஊருபூரா போலீசு குவிஞ்சிடுச்சு. ஆசாரி தெருவுக்கு அம்பது போலீசுக்கு மேலெ பாதுக்காப்புன்னு நீட்டுட்டாக. இன்னம் ஒரு



மணி நேரத்திலெ மாணிக்க வேளாண் பொணம் வந்துடும்னு பேசிக்கிட்டாக. பெரிய பெரிய அதிகாரிகளெல்லாம் வந்துட்டாக. ஒட்டு மொத்தமா ஊரே கூடிக் கெடந்தது. அடுத்தடுத்த ஊருகள்ளேயிருந்தெல்லாம் வேளாணுக்கு வேண்டப்பட்டவுகளெல்லாம் வரத் தொடங்கிட்டாக. செவந்தான் ஆசாரியும் தெருஆட்களும் தெருவை விட்டு வெளியே வரலெ. ஒண்ணு ரெண்டுன்னு செவந்தானெப் பேச ஆரம்பிச்சிட்டாக. வேளாண் இன்னைக்குத்தானா இப்புடிச் செஞ்சாரு. அந்தக் காலத்திலேர்ந்து அவருகிட்டே அடிபடாத ஆளு யாரு. அப்புடி விட்டிட வேண்டியதுதானே... காலம் போன காலத்திலெ இவருக்கு ஏன்ய்யா கெட்ட பேருன்னு.. செவந்தான் மகனே திட்ட ஆரம்பிச்சுட்டான். தப்புப் பண்ணிட்டோமோன்னு செவந்தானுக்கு உள்ளூரப் பயம் புடிச்சிருச்சு. வேளாண் தூக்கு மாட்டிக்கிட்டதுக்கும் அப்புச்சி கேசு குடுத்ததுக்கும் சம்பந்தப்படுத்தி நாமலே ஏன் பேசணும்... என்ன நடந் தாலும் சட்டம் இருக்கு பாத்துக்குவோம்... கண்டதெ நெனச்சி பயப் படதீங்கன்னு- வளவன் தைரியப்படுத்தினான்.

ஊர்லெ ஏற்பட்ட சலசலப்பை அமைதிப்படுத்தினாரு அதிகாரி. செவந்தான் ஆசாரி கேசு குடுத்ததாலெ மனமொடைஞ்சி தூக்குப் போட்டுக் கிட்டாருங்கிறதெல்லாம் உண்மையில்லே. நாங்க தீர விசாரிச்சுட்டோம். நெஞ்சு வலியாலெ அவதிப்பட்டவரெ பக்கத்து ஊரு மருத்துவமனைக்கி தூக்கிட்டுப் போயி சேத்து அரைமணி நேரங்கழிச்சிதான் இறந்திருக்காரு.. இதுதான் உண்மை. மருத்துவருகிட்டே பேசி உறுதிப்படுத்திட்டேன். இதுக்கு முன்னாடி ஒரு தடவை நெஞ்சுவலி வந்ததா சொல்றாங்க. வீணா வதந்தியைப் பரப்பி கலவரத்தை உண்டாக்கிடாதீங்க. யாரும் யாரையும் பகையாப் பாக்க வேண்டாம். தயவு செஞ்சி பொணம் வந்ததும் வழக்கப்படி சடங்கெல்லாம் செஞ்சி சீக்கிரமா பொணத்தை எடுங்க... அதுவரைக்கும் நாங்க இங்கேதான் இருப்போம்...ன்னு பக்குவமா எடுத்துச் சொன்னாரு.

மொத மொதன்னு எந்தவொரு பறையனுமில்லாம வேளாண்முட்டுப் பொணம் சுடுகாட்டுக்குப் போனிச்சு.

■



படிப்பகம்

www.padippakam.com

# வரலாற்றில் யூகங்கள்

■ சிவகாமி



பிராமணர், சத்திரியர், வைசியர் என்று பிராமணியத்தை ஏற்றுக்கொண்டு பின்னாளில் வர்ணங்களாகப் பிரிந்திருந்த சமூகம், ரிக்வேத காலத்தில் பிராமணர் விஷூ, க்ஷாம் என்ற உபகுழுக்களை அடக்கிய ஒரே சமூகமாக இருந்துள்ளது. இவர்கள் மேய்ச்சல் தொழிலில் ஈடுபட்டிருந்த நாடோடிக் குழுவினர், ஆனால் இவர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட தாஸர், தஸ்யூக்கள், பாணிகள் என்ற உபகுழுக்களை அடக்கிய மாற்றுச் சமூகம் வாழ்ந்து வந்துள்ளது. இவர்கள்நிலைத்த வாழ்வினை மேற்கொண்டிருந்தவர்கள். இவர்களை சிந்துவெளி மக்களின் தொடர்ச்சியாக பார்க்கலாம் என்று சென்ற இதழில் பார்த்தோம்.

அம்பேத்கர் முன்வைத்த யூகங்களின்படி, நாடோடிக் குழுவினருக்கும் நிலைத்த வாழ்வினருக்குமான தொடர்ந்த சண்டைகளில் நிலைத்த வாழ்வினர் தோற்கடிக்கப்பட்டு நொறுக்கப்பட்டனர். இந்த யூகங்கள் ரிக்வேதம், சிந்துவெளி அகழ்வாராய்ச்சி சான்றுகள், நிலவி வரும் சமூகப் பழக்க வழக்கங்களை ஆய்வு செய்ததின் அடிப்படையில் நிறுவப்பட்டன. பிந்திய வேதகாலங்களில் தாஸர்கள் அடிமைகளாக்கப்பட்டிருந்தனர். தஸ்யூக்கள் மற்றும் பாணிகள் அடையாளங்களற்றுப் போயினர். இவ்விவரங்கள் தாஸர், தஸ்யூ, பாணி ஆகிய இனக்குழுவினரே நொறுக்கப்பட்ட நிலைத்த வாழ்வினர் என்பதை நிறுவுகின்றன. (இவையல்லாது சிறிய அளவிலான வெவ்வேறு பழங்குடி இனக்குழுக்களும் வாழ்ந்து வந்திருக்கின்றனர்.) நிலைத்த அடையாளமான நிலம் இவர்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது என்ற உண்மை இதில் பொதிந்துள்ளது. இவ் விவரங்களை இனிவரும் இதழ்களில் காண்போம்.

இடையில் வரலாற்றாளர் P.T. சீனிவாச அய்யங்கார் அவர்களின் அனுமானங்களுக்கும் ஆய்வுகளுக்கும் செல்ல வேண்டிய அவசியமுள்ளது. இவர் பல வரலாற்று நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் ஒன்று 'இந்தியாவின் கற்காலம்' (The Stone Age of India). இவரின் ஆய்வுகள் குறிப்பிடத்தகுந்தவை.

இன்று தமிழ் இலக்கிய தளத்தில், பல பழைய எழுத்தாளர்களின் படைப்புகள் கட்டுடைக்கப்பட்டு, அப்படைப்புகளில் யதார்த்தமாக ஊடுருவியிருக்கும் சாதியம் அடையாளம் காணப்பட்டிருக்கிறது. வரலாறும் இந்நோக்கில் கட்டுடைக்கப்பட்டு வருகின்றது. பொதுவான வரலாறு என்பது எதுவுமில்லை. வரலாறும், எழுதுபவரின் நோக்கில் வரையப்பட்ட புனைவுதான் என்று பரவலாகச் சொல்லப்பட்டு வருகின்றது. அவ்வகையில் அய்யங்காரின் வரலாற்றுப் பார்வையையும் நாம் கேள்விக்குட்படுத்துவோம்.

ஒரு நாட்டின் வரலாறு என்பது மனிதன் தோன்றியதிலிருந்து தொடங்கி, பழைய கற்காலம், புதிய கற்காலம், உலோகக்காலம் என்று வகைப்படுத்தப் படுகிறது. இவை யாவும் 'புராதன வரலாறு' என்ற பெரிய கட்டுக்குள் அடக்கப்படுகின்றன. இந்தப் புராதன வரலாற்றில் இடம் பெற்றவர்கள் பூர்வ குடிகள் எனவும், இடம் பெறாதவர்கள் அந்நாட்டைப் பொறுத்த வரையில் வந்தேறிகள் என்றும் அழைக்கப்படுகின்றனர். வேத மரபினரை ஆரியர்கள் எனவும், அவர்கள் சிந்துவெளியின் வீழ்ச்சியோடு, இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தைப் பரப்பியவர்கள் என்ற பரவலான கருத்து நிலவி வந்த கால கட்டத்தில் P.T. சீனிவாச அய்யங்கார் போன்றவர்கள் வரலாற்றை ஆய்வு செய்து வேதமரபினர் இந்தியாவில் புதிய கற்காலத்தில் வாழ்ந்தவர்கள் என்று எழுதியுள்ளார்கள். இவ்வகையில் எழுதப்பட்ட நூல்தான் 'இந்தியாவின் கற்காலம்' என்பதாகும்.

வந்தேறிகள், பூர்வ குடிகள் என்ற வகைப்பாடுகள் அரசியல்பாற்பட்டது. இதில் கவனிக்கப்பட வேண்டியது யார் ஒடுக்கப்பட்டு வாழ்வுரிமைகள் மறுக்கப்பட்டு வந்திருக்கின்றனர் என்பதே. புதிய கோடாங்கி ஆகஸ்ட் இதழில் 'பூர்வ குடிகள் எப்படி அடிமையானார்கள் - அமெரிக்க வரலாற்றிலிருந்து சில குறிப்புகள்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை நான் எழுதியிருந்தேன். அதில், நாடு பிடிக்கும் பேராசை காரணமாக ஐரோப்பியர்கள் அமெரிக்காவின் பூர்வகுடிகளை எப்படி அழித்தொழித்தார்கள் என்பதை விவரித்து, அமெரிக்க பூர்வ குடிகளின் நிலையையும் இந்தியாவில் தலித்துகளின் வாழ்நிலையையும் ஒப்பிட்டு, தலித்துகள் இந்நாட்டின் பூர்வ குடிகளாயிருக்கலாம் என்று எழுதியிருந்தேன். இக்கட்டுரைக்கு, பாரிஸில் வாழும் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர் சுகன் அவர்கள் எதிர்



படிப்பகம்

www.padippakam.com

வினை புரிந்திருந்தார். தனது எதிர் வினையில் மக்களில் ஒரு சாராரை பூர்வகுடிகள் என்று முன்னிறுத்துவது உலக முழுதும் பாஸிஸ போக்காக வளர்ந்து வருவதைச் சுட்டிக்காட்டி, இவ்வகைப் போக்கைத் தவிர்க்க வேண்டும் என எழுதியிருந்தார். அவர் கூற்று முற்றிலும் உண்மை. சீனிவாச அய்யங்காரைப் படிக்கும் எவர்க்கும் இது விளங்கும்.


ஆனால், ஒரு கேள்வி. இந்தியாவின் வளங்கள், அதிகாரமிக்க பதவிகள், ஊடகங்கள் என்று அனைத்தையும் தனது பிடிக்குள் கொண்டிருக்கும் ஒரு சமூகம், தனது உயர்வை நிலைநாட்டவும், தலித்துகள் மீதான ஒடுக்குமுறைக்கு நியாயம் கற்பிக்கவும், அவர்களைத் தொடர்ந்து அடிமைகளாக - தங்களது ஏவலாளர்களாக வைத்திருக்கவும் விரும்பி, தம்மை இந்நாட்டின் பூர்வ குடிகள் என்றழைத்துக் கொள்வதற்கும், இக்கருத்தை வலியுறுத்த P.T. சீனிவாச அய்யங்கார் போன்ற அறிஞர்கள் கருவிகளாவதற்கும், பூர்வ குடிகள் வாழ்வுரிமைகள் மறுக்கப்பட்டு அடிமைகளாக வாழ்கின்றார்கள்; எனவே அவர்களுக்கு சமவுரிமைகள் - சம அதிகாரம் வேண்டும் என்ற நோக்கில் வரலாற்றை ஆய்வு செய்து எழுத அம்பேத்கர் போன்றவர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொள்வதற்கும் வித்தியாசமில்லையா? அய்யங்காரும், அம்பேத்கரும் விசயத்தை ஒரே நோக்கத்தில்தான் அணுகுகிறார்களா? ஆக, பூர்வகுடிகள் என்ற சொல்லை அந்தந்த நாட்டில் நிலவி வரும் அரசியல் பொருளாதாரச் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு பார்க்க வேண்டுமே தவிர, பொத்தம் பொதுவாக 'பாஸிஸம்' என வரையறுத்து விடக் கூடாது. பூர்வகுடி = ஒடுக்கு முறை என்ற நேர் விகிதமோ, அல்லது பூர்வகுடி X ஒடுக்குமுறை என்ற எதிர் விகிதமோ கொள்ளாமல், சூழ் நிலைகள் நடைமுறைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஆய்வு செய்வதே பின்னை நவீனத்துவமாக இருக்க முடியும் எனக் கூறிக் கொண்டு, P.T. சீனிவாச அய்யங்காருக்குள் செல்வோம்.

அவர் தனது புத்தகத்தின் (The Stone Age of India) முகவுரையில் 'எந்த நாட்டினதையும் விட சிறப்பு வாய்ந்தது உன்னதமான நம் இந்திய வரலாறு. மனிதன் முதன் முதலில் உலகில் தோன்ற ஆரம்பித்ததுமே இந்திய நாட்டின் வரலாறு துவங்கி விட்டது' என்கிறார். இந்த அத்தனைச் சிறப்பும் உன்னதமும் யாருக்குரியது என்பதை தனது முடிவுரையில் கூறுகின்றார்.

"பிராமணர்களின் புனிதமான பூணூலானது இன்றும் தென்னை ஈர்க்கை ஆரம்பமாகக் கொண்ட தக்களியில் நூற்கப்பட்டு, அதன் முனையில் 'கல்' கட்டித் தொங்கவிடப்படுகிறது. பூணூலின் புனிதத்தன்மை கெட்டு விடக் கூடாது என்பதற்காக, இதன் தயாரிப்பின் எல்லா அம்சங்களிலும் இரும்பு தவிர்க்கப்படுகிறது. இன்றும் இல்லத்தரசிகள், கல் அல்லது மரப்பாத்திரங்களையே உபயோகிக்கின்றனர். காரணம், இவற்றில் தீட்டு ஒட்டிக்கொள்ளாது. அப்படியே தீட்டுப் பட்டாலும், நீர்விட்டுக் கழுவி அவற்றைப் புனிதப்படுத்தி விடலாம். ஆனால் உலோகப் பாத்திரங்களைத் தொடுவதனால் உண்டாகும் தீட்டைக் கழிக்கவும், மறு உபயோகத்திற்குக் கொண்டு வரவும் அவற்றை நெருப்பிலிட வேண்டும். கோவில்களில் உள்ள பிரதான தெய்வச் சிலைகள் கல் அல்லது மரத்தாலேயே செய்யப்படுகின்றன. வீதிகளில் பொதுமக்களும் கலந்து கொள்ளும் உலாவுக்கான



**இந்திய வரலாற்றில் ரிக்வேத காலத்தை புதிய கற்காலம் அல்லது புதிய கற்காலத்திற்கும் உலோகக் காலத்திற்கும் இடைப்பட்ட காலம் என்றால், உலோகங்களை பெருமளவில் உபயோகித்த சிந்துவெளி மக்களை எந்தக் காலத்தில் வைத்துப் பார்ப்பது?**



சிலைகள் மட்டுமே உலோகங்களினால் செய்யப்படுகின்றன... இதுபோன்ற எண்ணற்ற பழக்க வழக்கங்கள் கற்காலத்தின் தொடர்ச்சியாக இன்றும் நிலவி வருகின்றன என்பதை நுணுக்கமாக ஆய்வு செய்யும் எவரும் உணரலாம். பழைய பழக்க வழக்கங்களை, புதிய வழக்கங்களிலிருந்து புனிதத் தன்மையின் அடிப்படையில் பகுத்துணரலாம்" என்கின்றார்.

இந்நூலின் இறுதி வரிகளாகக் கூறப்பட்ட மேற் கண்டவற்றின் மூலம் சில முடிவுகள் வெளிப்படுகின்றன.

- உலோகக் காலத்தை தாண்டிய இந்த நவீன சமூகத்திலும் 'கற்கள்' அதன் புனிதத் தன்மையின் அடிப்படையில் புழக்கத்தில் இருக்கின்றன.

- இந்தப் புனிதத் தன்மையைக் காப்பாற்றுபவர்கள் பிராமணர்கள். இவர்கள் கற்காலத்திலிருந்தே இந்தியா வில் வாழ்ந்து வந்தவர்கள்.

- இவர்கள் உலோகங்களை (இரும்பு) அறிந்தவர் கள் என்றாலும் 'தீட்டு' கருதி அதை பயன்படுத்தவில்லை.

- இந்திய நாகரீகம் என்பதே வேதமரபினரின் நாகரீகம்தான். அல்லது அதுவே இன்றும் ஆதிக்கம் செலுத்துகிறது.

மேற்கண்ட முடிவுகளை நாம் முற்றாக புறக்கணித்து விட இயலாது. எனினும் நமக்கு கேள்விகள் எழாமலில்லை.



படிப்பகம்

www.padippakam.com

PT சீனிவாச அய்யங்காரானவர், இந்தியாவின் கற்காலத்தின் வரையறையை கி.மு. 20,000 ஆண்டுகளிலிருந்து கி.மு. 5000 வரை என ஸ்தாபிதம் செய்வதன் மூலம் பிராமணர்கள் கி.மு. 20,000 அல்லது அதற்கு முன்பிருந்தே வாழ்ந்திருக்கலாம் என்பதை நிறுவ முயற்சிக்கிறார்.

"என்னுடைய கருத்துப்படி இரும்பு ஆரிய மயத்திற்கு முன்பே கண்டுபிடிக்கப்பட்டிருக்க வேண்டும்" என்று கூறும் அவர், தீட்டுக் கருத்தியல்தான் இரும்பைப் பயன்படுத்துவதிலிருந்து அவர்களைத் தடை செய்து வைத்திருந்தது என்கின்றார்.

ஆனால், அவர் கணக்கில் எடுக்கத் தவறியது, உலோகங்களைக் கொண்டு உழவுக் கருவிகளைச் செய்து தச்சர், கொல்லர், குயவர் என வகைப்படுத்தி, அவர்களை தலைநகரில் குடியமர்த்தி, சுற்றுப்புறத்திலிருந்த பெரிய நிலப்பரப்பைக் கட்டுப்படுத்தி விவசாய சாகுபடி செய்து தானியக் களஞ்சியங்களைக் கொண்டிருந்தவர்களும், வெளிநாட்டினருடன் நதி, கடல் போக்குவரத்தின் மூலம் வியாபாரம் மேற்கொண்டிருந்தவர்களும், சிறந்த கலை நுட்பம், கட்டிடக் கலையில் நிபுணத்துவம் கொண்டிருந்தவர்களும், வேதமரபிலிருந்து காலத்தால் இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முந்தியவர்களுமான சிந்துவெளி மக்களை!

இந்திய வரலாற்றில் ரிக்வேத காலத்தை புதிய கற்காலம் அல்லது புதிய கற்காலத்திற்கும் உலோகக் காலத்திற்கும் இடைப்பட்ட காலம் என்றால், உலோகங்களை பெருமளவில் உபயோகித்த சிந்துவெளி மக்களை எந்தக் காலத்தில் வைத்துப் பார்ப்பது?

ஒருவேளை, ரிக்வேத மரபினரை சிந்துவெளி மக்களின் தொடர்ச்சியாகப் பார்க்கக் கூடுமோ? சிந்துவெளி மக்களுக்கும் ரிக்வேத மரபினருக்குமான இடைவெளி காலம் மட்டுமல்ல, சமூகப் பழக்க வழக்கங்களுமாகும். எந்த சமூகப் பழக்க வழக்கங்களைக் கொண்டு அய்யங்கார் அவர்கள், வேத மரபினரை கற்காலத்தில் நிலைநிறுத்தப் பார்க்கிறாரோ அவையேதான் இந்த இடைவெளியைத் தோற்றுவிக்கின்றன.

அந்த இடைவெளிகளில் முக்கியமான சிலவற்றைப் பட்டியலிடுவோம்.

- சிந்துவெளி மக்கள் உலோகங்களை அதிக அளவில் பயன்படுத்தியவர்கள். வேத மரபினரோ உலோகங்களைப் பயன்படுத்தியவர்களில்லை.

- சிந்துவெளி மக்கள் விவசாயம்/வியாபாரம் இவற்றில் ஈடுபட்ட நிலைத்த வாழ்வினர். வேதமரபினர் கால்நடைகளை மேய்த்தலில் ஈடுபட்டிருந்த நாடோடிகள்.

- சிந்துவெளி மக்கள் உருவ வழிபாட்டினர். பசுபதி மற்றும் லிங்க வழிபாடு செய்தவர்கள். ('பசுபதி' என்பது வரலாற்றாளர்களால் புனையப்பட்ட பெயர்) வேத மரபினர் தீயை வழிபட்டு வந்தவர்கள்.

(புராதனக் காலங்களில் எல்லா இனங்களும் இயற்கையை அதன்மீது கொண்ட அச்சம் காரணமாக வணங்கி வந்திருக்கக் கூடும். பின் அதன் பயன்பாடு காரணமாக தொடர்ந்து வழிபாடு செய்திருக்கலாம். ஆனால், உருவ வழிபாடு என்பது இயற்கையைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டவர்களை, அல்லது சமூகத்தை காட்டு மிருகங்கள்/பிற இனக்குழுக்களிடமிருந்து காப்பவர்களை வணங்கும் அடிப்படையில் தோன்றியதாகும். இதனடிப்படையில் பார்த்தால் உருவ வழிபாடு என்பது அறிவு வளர்ச்சி/ஆற்றல் அடிப்படையில் தோன்றிய ஒன்றாகக் கருத வாய்ப்புள்ளது.)

**இரும்பை தீட்டு என்று ஒதுக்கியது போல எழுத்தையும் தீட்டு என ஒதுக்கி விட்டார்களா? இரும்பை தீட்டு என்று ஒதுக்கினார்கள் என்பவர்கள், எழுத்தையும் தீட்டு என்று ஒதுக்கிவிட்டார்கள் எனக் கூறத் துணிவார்களா?**

- சிந்து வெளியினர் எழுத்து முறையைக் கொண்டிருந்தனர். ஆனால் வேத மரபினர் எழுத்து முறையை அறியாதவர்கள். வேதங்கள் அனைத்தும் வாய்வழியாகவே தொடர்ந்தன.

(எழுத்து முறை வரலாற்றில் ஒரு குறிப்பிடத் தகுந்த பண்பாட்டு அடையாளம். சிந்துவெளி மக்களின் தொடர்ச்சியாக தாஸர், தஸ்யூக்கள் மற்றும் பாணி சமூகத்தினரைக் காணும் பட்சத்தில் அவர்களிடம் எழுத்து முறை இருந்திருக்க வேண்டுமே என்ற கேள்வி எழுகின்றது. அதற்கான சான்றுகள் எதுவுமில்லையென்பதை நாம் எவ்வாறு விளங்கிக் கொள்வது? இன்றும் நகரம் X கிராமம் என எடுத்துக் கொண்டால், எழுத்தறிவில் பெருத்த வேறுபாடு நிலவுகிறது. அதே போல் சிந்துவெளி மக்களின் தலைநகரங்களான மொஹஞ்சோதாரோ, ஹரப்பா போன்ற நகரங்களில் வாழ்ந்தவர்களுக்கும் அன்றைய கிராமத்தார்களுக்கும் எவ்வளவு வேறுபாடுகள் இருந்திருக்கும் என்பது நாம் உணர முடியாததல்ல. நகரங்கள் அழிந்தபின் நகரத்தில் வாழ்ந்த நாகரீக மக்களோடு அந்த எழுத்து முறையும் அழிந்து போயிருக்கலாம் என எண்ண வேண்டியுள்ளது. இது ரிக்வேத மரபினருக்கும் பொருந்தலாமல்லவா? ரிக்வேத மரபினர் எழுத்துமுறை மட்டுமின்றி எல்லா வகைகளிலும் சிந்துவெளி மக்களிலிருந்து வேறுபடுவதால், இதையும் மற்றுமொரு வேறுபாடாகவே காண முடியும். ரிக்வேத பாடல்களை சமைத்தவர்கள் அச்சமூகத்தின் அறிவாளிகளாகவே இருந்திருக்கக்கூடும். அப்படிப்பட்டவர்கள் கூட எழுத்துமுறையை அறிந்திருக்கவில்லை என்பது வியப்பாக உள்ளது. இரும்பை தீட்டு என்று ஒதுக்கியது போல எழுத்தையும் தீட்டு என ஒதுக்கி விட்டார்களா? இரும்பை தீட்டு என்று ஒதுக்கினார்கள் என்பவர்கள், எழுத்தையும் தீட்டு என்று ஒதுக்கிவிட்டார்கள் எனக் கூறத் துணிவார்களா? பின்னாளில் ஜெர்மன் வரலாற்றறிஞர் மேகஸ் முல்லர் அவர்கள் ரிக்வேதம் உள்ளிட்ட வேதங்களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்ய முனைந்தபோது அவை ரகசியங்கள், புனிதமானவை, எனவே எழுத்தில் வடிக்கக் கூடாது என பிராமணர்கள் கருத்துத் தெரிவித்ததாக பதிவு செய்துள்ளார்)

ஆக மேற்கூறியவற்றின் மூலம் நாம் அறிவது என்ன?



படிப்பகம்

www.padippakam.com

வேதமரபினர், அதிலும் குறிப்பாக பிராமணர்கள் கி.மு. 20,000 அல்லது அதற்கு முன்பிருந்த அல்லது மனிதன் தோன்றியதிலிருந்து இந்தியாவில் வாழ்ந்து வந்த பூர்வகுடிகள் என்று கூறும் P.T. சீனிவாச அய்யங்காரின் விருப்பத்தை மட்டுமே.

இன்றும் பூணூலில் கல்லைக் கட்டித் தொங்க விடுகிறார்கள் என்பதும், இல்லத்தரசிகள் கல், மட்பாத்திரம், மரப்பாத்திரங்களில் சமைக்கிறார்கள் என்பதும் அவர்களை இந்தியாவின் கற்காலத்தில் சென்று சேர்த்து விட போதுமானதா?

இன்று நாம் எல்லோருமே ஒருவகையில் கல், மண், மரம் இவற்றைப் பயன்படுத்தத்தான் செய்கின்றோம். இது அவற்றின் தேவை கருதித்தான். பிராமணர்களுக்கு மட்டும் வேண்டுமானால் அது புனிதமாக இருக்கலாம்.

அதேபோல் உலோகங்களையும் அதனதன் தேவை கருதித்தான் பயன்படுத்துகிறோம். உலோகங்களை இன்று பெருமளவில் பயன்படுத்தினாலும், தற்காலம் என்பது வரலாற்றில் உலோகக் காலமாகி விடாது, இது பிளாஸ்டிக் மற்றும் கணிணி யுகம். எந்தெந்த பொருள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது, என்ன காரணங்களுக்காக பயன்படுத்தப்படுகிறது என்பது மட்டுமே வரலாற்றின் அடிப்படைகளாகிவிடாது. எவையெவை புதியவை, அவை எவ்விதத்தில் மானுட வளர்ச்சியில் சம்பந்தப்பட்டிருக்கின்றன, வரலாற்றில் மாற்றங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றன என்பதும் அடிப்படைகள். கணிணி வந்து விட்டால் மட்டும் உலோகத்தின் பயன்பாடு முற்றிலும் அழிந்துவிடுமா? எல்லாம் அதனதன் பயன்பாட்டின் அடிப்படையில் இருந்தே தீரும். ஆனால் பயன்பாட்டளவு கூடலாம், குறையலாம். P.T. சீனிவாச அய்யங்காரின் கூற்றுப்படி பார்த்தாலும், இது உண்மையாகிறது. அவரது கூற்றுப்படி, எது புனிதம் அல்லது தீட்டு என்பதை வரையறுப்பதில் பிராமணர்களின் ஆதிக்கம் இருந்து வந்துள்ளது. இது அவர்கள் பெற்றிருக்கும் அரசியல் அதிகாரத்தின் விளைவே. குறிப்பாக, கருவறையில் உள்ள தெய்வச் சிலைகள் எதில் செய்யப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிப்பது அவர்கள்தான் என்று பார்க்கும்போது வெளிப்படுவது அவர்களின் மூடநம்பிக்கைகளே அன்றி அல்லது எப்போதும் தங்களை பிற மக்களிடமிருந்து வேறுபடுத்தி உயர்வை கற்பித்துக் கொள்ளும் எண்ணம் அல்லது அவர் மரபு தொடர்ச்சியன்றி, எல்லோருக்குமான வரலாறு அல்ல!

ஆகையால் சிந்துவெளி நாகரிகத்தின் எந்த உயரிய அம்சங்களோடும் சம்பந்தப்படாத ஒரு பிற்பட்ட நாகரிகமே வேதமரபினருடையது. ஆனால் P.T. சீனிவாச அய்யங்கார் போன்றவர்கள் வேத நாகரீகத்தை புனிதத் தன்மையின் அடிப்படையில் ஆய்வு மேற்கொண்டு, வரலாற்றுக் காலங்களை வரையறுக்கத் துணிந்து விட்டார்கள். இது எப்படித்தான் சாத்தியமாயிற்றோ தெரியவில்லை. இவர் மனிதத் தோற்றத்தைப் பற்றி கூறுவதும் இவ்வகையில் ஆய்வுக்குரியது.

– தொடரும்

# நாடு

வெந்து பூத்த சாம்பல் மேட்டில்
வியர்வையின் வாசம்
உயிர்பசியின் கோரத்தில்
விடலைக் கரங்கள்...
காலம் விரட்டும் காடு கலங்கும்
கந்தக உடல்கள்...

இயற்கையின்
வன்மத் தீண்டலாய்
சுனாமி
சவக் காடாய் சதைக்கூடு
உவர்ப்பேரிய மண்ணில்
அம்மணமாய் நின்றும்
அழியாத சாதிச் சுவடு

மரித்துப் போன மழைக்காக
மகாயாக பூசை
வனக் கொள்ளையில்...

இயற்கையை
சிறையெடுப்பில்
மணற்காடாய் நதி
மலடாய் வயற்காடு
ஆலைக்கழிவுகளால்
அணைகளில் உயிர் குடிக்கும்
அமிலச்சாறு
வனச் சுரண்டலில்
ஊருக்குள் வனவிலங்குகள்
ஊனமாய் பழங்குடிகள்
எச்சமாய் உயிர்க்கூடு

■ வை. சரண்யா



படிப்பகம்

www.padippakam.com

# மேட்டூர் அணையில் வாழ்வியல் மாநாடு

■ வை. சரவணன்

தலித் மக்கள் இயக்கம் கடந்த 16.10.2005இல் வாழ்வியல் மாநாட்டை மேட்டூர் அணையில் சிறப்பாக நடத்தியது. இயக்கத்தின் தோழர்கள், திருப்பூர், வாழப்பாடி, சேலம், ஈரோடு, கரூர் போன்ற சுற்று வட்டாரத்தில் உள்ள அனைத்து தலித் இளைஞர்களும், பெரியோர்களும் வந்திருந்து மாநாட்டைச் சிறப்பித்தனர். பகுதி பகுதியாக மக்கள் வாகனங்களில் வந்ததால் கூட்டம் 11.45 மணியளவில் தொடங்கியது.

தலைமையாக தலித் மக்கள் இயக்கத்தின் நிறுவனரும் வழக்கறிஞருமான திரு. சி. முத்துசாமி அவர்கள் தலைமை யேற்றார். வழக்கறிஞர் ஜெ. பிரதாபன் மற்றும் மு. காத்தமுத்து அவர்கள் முன்னிலை வகிக்க மாநாடு தொடங்கியது. தொடக்க உரையாற்றிய சி. முத்துசாமி அவர்கள் தலித் மக்கள் இயக்கம் தொடங்கப்பட்ட வரலாற்றைக் கூறினார். முன்பு கம்யூனிஸ்ட் டாக இருந்து தலித்துகளுக்கு கம்யூனிஸ்டுகள் செயல்படாமல் போன தாலும், அங்கேயும் சாதியம் வேரூன்றி கிடப்பதாலும் அதை விட்டு வெளியேறி மக்கள் இயக்கம் கண்டு இரண்டு மாநாடுகளை சிறப்பாக நடத்தி மூன்றாவது மாநாடாக தலித் வாழ்வியல் மாநாடு நடப்பதாகவும் கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய தோழர் சிவகாமி அவர்கள் நில உரிமை பற்றி விரிவான விளக்கம் தந்தார் . குறிப்பாக பெண்கள் நிலவுரிமை குறித்து தெரிந்து கொள்ள வேண்டும் என்றார். தலித்துகள் சுமார் 1 கோடியே 26 லட்சம் பேர் உள் ளனர். இதில 1.5 லட்சம் பேருக்கு மட்டுமே அரசுத்துறைகளில் வேலை வாய்ப்பு உள்ளது. இட ஒதுக்கீட்டை நம்பி மீதிப் பேர் காத்து இருப்பது முறையல்ல. மேலும் தனியார் துறையில் வேலை கிடைத்தாலும் தலித்துகளில் 20 விழுக்காட்டினர் மட்டுமே பயன்பெற முடியும். மீதி 70ரூ அடிப்படையாக விவ சாயக் கூலிகளாக, பண்ணைகளில் அடிமையாக, பிற சாதியைச் சார்ந்துதான் வாழ வேண்டியுள்ளது. அதிலும் தாழ்ந்த சாதிகள் என்று நம்மை ஒதுக்கி வைப்பதாலும் பிற சாதி ஏழைகளை விட கேவலமாக, மனிதனாகக் கூட மதிப்பிடாத சூழலில் உள் ளோம். இதில் இருந்து தலித்துகள் மீண்டுவர வேண்டுமானால் நிலம் அனைவருக்கும் சொந்தமாக்கப்பட வேண்டும் என்று கூறிய அவர் வரலாற்றுக்கால முதல் தலித்துகள் எப்படி நிலவுரிமை பெறுவதிலிருந்து கவனமாகத் தவிர்க்கப்பட்டு வந்தள்ளனர் என்பதை விரிவாக ஒரு மணி நேரம் உரையாற்றினார். அவரைத் தொடர்ந்து முனைவர் கே.ஏ. குணசேகரன் அவர் கள் தலித் எழுச்சிப் பாடல் ஒன்றைப் பாடினார். பழைய நிலை மைகளை அசைபோடும்படியும் தொடர் போராட்டம் மூலம் முன்னேற்றம் கண்டு வருவது பற்றியும் பேசினார். மதிய உண வுக்குப் பின் நிகழ்ச்சி தொடர்ந்தது. தலித் மக்கள் இயக்க கலைக் குழுவினரின் எழுச்சிமிகு நடனங்களும் கருத்துகளும் மேடையில் அரங்கேறியது. குழந்தைகள் சிறப்பாக இயல் பாகச் செய்தனர். தொடர்ந்து என்லைட் சரவணன் மலைவாழ் மக்கள் சார்பாக பேசினார். மலைவாழ் மக்களுக்கு இன்னமும் கல்வி கிடைக்க வில்லை என்றும் வேலைவாய்ப்பில்லாமல துன்பப்படுவது பற்றியும் எடுத்துரைத்தார். முத்துசாமி போன்று ஒருவர் மலை வாழ் மக்களுக்கு போராட முன்வர வேண்டும் என்ற வேண்டுகோளாடு முடித்தார். தொடர்ந்து வழக்கறிஞர் சன்னா பேசினார். தமிழக பட்ஜெட்டில் தலித்துகளுக்கு என எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது, அதை எவ்வாறு பயன் படுத்தாமல் தவிர்க்கிறது அரசு என்ற செய்திகளைக் கூறினார். தொடர்ந்து அம்பேத்கரின் கொள்கைப் பிடிப்பை விளக்கினார். 8 மணி நேரம் வேலைத் திட்டத்தை 1942-இல் முன்வரைவு செய்து அதை அமல்படுத்தப் பாடுபட்ட அம்பேத்கர், முதலில் தென் மாநிலமான கோலாருக்கு வந்தபோது நிகழ்ந்த செய்தி யையும், தலித்துகள் எவர் காலிலும் விழக்கூடாது என்றும், தலித்துகளுக்காக வளர்ந்த தலித்துகள் உதவிட வேண்டுமென் றும் பேசினார். நிறைவாக இளைஞர்கள் சினிமாக் கலாச்சாரத்தில் மூழ்கிடாமல் தலித் கலையை மீட்டெடுத்து அவைகளை அரங்கேற்ற வேண்டும், தலித் கலை கலாச்சாரம் காக்கப்பட வேண்டும், அதற்கு இளைஞர்கள் முன்வர வேண்டு மென்றார். நிறைவாக உரையாற்றிய சிவகாமி அவர்கள் தமிழக பட்ஜெட்டில் ரூ.1800 கோடி தலித்துகளுக்கென்று ஒதுக் கிட்டு, 400 கோடியை மட்டுமே செலவிடுகின்றனர். மீதித் தொகைகளை இணைந்த செயல்திட்டங்களில் செலவிட்டு தலித் கணக்கில் காட்டப்படுகிறது என் பதையும் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய தலைவர் தலித் வாழ்வியல் மிகவும் பின்தள்ளப்பட்ட நிலையில் உள்ளது. அதை வென் றெடுக்க தலித் மக்கள் சந்ததி முன்வர வேண்டும். மற்ற தோழமை இயக்கங்களும் முன்வந்து செயல்பட்டால் நிச்சயம் நமது கோரிக்கைகள் நிறைவேறும் என்று முடித்திட, செல்லத்துரை அவர்கள் நன்றி கூற, விழா நிறைவடைந்தது. இயக்க நிகழ்ச்சி களை மேட்டூர் பகுதி தோழர் A.K. பழனிச்சாமி, மு. காத்தமுத்து மற்றும் இயக்கத் தோழர்கள் சிறப்பாகச் செய்திருந்தனர்.

■



படிப்பகம்

www.padippakam.com

# நாங்க என்னத்தீங் சாமி சொல்றது?

■ வா.மு. கோபு

மாரன் பகலெல்லாம் கவுண்டர் தோட்டத்தில் வேலை செய்த அலுப்புத் தீர கிணற்றுத் தொட்டியில் கிடந்த தண்ணீரில் குளித்து விட்டு வீடு நோக்கி புறப்படுகையில் பொழுது சாய்ந்துதான் விட்டது. தலைமுடியை கை விரல்களாலேயே தட்டி உதறிக் கொண்டான். மண்வெட்டி அவன் தோளில் கிடந்தது. அவனுக்கு நினைப்பெல்லாம் மகன் ரமேஷ் மீதுதான் இருந்தது.

ரமேஷ் பன்னிரெண்டு வகுப்பை முடித்துவிட்டு, மேற்கொண்டு படிக்கப்போவதில்லை என்று வேறு கூறிக்கொண்டு ஆறு மாதமாக ஊரைச் சுற்றிக் கொண் டிருந்தவன் இந்த ஒரு வாரமாகத்தான் டவுனுக்கு மில்லுக்குப் போய் வந்து கொண் டிருக்கிறான். மில்லில் அவனுக்கு கணக்குகள் சரிபார்த்து எழுதும் வேலை என்றுதான் சொன்னான். 'மில்லுல உம்மட பையன் தனியா சேர், டேபுள் போட்டு உக்காந்துட்டு பேனா வால பேப்பால கிறுக்கீட்டு இருக்கான்' என பக்கத்து வீட்டு மல்லிதான் இவனுக்குச் சொன்னான். 'அப்படியா?' என மாரன் மேம்போக்காய் கேட்டாலும் உள்ளுர ஒரு சந்தோசம் இருக்கத்தான் செய்கிறது. மல்லி டவுனுக்கு காரச் சட்டி தூக்குற வேலைக்குப் போய் வந்துகொண்டிருந்தான். அவனுக்கு வேலை இல்லாத ஒரு மழை நாளில்தான் ரமேஷைப் பார்த்து மில்லில் பேசி விட்டு வந்திருக்கிறான்.

ரமேஷ் பள்ளிக்கூடம் போகும்போது போட் டிருந்த வெள்ளை நிற மேல் சட்டை இரண்டையுமே தான் இப்போது டவுனுக்கு போகவும் போட்டுக்கொள்கிறான். தவிர இப்பொழுது புதிதாய் வேட்டி இரண்டு வைத்திருக்கிறான். அது அவனுக்கு எப்படி கிடைத்தது என்பது மாரனுக்குத் தெரியவில்லை. ஒரு வேளை சாமத்துல மதுரவீரஞ்சாமி ரமேசுக்கு வந்து குடுத்துட் டுப் போயிருக்குமோன்னு கூட மாறன் நெனச்சிக்குவான். எப்படி இருந்தாலும் ரமேஷ் வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டையில சும்மா புதுமாப்ள கணக்காத்தான் தெனமும் கௌம்பிப் போறான். தன் கண்ணே கூட மவனுக்குப் பட்டுவிடும் எனப் பயந்து மனசால சாமி கிட்ட மன்னிப்பு கேட்டுக்குவான்.

'இன்று எப்படியாவது கவுண்டர்கிட்டக்க பணம் கொஞ்சம் கேட்டுப்போடணும். வேலைக்கிப் போயிட்டு வாரவன் இன்னம்தான் நல்ல சொக்காவா ரெண்டு எடுத்து வச்சிக்கிட்டுப் போயிட்டு வரட்டுமே. போறப்ப என்னாத்தத் தூக்கிட்டுப் போறோம். அரணாக் கவுத்தகூட அத்துப் போட்டுத்தான குழிக்குள்ளார போட்டு மூடறாங்க' என்ற யோசனைகளில் சென்று கொண்டிருந்தவனை 'டேய் மாறா?' என்றொரு குரல் சப்தமாய் அழைப்பது கேட்கவே, 'யாரு சாமி?' என பதில் குரல் கொடுத்தபடி மாறன் நின்றான். கூப்பிட்டது கனகசபைதான். கனகசபைக்கு ஊரில் காடு தோட்டம் கொஞ்சம் அதிகம்தான். அவர் பண்ணையத்தில் இவன் பங்காளிகள் வேலை செய்கிறார்கள். அருகே வந்த கனக சபையைப் பார்த்து மரியாதையோடு 'கும்புடுறேனுங்க சாமி' என்று குறுகி நின்றான்.

'என்ன மாறா? உம் பையன் ஊருக்குள்ளார பண்ணின கூத்துச் சங்கதி தெரியாதவனாட்டம் இங்க நீ மம்புட்டியுங் கையுமா அலைஞ்சுட்டு இருக்கே? மொதப் புடிச்சே நானு உங்கிட்ட சொன்னன்லே நரியண்ணங் கோளாறு நடையிலயே தெரியுமாம். ம்... படிக்க அனுப்பாதடா பயலை, தறுதலை ஆயிடுவான்னு கிளிப்புள்ளைக்கிச் சொல்ற மாதிரி சொல்லி, பேசாம அவன என்ற பண்ணைக்கு அனுப்பச்சொல்லி எத்தினி தடக்கா நாஞ் சொன்னன். கேட்டியா நீ. படிக்கட்டுமுங்க, பெரிய வேலைக்கி போவட்டுமுங்கன்னு நீதான்டா சொல்லிட்டே இருந்தே. பெரிய வேலையா ஒரே நாள்ல பண்ணிப் புட்டான்டா உம்பட பயல்' என்றபடி கனகசபை மீசையை வேறு அடிக்கடி நீவி விட்டுக்கொண்டார். 'சாமி, அவன் ஏதாச்சிம் குத்தஞ் செஞ்சு போட்டானுங்களா? இப்படி நீங்க மொட்டக்கட்டையா சொன்னா எம்பட மண்டையில ஏறாதுங்க.'

'அதுல ஏறாட்டி கெடக்குது. நீரில்லா நெலத்துக்கு கொடுக்குற பாடும் பாழு, நீசனுக்கு ஓதுற நீதியும் பாழுன்னு சொல்றதிலீம் தப்பே இல்லே. ஊர்க்கூட்டம் வெச்சிருக்காங்க அப்புனு... தலையாரி உம்பட பையனத் தேடீட்டு போயிட்டிருந் தான். இப்பத்தான் சடுதிக்கி அம்புட்டு அலம்பலும் நடந் திருக்கு. நீயும் போ?'

'சாமி, நீங்களும் ஒரு நாயகாரருதானுங்க சாமி. உங்க கால்ல உழுவுறனுங்க சாமி. எம்பட பய பண்ணின குத்தத்த மன்னிச்சு உட்டுடுங்க சாமி 'என்ற மாறன் அவர் கால்களில் விழப் போனான். 'டே.... டே.... டே...' என்றபடி கனகசபை துள்ளி ஒதுங்கினார்.

'டே... என்னடா... குத்தமுன்னா கால்ல வுழுவறீங்க. சரி சரி அதெல்லா நாம்பாத்துக்கறேன், நீ போ மொதல்ல சடுதியா.' சொல்லிவிட்டு கனகசபை நகர்ந்தார். இவன் ஆயிரத்தெட்டு யோசனைகளோடே வீடு வந்து சேர்ந்தான். சாத்தி வைத்திருந்த தென்ன ஒலைப் படலை 'தர்ரக்'கென நீக்கி வீட்டினுள் நுழைந்தான். இவன் மனைவி மாராள் மண் வைத்த சுவர் மீது சாய்ந்த படி 'முசுக் முசுக்'கென அழுது கொண் டிருந்தாள். வீட்டினுள்ளிருந்து 'மியாவ் மியாவ்'வெனக் கத்திய படி கருப்பி பொதுக்கென வெளியே வெளியே முட்டி ஓடிப் போயிற்று. இவன் 'என்னவாம்ளே விசயம்?' என்றான்.

'நம்ம கவுண்டரூட்டுப் புள்ளகிட்ட ரமேசு ஏதோ கடுதாசி குடுத்தானாம். அதும் ஊர் மாவாளியாத்தா கோயிலுக்குப் பொறத்தாண்டியாம். இவன் வருவான்ட்டு அவ வெகு நேரமா கோயப் பொறக்கடை யிலயே உலாத்திட்டு இருந்தாளாம். இவம் போயி கடுதாசிய அவகிட்ட நீட்டினதும் அவ அத வாங்கி இடுப்புல சொருவிட்டு, அவத்திக்காலக்கயே நின்னுட்டு பேசிட்டி இருந்தாங்களாம். இத மேட்டுத்தெரு சின்னப்பன் பாத் துட்டுப் போயி கவுண்டர்கிட்டக்க சொல்லிப் போட்டானாம். தலையாரி இப்பத்தான் வந்து உம்பட அருமை மவனக் கையோட கூட்டிட்டுப் போறான். மொடவன் கொம்புத் தேனுக்கு ஆசப்பட்ட கதையாட்டல்ல நம்மூட்டுல யும் நடக்குது' என்றாள் மாராள்.

ஊர் பிள்ளையார் கோவில் திடலில் கூட்டம் கூடியிருந் தது. இதுநாள் வரை திருட்டு, அண்ணந்தம்பி தகராறு, புருசம்



படிப்பகம்

www.padippakam.com

பொண்டாட்டி தகராறு என இப்படித் தான் ராமசாமிக் கவுண்டர் தீர்ப்பும் இருக்கும். இந்தப் பிரச்சனையில் அவர் குடும்பமும் மானமும் வேறு இருக் கிறது. கூட்டத்தில் ஆள் ஆளுக்கு ஒவ்வொன்று பேசிய படி வேறு இருந்தார்கள். கடுதாசி வாங்கியதாக சொல்லப்படும் மல்லிகா பத்தாவது வரை படித்து வயசுக்கு வந்ததும் படிப்பை நிப்பாட்டிக் கொண்டவள். ராம சாமிக் கவுண்டரின் ஒரே செல்ல மகள். கவுண்டரை வேறு இன்னமும் காணவில்லை. ஊர்ப்பொண்டுகள் வாயிற்கு அவல் மாதிரிதான் இந்தக் காதல் விசயம் ஆகிப் போய் விட்டது.

'காலம் கலிகாலமாப் போச்சு. வெளியூர்க்கார னெல் லாம் காதுல இதக் கேட்டான்னா நாமெல்லா நாக்கப் புடுங் கீட்டுத்தான் சாவொனும். கொணம் தெரிஞ்சி தான குதிரைக்கு கொம்பு குடுக்கல' ஊர்ப்பெருசு ஒன்று தனியே பேசிக் கொண்டிருந்தது. 'பொம்பளைன்னா ஒரு அடக்கம் வேண்டாமா? நாலு பேருக்குத் தெரிஞ்சா கேவலம்னு நெனைக்காண டாமா? கோயிலுக்குப் பொறத்தாண்டி அப்படி என்ன மாதாரிப் பைய னோட பேச்சு? சரி அதாங் கொழந்தப் புள்ள. இவனுக்கு அவ கூட என்ன பேச்சு வேண்டிக் கெடக்கு? அல்லாறும் சிரிக்கிறாங் கன்னு, பூனையும் பொடக்காலியில போயி சிரிச்ச மாதிரிக்கில்ல இருக்கு' கோயில் பூசாரி பொஞ்சாதி தன் பங்குக்கு சொல்லிக் கொண்டிருந்தாள்.

'இவ ஊட்டுக்காரன் சாமி சொம்புலயே தண்ணி கொண்டு போயி கோயப் பொறவால சூத்துக் கழுவுற வந்தான... அங்க இதும் நடக்கும் இதுக்கு மேலயுங்கூட நடக்கும்... சப்போட்டு போட வந்துட்டா' யாரோ பின்னால் பேசவும் பூசாரி பொஞ்சாதி கூட்டத்தில் அப்புறம் எதும் பேசவில்லை.

'அட ரெண்டும் படிச்சதுங்க. அதான் ஊரு உலவம் பேசற தப் பத்திக்கூட கவலைப்படாம பேசியிருக்குதுங்க. அவனாவது ஆம்புளப் பய. இவ தேடிப் போயில்ல பேசியிருக்கா, நாயிச் சூத் துல தேன் இருந்தா நக்கவா முடியும்? ஒரு ரோசன வேண்டாம்?'

கிராமத்திலுள்ள எல்லா முக்கியஸ்தர்களும் வந்து விட் டார்கள். தலையாரி பெட்ரோமாக்ஸ் லைட் வெளிச்சத்தில் ராமசாமிக் கவுண்டரை அழைத்துக் கொண்டு வந்தான். ராம சாமிக் கவுண்டர் கூட்டத்தை ஒரு கண்ணால் பார்த்துவிட்டு மீசையை முறுக்கிக் கொண்டு திண்ணையில் அமர்ந்து கொண்டார். கூட்டத்தில் சலசலப்பு அடங்கிப்போய் அமைதி வந்தது ஒதுக்குப்புறமாக நின்று கொண்டிருந்த ரமேசை தலை யாரி கூட்டி வந்து ராமசாமி கவுண்டர் முன் கை கட்டி நிற்கும் விதமாக நிற்கச் செய்தான்.

'ஏண்டா, படிச்சுத்தானே இருக்கே நீ? அறிவு வேண் டாமா? வரவர ஊர்ல உங்க ஆளுக தொக்கும், கொட்டமும் அதிகமாப் போயிடிச்சுடா. வெத்தலக் காம்பக் கிள்ளி வீசுறா மாதிரி உங்களயெல்லாம் அப்பப்பவே கிள்ளியிருந்தா இப்ப நெலம இந்த அளவுக்கு ஊருக்குள்ளார வந்திருக்காது. உங்களப்போல ஆளுகளால பொம்பளப் புள்ளைக நடமாடவே முடியாது போல இருக்கேடா?'

"ஐயா வந்துங்க..."

"என்னடா லொய்யா, வந்துங்க. உனக்கு பொண்டாட்டி வேணும்னா காலாகாலத்துல உங்கொப்பங்கிட்ட சொல்றது. இல்ல அவனுக்கே புத்தி வேணும். ஊட்டுல சாமான்ல மசுர் மொளச்சவன் இருக்கான்.. ஆளு தலைக்கி மேல வளந்துட்டான் ஒரு கண்ணாலங் கட்டிப்புடனுமின்னு அந்த நெனப்பு அர வாவே அவனுக்கில்ல.. புள்ளயப் பெத்துட்டா மட்டும் பத்தாது. அத உருப்படியா வளக்கவும் தெரியோனும். நாலு எழுத்து படிச்சுப் போட்டா ஒடனே தராதரம் இல்லாமெ கடுதாசி எழுதிப் போடறதா? இதப்போயி என்ன நாயம்னு ஊர்க் கூட்டம் போட்டு இப்படி பெருசுக எல்லாரும் அசிங்கப் படணுமா? இது மாதிரி இந்தூர்ல எப்பாச்சிம் நடந்துருக்காடா? இனி உன்னப் பாத்துதோ அவன் எழுதுவான், ஒருத்தன் கூட்டிட்டுக்கூட ஓடுவான். இத இப்ப அப்படியே உட்டுட்டா நாளக்கி இதுக எல்லாமே நாஞ் சொன்னபடிதான் நடக்கும். அதுல சந்தேகமே இல்ல .அதுனால இனிமே இப்படி ஊருக்குள்ளார இந்த மாதிரி விசயம் நடக்காத மாதிரி இதை இத்தோட நிப்பாட்டிட ணும். நல்ல மாட்டுக்கு ஒரு சூடுதான். அப்படித்தான் இதயும் முடிக்கோணும். நாலு பெரிய மனுசங்க இருக்கீங்க. நாலு நாயத்தச் சொல்லுங்க . கண்ணுப் போன பொறவு சூரிய நமஸ்காரம் பண்றதுல பிரயோ சனமேயில்ல" ராமசாமி கவுண்டர் பேசிவிட்டு கூட்டத்தை ஒரு பார்வை பார்த்தார். சேரியிலிருந்து வந்திருந்த கூட்டம் கவுண் டரின் பேச்சை உன்னிப்பாய்க் கேட்டுக்கொண்டிருந்தது. இருந்தும் கூட்டத்தினுள் சலசலப்பும் இருந்தது.

"இந்தக் கேனப்பயலுக்கு மண்ணெத்தின்னாலும் கொஞ்சம் மறப்பாத் திங்கோணும்னு கூடவா தெரியாமப் போச்சு? சரி, பிரச்சனைக்கி காரணமான அந்தப் பொண்ணு இல்லாம நாயம் என்ன நாயம்? அதையும் கையோட கூட்டிட்டு வந்தி ருந்தா அதும் ரெண்டு வார்த்தை பேசும்ல. அட அது பக்கமும் நாயம் இருக்குல்ல. கடுதாசி குடுத்தான்னாவது சொல்லும்ல. அப்படிச் சொல்லிப் போட்டுச்சுன்னா வேணா நாமளே போயி நாலு இழுப்பு இழுத்துப் போடுவம்ல பையன."

"என்னப்பா அங்க கசமுசா?"

"ஒன்னுமில்லீங்சா... நீங்க பாத்து முடிவு பண்ற விசயமுங்க நாங்க என்னத்தீங்க சாமி சொல்றது? எதுக்கும் பொண்ண ஒரு வார்த்தை..."

"ஏண்டா எச்சக்கல நாயே... அவ இங்க வரணுமாடா உனுக்கு?" என்று திண்ணையை விட்டு ராமசாமிக் கவுண்டர் சடசடவென இறங்க கனகசபையும் இன்னொருவரும் அவரை இழுத்து அமர்த்தினார்கள்.

"அவன் என்ன சொல்லிட்டான்னு இப்படி கோபப்பட றீங்க. உடுங்க பங்காளி. நாய் சாமிக்கு என்னிக்கும் பீக்கொலுக் கட்டையத்தான் வெச்சுப் பூசை பண்ணனும். தேங்கா பழம் வெச்சு பூசை பண்ணினா மோந்து பாத்துட்டுத்தான் போவும்" என கனகசபை அவரை அமைதிப்படுத்தினார். பின் அவரே கூட்டத்தினரைப் பார்த்து பேச ஆரம்பித்தார்.

'தப்புச் செஞ்சவன் இதுவரைக்கும் ஒரு வார்த்தை பேசலை. அவனே இறுக்கீட்டு நின்னுட்டு இருக்கான். .இதப் பாருங்கடே.... உங்க பக்கமிருந்து இனி ரவுசு வரப்புடாது. அப்படி ரவுசு உடறவன் இப்படி முன்னாடி வந்து உடட்டும். பங்காளி நீங்க தீர்ப்பைச் சொல்லிடுங்க. இனிமே இந்த மாதிரி தப்பு நடக்காத மாதிரி உங்க தீர்ப்பு இருக்கோணும்.'

'டேய்... இவம் பேரென்ன... ம்... ரமேசு, நீ மல்லிகாவுக்கு கடுதாசி குடுத்தியாடா?'

'இல்லீங்க'

ராமசாமிக் கவுண்டர் கைகள் பரபரக்க எழுந்து, நின்றி ருந்தவனை காலால் ஒரு எத்து எத்தினார். அவன் கீழே விழ கைகளால் அவன் தலை முடியைப் பற்றி மேலே இழுத்து முகத் தில் அறைந்தார். 'பாத்துட்டு வந்து சொன்னவன் கண்ணு அப்ப பொட்டக் கண்ணாடா?' அவனை அப்படியே விட்டு விட்டு தெம்பாக கூட்டத்தை ஒரு பார்வை பார்த்து பின் திண்ணையில் அமர்ந்து மூக்குப் பொடி டப்பாவை கையில் எடுத்துக்கொண் டார். பெருவிரலால் அதன் மூடியைத் தட்டி நீக்கி பொடியை விரல்களால் எடுத்து மூக்கில் திணித்துக் கொண்டு ஓரமாய் விரல்



படிப்பகம்

www.padippakam.com

களை உதறி 'ஆக்ஸ்' என பெரும் தும்மல் ஒன்றுபோட்டார். "நாய் ஆசை என்னிக்குமே இசியோடதான்டா இருக்கோணும். ம்... இப்பச் சொல்றா உண்மைய..."

மல்லிகாதான் தன்னிடம் நேற்று கடிதம் கொடுத்து தன்னை காதலிப்பதாக பிதற்றி எழுதிய கடிதத்தை இன்னைக்கினு பார்த்து இதெல்லாம் தப்புங்க சின்னக் கவுணுச்சினு சொல்லி அவளிடமே அதை திருப்பித் தந்ததை இங்கே சொன்னால் நம்பவாபோகிறார்கள் என்று நினைத்த ரமேஷ் எதுவும் பேசாமல் தலை குனிந்து நின்றிருந்தான்.

"எல்லாருங் கேட்டுக்கங்க. இனி இவன் ஒன்னும் பேச மாட்டான். செஞ்ச தப்புக்கு அபராதமா கோயிலுக்கு இந்த ஒரு வாரத்துக்குள்ள 300 ரூபா இவன் கட்டீரோணும். அதும்போக ஒரு டஜன் சவுக்கடியும் வாங்கிக்கோணும் இப்பவே. டே பங்காளி மருது, எடுத்தா அந்த சவுக்கை. நீயே எண்ணி பன்னெண்டு அடி போடு. டேய் கழட்றா சட்டைய."

"பணம் வேணா கட்டீர்றமுங்க சாமி. எம்பட பையன அடிக்காதீங்க. என்னை வேணா அடிங்க, கொல்லுங்க சாமி" என மாரன் முன்னால் ஓடி வந்தான்.

"பேண்டவன உட்டுப்போட்டு பீய்ய அடிக்கச் சொல்றியாடா நீயி. இவன அக்கட்டால இழுத்துட்டுப் போங்கடா. பாசம் இப்பப் பொத்துட்டு வந்து என்ன பிரயோசனம்?"

அதற்குள் மருது முதல் சவுக்கடியை ரமேஷ் மீது 'சொளிர்' என வீசியிருந்தான். ரமேஷ் முதல் அடிக்கே 'ஐயோ' என விழுந்தான். மேலும் ஒரு அடி விழுகையில் அங்கு அது நடந்தது. ராமசாமி கவுண்டர் மனைவி ராமாத்தாள் தன் பெண் மல்லிகாவை இழுத்துக் கொண்டு கூட்டத்தினுள் 'நிறுத்துங்க... நிறுத்துங்க...' என சப்தம் போட்டபடி ஓடி வந்தாள்.

"இங்கே எதுக்குடி வந்தே நார முண்டே ? வந்ததுதா வந்தே, இவளெ எதுக்குடி இழுத்துட்டு ஓடி வந்துருக்கே" ராமசாமி கவுண்டர் பதைபதைப்போடு எழுந்தார்.

"ம்... இப்பக் கேளு. ஊட்டுல உம்பட புள்ள வெசங் குடிக்க நிக்கா... கெணத்துல குதிக்க ஓடறா... பேயாட்ட கூச்சல் போடறா... ஏன்னு கேட்டா, இவதான் அந்தப் பயலை கட்டிக்குவேன்னு லெட்டரு குடுத்தாளாம். இங்க கூட்டி வரலீன்னா சாவறதுக்கே திரியிறா. நா ஒருத்தி என்ன பண்ண? நாசமாப் போன்னு இழுத்தாந்துட்டேன். தெய்வம் நின்னு கொல்லும்னு சொன்னது சரியாத்தான இருக்கு. எத்தன மாதாரிச்சிகள எம்பட கட்டலல்ல நீ படுக்க வச்சிருப்பே. எல்லாத்துக்குஞ் சேத்து உம்புள்ள உன்னைப் பழிவாங்குறா?"

"நீ அவள அங்கியே கொன்னிருக்கணும்டி"

"நான் ஏன் கொல்றேன் எம்புள்ளய? அது ஆரு கூட வாழ்ந்தா என்ன? நல்லாயிருந்தா சரி"

களேபரத்தில் மருது சவுக்கடியை நிப்பாட்டி விட்டான். கூட்டமே ஸ்தம்பித்துப் போய்விட்டது.

'இழுத்தாங்கடா மல்லிகாவெ நம்ம வழுவுக்கு' மாதாரி ஒருவன் குரல் கொடுத்தான்

ஊர் ஒரு பெரிய கலவரத்திற்கு தயாராகிக்கொண்டிருந்தது.

■

மொழிபெயர்ப்புக் கவிதை

# வலி

வலி

இந்த தலையை நீ பார்
வலி நிறைந்த பெட்டியா
ஒரு குழந்தையின் கலகல சத்தம்
அதில் வலி சுற்றுகிறது முழுதும்
மீண்டும் மீண்டும்
வலிகளில் பல உண்டு
ஞாபக வலி
ரகசியங்களின் வலி
வீணாகிக் கொண்டுள்ளது
இன்றைய வலிகளும்
நாளைய வலிகளும்
ஆனால் அங்கே ஒரு வலி

வலி

அது ஒரு போதும் துடிக்காது
அது அதுவாகவே
அந்த துன்பத்தில் பிறக்கிறது
இந்த வலி
அதை
நான் பாடவில்லை இன்று.

வலி

- மொழி பெயர்ப்பு - பொன். குமார்
மூலம்: Padma Sacchdev



படிப்பகம்

www.padippakam.com

# முப்பரிமாணமென்னும் மாயவலை

# 12

*வரலாறு யாரை விடுதலை செய்யும்*

அ. ராமசாமி

**தலித் என்ற ஒற்றைச் சொல்லால் தீண்டாமைக்கு உட் படுத்தப்பட்ட சாதிகளுள் முக்கியமானதாக உள்ள அருந்ததியர், பறையர், பள்ளர் என்ற மூன்று பிரிவினரை யும் ஒன்றுபடுத்திவிட முடியாது என்ற கருத்து இன்று மேலோங்கிவிட்டது. ஜனநாயக அரசியலில் கூட்டமே வலிமை என்ற உண்மை புரிந்தபோதிலும் இம்மூன்று குழுக்களும் ஒன்றிணைவதன் தேவை உரைப்படவில்லை. சமகால அரசியலில் இம்மூன்று பிரிவினரையும் வழி நடத்தும் அரசியல் தலைவர்களும் அதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை.**

கயிறு திரித்தல் தமிழ் நாட்டுக் கிராமங்களின் ஒரு கைத்தொழில். வணிகரீதியாக விற்பதற்காக என்றில்லாமல் விவசாயிகள் அவர்களின் தேவைக்கென கயிறுகளைத் திரித்து உருவாக்கிக் கொள்வார்கள். என்னுடைய தந்தை எங்கள் வீட்டில் இருந்த மாடுகள், ஆடுகள் போன்றவற்றை கட்டுவதற்கும், மூக்கணாம் கயிறுகளுக்கும் தேவையான கயிறுகளை அவரேதான் திரிப்பார். அப்பொழுதெல்லாம் மிளகாய்ச் செடிகள் நட்டபொழுது புளிச்சி மார் என்றொரு தாவரத்தைப் பயிரிடுவார்கள். மிளகாய் நட்ட தோட்டத்தைச் சுற்றி அரண் போல அது வளர்ந்து நிற்கும்.

மிக நெருக்கமாக அவ் விதைகள் போடப்படுவதால் நேர்கோட்டில் உயரமாக வளர்ந்துவிடும். அத்தாவரத்தின் காய்கள், கனிகள் உண் பதற்குப் பயன்பட்ட மாதிரி எனக்கு நினைவில் இல்லை. காய்ப்பது வரை விவசாயிகள் காத்திருந்ததுமில்லை. இலைகள் பச்சையம் குறைந்து பழுப்பேறத் தொடங்கும் போது வேரோடு பிடுங்கித் தண்ணீரில் மிதக்கவிட்டு, நார் உறித்து, காயவைத்து, பிரியாக்கி, கயிறு திரித்த காட்சிகள் இப்பொழுதும் நினைவில் இருக்கிறது. அந்த நினைவுகளில் இரட்டைக் கமலைகள் போட்ட எங்கள் கிணறும், அங்கு வளர்ந்த பூவரச மரமும், கொடுக்காப் புளி மரமும் அடக்கம். ஆனால் இன்று எனது கிராமத்தில் இவை எதுவும் இல்லை. மாடுகளும் இல்லை. அவற்றைக் கட்ட புளிச்சநார்க் கயிறுகளும் இல்லை. எல்லாம் பிளாஸ்டிக் கயிறுகள்தான்.

கயிறு திரித்தலின் இன்னொரு பரிமாணத்தைப் பாண்டிச்சேரிக்கு நான் பணி காரணமாகப் போனபோது பார்த்தேன். தென்னை மரங்கள் நிரம்பிய கிழக்குக் கடற்கரையோரக் கிராமங்களில் அதிகாலையிலிருந்தே கயிறு திரிக்கும் தொழில் செய்பவர்கள் தங்கள் வேலையில் மும்முரமாக இறங்கிவிடுவதைப் பார்த்திருக்கிறேன். தேங்காயின்ஓட்டைச் சுற்றி மூடியிருக்கும் நாரைத்தட்டிப் பிரித்து தனித்தனியாக ஆக்குவார்கள். பின்பு தேவையான அளவு ஈரப்பதத்திற்காக அவற்றைக் காயவைப்பார்கள். பாதி அளவு பஞ்சாக ஆகிவிடும் நிலையில் திரிக்கும் வேலையில் இறங்கி விடுவார்கள். குடும்பத்தில் நான்குபேர் இருந்தால் கயிறு திரிக்கும் தொழில் தொடங்குவதில் சிரமம் இல்லை.

செங்குத்தாக நிற்கும் ஒரு பலகையில் மூன்று துவாரங்களும் ஒரு சக்கர மும் அதைச் சுற்றுவதற்கான கைப்பிடியும் கொண்ட அந்த இயந்திரத்தைச் செய்வது மிக எளிய காரியம்தான். மடியில் நிரப்பிய தேங்காய் நாருடன் வேறுபக்கம் திரும்பிப் பேசிக்கொண்டு வேலை செய்தாலும், கைகள் நாரை எடுக்கும் அளவிலும் அமுக்கி அனுப்பும் லாவகத்திலும் தவறுவதில்லை. ஒரே சீராக மூன்று பிரிவுகளும் இணைந்து ஒரே கயிறாக, வலுவான சக்தியுடன் உருவாகி முறுக்கேறி நிற்கும். தொய்வுடன் இருந்த நாருக்குள் முறுக்கையும் பலத்தை யும் வலுவையும் இணைத்த கைகள் அந்தக் கயிற்றை வட்டமாகச் சுற்றபடும் சிரமம் விரும்பி ஏற்கப்படும் சிரமம். முப்பிரிநூல் ஒன்றிணைவதில் வலுவும் பலமும் உண்டாகிறது.

கல்லூரியில் அறிவியல் படிக்கவில்லை என்றாலும் படித்த அறிவியல் இன்னும் நினைவில் இருக்கிறது. முப்பரிமாணக் கண்ணாடிப் பட்டையைப் பார்த்தும் இருக்கிறேன். மிகச் சிறிய துவாரத்தின் வழியாக வரும் சூரிய ஒளியை அந்தப் பிரிசத்தின் வழியே செலுத்தினால் அதன் அடுத்த பக்கத்தில் நிறுத்தப்படும் திரையில் அல்லது வெள்ளைத்தாளில் வானவில்லின் ஏழு வண்ணங்களை உண்டாக்கிக் காட்டும். நிறப்பிரிகையாக நிற்பது அந்த முக்கோணப் பிரிசம். நிறமற்றதாக நம்பப்படும் சூரிய ஒளிக்குள் ஏழு வண்ணங்கள் உள்ளன என்பதை அறிவதும் அவ்வண்ணங்களில் லயிப்பதும் விரும்பப்படும் மன உணர்வு.

தனித்தனியான மூன்று பிரிகளை ஒன்றாக்கும் கைவினைத்தொழில் பற்றிய நினைவும், வண்ணமற்ற வண்ணத்திலிருந்து ஏழு வண்ணங்களை உண்டாக்கிக் காட்



படிப்பகம்

www.padippakam.com

டும் நிறப்பிரிகை பற்றிய நினைவும் கவிஞர் ம. மதிவண்ணனின் 'வெளிச்சங்களைப் புதைத்த குழிகள்' என்னும் கட்டுரைத் தொகுப்பு நூலைப் படித்தபோது தோன்றியது என்பதை சொல்லியாக வேண்டும். தொண்ணூறுகளில் தொடங்கிய தலித் எழுச்சியைப் பின்னோக் கித் திரும்பிப் பார்க்கும் அளவிற்குக் காலநீட்சி கண்டு விடவில்லை என்பது ஒரு பக்கம் உண்மைதான். என்றாலும் அவ்வெழுச்சி உண்டாக்கியுள்ள அலைகளையும், அதன் மேடு பள்ளங்களையும் அதனால் விவாதத்திற்குள்ளான பொருள்களையும் பார்க்கும்பொழுது வியப்பாகவும் இருக்கிறது.

கலை இலக்கியத் துறையிலும் சமூகப் பண்பாட்டுத் தளத்திலும் அரசியல் பரப்பிலும் தலித் இயக்கம் எழுப்பிய விவாதங்களும் முன்வைத்த பார்வைகளும் நிராகரித்த நபர்களும் நிலைகொள்ள முடியாமல் தவித்துக் கொண்டிருப்பது கண்கூடு. அத்தகைய தவிப்பும் பதற்றமும் தலித் இயக்கங்களுக்கு வெளியேதான் நடந்தது என்று சொல்ல முடியாது. உள்ளேயும் நடந்தது, நடந்து கொண்டிருக்கிறது என்பதற்கு எழுத்துச் சாட்சி இந்த நூல்.

தலித் இயக்கங்களின் சிந்தனை நிகழ்காலத்தைப் பற்றிக் கொண்டு பரவி வந்த வேளையில் தலித் என்ற உணர்வை உண்டாக்குவது, அதன் வழியாக அனைத்து விதமான ஒடுக்கப்பட்ட மக்களை - குறிப்பாக தீண்டாமையால் ஒதுக்கப்படும் மக்களை ஒன்றிணைப்பது, அதன் தொடர்ச்சியாக தங்கள் மேல் சுமத்தப்பட்ட கருத்தியல் மற்றும் சமூக இழிவுகளுக்கு எதிராகப் போராடுவது என இயங்கி வந்தன அந்த இயக்கங்கள். ஆனால் அடுத்த கட்டமாக வரலாற்றுக்குள் - அதாவது கடந்த காலத்திற்குள் சென்ற தங்களின் ஆதர்சங்களையும் முன்னோடிப் போராளிகளையும் தேடிக் கண்டுபிடிக்கத் தொடங்கிய போது இயக்கங்களுக்குள் விரிசல்கள் ஏற்படத்தொடங்கின. அதே போல் கடந்த காலத்தில் தங்களின் நண்பர்களாக இருந்தவர்கள் யார்? அவர்களின் வழித்தோன்றல்கள் இன்றும் நண்பர்களாக இருக்கத்தக்கவர்கள்தானா? என்ற வினாவையும் விசாரணைகளையும் முன்னெடுத்த போது விரிசல்கள் மேலும் விரியத் தொடங்கின.

அதன் காரணமாக பின்வரும் கருத்தோட்டம் உருவாகிவிட்டது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. (வரலாறு யாரையும் விடுதலை செய்யாதோ...?) தலித் என்ற ஒற்றைச் சொல்லால் தீண்டாமைக்கு உட்படுத்தப்பட்ட சாதிகளுள் முக்கியமானதாக உள்ள அருந்ததியர், பறையர், பள்ளர் என்ற மூன்று பிரிவினரையும் ஒன்றுபடுத்திவிட முடியாது என்ற கருத்து இன்று மேலோங்கிவிட்டது. ஜனநாயக அரசியலில் கூட்டமே வலிமை என்ற உண்மை புரிந்தபோதிலும் இம்மூன்று குழுக்களும் ஒன்றிணைவதன் தேவை உணரப்படவில்லை. சமகால அரசியலில் இம்மூன்று பிரிவினரையும் வழி நடத்தும் அரசியல் தலைவர்களும் அதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை.

தலித் இயக்கங்களும், அதன் சிந்தனையாளர்களும், இவற்றை ஏற்று தங்களின் இலக்கியக் கொள்கைகளை உருவாக்கிக் கொண்ட படைப்பாளிகளும் கூட ஒன்றிணைவதற்கான வழியைப் பற்றி யோசிக்காமல் வேறுபாடுகளைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கின்றனர். முப்பிரி நூலை ஒற்றைக் கயிறாக் கும் சிறு இயந்திரத்தின் அழகியலைக் கணக்கில் கொள்ளாமல் வண்ணக் கோலங்களை உண்டாக்கும் நிறப்பிரிகையின் அழகியலில் தடுமாறிப் போய்க் கிடக்கின்றனர். இந்தக் கருத்தோட்டம் சாதிய சமூகத்தை விரும்பும் மைய நீரோட்டத்தின் கருத்தோட்டம்தான். அதை உருவாக்குவதில் வெகுமக்கள் ஊடகங்கள் மட்டுமே வினையாற்றுகின்றன என்று சொல்வதிற்கில்லை. சிந்தனைத் தளத்தில் செயல்படுவதாக நம்பும் சிறு பத்திரிகைகளும் கூட அதிலிருந்து விலகிவிடவில்லை.

நிகழ்காலச் சூழலைக் கூர்ந்து கவனிக்கும் ஒரு படைப்பாளியாகவும் சிந்தனையாளனாகவும் கருதிக் கொள்ளும் ஒருவனின் பயணம் வினாக்களை எழுப்புதல், விவாதங்களை முன்வைத்தல், பக்கச் சார்பை அடையாளப்படுத்துதல், நிறைவாக தனித்து நிற்க வேண்டிய தேவையைச் சுட்டிக்காட்டி ஒதுங்கிக் கொள்ளுதல் என்பதாகப் பயணிக்கிறது. கவிஞர் ம. மதிவண்ணனின் 10 கட்டுரைகளையும் ஒருசேர வாசித்தபோது இந்த பயண வழி எனக்குப் புலப்பட்டது. தன்னிலையை மறக்காத ஒரு படைப்பாளியின் பயணம் அப்படி இருப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

கவிஞர் மதிவண்ணன் இவ்வாறு ஒதுங்கிக் கொண்டதற்கான காரணங்களும் புலப்படத்தான் செய்கின்றன. இன்னொரு விதத்தில் இவரது ஒதுங்குதல் காணாமல் போவது அல்லது தனிமனிதனாக அலையத் தொடங்குதலின் ஆரம்பம் என்றும் சொல்ல முடியாது. தனது இருப்பின் நியாயங்களை இன்னொன்றில் தேடுதல் அல்லது முன்னர் இருந்த ஒன்றோடு அடையாளப் படுத்திக் கொள்ளுதல் என்பதாகச் சொல்லாம். 10 கட்டுரைகளில் நான்கு கட்டுரைகளை புதிய கோடாங்கியில் எழுதிவிட்டு புதிய தடம், கவிதாசரண், புதிய பார்வை எனப் பயணம் செய்துள்ள மதிவண்ணனின் பயணம் இதைத்தான் உணர்த்துகின்றது.

ஒட்டுமொத்தமாக ஒதுக்கப்பட்ட மனிதர்களின் விடியலாக நம்பிக்கை தந்த தலித் இயக்கம் - குறிப்பாக சாதி ஒழிப்பு இயக்கமாக வளர்த்தெடுக்கப்படவேண்டிய தலித் இயக்கம் - தனக்குள் இருக்கும் மூன்று பிரிவுகளுள் ஒன்றை முன்னெடுக்கும் போக்காக இருக்கிறது என்பது மதிவண்ணன் குற்றச்சாட்டு. அந்த குற்றச்சாட்டிற்குள் பறையர்களின் அடையாளங்களையும் நலன்களையும் மட்டும் கணக்கில் கொண்டதாக தலித் இயக்கம் மாறி விட்டது என்ற துணைக் குற்றச்சாட்டும், அருந்ததியர்களின் இருப்பும் விடுதலையும் பொருட்படுத்தப்படவில்லை என்ற தொடர் குற்றச்சாட்டும் இருக்கிறது. அயோத்திதாசரை சிந்தனையாளராக முன்வைப்பதிலும், பெரியாரை தலித் இயக்கத்தின் விரோதியாகச் சித்தரிப்பதிலும் உள்ள அரசியலைப் பேசுவதிலிருந்து தனது குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறார்.

மதிவண்ணனின் வாதங்கள் விவாதிக்கவேண்டிய வாதங்கள் என்பதில் கருத்து வேறுபட வாய்ப்பில்லை. அவ்விவாதங்களின் வழியாக வேறு சில விவாதங்களுக்கும் நாம் செல்லலாம். தலித் இயக்கமாக இம்மூன்று பிரிவினரையும் இணையவிடாமல் தடுப்பதில் உள்ள பிரச்சினை உண்மையில் உள்சாதி முரண்பாடுகளா? அல்லது இந்திய சாதி அமைப்பு வலியுறுத்தும் சுயசாதி அடையாளத்தைத் தக்க வைப்பதற்கான போராட்டமா? என்பதையும் விவாதிக்கலாம் - தொடரும் ■



படிப்பகம்

www.padippakam.com

■ கோபு

# ஆண்கள் பெண்கள் முதியவர்கள்

கார்டூன் நெட்வொர்க் என்றொரு சேனல். கேபிள் டீவி ஆர்வலர்கள் அறிந்திருக்கக் கூடும். அதில் வரும் நிகழ்ச்சிகள் சிறுவர்களைக் குறிவைத்து தயாரிக்கப்பட்டாலும் பெரியவர்களும் அதிலிருந்து கற்றுக் கொள்ள ஏராளம் உண்டு. அதில் ஒரு பூனை வருகிறது. அது பல்வேறு மாறுவேசங்களைக் கட்டிக் கொண்டு பல தில்லாலங்கடி வேலைகளையும் செய்து பிழைக்கிறது. எனினும் அது கட்டியுள்ள மாறுவேசங்களையும் மீறி அதன் இயல்பான பூனைத்தனம் அவ்வப்பொழுது வெளிப்பட்டு விடுகிறது.

திருவாசக இசைக் குருந்தகடு வெளியீட்டு விழாவில் இளையராஜா வெளியிட்ட பகுத்தறிவுக்கு மாறான சில வாசகங்கள் பத்திரிக்கையாளர் ஞானி யாருக்குள் உறங்கிக்கிடந்த பூனையாரைத் தட்டி எழுப்பியது. (திருவாசகக் கூட்டத்தில் அறிவுக்கென்ன வேலை?) பகுத்தறிவுக்கொவ்வாத கருத்துக்களை கண்டிக்கிற சாக்கில் இளையராஜா மீது இருபது வருடங்களுக்கும் மேலாகப் பார்ப்பனர்கள் கொண்டிருந்த கோபம் மடை திறந்தது. சுருங்கக் கூறினால் இளையராஜா ஒரு மண்டைகர்வி, அவரிடம் பணிபுரிந்த எஸ்.வி. நரசிம்மன் என்ற சிறந்த இசைக் கலைஞருக்குரிய மரியாதையை அவர் தரவில்லை என்பது ஞானியின் குற்றச்சாட்டு. நம் நினைவுகளைப் பின்னோக்கி செலுத்துகையில் சில சம்பவங்கள் காணக் கிடைக்கின்றன. இளையராஜா இசையின் உச்சக் கட்டத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது அவரிடமிருந்து வெளிப்பட்ட இசை நுணுக்கங்கள் பார்ப்பன சமூகத்தை எரிச்சலுக்கும், அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியது. இதன் விளைவாக எஸ்.வி.நரசிம்மன் என்ற பார்ப்பனர் இளையராஜாவிடம் இருப்பதால்தான் அவரால் இத்தகைய காரியங்களைச் செய்ய முடிகிறது என்றும், அவரிடம் சொந்தச் சரக்கு ஏதுமில்லை என்றும் அக்கிரகாரத்தில் திண்ணைப் பேச்சுகள் கிளப்பி விடப்பட்டன. இதன் விளைவாகவோ என்னவோ எஸ்.வி. நரசிம்மன் தனித்து இசையமைக்க ஆரம்பித்தார். எனினும் பகவான் செயலால் அவரால் தனித்து வெற்றி பெற இயலவில்லை. அந்த பேச்சு அத்தோடு போயிற்று என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறபோது ஞானி இன்னும் கருவிக் கொண்டிருப்பது தெரிகிறது. வீழ்ந்து கிடந்த கர்ணன் மேல் கடைசி அம்பு போடச் சொல்லி நச்சரித்த கிருஷ்ண பரமாத்மாவின் செயல் நினைவுக்கு வருகிறது.

மொழி, இசை முதலியவை மனித சமூகத்தின் அனாதியான படைப்புக்கள். இவற்றிற்கான இலக்கணம் என்பது காலத்தால் மிகமிகப் பின் தங்கியது. காவிரி டெல்டா பிரதேசங்களில் விவசாய சமூகத்தின் மேலதிக வளர்ச்சியான பேரரசுகளின் அரவணைப்பில் தலித் மக்களின் மிஞ்சிய மனித உழைப்புச் சக்தியை வயிறு புடைக்கத் தின்று இசை இலக்கணங்கள் வளர்த்த பார்ப்பன, வேளாள சமூகம் இன்றுவரை இசை மற்றும் மொழி இலக்கணங்களை கடவுள் அவர்களிடம் மட்டுமே பட்டா பண்ணிக் கொடுத்ததாக புருடா விட்டுக் கொண்டிருப்பது குறித்தெல்லாம் ஞானி நினைத்தால் நூறு நூறு புத்தகங்கள் எழுதலாம்.

மொழிப்போர் முஸ்தீபுகளில் இருந்த திருமாவளவன் பாலியல் சுதந்திரப் போரில் மாட்டிக் கொண்டதாகத் தெரிகிறது. குஷ்பு விவகாரத்தைப் பொறுத்தவரை தங்கர்பச்சான் என்கிற ஆம்பளை குஷ்பு என்கிற பொம்பளையின் முன்பு கைகூப்பி மன்னிப்புக் கேட்ட செயல்தான் விடுதலைச் சிறுத்தைகளின் ஆம்பளை அரசியலைத் தூண்டி விட்டிருப்பதாக ஞானி உள்ளிட்ட அனைத்து பெண்ணியவாதிகளும் கருத்துத் தெரிவிக்கிறார்கள். ஏற்கனவே மன்னிப்புக் கேட்ட தங்கரை விட்டுத் தொலைக்காமல் மீண்டும் நடிகர் சங்கத்திற்கு அழைத்திருக்க வேண்டாம். (கைகூப்பி) மன்னிப்பு கேட்பதற்கென்றே தயங்கித் தயங்கி வந்த தங்கரின் மேல் பெண்ணியவாதிகள் கெட்ட வார்த்தைகள் பேசியபடி அடிக்கப் பாய்ந்திருக்க வேண்டாம். பண்பாடற்ற இச்செயல் பல பிரச்சினைகளுக்கு வழி வகுத்தது.

தான் விரும்பிய உடையணிந்து, ஆண்களைப்போல் கர்வமுடன் நடந்து கொள்ளும் கதாநாயகியை அடக்கித் தாலி கட்டி சேலை கட்ட வைப்பதுதான் தமிழ் சினிமாவின் வெற்றிகரமான ஃபார்முலாவாக எம்.ஜி.ஆர். காலம் தொட்டே செயல்பட்டு வருகிறது. கட்டைப் பஞ்சாயத்துத் தலைவர்களாக சரத், விஜயகாந்த் முதற்கொண்டு 'பொம்பளைன்னா தல குனிஞ்சுதான் நடக்கணும், ஆம்பளைன்னா தல நிமிர்ந்துதான் நடக்கணும்' என்று நரைத்த மயிரைக் கோதி விட்டுக் கொள்ளும் ரஜினி வரை எல்லோரும் மேற்கண்ட பார்முலாவைத்தான் பின்பற்றி வருகிறார்கள். இவர்களுக்கு சற்றும் குறையாமல் சிதம்பரம் பத்மினி நடத்தை சரியில்லாதவர் என்று முன்னாள் நடிகையான இந்நாள் முதல்வர் அறிவித்தார். நடிகர் சோ ராமசாமியோ பெண்கள் நர்ஸ் மற்றும் டீச்சர் வேலைக்குத்தான் லாயக்கானவர்கள் என்றும், பிற துறைகளில் அவர்கள் கூடாதென்றும் வெகுகாலமாகப் பிரச்சாரம் செய்து வருகிறார். இது விஷயத்தில் பாரதியாரை விடவும் தான் புரட்சிகரமானவரென்றும் சாட்சியம் கொடுத்துள்ளார். (ஞானி கவனிக்கவேண்டும்) மேற்கண்ட கும்பலை யார் கைகூப்பி மன்னிப்பு கேட்க வைப்பது.

பொதுவில் சினிமாவில் பணத்துடன் ஆபாசமும் முதலீடாகப் போடப்படுகிறது. பணம் பெற்றுக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டு பாலியல் இச்சையைத் தீர்ப்பவர்கள் 'பாலியல் தொழிலாளிகள்' என்று அழைக்கப்படுகிறார்கள். இதன்படி பாலியல் இச்சையைத் தூண்டி விடுவதை அடிப்படையாகக் கொண்டியங்கும் சினிமாக்காரர்கள் 'பாலியல் உப தொழிலாளி'களாகிறார்கள். இவர்களுள் நடைபெறும் வெட்டிச் சண்டைகள் தத்துவச் சண்டைகளாக மாற்றப்படுகின்றன. விடுதலைச் சிறுத்தை தொண்டர்களின் சக்தி தேவையற்ற பிரச்சினையில் கடுமையாக வீணடிக்கப்பட்டுள்ளது. குமுதம் பத்திரிக்கை கூட திருமாவை தலிபான் என்று கண்டுபிடித்துள்ளது. இது விஷயத்தில் கனிமொழி நேர்மையுடன் கருத்துத் தெரிவித்திருப்பதாக ஞானி புளங்காகிதம் அடைந்திருக்கிறார். அப்படி அவர் என்னதான் கருத்துக் கூறி விட்டார் என்று பார்த்தால் கற்பு என்பது இந்துத்துவா என்ற திருமாவின் பழைய சமாச்சாரம் பற்றி கேள்வி கேட்டிருக்கிறார். ஆனால் பழம் பெரும் பகுத்தறிவுவாதியான கருணாநிதிகு கற்பு என்ற இந்துத்துவாவில் உடன்பாடு உண்டா? உலகத்தில் எது நடந்தாலும் கருத்துத் தெரிவித்துவிடும் கருணாநிதி இது விஷயத்தில் இன்னும் ஏன் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டும் என்றெல்லாம் அவர் துணிச்சலுடன் கேட்டிருக்கவில்லை

மேல்தட்டு பெண்களின் பாலியல் சுதந்திரம் குறித்து செய்திகள், ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டு கலக்கி வருகிற பத்திரிக்கைகள் குண்டுபட்டியில் பழங்குடி மீதான காவல்துறையின் அட்டூழியங்கள் குறித்தெல்லாம் பெரிதும் அலட்டிக் கொள்ளவில்லை. ஏனெனில் அவை பெண்ணியப் பிரச்சினைகள் அல்ல, தலித் பிரச்சினை.

இப்படிப்பட்ட இன்னல்களுக்கு இடையில் அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தர் தம் பங்கிற்கு பெண் சுதந்திரத்திற்கு வேட்டு வைத்து விட்டதாக உடைக் கட்டுப்பாடுகள் குறித்த விமர்சனங்கள் தெரிவிக்கின்றன. உடைக் கட்டுப்பாடுகள் அனேக கல்லூரிகளில் ஏற்கனவே வழக்கத்தில் இருக்கிறது. கட்டுப்பாடென்னவோ இருபாலருக்கும்தான். ஆனால் இது பெண் சுதந்திரத்திற்கு பெருந் தொந்தரவு என கவனிக்கப்படுகிறது. வேட்டி காலாவதியாகிவிட்ட நிலையில் பேண்ட் சட்டை அல்லது அதையொத்த ஒரு உடைதான் ஆண்களின் இன்றைய நிலை. ஆனால் பெண்களுக்கென்று நிறைய விதமான உடைத்தேர்வுகள் உள்ளன. புது உத்தரவு அதற்கு ஆப்பு வைத்துவிட்டது. அண்ணா பல்கலைக் கழகம் அரசுக் கல்லூரியே தவிர அங்கு படிக்கிற பெரும்பாலானவர்கள் வசதியான வீட்டுப் பிள்ளைகள். அப்படிப்பட்டவர்களுக்கு இப்படியொரு பரிதாப நிலை வந்திருக்க வேண்டாம்தான்.

நான் பள்ளியில் படிக்கும்போது சத்துணவுத் திட்டத்திலிருந்து வெள்ளைச் சட்டையும் காக்கி டவுசரும் தருவார்கள். சட்டை ஓரளவு சரியாக இருந்தாலும், டவுசர் மட்டும் பழைய போலீஸ் காரனுடையதைப்போல ரொம்பவும் தொளதொளப்பு. ஆரம்பத்தில் டவுசரை முடிச்சுப் போட்டுக் கொண்டிருந்தாலும் பின்பு வசதி கருதி கருப்பு அரைணாக் கயிறை பெல்ட்டாக பயன்படுத்த ஆரம்பித்தேன். பள்ளியில் ஓடி விளையாடிக் கொண்டிருந்த ஒரு சபிக்கப்பட்ட தருணத்தில் நமுத்திருந்த அரைணாக்கயிறு பட்டென்று தெறித்து நிலைமை ராசாபாசமாகி விட்டதுடன் தலை குப்புறவும் கவிழ்த்துவிட்டது. சத்துணவு திட்டக்காரர்கள் கொஞ்சம் நியாயமாய் நடந்து கொண்டால்தான் என்ன? அரசு பள்ளி மாணவர்களான எங்களுக்கு அக்கம் பக்கம் உள்ள கான்வெண்ட் மாணவர்களின் பாஷான சீருடை எரிச்சலைத் தந்து கொண்டிருந்ததென்னவோ உண்மை. சீருடையின் தத்துவம் சமத்துவம் என்பது மாறி அது பள்ளிகளுக்கிடையிலான மாணவர்களின் சமூக அந்தஸ்தைக் குறிக்கிற விஷயமாகி வெகுகாலமாயிற்று. இது பற்றியெல்லாம் யாரும் விவாதிப்பதில்லை.

உடைகளுக்கென்று நிறைய மாய மந்திர சக்திகள் உள்ளதாகத் தெரிகிறது. சினிமாக்காரர்கள் கல்லூரி மாணவிகள் தொடை தெரிய உடையணிந்து வருவதாகக் காட்டி வருவது அனைவரும் அறிந்ததே. இதுபற்றியெல்லாம் யாரேனும் கேள்வி கேட்டால் 'ரசிகர்கள் விரும்புறதத்தான் காமிக்கிறோம்' என்று பதிலளிக்கிறார்கள். பின்னே திருட்டு விசிடியில் படம் பார்க்கும் ரசிகர்களின் விருப்பத்திற்கு மட்டும் இவர்கள் ஊறு விளைவிப்பதேன்? உடையென்பது அந்நபரின் வசதி என்பதை மீறி நிறைய பக்கவிளைவுகளை உருவாக்க வல்லது. அதிலொன்று பாலியல் விளைவு. இது போன்ற விஷயங்களில் மனம் அலைக்கழிக்கப்பட்டு படிப்பை கோட்டை விடுகிறவர்கள் பெற்றோரின் கண்காணிப்பு குறைந்த கீழ்த்தட்டு மாணவர்கள்தான் (ரௌடிப் பசங்க அல்லது ஆணிய வெறியர்கள்) என்பதை நடைமுறையில் வெகு எளிதாக அடையாளங் கண்டுகொள்ள முடியும். அண்ணா பல்கலையின் உடைக் கட்டுப்பாடு ஒடுக்கப்பட்ட சமூக மாணவர்களுக்கு எந்த நட்டத்தையும் ஏற்படுத்தி விடப்போவதில்லை.

உடைகளில் ஆண் உடை, பெண் உடை பிரிவினை தமக்கான அதிகாரங்களையும் உள்ளடக்கியதாக தெரிகிறது. ஆண் உடையை அணிந்து கொள்கிற பெண்கள், பெண் உடையை அணிகிற பெண்ணைக் காட்டிலும் நாகரிகத்தில் மேம்பட்டவர்களாகக் கருதும் போக்கு உள்ளது. அதாவது ஒருவகை உயர் குடியாக்கம். ஆண் உடையை அணிவது உட்பட புகைபிடிப்பது, மது அருந்துவது முதலிய 'ஆண்' செயல்களைப் பின்பற்றும் பெண் புரட்சிக்காரியாக அறிவு ஜீவிகளால் கணிக்கப் படுகிறாள். தீவிர பெண்ணியம் பேசும் ஆண்கள் கூட பெண் உடையை தேர்ந்து கொள்வதில்லை என்பது உடைகளின் அதிகாரப் படிநிலையை உறுதிப்படுத்துவதாக உள்ளது. பாலியல் சுதந்திரம் குறித்தும் பெண் விடுதலை குறித்தும் பேசுகிற பெண்கள் கூட இப்படிப் பேசுவதாலேயே எங்களைத் தப்பா நினைக்கிறாங்க என்று புலம்புவது வேதனை அளிக்கிறது. துணை வேந்தர்களோ, ஒழுக்கசீலர்களோ அனைவரையும் தட்டி நல்வழிப்படுத்தும் ஆற்றல் நவீன முதலாளித்துவத்திற்கு உண்டு.

■



படிப்பகம்

www.padippakam.com

■ சந்திரன்

# கனிதம் நம் உடைமை

சமீப காலமாக தலித் இலக்கியம் என்பது தமிழ் மொழியின் வீச்சாக கிளம்பியுள்ளது. தலித் இலக் கியத்தை யார் எழுதுவது என்ற விவாதம் தமிழர்களிடையே

1. தலித் நிலங்களை யார் பயன்படுத்துவது? (யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம் என்பது தமிழர் களின் செயல்பாடு.)

2. தலித்துகளுக்கான இட ஒதுக்கீட்டை யார் அனு பவிப்பது? (நாங்களும் அனுபவிப்போம் என்பது போலி சாதி சான்றிதழ்களின் ஊடுருவல்.)

3. தலித்துகளுக்கான வசதி, வாய்ப்புகளை யார் நுகர்வது? (எங்களுக்கும் பங்கு வேண்டும் என்பது சமத் துவபுரம் மற்றும் பொருளாதார இட ஒதுக்கீடு தலித்து களுக்கு உதவுவதற்காக தங்களுக்கு உதவிக் கொள்ளும் தலித் அல்லாத தன்னார்வ, பொது நல அமைப்புகள்.)

4. தலித்துகளின் உழைப்பு, அரசியல் வாய்ப்புகள் இவை அனைத்தும் சிறப்புகளாக இருப்பதால் இவை களின் மீது தலித் அல்லாதவர்களுக்கு ஈர்ப்பு என்பது இலாப நோக்கத்தில் என்றுமே நிந்தரமாய் உள்ளது. இவைகளின் வெளிப்பாடே 'தலித் இலக்கியங்களை யார் படைப்பது' என்ற வினா. இன்னும் சிலர் தலித்து களை தமிழர்களாக பார்க்கும் முற்போக்காளர்களாக இருப்பதால் தலித் இலக்கியங்களை எல்லா தமிழர்களும் படைக்கலாம் என்கின்றனர்.

5. தலித் இலக்கியங்களை, தலித்துகள் மனிதர்கள் என்பதால் எல்லா மனிதர்கள் எழுதுவதும் தலித் இலக் கியங்கள் என்ற அளவிற்கு வானத்திற்கும் பூமிக்குமான பெரிய மனது படைத்த இலக்கியவாதிகள் மிக அதிகம்.

அதெல்லாம் சரி, தலித்துகள் இழிதொழில்களான மலம் அள்ளுதல், செருப்பு தைத்தல், பறை அடித்தல், வெட்டியான் தொழில், பிணம் சுமத்தல், எரித்தல் போன் றவை செய்கின்றனரே, நானும் மனிதன்தான், இவை களை நானும் செய்கிறேன் என்று எந்த தலித் அல்லா தாரும் உரிமை கொண்டாடுவது இல்லை. காரணம் இவைகளினால் இவர்களுக்கு எவ்வித பயனும் இல்லை

6. சிலர் மிகவும் முற்போக்காக எழுத்தாளர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள் தலித் அல்லாத சமூகத்திலிருந்து தலித்துகளுக்கு உதவ முன் வருகின்றன. இது மிகவும் வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில், ஏன் தலித் அல்லாதவர்களில் யாரும் மலம் அள்ள, செருப்பு தைக்க, பறை அடிக்க, வெட்டியான் தொழிலான பிணம் சுடுதல், சுமத்தலுக்கு முன் வருவ தில்லை. படிப்பின் மூலமாக தலித் அல்லாத வாத்தியார் தலித் மக்களுக்கு உழைக்க முன்வந்தால் அவருக்கு தன் இனத்திலும், தலித் இனத்திலும் சிறப்பே கிடைக்கிறது.

7. தலித் அல்லாத ஒருவர் தலித்துகளுக்காக மலம் அள்ளினால் எவ்வித சிறப்பையும் அவர் பெறுவது கிடை யாது. எவ்வித கோரலையும் முன்வைக்கவும் முடியாது.

8. படித்த தலித் அல்லாதவர் சிலருக்கு இருக்கும் முற்போக்கு சுபாவம் படிக்காத தலித் அல்லாதவருக்கு ஏன் தோன்றுவது கூட இல்லை?

9. துவக்கத்தில், அரேபிய நாடுகளில் அங்கு பார்த்து வளர்ந்து வாழ்பவர்களில் யாரும் கம்ப்யூட்டர் துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் குறைவாக இருந்ததால், வெளிநாடுகளில் இருந்து அத்துறை நிபுணர்கள் பொருள் ஈட்ட மட்டுமே அந்நாடுகளுக்குச் சென்றனர்

10. மிகவும் உண்மையான கடினமான உழைப்பை முன்வைத்து பொருள் ஈட்டினர்

11. இதைப்போலவே இன்றைக்கு தலித் அல்லா தோர் தலித் சமூகத்தின் புதையலை, தலித் அனுதாபிகள் என்ற பெயரால் அளந்து தங்களின் பெட்டிகளில் நிரப்பிக் கொள்கின்றனர்.

12. பெட்டியை நிரப்பும் கூலிவேலைக்குக்கூட இந்த தலித் அல்லாதோர் தலித்துகளையே பயன்படுத்துகின் றனர் - நாயைப் பார்த்து குறைக்க நாய் பயன்படுவதுபோல.



படிப்பகம்

www.padippakam.com

**தலித் இலக்கியம் தாண்டி தலித் அறிவியல் தலித், வரலாற்று இயல் என்பன மட்டுமே தலித்துகளின் புலம்பல் இலக்கியங்களைத் தாண்டி ஓர் ஆரோக்கியமான வாழ்வை தலித்துகள் மேற்கொள்ள வழிகோலும்.**

13. படிக்காத தலித் அல்லாதார் மலம் அள்ள முன்வர வேண்டும் என்று நாம் கூறவில்லை. மாறாக அவ்விதம் அவர்கள் ஏன் முன்வரவில்லை என்பதை தலித் அல்லாத தலித் அனுதாபிகள் யோசிக்க வேண்டும் என்றுதான் நாம் கோருகிறோம்.

14. தலித்துகள் விசாலமான சிந்தனை பெற வேண்டும் என்பதாக பலர் கூறுகின்றனர். தலித் தலைமை எல்லாம் போகப் போக நிலை மாறிவிடும் என்றும் அவர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

15. திராவிட இயக்கங்களின் துவக்க தலைவர்களாக M.C. ராஜா, ரெட்டமலை சீனிவாசன், மீனாம்பாள், சிவராஜ், Rev. ஜான் ரத்தினம் போன்ற பலர் இருந்தனர். இவர்களின் அயராத உழைப்பே இன்றைய திராவிட கட்சிகளின் கருணாநிதி, எம்.ஜி.ஆர்., அண்ணா, ஜெயலலிதா முதலமைச்சர்கள், வீரமணியின் அகண்ட சொத்துக்கள்.

16. தலித் தலைமை என்பதையும், தலித்துகள் மட்டுமே தலைமைப் பொறுப்பில் இருக்க வேண்டும் என்பதை முன் மொழியாத காரணத்தால் மட்டுமே கடைசி நிலை, தலித் அல்லாத திராவிடர்கள், இன்றைக்கு முதல்வர்கள். திராவிடர்களின் மனப்பான்மை தலித்து நல்ல அமைச்சர் பதவி கூட தர் அனுமதிக்கவில்லை. மாறாக முதலமைச்சர் பதவியை தலித் அல்லாதோருக்கு அளித்து அரசியல் விளையாட அனுமதியளித்துள்ளது.

17. திராவிடர்களின் ஆட்சியில், குறிப்பாக அண்ணா, கருணாநிதியின் திராவிட ஆட்சியில், தமிழக தலித் அமைச்சர்களின் துறைகள் தன்மை சார்ந்தே இருந்தது. இதில் கவனம் வைத்த திராவிடர்கள், திராவிடரல்லாதோர் சாதாரண அமைச்சர்கள் அந்தஸ்திற்கும் மேலாக முதலமைச்சர் வரை பயணிக்க வசதியளித்தனர். இன்றைக்கும் ஜெயலலிதா முதல்வராக வருவதை சவாலாக நினைக்கும் கருணாநிதி தலித்துகள் அரசியல் சக்தியாவதைக் கூட பாவமாக கருதுகிறார். ராகுல் காந்தி முதன் முதலில் பேச்சிற்கு உருகி இளகி அழுத கருணாநிதி, மறைந்த முன்னாள் ஜனாதிபதி கே.ஆர். நாராயணனின் இழப்பைக் கூட இரும்பு இதயத்துடன் சகித்துக் கொண்டார். கருணாநிதியின் அரசியலைப் பொறுத்த வரையில்,

1. திராவிடர்கள் எப்படி தமிழர்களானார்கள் என்பதும்,

2. தலித்துகள் எப்படி திராவிடர் அல்லாதார் ஆனார்கள் என்பதும் நாம் முன் வைக்கும் வினாக்கள்.

இன்றைய தலித் இயக்கங்கள் பிற்படுத்தப்பட்ட இயக்கங்களோடு இணைந்து சமூகநீதியை நிலை நாட்ட வேண்டும் என்று அறிவுரை வழங்கப்படுகிறது. திராவிட இயக்கங்களில் தலித்துகள் மிகப்பெருமளவு உழைத்துள்ளதை எம்.சி. ராஜா்முதல் மீனாம்பாள் வரை வாழ்ந்தோர் வரலாறு நமக்கு தெரிவிக்கிறது. இப்படி ஓங்கி வளர்க்கப்பட்ட திராவிட இயக்கம் இன்று யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளது என்பதை மக்கள் அறிவர்.

**தலித் இலக்கியம் தாண்டி தலித் அறிவியல் தலித், வரலாற்று இயல் என்பன மட்டுமே தலித்துகளின் புலம்பல் இலக்கியங்களைத் தாண்டி ஓர் ஆரோக்கியமான வாழ்வை தலித்துகள் மேற்கொள்ள வழிகோலும்.**

தலித்துகளும், பிற்படுத்தப்பட்டோர்களும் இணைந்து முன்னெடுத்ததுதான் திராவிட இயக்கங்கள். இந்த திராவிட இயக்கங்கள் இன்றைக்கு பிற்படுத்தப்பட்டோரின் வளம் சேர்க்கும் அமைப்பாக மட்டுமே உள்ளது. சொல்லப்போனால், திராவிட இயக்கம் என்ற சொல் இன்றைக்கு தலித் அல்லாதோர் அமைப்பாக மட்டுமே காட்சியளிக்கிறது.

ஜமீன்தார் வீடுகளில் மாட்டுக்கொட்டாய் என்று தனியாக இருப்பதுபோல தேசிய கட்சியான காங்கிரஸ் போன்ற கட்சியில் SC/ST பிரிவு என்றாவது தனியாக இருந்தது. ஆனால் திராவிட அல்லது தேசிய அளவில் பிற்படுத்தப்பட்டோருக்கான அமைப்பில் தலித்துகளுக்கான அங்கீகாரம் என்று ஏதும் இல்லாமலேயே இருந்துள்ளது. இதை திராவிடரான இயக்கங்கள் தமிழகத்தில் மிகத் திறமையாக இதுவரை கையாண்டுள்ளன.

முன்னாள் பிரதம மந்திரியான இந்திரா அம்மையார், தன்னுடைய கட்சியான காங்கிரசுக்கு ஆதரவு குறைந்து வரும்போதெல்லாம் நாடாளுமன்றத்தில் பாகிஸ்தானியர் ஊடுருவல், நாட்டின் எல்லைகளுக்கு ஆபத்து, அந்நியர் ஊடுருவல் என்று அரசியல் காய்களை நகர்த்தியே தன்னுடைய பலத்தை காப்பாற்றிக் கொண்டார். பின்வந்த ஒவ்வொரு அரசியல்வாதியும் நாட்டில் நாட்டுப்பற்று என்று உயர்ந்த உணர்வை, தங்களின் இருப்பை தக்கவைத்துக் கொள்ளும் வழியாக மட்டுமே அணுகினர்.

இந்த நாடு தழுவிய செயலுக்கும், தமிழக திராவிட கட்சிகளின், தமிழ் உணர்வின் பிடிமானத்திற்கும் அணுகு முறையில் எவ்வித பேதமும் இல்லை.

தலித் இலக்கியம் தாண்டி தலித் அறிவியல் தலித், வரலாற்று இயல் என்பன மட்டுமே தலித்துகளின் புலம்பல் இலக்கியங்களைத் தாண்டி ஓர் ஆரோக்கியமான வாழ்வை தலித்துகள் மேற்கொள்ள வழிகோலும்.

இங்கு சமூகம் என்ற மீப்பெரும் வரையறையில் இலக்கியம், வரலாறு, அறிவியல் என்பன உபகரணங்களாக அமையப்பெற்றுள்ளன என்பதை உணருங்கால் சமூகத்தின் தேவையில் இலக்கியத்தின் போதாமை வெளிப்படும். அதனிடை இலக்கியத்தை வாரித்தர மட்டுமே முன்வரும் தலித் அல்லாதார் உள் நினைப்பும் கணக்கிடலும் புரியும்.

- தொடரும் ■



படிப்பகம்

www.padippakam.com

■ அ. தயாளன்

# பிரிவினை வளர்க்கும் உட்சாதி

உலக நாடுகளில் எந்த மூலை முடுக்குகளிலும் இல்லாத பிறவிச் சாதியமைப்பு முறை, தீண்டாமைக் கொடுமைகள், இந்தியாவுக்கேயுள்ள அவமானகரமான தனிச்சிறப்பு. தீண்டாமை கொடுமைக்குள்ளாகும் பட்டியலின தாழ்த்தப்பட்ட மக்களுக்குள்ளுமுள்ள ஏற்றத் தாழ்வுகள் கூடுதல் தனிச்சிறப்பு.

இவற்றிற்கான காரண காரியங்களை அலசி ஆராய்ந்து, விருப்பு வெறுப்பின்றி அனைத்து இனக்குழு மக்களின் ஒற்றுமைக் கூறுகளை கண்டறிந்து இந்தியா வில் கண்டறிந்து இந்தியாவில் ஆரிய இனத்தைத் தவிர்த்து, அனைத்து சமூக மக்களும் ஒரே இனத்தை சார்ந்தவர்களே. இவர்கள் அனைவரும் நாகர் இனத்தை சேர்ந்தவர்கள். இவர்களின் ஆட்சி கி.பி. நான்காம் நூற்றாண்டு முதல் இநந்தியாவெங்கிலும் மிக சிறப்பாக ஆட்சி புரிந்ததை வரலாற்று ஆதாரங்களுடனும், கல்வெட்டு சான்றுகளினாலும் உறுதிப்படுத்தியும், திராவிடர்கள், நாகர்கள் என்பது ஒரே இனமக்களை குறிக்கும் இரு வேறு பெயர்கள் என்பதனையும் தெற்கத்திய நாகா இன மக்களை வட இந்திய நாகா இன மக்களுடன் இணைக் கும் இதர பல பிணைப்புகளையும் கோடிட்டு காட்டி, நாகர்கள் என்பது இன அல்லது கலாச்சாரப் பெயர். திரா விடர் என்பதுமொழி அடிப்படையில் அமைந்த பெயர் என்றும் பார்ப்பனீய புதை குழியில் சிக்கி, பிறவிச் சாதி பிரிவினையை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கும் இடைநிலை சாதியினைரையும் கேள்விக்குட்படுத்தி, பட்டியலின தாழ்த்தப்பட்ட மக்களுடன் அவர்களுக் குள்ள இன வரலாற்று உண்மைகளையும், பல ஒற்று மைக்கான ஒன்றினையக் கூடிய கூறுகளை பல உண்மை களை இந்திய சமுதாய மக்களுக்காக தன் வாழ்நாள் முழுவதும் சிந்தித்து யாரும் மறுக்கா வண்ணம் நிருபித்த சமதர்ம காவலன் மாபெரும் மேதை அனைத்து இந்திய மக்களின் ஒப்பற்ற தலைவன் புரட்சியாளர் அம்பேத்கர்.

அவர் வழியை பின்பற்றுவதாகச் சொல்லிக் கொள்ளும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு சில தலைவர்கள் அறிவு ஜீவிகள், அவரவர் சார்ந்த பிரிவை முன்னிலைப்படுத்தி பெருமை பேசி, மற்ற தாழ்த்தப் பட்ட பிரிவு மக்களை தனிமைப்படுத்தி, இருட்டடிப்பு செய்வதையே இதுகாறும் செய்து கொண்டு வருகின்ற னர். தற்போதைய தலித் வரலாற்று நூல்கள் என அறியப் படுகிற புலவர் ஆனந்த ராசன் அவர்களின் 'பவுத்தமும் பழங்குடி மக்களும்', டி.தருமராஜன் அவர்களின் 'நான் பூர்வ பௌத்தன்' இந்நூல்களில் தலித், தலித் என்று பேசினாலும் தான் சார்ந்த சாதி உணர்வு அப்பட்டமாக தெரிகிறது. சிதறுண்ட பௌத்தர்களே இன்றைய பட்டி யலின தாழ்த்தப்பட்ட மக்கள் என்றார் அண்ணல் அம் பேத்கர் ஆனால் இவர்களோ பறையர்கள்தான் பூர்வ பௌத்தர்கள் என்று தொடர்ந்து பதிவு செய்து வரு கிறார்கள். அதற்கு என்னென்ன சான்றாதாரங்கள் சொல்லப்படுகிறதோ அவை அனைத்தும் அனைத்து பட்டியலின மக்களுக்கும் பொருந்துவதை வசதியாக மறந்துவிட்டு, மறுத்துவிட்டு தலித் என்றால் தன்னு டைய சாதிதான்; அதிலும் குறிப்பாக பறையரினம் என் பதுதான் இவர்களின் ஆராய்ச்சி முடிவு. மற்ற தாழ்த்தப் பட்ட வகுப்பு மக்களை பண்டித அயாத்திதாச பண்டித ரின் மொழி நடையில் சொல்வதானால் இயல்பிலேயே தாழ்ந்தவர்கள் என்று புறந்தள்ளும் போக்குத்தான் இன்றுவரை தொடர்கிறது.

தாழ்த்தப்பட்ட பட்டியலின மக்களின் இன மரபைப் பற்றி குறிப்பிடும் அண்ணல் அம்பேத்கர் அவர் கள் இந்திய மக்கள் ஒரு காலத்தில் குலமரபை அடிப் படையாகக் கொண்டிருந்தனர். இந்த குலமரபுக் குழுக் கள் சாதியாய் மாறிய போதிலும் குலமரபு அமைப்பு முழுமை கெடாது இன்னமும் அப்படியே இருந்து வந்தது. ஒவ் வொரு குலமும் பல உட்பிரிவுகளாக பிரிந்தது. ஒவ் வொரு உட்பிரிவும் பல குடும்பக் கிளைகளைக் கொண் டிருந்தது. ஒவ்வொரு குடும்பக்கிளையும் உயிர்பிராணி அல்லது சடப்பொருள் எதையேனும் குலமரபு சின் னமாக பெற்றிருந்தது. ஒரு பொதுவான குலமரபுச் சின்னத் தைக் கொண்டிருந்து . குடும்பக் கிளைகள் யாவும் ஒரு குறிப்பிட்ட கோத்திரத்தை அல்லது குலத்தை சேர்ந்தவை என அழைக்கப்பட்டன. ஒரே கோத்திரத்தை சேர்ந்த குடும்பங்கள் தங்களுக்குள் திருமணம் செய்துக் கொள்ள அனுமதிக்கப்படவில்லை. தங்கள் குருதி நாளங் களில் ஒரே ரத்தம் பாயும் ஒரே மூதாதையரின் வழித் தோன்றல்கள் என்று கருதப்படுவதால் தான் இந்த தடை விதிக்கப்பட்டது. ஓர் இனத்தை நிர்ணயிப்பதற்கு உடலமைப்பு ஒரு சிறந்த சோதனையாக இருப்பது போன்று பல்வேறு சாதியினருக்கும் வகுப்பினருக்கு முள்ள குலமரபுச் சின்னங்களை வைத்தும் அவர்களது இனமரபை நிர்ணயிக்க முடியும்.

பட்டியலின மக்கள் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது மனித இன ஆராய்ச்சிகளின் முடிவு. இம்மக் களில் ஒரு பிரிவினரான பள்ளர் இன மக்களிடம் அம்மா பிரிவு ஆத்தாபிரிவு என குலக்குறிகள் உள்ளன. அதே போல் சாக்கிய கலியர் (சக்கிலியர்) பிரிவில் அம்மாபிரிவு அவ்வா பிரிவு என குலக்குறிகள் உள்ளன. பறையர் பிரி வில் சாம்புவார் எனும் குலக்குறி இருப்பதைப் போன்று சாக்கிய கலியர் பிரிவில் தெலுங்கு உச்சரிப்பில் ஜாம்பு வாலு எனும் குலக்குறியுடையவர் உள்ளனர்.

ஆகவே ஒரே மாதிரியான குலமரபுச் சின்னத்தை பெற்றிருப்பவர்கள் ஒரே குருதி உறவு கொண்டவர் களாகத்தான் இருக்கமுடியும். இவர்களை இருவேறாக பிரிக்க முடியாது. அதே போலவே பட்டியலின மக் களிடம் ஒற்றுமையுள்ள பல கூறுகளைக் காணமுடியும்,



படிப்பகம்

www.padippakam.com

பட்டியலின உட்சாதி முரண் பற்றிய கேள்விக்கு பதிலளித்த தொல். திருமாவளவன் அவர்கள் (நக்கிரன் 19.10.05) தாழ்த்தப்பட்டோர் இனத்தில் பள்ளர், பறையர், சக்கிலியர் என்பது வெவ்வேறு சாதிகள். அவை ஒன்றுக் கொன்று உட்சாதிகள் அல்ல. பள்ளர் இனத்தில் அம்மா பள்ளர், ஆத்தா பள்ளர் என்பது அவர்களிடத்திலே உள்ள உட்சாதி, பறையர் இனத்தில் வள்ளுவ பறையர் போன் றவை உட்சாதிகள் அதே போல சக்கிலியர் இனத்தில் பகடை, மாதாரி, அருந்ததியர் ஆதி அந்திரா போன் றவைஉட்சாதிகள் என பதிலளித்திருக்கிறார்,

தாழ்த்தப்பட்ட பட்டியலின மக்களை ஒடுக்கும் ஆதிக்க சாதிகள், இன்று தங்களின் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள அவர்களுக்குள் உள்ள ஒற்றுமைக் கூறுகளை கண்டறிந்து ஓரணியில் இணைந்து வருவதை கண்கூடாகப் பார்த்து வருகிறோம். ஒரு இனத்தை தனிமைப்படுத்தி பார்க்கும் கூறாக அம்மக்களுக்கான பொதுவான தொழில் மிகமிக முக்கியமாக அவர்களுக் குள் உள்ள திருமண உறவுகளைக் கொள்ளலாம். அப்படி பார்க்கும் வேலையில் தங்களுக்குள் இதுவரை திருமண உறவோ, பொதுவான தொழில் முறையோ இல்லாத கள்ளர், மறவர், அகமுடையார், தங்களை முக்குலத்தோர் என ஒரே அடையாளத்தை நிலைநிறுத்தி ஒன்றினைந் திருக்கிறார்கள். அவர்களின் முப்பிரிவுகளை அகற்றி முக் குலத்தோர் என்ற ஒரே பிரிவினராக தங்களை அடை யாளப்படுத்திக் கொள்கின்றனர்.

அதே போல இதுவரையில் திருமண உறவோ பொதுத் தொழில் முறையோ ஏதுமற்ற சாதிகளான வெள்ளாள முதலியார்களும், செங்குந்த முதலியார் கைக் கோல முதலியார், சைவ முதலியார்களும் பிரிவில் உள்ள அனைவரும் இன்று ஓரணியில் திரண்டதுடன், இனி தங்களுக்குள் திருமண உறவு வைத்துக் கொள்ள வேண் டும் என தீர்மானம் இயற்றி ஒற்றுமையுடன் இணைந் துள்ளனர்.

அதுபோலவே ரெட்டியார்களும், நாயக்கர்களும், படையாச்சிகளும் மற்றுமுள்ள பிரிவுகள் தங்களுக்குள் திருமண உறவுகள் இல்லையென்றாலும் தங்களை வன்னியர் எனற பொது அடையாளத்திற்குள் ஒன்றி ணைந்துள்ளனர்.

இப்படி ஆதிக்கம் செலுத்தும் பலசாதி மக்கள் தங்களுக்குள் ஒற்றுமையை வளர்த்தெடுக்கும்போது பட்டியலின மக்களில் பள்ளர் வேறு பறையர்வேறு சாக்கிய கலியர் வேறு என பிளவுப்படுத்தி அவர்களுக் குள் இருக்கும் உட்பிரிவுகளை உட்சாதி என முழங்கும் தொல். திருமாவளவன் அவர்களின் நோக்கம்தான் என்ன?

தாழ்த்தப்பட்ட பட்டியலின மக்களாகிய பள்ளர், பறையர், சாக்கிய கலியர் இம்முப்பிரிவினரையும் கேள்விக் குட்படுத்தி வீறுகொண்டு எழுச்சி அடைந்து கொண்டிருக் கும் துரும்பர், மற்றுமுள்ளவர்களுக்குள் திருமண உறவு இல்லை என்பதைத் தவிர இவர்களிடம் காணும் வேறு பாடுகள் என்ன? இம்மக்களின் பொதுவான வாழ்விடம் ஊருக்கு வெளியேதான் அமைந்துள்ளது. பள்ளர்கள் மாட்டிறைச்சி உண்ணாமை என்ற வேறுபாடு சாக்கிய கலியர் செருப்பு தைத்தல், துப்புரவு வேலை செய்தல் போன்ற கூடுதல் தொழில் முறை வேறுபாட்டை தவிர இம்மக்களிடம் காணும் வேறுபாடுகள் என்ன? தாழ்த்தப்பட்ட மக்கள் பிரிவில் பெரும்பான்மையினராக உள்ள பள்ளர், பறையர், சாக்கிய கலியர், தமிழகம் முழுக்க சாவுக்கு பறையடிப்பவர்களாகவே இருக்கிறார் கள். பிணம் எடுத்தல், இழவு சொல்லுதல் குற்றவேல் போன்ற அடிமை வேலைகளை முப்பிரிவினரும் செய்கின்ற னர். இம்மக்கள் அனைவரும் நிலமற்ற விவசாய கூலி வேலை செய்பவர்களாகவே இருக்கிறார்கள்.

எந்த ஒரு இனத்திற்கும் தனித்தன்மையான அடை யாளமாக இருப்பது அம்மக்களின் பண்பாடு, கலாச்சா ரம். கலாச்சாரத்தில் முக்கிய பங்கு வகிப்பது அவர்களின் தெய்வ வழிபாடு. இன்றைக்கு புதுப்புது கடவுளர்கள் தோன்றிக் கொண்டே இருந்தாலும், பட்டியலின மக்க ளின் முழு முதல் வழிபாடு அம்மன் வழிபாடே. அம்மன் வழிபாடு இல்லாத சேரியை எங்கும் காணமுடியாது. பட்டியலின மக்கள் இந்த அம்மனை மாத்தம்மா, மாரி யம்மா, காளி போன்ற பல பெயர்களின் மூலம் வணங்கி னாலும், இந்த அம்மன்களின் வரலாறு என சொல்லப் படும் புராணக் கதைகள் ஒரே அடிப்படை மாதிரி யானவைத்தான். வழிபாட்டு முறைகளிலும் சிறிதும் மாறுதலில்லை. அனைத்து அம்மன்களின் அர்ச்சனைப் பொருள் வேப்பிலை மட்டுமே. இது அனைவரும் அறிந்த உண்மை.

இப்படி குலதெய்வ வழிபாடு, வாழ்நிலை பொரு ளாதார நிலை, தொழில் முறை என அனைத்தும் ஒரே நிலையில் இருக்கும், ஒரே குலமரபு சின்னங்களுடைய இவர்கள் அனைவரும் ஒரே இனக்குழு மக்களாகத்தான் இருக்க வேண்டும். அவர்களுக்குள் இருக்கும் பிரிவுகளை உட்பிரிவுகளாகத்ததான் நினைக்க வேண்டும். அதைத் தவிர்த்து பள்ளர் சாதி, பறையர் சாதி, சாக்கிய கலியர் சாதி வேறு வேறு என்று கூறுவதும், சாக்கிய கலியருள், ஆதி ஆந்திரா, ஆதி கர்நாடாகா போன்ற பிரிவினர் தமி ழர் அல்ல; அருந்ததியர் அல்ல. ஆதி ஆந்திர வேறு, அருந் ததியர் வேறு, ஆதி கர்நாடாகா வேறு, அருந்தததியர் வேறு (எழில் இளங்கவனின் அருந்ததியர் வரலாறு வினா வும் விளக்கமும்) போன்ற தெளிவான குழப்பங்கள் தாழ்த் தப்பட்ட பட்டியலின மக்களின் ஒற்றுமைக்கு விடு தலைக்கு எந்த வகையில் உதவும்?

பார்ப்பனீய படிநிலை சாதியமைப்பு முறையா னது, பட்டியலின மக்களையும் விட்டு வைக்காமல் பள்ளர், பறையரை ஒடுக்குவதும், பறையர், சாக்கிய கலியினரை ஒடுக்குவதுமாக இருக்கும் இச்சூழ்நிலையில் ஒரே இன மக்களான ஒரே குலமரபு சின்னங்களுடைய இம்மக்களை தான் தோன்றித்தனமாக வேறு வேறாக பிரித்து, பிரிவினையை கூர்மைப்படுத்தி கொம்புசீவி விடு வதைத் தவிர்த்து, புரட்சியாளர் அம்பேத்கரின் வழியில் அம்மக்களுக்கான ஒன்றிணையக் கூடிய ஒற்றுமைக் கூறுகளை இனம் கண்டு ஒன்றிணைந்தால்தான் பட்டிய லின மக்களின் விடுதலை சாத்தியமாகும். அதுவே அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கும் அடி தோலும் பிரிவினைக்கான கதவுகளை மூடி ஒற்றுமைக் கான கதவுகளை மட்டுமே திறப்போம்.

■



படிப்பகம்

www.padippakam.com

● புதிய மாதவி

# காலியான பாட்டில்கள்

சிறுகதை

**வலியுடன் பிறந்து வலியுடன் வாழ்வதே**

**எங்கள் வலி தீர்க்கும் ஆயுதம்**

**என்று என் நண்பன் சொன்ன வரிகள்**

**மின்னலாய் என் நினைவுகளில் பளிச்சிடும்.**

பேட்டிகள் வாசிப்பது என்றால் எனக்கு அலாதிப்பிரியம்.

அதிலும் எழுத்தாளர்களின் பேட்டிகள் என்றால் ரொம்பவே பிடிக்கும்.

அது என்னவோ தெரியவில்லை எழுத்தாளர்களின் படைப்புகளையும் அவர்கள்

சில கேள்விகளுக்குப் பதில் சொல்வதையும் நேர்க்கோட்டில் எழுதி

'டிக்...டிக்' என்று மூலையில் ஒரு பென்சில் டிக் அடிக்கும். அதன் பின்

பல நேரங்களில் அந்த எழுத்தாளர்களின் எழுத்துகளை வாசிக்கும்போதெல்லாம்

அவர்சொல்லியிருந்த பதில்கள் சம்மந்தா சம்மந்த மில்லாமல் நினைவில்

வந்து தொலைக்கும் .அன்றும் அப்படித்தான்...

'நீங்கள் பெரியார் சிறப்பிதழ்வெளியிடுவீர்களா?' என்ற கேள்விக்கு

'பெரியாரியக்கங்கள் அம்பேத்கர் சிறப்பிதழ் வெளியிடட்டும் .. அதன் பின்

நாங்கள் பெரியார் சிறப்பிதழ் வெளியிடுவதைப் பற்றி யோசிக்கலாம்' என்று

தலித் எழுத்தாளர் ஒருவர் சொல்லியிருந்தார்.

'நச்சுனு' இருந்தது அவருடைய பதில்.

அப்படிப் போடுப்போடு போடு தன்னாலே.. என்று மனசு ஒரு பாட்டுப் பாடி

அந்தப் பதிலுக்கு ஒரு பெரிய 'ஓ' போட்டு வரவேற்பு செய்து ஆட்டம் ஆடியது.

அதன் பின் அந்த எழுத்தாளரின் எழுத்துகள், கேள்வி பதில்கள் எல்லாவற்றையும்

வாசிப்பதில் ஒரு தனி ஆனந்தம் ஏற்பட்டது.

அவருடைய கதையில் ஓரிடத்தில் 'எனக்கு கண்ணாடிக் கிளாசிஸில் குடிக்கக் கொடுத்தார்கள்.

ஆனால் அவாள்களின் உறவினர்கள் வந்தவுடன் காபியை சில்வர் கிளாஸில் கொடுத்ததைக்

கண்டும் காணாமல் சிரித்துக் கொண்டே வெளியில் வந்தேன்' என்ற வரிகள் எப்படித்தான்

என் மூளையில் பதிந்ததோ தெரியவில்லை. இப்போ தெல்லாம் யார் வந்தாலும் அவர்களுக்கு

எந்த கிளாசில் தண்ணீர்கொடுப்பது என்று ஒரு பட்டிமன்றமே மனசில் நடக்கிறது.

எழுத்தாளர் எந்தக் கதையில், ஏன், எதற்காக இந்த வரிகளை எழுதியிருந்தார் என்பதெல்லாம்

சத்தியமாக மறந்துவிட்டது. ஆனால் இந்த இரண்டு வரிகள் மட்டும் அடிக்கடி நினைவில் வந்து

குடைச்சல் எடுக்கிறது.

எழுத்தாளர் அர்ஜூன் டாங்க்ளே அவருடைய புத்தகத்தை எடுத்துக்கொண்டு வந்தார்.

மராட்டிய மண்ணில் தலித் இலக்கிய வளர்ச்சியை போக்கை ஓரளவு இந்தத் தொகுதியை

வாசித்தால் புரிந்து கொள்ள முடியும் என்று சொன்னார். தலைப்பு 'தி பாய்சனஸ் பிரட்'

மகர்களின் வாழ்க்கையை, தலித்திய கவிதைகளை, சிறுகதைகளை, தலித் சிறுத்தைகள்

அமைப்பின் செயல்பாடுகளைச் சிறப்பாகத் தொகுத்திருந்தார்.இந்த மாதிரி தமிழில் ஏதாவது

புத்தகம் தொகுப்பட்டிருக்கிறதா என்று கேட்டார். தொகுத்திருக்கலாம், ஆங்கிலத்தில் அப்படி ஒரு தொகுப்பு வந்திருக்கிறதா என்ற கேள்வி அதன் பின்தான் எனக்கு உறைத்தது.

ஏன் வரவில்லை என்பதற்கும் என்னிடம் அப்போது பதிலில்லை.

செய்ய வேண்டிய பட்டியல்களில் இதையும் சேர்த்து மறக்காமல் எழுதி வைத்துக்கொண்டேன்.

இந்தப் பட்டியல் நீண்டுகொண்டே போவதும் இது வரை எதுவுமே செய்யப்படாமலிருப்பதும்,

செய்வதற்கான எந்தவித முயற்சிகளுமில்லாமல் இருப்பதிலும் பெரிதாக வருத்தப்பட்டுக்கொள்ளவில்லை.

செய்யவேண்டும் என்பதற்கு எனக்கிருக்கும் ஒரு சில காரணங்கள், ஆசைகள்,கனவுகளை விட இவைகளைச் செய்ய முடியாமலிருப்பதற்கு பன்மடங்கு காரணங்களை எப்போது வேண்டுமானாலும் என்னால் சொல்லிவிட முடியும்.

அதிகாலையில் கச்சடா டப்பாவை எடுத்து வெளியில் வைத்துவிட்டு பத்திரிகை செய்திகளைப் புரட்டிக்கொண்டு இருந்தேன். விடாமல் காலிங் பெல் அடித்து கோபம் உண்டாக்கியது. குப்பைகளை எடுத்து வெளி வராந்தாவில் பெருக்கி சுத்தம் செய்யும் கச்சடாவாலாதான் பெல் அடித்தது. 'டப்பா பாஹர் ரக்கா', என்று எரிச்சலுடன் சொல்லிவிட்டு கதவை இழுத்து மூடப்போனேன்.



படிப்பகம்

www.padippakam.com

'மேம்சாப்...' அந்த வயதான மனிதனின் குழைவு என்னை நிறுத்தியது. மும்பை பேய் மழையில் ஜெப்படாபட்டி (குடிசை) அடித்துச் செல்லப்பட்டு விட்டதாகவும் எல்லோரிடமும் உதவிக் கேட்டு பணம் வசூலிப்பதாகவும், கட்டாயமில்லை முடிந்தால் செய்யுங்கள் என்றும் சொல்லும்போது அந்த மனிதனின் கண்களில் கண்ணீர் நிரம்பியதை, குரல் கம்மியதைக் கண்டு ஒன்றும் சொல்லாமல் கிட்சன் டிராயரில் தட்டுமுட்டு சாமான்கள் வாங்க வைத் திருந்த ரூபாய் 50 எடுத்துக் கொடுத்தேன்.மற்றவர்கள் எல் லோரும் ஐந்தும் பத்தும் கொடுத்திருந்தார்கள். முழு ஐம்பது ரூபாய் நோட்டைப் பார்த்தவுடன் அந்த மனிதனுக்கு என்ன சொல்வது ,முழுவதும் தனக்கா அல்லது மீதி பணம் கொடுக்க வேண்டுமா என்று பல சந்தேகங்கள் வந்திருக்கவேண்டும். அதிர்ச்சி சந்தோஷம் கலந்த கேள்விக்குறியில் அந்த வயதானவரின் பார்வை...

முழு ஐம்பதும் உனக்குத்தான் என்று கை அசைவில் சொல்லிவிட்டு மீண்டும் பேப்பர் வாசிப்பதில் கவனம் மும்பை மழை குறித்து சுடச்சுட ஒரு கட்டுரை எழுதிவிட வேண்டும் என்று சின்னதாக ஒரு காகிதத்தில் குறிப்புகள் எடுத்துக் கொண்டேன்.

'என் திருமனத்திற்கு வரவில்லை நீ .என் குழந்தைகளைப் பார்க்க வரவில்லை.இப்போது என் புது வீட்டிற்காவது வருவாயா...? நீ கேட்ட கேள்விக்கு நான் நேரடியாகப் பதில் சொல்லவில்லை என்ற கோபம் இன்னும் தீரவில்லையா? இத்தனை வருடங்களுக்குப் பிறகும் நீ என் புது வீட்டிற்கு வரவேண்டும் என்று நான் விரும்பி அழைப்பதில் நீ கேட்ட கேள்விக்கான பதில் இருப்பதை ஏன் புரிந்து கொள்ள மறுக்கின்றாய்?வா..உன் குடும்பத்து டன்.வலிகளும் வாழ்க்கையில் எவ்வளவு சுகமானவை என்பதை நீ காண வேண்டும் .

புதுமனை புகுவிழா அழைப்பிதழுடன் வந்திருந்த நண்பனின் கடிதத்தை மீண்டும் மீண்டும் வாசித்தேன்..

இந்தப்பிடிவாதம் வலியுடன் பிறந்து வலியுடனேயே வாழ்வது என்ற பிடிவாதம். அவனுடைய படிப்பிற்கும், புத்தி சாலித் தனத்திற்கும் எத்தனையோ பெரிய நிறுவனங்களில் மிகப் பெரிய பதவிகளை எட்டிப் பிடித்திருக்க முடியும். ஆனால் மாட்டான். எந்த ஊரில் அவனுடைய அம்மாவும் அப்பாவும் தெருப் பெருக்கி சுத்தம் செய்தார்களோ அதே ஊரில் அதே தெருவில் இவனும் வாழ்ந்துகொண்டே.. ஏன்தான் இப்படி கடந்த காலத்தை உதறித்தள்ளிவிட்டு வெளியில் வராமல் அவதிப்பட வேண்டுமோ என்னதான் படிப்பு,பதவி, வசதி வந்தாலும் எப்படி அந்த ஊரில் இவனை மற்றவர்கள் மதிப்பார்கள்? இன்னாரின் மகன் என்று இவனுடைய முது குக்குப் பின்னாவது பேசத்தானே செய்வார்கள். அவனுடைய இந்த மாதிரியான பிடிவாதங்களை என்னால் இப்போதும் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. ஆனால் அவனைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை இந்தக் கடிதம் வந்த பின் அடிக்கடி பழைய நினைவுகளைப் புரட்டி வாசித்தது.

'நாம் திருமணம் செய்து கொள்ள முடியாது'

'அதுதான் ஏன்? ங்கிறேன்'

'ஏன்னா வி ஆர் ட்டிபரெண்ட்'

'ஷட் அப்... வாட் யூ மீன்'

'நாம் வித்தியாசமானவர்கள்னு சொல்ல வர்றேன்'

'என்ன சொல்றே ..தலித்துகளின் உட்பிரிவுகள் கூடா துனு எழுதிட்டு மேடை மேடையா பேசிட்டு என்ன உளர்றே...'

**'என் வலியை நீ வயிற்றுவலி தலைவலியுடன் ஒப்பிடும்போதே தெரிகிறது பார், என் வலியின் அவஸ்தை என்ன என்று அறியாத உன் புத்திசாலித்தனம்..'**

'நான் வலிகளுடன் வாழ்பவன்'

'இல்ல நீ வலிகளிலிருந்து வெளியில் வராமல் எனக்கு வலிக்கிறது வலிக்கிறது என்று அழுது கொண்டே வாழும் ரகம்...'

'உனக்கு வலி என்பது உன் சம்மந்தப்பட்டது மட்டும் தான். எனக்கு வலி என்பது என் சம்மந்தப்பட்டது மட்டுமல்ல என் மக்கள் .. எல்லோருக்குமான வலி என்னுடைய வலி...'

'வயிற்றுவலிக்கும் தலைவலிக்கும் மருந்து கொடுக் கும் டாக்டருக்கும் எப்போதும் வயிற்றுவலியும் தலைவலியும் இருக்க வேண்டும் என்று நீ சொல்வது மடத்தனம்.'

'என் வலியை நீ வயிற்றுவலி தலைவலியுடன் ஒப்பிடும்போதே தெரிகிறது பார், என் வலியின் அவஸ்தை என்ன என்று அறியாத உன் புத்திசாலித்தனம்..'

'லுக் .. என்னைக் கல்யாணம் செய்துக்க மாட்டேங் கறதுக்கு புதுசா நீ என்ன வலியையும் காரணம் சொல்லிக்க....'

'ஆனா ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்லு.. நீ என்னை விரும்பலே...?'

'என் முகத்தை பார்க்காமல் எழுந்து போய்விட்டான்.'

இப்போது என் கேள்விக்குப் பதிலைச் சொல்லியிருக் கிறானாம். அவனை இப்போதும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அவன் எழுதும் சில கவிதைகளில் ,கதைகளில் நானி ருப்பதாக நினைத்துக் கொள்வேன். அந்த நினைப்பே ஒருவித சுகமான இதமான அனுபவமாக இருக்கும்.

கருத்தரங்குகளில் மட்டுமே கலந்து கொண்டு பல் கலைகழக வட்டத்திலேயே வாழ்ந்து கொண்டிருப்பவள் நான். அவனோ களப்பணி, சாதிச்சண்டை, மாநில மாநாடுகள் பஞ்சமி நிலமீட்பு போராட்டங்கள்.. இதற்கு நடுவில் எழுத் துப்பணி என்று வாழ்ந்து கொண்டிருக்கும் மல்ட்டி பெர்சனா லிட்டி.

கணவரிடம் அழைப்பிதழைக் கொடுத்தேன். அதைப் பிரித்து வாசிப்பதில் எவ்வித ஆர்வமும் காட்டாமல் அப்படியே டீபாயில் வைத்துவிட்டு டி.வி. பார்க்க ஆரம்பித்தார்.

'நான் போகனும் ..நீங்களும்தான்.நம்ம எல்லோரையும் வரச்சொல்லி எழுதியிருக்கிறான்....'

'ப்ளீஸ்.. என்னை விட்டுடு. நீ போயிட்டு வா.. தலித், தலித் இலக்கியம் , அது இதுனு பேசுவீங்க ..நான் அந்த இடத்திலே ப்பரங்க ப்ரங்க முழிச்சிட்டிருப்பேன்.. பிள்ளைங்க வந்தா கூட்டிட்டுப் போ..'

'பிள்ளைகள் என்ன சொல்வார்கள் என்பது எனக்குத் தெரியும்.'



படிப்பகம்

www.padippakam.com

தலித் விஷயங்கள் எதுவுமே தங்களுக்கு சம்மந்தமில்லாதது மாதிரி கணவரும் பிள்ளைகளும் பேசும் போது கோபம் வரும் . தலித்துக்குப் பிறந்த 'அப்பர் காஸ்ட்' என்று வாயில் முணு முணுத்துக்கொண்டே அவர்களிடமிருந்து விலகி நிற்பதில் என் கோபத்தைக் காட்டுவேன், வலியுடன் பிறந்து வலியுடன் வாழ்வதே எங்கள் வலி தீர்க்கும் ஆயுதம் என்று என் நண்பன் சொன்ன வரிகள் அப்போதெல்லாம் மின்னலாய் என் நினைவுகளில் பளிச்சிடும்.

வழக்கம்போல ஆயிரத்தெட்டு காரணங்கள் .. என்னால் அவனுடைய புதுமனைப் புகுவிழாவுக்கு போக முடியவில்லை. எரிச்சலாக வந்தது. நான் வெளியில் போகவேண்டும் என்றால் மட்டும் எங்கிருந்துதான் என் வீட்டாருக்கு என் தேவை அத்தியாவசியமாகிவிடுகிறதோ தெரியவில்லை. என் கோபம் தீர அதிகாலையில் தனியாக புல்வெளியில் நடந்து கொண்டிருந்தேன். எப்போதும் கச்சடா எடுக்க வரும் பெரியவரும் அவருடைய மருமகளும் அன்று வரவில்லை. ஒரு பனிரெண்டு பதிமூனு வயது பையனும் அவனுடைய தங்கையாக இருக்கவேண்டும், எட்டு வயது இருக்கலாம் சின்னப் பெண்ணும் தோட்டத்தைப் பெருக்கிக்கொண்டிருந்தார்கள். குப்பைகளைக் கொட்டும் சிவப்புக்கலர் ப்ளாஸ்டிக் பக்கெட் அந்தப் பெண்ணை விட உயரமாக இருந்தது. அந்தப் பெண் அதை இழுத்துக் கொண்டு பின் பக்கம் போனாள். நல்ல சாப்பாடு சாப்பிட்டு கொஞ்சம் எடுப்பான உடையுடன் இந்த இரண்டு குழந்தைகளும் இருந்தால் கற்பனை நன்றாகவே இருந்தது. அப்போதும் ஸ்டார் டி.வி.யில் தோட்டாக்காரனுடன் உறவு வைத்திற்கும் மனைவி 'டெஸ்பரேட் ஹவுஸ் வொய்பில்' வரும் காட்சி சம்மந்தா சம்மந்தம் இல்லாமல் நினைவுக்கு வந்தது.

சிரித்துக்கொண்டே அந்தப் பையனைப் பார்த்தேன் அவனும் சந்தோஷத்தில் மத்தாப்பாய் சட்டென புன்னகைக் காட்டி சில நொடிகளில் மீண்டும் புன்னகைக்கும் தனக்கும் சம்மந்தமே இல்லாத மாதிரி என்னைப் பார்த்துக் கொண்டே நகர்ந்தான்.

லிப்டில் ஏறி வீட்டுக்கு வந்தப் பின் கச்சடா டப்பாவை வெளியில் வைத்துவிட்டு வழக்கம்போல என் வேலைகளில் மூழ்கிவிட்டேன் அதன் பின் அந்தப் பையனையோ அவன் தங்கையையோ நினைக்கவே இல்லை.

நண்பன் எழுதிய 'குப்பை வண்டிகள்' சிறுகதை புதிய கோடங்கியில் வந்திருந்தது. அவன் பெயரைப் பார்த்தவுடன் வாசிக்க ஆரம்பித்தேன். கிட்டத்தட்ட அவன் கதைதான். அவனும் அவன் அம்மாவும் தெருவில் குப்பைகளை பெருக்கி சுத்தம் செய்யும் நாட்களை, பள்ளி கூடத்துக்கு போய்வந்தப் பின் அம்மாவுடன் குப்பைகளை பெருக்கிய நாட்களை, லீவு நாட்களில் மற்ற பசங்கள் எல்லாம் கில்லி விளையாட, அவன் குப்பைவண்டியைத் தள்ளிக்கொண்டிருந்த நாட்களை, குப்பை வண்டிகள் சிறுகதையில் அப்படியே கொட்டித் தீர்த்திருந்தான்.

அப்போது கச்சடா எடுக்க வரும் அந்தப் பையன் அழைப்பு மணியை அடித்தான். கதவு திறந்து கேட்டவுடன்

கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் கிடைக்குமா... என்று அவன் நாக்கு வறண்டு போயிருப்பதை அவன் குரலும் தொண்டையும் சொல்லியது. கச்சடா டப்பாவுக்கு அருகில் அடுக்கி வைத்திருக்கும் காலியான பிஸ்லெரி பாட்டிலில் தண்ணீரைப் பிடித்து அவனுக்குக் கொடுத்தேன். அவன் கண்களிரண்டும் நன்றி உணர்வில் தளும்ப பாட்டிலின் மூடி திறந்து உள்ளங்கையைக் கொஞ்சம் தண்ணீர்விட்டு கழுவிக்கொண்டான். அதன் பின் வலது கை உள்ளங்கையைக் குவித்து அதில் தண்ணீரை ஊற்றி அவன் குடிப்பதையே அதிசயமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவன் பாட்டிலைத் தந்தவுடன் பத்திரமாக வாங்கி நன்றாகக் கழுவி டப்பா வைக்கும் இடத்துக்கு அருகில் பத்திரமாக வைத்தேன். அடுத்த முறை தண்ணீர்க் கேட்டால் கொடுக்க தேவைப்படுமே என்ற எண்ணத்தில்.

அதன் பின் மீண்டும் ஒருமுறை என் நண்பனின் சிறுகதையை வாசித்து தனியே உட்கார்ந்து அழுது என் வலியைத் தீர்த்துக் கொணடேன்.

---

**அசுரன்**

நீ தீண்ட விரும்பாத
கூட்டத்திலிருந்து நான்
வந்திருக்கிறேன்

நீ செய்ய விரும்பாத
தொழில்களை செய்வதற்காக
நான் கொண்டுவரப்பட்டுள்ளேன்

நீ உன்னுள்ளிருந்து வெளியேற்றிய
வன்மத்தையும் மலத்தையும்
சுமந்தபடி திரும்புகிறேன்

கூடை நிரம்பி என் தலையில்
உன் மலம் வழியும் வேளையில்
கடவுள்களின் சிலைகளில்
பால் வழிகிறது.

■



படிப்பகம்

www.padippakam.com

# நவம்பர் மாத டைரி



எம்.சி. ராஜ், வசந்தா கந்தசாமி

## தலித் நிலவுரிமை கருத்தரங்கம் (3.11.2005) இறையியல் கல்லூரி, மதுரை

தலித் நிலவுரிமை இயக்கத்தின் மய்யக்குழு உறுப்பினர் பாஸ்கரன் இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்தார். எழுத்தாளர் சிவகாமி, ரோணிக்கா, வடிவேல் ராவணன், பரதன், முருகேசன், பேச்சிமுத்து, கண்ணதாசன், குணா, பாக்கியராஜ், கோவை ரவிக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். மதுரை, சிவகங்கை, தூத்துக்குடி, திண்டுக்கல், தேனி, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ...ிய தென்மாவட்டங் களிலிருந்து களப்பணியாளர்கள் நூறுபேர் கலந்து கொ...டனர். தலித் ஆதார மய்யத்தின் அன்புச் செல்வன், கே.எஸ். முத்து ஆகியோர் ஒருங்கிணைப்பாளராக பணியாற்றினர்.



ரூத் மனோரமா, தீத்தன்

## சமூகநீதி விருது வழங்கும் விழா (6.11.2005) ஹோட்டல் மரினா டவர்ஸ், சென்னை

புதிய கோடாங்கியும், பாலமும் இணைந்து நடத்திய சமூகநீதி விருது வழங்கும் விழாவை ஆங்கில எழுத்தாளர் மீனா கந்தசாமி ஒருங்கிணைத்தார். குத்சியா காந்தி IAS, கிருத்துதாசு IAS, சிவகாமி IAS, கருப்பன் IAS (ஓய்வு), தீத்தன் IAAS, உமாசங்கர் IAS, சிவசங்கரன் IAS ஆகியோர் தமிழ்நாட்டிலிருந்தும், சுபாஷ் பரணி IPS, தங்கராஜ் IAS, பசவவராஜ் IAS, லஷ்மிநாராயணா IAS, மணிவாசகம் IRS ஆகியோர் கர்நாடக மாநிலத்திலிருந்தும் கலந்து கொண்டனர். சாதனையாளர்கள் ரூத் மனோரமா, வி.டி. ராஜசேகர், ஜோதிராஜ், எம்.சி. ராஜ் ஆகியோர் மலர்ச்செண்டும், விருதும் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். விருதுகளை சந்துரு (வழக்கறிஞர்), வசந்தா கந்தசாமி, பாத்திமா பெர்னார்டு, தீத்தன் ஆகியோர் வழங்கி உரையாற்றினர். சித்தார்த்தா என்று கர்நாடக தலித் அமைப்பின் உறுப்பினர்கள் மோகனா, பூரணா, தனலஷ்மி, அருணா, ஜயலச்சுமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பிஷப் அசாரி தலைமையுரை ஆற்றினார். ஜேப்பிய..ர் (சத்யபாமா நிகர்நிலை பல்கலைக் கழகத்தின் வேந்தர்) சிறப்புரை ஆற்றினார். ப்ரதிபா ஜெயச்சந்திரன் அறிமுக உரையும், கௌதம சன்னா நன்றியுரையும் ஆற்றினர். பேரா. கல்விமணி திண்டிவனத்திலிருந்து ஆதரவாளர்களுடன் வந்திருந்தார்.



பாத்திமா பெர்னாட், வி.டி. ராஜசேகர்

கர்நாடக மாநிலத்தின் அரசு மற்றும் தலித் அமைப்பு களின் செயல்பாடுகளிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது ஏராளம் என தங்கராஜ் IAS உரைமூலம் தெரியவந்தது. ஜோதி மற்றும் எம்.சி. ராஜ் தலித் நில உரிமையை தலித்துக்களின் வாழ்வுரிமையாகக் கருதி முன்னெடுக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர். ரூத் மனோரமா தலித பெண்கள் ஒடுக்கு முறைக் கெதிரான செயல்பாடுகளை வலியுறுத்தினார். விடி. ராஜசேகர் அவர்கள் அவரவர் தம் சாதி, இனத்தை அடையாளப் படுத்திக் கொண்டு அவர் சார்ந்த முன்னேற்றச் செயல்பாடுகளில் ஈடுபட வேண்டும் என்பதை வலியுறுத்தினார். விடாத தொடர் மழையிலும் அரங்கம் நிரம்பி வழிந்தது.



வழக்கறிஞர் சந்ரூ, ஜோதிராஜ்


பார்வையாளர்களில் ஒரு பகுதி



படிப்பகம்

www.padippakam.com

**தலித் நிலவுரிமை கருத்தரங்கம் (9.11.2005) திண்டிவனம்**

SASY நிறுவனத்தின் ரமேஷ்நாதன்தலைமையில் கருத்தரங் கம் நடந்தது. சிந்தனைச் செல்வன் DPI இணைப்பொதுச் செய லாளர், சீராளன். DPI விழுப்புரம் மாவட்டப் பொறுப்பாளர், பேரா. கல்விமணி, ஆறுமுகம் (இருளர் பாதுக்காப்புச் சங்கம்) மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் தலித் பணியாற்றும் பல்வேறு நிறுவனங்கள் இதில் கலந்து கொண்டன. சிறப்பு அழைப்பாளர் களாக சிவகாமி மற்றும் சோபகன் கலந்து கொண்டு உரை யாற்றினர்.

**தலித் நிலவுரிமை கருத்தரங்கம் (9.11.2005) வேலூர்**

திவ்ய சௌபாக்கியவதி திருமண மண்டபத்தில் கருத்தரங்கம் நடைபெற்றது. கஜேந்திரன் ஒருங்கிணைத்தார். குட்டி (APLF), வழக்கறிஞர் பாலு, பேரணாம்பட்டு ராஜேந்திர பிரசாத், அரசு ஊழியர் சங்கங்கள், மற்றும் பல்வேறு மக்கள் அமைப்புகள் கலந்து கொண்டன. எழுத்தாளர் சிவகாமி, எழுத்தாளர் சோபகன் சிறப்பு அழைப்பாளர்களாக சென்னையிலிருந்து வந்து கலந்து கொண்டு உரையாற்றினர்.

**தலித் நிலவுரிமை கருத்தரங்கம் (10.11.2005) மொடக்குறிச்சி, ஈரோடு**

மொடக்குறிச்சி கவுண்டபாளையம் சமுதாயக் கூடத்தில் கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கை சக்திவேல் ஒருங்கிணைத்தார். ராதா (லீட்) தலைமையேற்றார். சென்னியப் பன், ரவீந்திரன் (DPI), வழக்கறிஞர் முத்துச்சாமி (சேலம்), சிவகாமி மகளிர் சுயஉதவிக் குழுத் தலைவிகள், சோபகன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். முன்னூறு பெண்கள் கலந்து கொண்டனர்.

**தலித் நிலவுரிமை கருத்தரங்கம் (10.11.2005) காந்தி கிராமம், கரூர்**

கரூர் மாவட்ட நிலவுரிமை கருத்தரங்கு லீட் நிறுவன அலுவலகத்தில் நடந்தது. நகுல்சாமி, தலித் பாண்டியன், TNPL சமுத்திரம்,TNPL மணிவேல் ஆகியோரும் ராதா, சோபகன், சிவகாமி ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினார்.

**தலித் கலைவிழா (12.11.2005) திருப்புவனம் - அகரம் காலனி, சிவகங்கை**

கிராமப்புற உழைக்கும் மக்கள் சங்கத்தின் தலைவர் சுப்பு அவர்கள் தலைமையில் கலைவிழா நடந்தது. சிவகாமி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தலித் நிலவுரிமை என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். முப்பது கிராமங்களிலிருந்து மக்கள் திரளாக வந்திருந்தனர். காரி, விடியல், கூட்டுக்குரல் (புதுவை) போன்ற பல கலைக்குழுக்கள் இரவு முழுவதும் கலை நிகழ்ச்சிகளை நடத்தின.

**யூனியன் பேங்க் ஆப் இந்தியா SC/ST ஊழியர்களின் 5-ஆவது மாநாடு (13.11.2005) , மதுரை**

பக்கிரிசாமியை தலைவராகக் கொண்ட யூனியன் பேங் ஆப் இந்தியா SC/ST ஊழியர் சங்கம் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நடத்தும் தமது 5-ஆவது மாநாட்டை கூட்டியிருந்தது. வங்கியின் உயர் அதிகாரிகளாக பணியாற்றும் தலித்தல்லாதவர்களும், தலித்துகளில் பெரும்பகுதியினரும் கலந்து கொண்டனர். எழுத்தாளர் சிவகாமி அவர்கள் SC/ST அரசு ஊழியர்களின் செயல்பாடுகளை விமர்சனக் கண்ணோட்டத்து டன் விவரித்து தலித் நிலவுரிமையை எடுத்துச் செல்வதில் அவர்களுக்குள்ள கடமைகளை வலியுறுத்தி சொற்பொழி வாற்றினார்.

**தலித் நிலவுரிமை மய்யக் குழு - கருத்தரங்கம் (16.11.2005) இக்ஸா மய்யம், சென்னை**

தலித் நிலவுரிமை இயக்கத்தின் 70 பேர் அடங்கிய மய்யக்குழு இக்ஸா மய்யத்தில் கூடி தலித் நிலவுரிமை குறித்த பல்வேறு செயல்பாடுகளையும், எதிர்காலத்திட்டங்கள் குறித்தும் விவாதித்தது. தமிழகம் முழுவதிலிருமிருந்தும் மாவட்டக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்கினர். கருப்பன் இ.ஆ.ப. (ஓய்வு) தலைமையேற்றார். கிறித்துதாசு காந்தி, சிவகாமி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டு நிலவுரிமை குறித்த ஆய்வுகள் மேற்கொள்வதின் அவசியத்தை வலியுறுத்தினர். குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை



படிப்பகம்

www.padippakam.com

விரிவுபடுத்தவேண்டிய அவசியமும், பெண்கள், தலித் உட்பிரிவுகளிலிருந்தும், பழங்குடியினரிலிருந்தும் உறுப்பினர்கள் சேர்க்க வேண்டியது குறித்தும் உறுப்பினர்கள் விவாதித்தனர்.

## தலித் நிலவுரிமை கருத்தரங்கம் (19.11.2005) பல்லாவரம், சென்னை

பல்லாவரம் ரவி ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் மகளிர் சுயஉதவிக் குழுவைச் சேர்ந்த நூறுபெண்கள் கலந்து கொண்டனர். நீலமேகம், ஜெயக்குமார், சரோஜா (குரோம்பேட்டை), சிவகாமி, மகளிர் சுய உதவிக்குழு தலைவிகள் உரையாற்றினர்.

## தலித் நிலவுரிமைக் கருத்தரங்கம் (24.11.2005) பானாவரம், வேலூர்

வழக்கறிஞர் மு. வீரராகவன், தக்கோலம் ரகு, ரஜினிகாந்த் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்த இக்கருத்தரங்கு , பானாவரம், ஆண்டவர் திருமண மண்டபத்தில் நடந்தது. வேலூர் மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்து மக்கள் திரளாகக் கலந்து கொண்டனர். சோபகன், சன்னா, நிகழ், வேலுச்சாமி, சிவகாமி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். தமிழ் பாண்டி நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார்.

## தலித் நிலவுரிமை கருத்தரங்கம்(26.11.2005) வடக்கநந்தல், கள்ளக்குறிச்சி, கடலூர்

இந்திய சமூகநீதி இயக்கத்தின் தலைவர் ஆ. கௌதம சித்தார்த்தன் தலைமையில் கருத்தரங்கம் நடந்தது.. பெரு. வெங்கடேசன், அ. மோகனதாசன், இரா. தீந்தமிழ் தீனன், ஏ. மனோகரன், சக்திதாசன், சிவகாமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

## நினைவாஞ்சலி - படத்திறப்புவிழா (26.11.2005) கள்ளக்குறிச்சி

அமரர் எல். இளையபெருமாள், மேதகு கே.ஆர். .நாராயணன் அவர்களின் படத்திறப்புவிழா தமயந்தி அம்மாள் திருமணமண்டபத்தில் நடந்தது. மத்திய மாநில SC/ST அரசு ஊழியர்களின் சங்கங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் கூட்டமைப்புகளின் இயக்கம் இந்நினைவாஞ்சலி நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. கோவிந்தராஜுலு, மு. ராமசாமி, சிவகாமி, சிந்தனைச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

## தலித் நிலவுரிமை ஆலோசனைக் கூட்டம் (25.11.2005) சென்னை

கருப்பன் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் தலைமையில் அவரது அலுவலகத்தில் கருத்தரங்கு நடைபெற்றது. சென்னை மாவட்ட பொறுப்பாளர் நீலமேகம் ஒருங்கிணைத்தார்

## தலித் நிலஉரிமை கருத்தரங்கம் (27.11.2005) மாயவரம்

பாவலர் சங்கரன் தலைமையில் மாயவரம் சிலம்பு திருமண மண்டபத்தில் தலித் நிலவுரிமை கருத்தரங்கம் நடைபெற்றது. கடலூர், தஞ்சாவூர், நாகை, திருவாரூர் ஆகிய நான்கு மாவட்டங்களிலிருந்து மாவட்டப் பொறுப்பாளர்கள் மற்றும் களப்பணியாளர்கள் திரளாக வந்து கலந்து கொண்டனர். சிவகாமி சிறப்புரையாற்றினார்.

## தலித்நிலவுரிமை கருத்தரங்கம் (30.11.2005) கும்மிடிப்பூண்டி

கோல்டன் ரமேஷ் ஏற்பாடு செய்த இக்கருத்தரங்கில் மக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

■



படிப்பகம்

(மின்னஞ்சல் மூலம் பெறப்பட்டது)

நேர்காணல்

# கெய்ல் ஓம்வெட்



நேர்காணல்

**மீனா கந்தசாமி**

**தமிழில் : ராஜா**

■ *நாங்கள் சமீபத்தில் ரூத் மனோரமாவை நேர்முகம் கண்டபோது, தன்னுடைய தலித் பெண்களின் தேசிய கூட்டமைப்பு உருவாவதற்கு நீங்கள்தான் உந்துகோலாகவும், வழிகாட்டும் சக்தியாகவும் விளங்கினீர்கள் என்று தெரிவித்திருந்தார்கள். தலித் பெண்கள் இயக்கம் ஒன்றினை தோற்றுவிப்பதில் தாங்கள் காட்டிய ஆர்வத்திற்கும், உந்து சக்திக்கும் காரணம் என்ன? இதை நீங்கள் வரலாற்று ரீதியாக எப்படிப் பார்க்கிறீர்கள்?*

கருப்பர் இயக்கங்களில் (இது அவர்கள் தங்களை ஆப்ரிகன்-அமெரிக்கன் என்று அழைக்கத் தொடங்கியதற்கு முந்தைய காலம்; 1970-களில் கருப்பர் என்றால் பெருமிதம் என்று பொருள்) ஆர்வம் கொண்டிருந்த நான், அவர்கள் இயக்கங்களிலும் பங்குகொண்டிருந்தேன். நான் வெள்ளை இனத்தைச் சேர்ந்தவளாக இருந்தபோதிலும் (honky என்று ஆங்கிலத்தில் கிண்டலாகச் சொல்வார்கள்), எனக்கு நிறைய கருப்பு நண்பர்கள் இருந்தார்கள். ஏஞ்சலா டேவிசிலிருந்து டோனி மாரிசன், ஆலீஸ் வாக்கர் வரையிலான கருப்புப் பெண்களின் கருத்துக்கள் என்னுள் ஒரு அகத்தூண்டலை ஏற்படுத்தியிருந்தன. என்ன அழகிய படைப்புகள் அவர்களுடையவை? எனக்கு உங்கள் மொழிகள் எதுவும் தெரியாது. ஆனால் நீங்கள் கூறக்கூடியவைகளும் நிரம்ப இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். பெல் ஹூக்ஸ் 'விளிம்பிலிருந்து மையம் வரை பெண்ணிய கோட்பாடு' (Feminist Theory from Margin to Centre) என்ற நூல் ஒன்றினை எழுதியிருந்ததார். விளிம்பில், ஓரத்தில் இருப்பவர்களால்தான் தொலைதூரத்தில் உள்ளவற்றையும், சிறந்தனவற்றையும் பார்க்க முடியும் என்பது இதன் பொருள். அவர் கூறுவது சரிதான்.

ஆகையால் தலித் பெண்களைத் தவிர வேறு யாரால் இது சாத்தியமாகும்? தடங்கலும், தடைகளும் ஏராளம். செய்ய வேண்டிய வேலைகளும் ஏராளம். எனக்குத் தெரியும், இது உங்களால் முடியும் என்பது.

என் சிநேகிதி ஒருத்தி சமீபத்தில் கூறினாள் - தான் கிறிஸ்தவ மதத்தினளாக இருந்தபோதிலும், அனைவரும் அவளை தலித்தாகவும், கருப்பு நிறத்தவரைப்போலவுமே நடத்துவதாக. வெள்ளை நிறத்தின் மீது இந்தியர்களுக்கு இருக்கும் மோகம் என்னை ஆச்சரியப்படுத்துகிறது. உங்கள் கடவுள்களே கருப்பர்கள்தானே?

■ *இன்றைய கலகட்டத்தில் மாயாவதி தலித் என்ற முறையிலும், பெண் என்ற முறையிலும் ஒரு ஆற்றல்மிக்க சக்தியின் அடையாளமாக பார்க்கப்படுகிறார். பகுஜன் சமஜ்வாடி கட்சியின் வெற்றியும், மாயாவதியின் அதிமிகு புகழும் தலித் பெண்களிடையே எந்தவிதமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ள என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?*

இதற்கு என்னைவிட நீங்களே சிறப்பாக பதில் கூற முடியும். பெண்கள் அவரை கண்டுணர்ந்து கொண்டார்கள் என்று நினைக்கிறேன். எனக்கு கன்ஷிராமைப் பிடிக்கும் - ஒரு நபர் என்ற முறையில். ஆனால் மாயாவதிக்கும் மாபெரும் image இருந்தது. அவருடைய குட்டை முடியை எனக்குப் பிடிக்கும். இதுபற்றி எனக்கும் மது கிஷ்வாருக்குமிடையே ஒரு பெரிய விவாதமே நடந்தது. மேல்சாதி இந்து பெண் அரசியல்வாதிகளால் குட்டையான முடியுடன் அரசியலில் பிரகாசிக்க முடியாது. ஆனால் தலித் பெண்களுக்கு அது தடையாக இருப்பதில்லை என்பது என் கருத்து. இதைக் கூறும்போது எனக்கு சுஷ்மா ஸ்வராஜின் முடி நினைவில் இருந்தது. கிஷ்வார் கடைசிவரை இதை ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால் எனக்கு நான் கூறியதுதான் சரியென்று தோன்றுகிறது. சாதி இந்துக்களின் மனது பெண்கள் பாரம்பரிய தோற்றத்தில் இருப்பதைத்தான் விருமபுகிறது. தலித்துகள், குறிப்பாக தலித் பெண்கள் இதையெல்லாம் சட்டை செய்வதில்லை.

■ *'பெண்கள் சாதியமைப்பின் வாயில்கள்' என்றார் அம்பேதகர். சாதியும், பாலியல்பு (sexuality) ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டுள்ள பல்வேறு பரிமாணங்களை விளக்கிக் கூறுங்களேன்.*

பெண்களின் பாலியல்பு (sexuality) கட்டுப்படுத்தினால்தான் சாதியால் உயிர் வாழ முடியும். இந்த சாதிக் குறியீட்டை நிறுவுவதற்கு திருமணங்களை சாதிக்குள்ளேயே நிகழ்த்த வேண்டும். ரொட்டி மற்றும் பெண்களின் கொள்வினையும், கொடுப்பினையும் சாதிக்குள்ளேயே இருக்க வேண்டும் என்று



படிப்பகம்

மராத்தியில் கூறுவார்கள். இதை நடைமுறைப்படுத்துவதற்கு பெண்கள் பத்திரமாக பாதுகாக்கப்பட்டு, பூப்படைவதற்கு முன்பே மணம் செய்விக்கப்பட வேண்டும். அப்போதுதான் சாதியும் பாதுகாக்கப்படும். ஆண் யாருடன் வேண்டுமென்றாலும் உடலுறவு வைத்துக் கொள்ளலாம். அதனால் தீட்டு எதுவுமில்லை. ஏனென்றால் அவனின் விந்து வெளியே சென்றுவிடுகிறது. 'ஆனால் பெண் அப்படியில்லை. அவள் விந்துவை உள்வாங்கிக் கொள்வதால் தீட்டுப்படுகிறாள். "பெண்கள் குழந்தைப் பருவத்தில்ர தந்தையின் பாதுகாப்பிலும், வயதுப் பருவத்தில் கணவனின் பாதுகாப்பிலும், வயதான கலத்தில் புத்திரர்களின் பாதுகாப்பிலும் இருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் அவர்கள் தற்சார்புடன் இருக்க முடியாது" என்று மநு கூறுகிறார்.

■ *தலித் பெண்களின் சுயசரிதைகள் மராத்திய இலக்கியத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. பொது மற்றும் அரசியல் தளங்களில் இடம் மறுக்கப்படும் தலித் பெண்களுக்கு இலக்கியம் எந்த வகையில் ஒரு விடுதலை சாதனமாக அமையும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?*

இலக்கியம் மக்களைச் சென்றடைய வேண்டும். இது சாத்தியமாகக்கூடியதே. இதை ஒரு பொதுத் தளமைக மாற்றிக் கொள்ளலாம். அரசியல் தளம் என்பது பல்வேறு தளங்களில் ஒன்று. பெண் அரசியல்வாதிகள் பாரம்பரியத்தை ஆதரிக்கும் பட்சத்தில், அது பெண்களுக்கு பாதிப்பைக்கூட உண்டாக்கும். அரசியலில் ஈடுபடும் பெண்களைவிட தனிப்பட்ட பெண்கள் கூடுதல் சுதந்திரத்தை அனுபவிக்க முயும். தனிநபர் பெண்களால் புரட்சிகர கருத்துக்களை எழுத முடியும். இதில் பிரச்சினை என்னவென்றால் அவற்றை எழுத்து வடிவில் வெளிக்கொணர்வதுதான்.

## அசுரன் கவிதைகள்

உனக்கு
ஆஃபிஸ்
கம்ப்யூட்டர்
காஃபி
பீட்ஸா
எனக்கு
மலத்தேக்கத் தொட்டி
கூடை
துடைப்பம்
மலம்
நீயும் நானும்
ஒளிரும் நாட்டில் வாழ்கிறோம்

நீ என்னையும்
நானள்ளும் மலத்தையும்
வேறுபடுத்தி பார்த்ததில்லை

மலம் அள்ளும் தொழில் நுட்பத்தை
எனக்கு கற்பிக்கிறாய்
குறிப்பாக சிந்தாமல் அள்ளுவதைப் பற்றி

மலம் சுமந்து வரும் என்னைக் கண்டு
ஓடி மறைகிறாய்
மலத்தைப் பார்க்கக் கூட
தைரியமில்லை உனக்கு

இங்கு ஓயாமல் கற்பிக்கப்படுகின்றன
உன் வீரமிக்க வரலாறுகள்.

பேயாக அலைய வேண்டும்...

ஓயாது அலைய வேண்டும் பேயாக
ஒருசேர இறந்துபட்ட
சொந்தங்களைக் காண்பதற்கு
தன்கெடு முடிவதற்கு முன்னமே செத்தவர்கள்
தவிப்போடு பேயாக அலைவார் என்பர்
அதனால் அத்தனைச் சொந்தப் பந்தங்களை
அன்புற கண்டு உறவாட நானும்
பேயாக அலைய வேண்டும்
ஆழிப் பேரலையே
நீ செய்திட்ட கொடுமையால்

– அசோகா மணியன்

■



படிப்பகம்

www.padippakam.com

# மக்களிடம் பரவலாகச் சென்றடைந்த துண்டறிக்கைகள் சில....

**டிசம்பர் 12, தலித் நில உரிமை கோரிக்கை தினம்**

பூமியுள்ளவர்களுக்கே இன்னும் பூமி கொடுக்கலாமா? பூமியில்லாதவர்களுக்கே கொடுக்கலாமா? பூமியில்லாதவர்களுக்கே கொடுப்பது பயனைத் தரும். அதனினும் பூமியினிடம் உழைத்துப் பாடுபடும் உழைப்பாளிகளுக்கு கொடுப்பது மிக்க மேலாயதேயாம்.

இத்தேசத்தில் தற்காலம் ஏற்படுத்திக் கொண்டுள்ள சாதிபேத அக்கிரம செய்கைகளினால்தமிழ் மகனின் விடுத்திகளோ நாசமடைந்து வருகின்றது. இந்நூதன சாதிக் கட்டுக்கதைகளில் பிச்சையிரந்துன்பவன் பெரிய சாதி, பூமி உழுதுண்பவன் சிறிய சாதியென வகுத்துள்ளபடியால் பூமியினை உழுது பாடுபடுவோர் நாளுக்கு நாள் நசிந்து பாடுபடவும், பூமியின் விவசாயம் குறைவுபடவும், பஞ்சம் நிறைவுபடவும் ஆகிறது."

ஏறக்குறைய பண்டிதரின் இச்செய்தி வெளிவந்து 100ஆண்டுகள் ஆகப் போகிறது. அந்த வாக்கிற்கு இன்னும் உயிர் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

தற்போதைய சூழலில் நிலம் ஒரு அவசியமான விடுதலை ஆயுதமாக மாறியுள்ளது. தீண்டாமைக்கு இன்னும் மூலவேர்களில் ஒன்றாக இருந்து வருவது நிலவுடைமைதான். அண்மையில் புதுதில்லியில் பிரதம மந்திரி அவர்கள் டிஎஸ்பி-க்களின் மாநாட்டைக் கூட்டி அவர்களிடையே பேசும்போது இந்தியாவில் ஜனநாயகம் தழைக்க வேண்டுமானால் நில பிரபுத்துவ முறை ஒழிய வேண்டியிருக்கிறது என்று வெளிப்படையாகவே கூறியுள்ளார். ஜனநாயகத்திற்கு உழைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். பிரதமர் ஒரு பக்கம் நில பிரபுத்துவம் மோசமானது என்பதை ஏற்றுக் கொண்டுள்ளார் என்பது ஆரோக்கியமானதே. ஆனால் அவர் பூசி மெழுகிய விஷயமென்னவென்றால் நாட்டில் ஜனநாயகம் தழைக்க வேண்டுமானால் நில உரிமையில் இருக்கும் ஏற்றத் தாழ்வைக் களைந்து ஒரு சமச்சீரான தன்மையை உருவாக்க வேண்டும் என்பதே. நில உடைமையில் ஜனநாயகம் இல்லாமல் சமூகத்தில் ஜனநாயத்தை உண்டு பண்ணுவதற்கு வாய்ப்பே இல்லை.

ஜனநாயத்தில் நம்பிக்கை கொண்டுள்ள தலித்துக்கள் சமூகத்தை ஜனநாயகப்படுத்துவதற்கு முனைகின்றனர் என்பதாலேயே அவர்களது நிலக் கோரிக்கைக்கு தார்மீக நியாயம் இருக்கிறது. வெறும் சொத்தினை கையகப்படுத்தும் நோக்கம் கொண்டதல்ல தலித்துக்களின் நில உரிமை கோரிக்கை. நாட்டில் உள்ள பெரும்பாலான விளைநிலங்கள் உழைப்புக்கு துளியும் சம்பந்தமில்லாத பண்ணையார்களிடம் குவிந்திருக்க, வெறும் உழைப்பாளர்களாக மிகப் பெரும்பான்மையினர் இருக்கும் நிலையில் சமூகத்தில் ஜனநாயகம் எப்படி மலரும்?

பணத்தினை மட்டுமே குறிக்கோளாய்க் கொண்டு இயங்கும் மாஃபியா கும்பலைப் போலவே, பெரு நில உடைமையாளர்கள் இயங்கி வருகின்றனர். அவர்களுக்கு உணவு உற்பத்தி நோக்கமல்ல. பண உற்பத்தியே நோக்கம். இதை மேலும் வளர்க்கும் விதமாக தரிசு நிலங்களை நிலம் உள்ளவர்களுக்கே வழங்கப் போவதாக தமிழக அரசு குறிப்பாணை வெளியிட்டுள்ளது. இது அப்பட்டமாக சாதிவெறி மாஃபியா கும்பல்களை வளர்க்கவே உதவும். நாட்டு முன்னேற்றத்திற்கு எவ்வகையிலும் உதவாது. எனவேதான் நாட்டு முன்னேற்றத்திலும், ஜனநாயக முன்னேற்றத்திலும் அக்கறை உள்ள தலித்துக்கள் தங்கள் நில உரிமை கோரிக்கையை முன்னிறுத்தி இந்த கோரிக்கை தினத்தினை முன்னெடுக்கின்றனர்.

நமது கோரிக்கைகள்

1. தலித்துக்கள்.பழங்குடியினருக்கு 5 ஏக்கர் நிலம் வழங்கிட வேண்டும்
2. பஞ்சமி நிலங்களை மீட்டிட வேண்டும்.
3. குடியிருப்பு பட்டாக்களை உடனே வழங்கிட வேண்டும்.
4. நகர்ப்புற குடிசை மக்களின் வெளியேற்றத்தை தடுத்து அவர்களுக்கு குடியுரிமையை உறுதி செய்திட வேண்டும்.
5. சிறப்பு உட்கூறு திட்டத்தை உடனே அமல்செய்திட வேண்டும்.

தலித் நில உரிமையை வென்றெடுப்போம் ! அணிதிரண்டு வாரீர்!

**தமிழக தலித் நில உரிமை இயக்கம் (தமிழ்நாடு)**

1/2, முதல்பிரதான சாலை, சாஸ்திரி நகர், சென்னை - 20



படிப்பகம்

www.padippakam.com

# டிசம்பர் 12, 2005, தலித் நில உரிமை கோரிக்கை நாள்

டிசம்பர் 12 அன்று அணி திரள்வோம். தலித் நிலஉரிமை கோரிக்கையை உறுதியுடன் முன்னெடுப்போம். அதற்கு முன்பு தெரிந்து கொள்வோம் தலித் நில உரிமை குறித்த விவரக்களை.

## 1. தலித் நில உரிமை என்றால் என்ன?

தலித் மக்கள் இந்நாட்டில் 25 சதவிகிதம் உள்ளனர். இவர்களில் எழுபது சதவிகிதம் பேர் கிராமங்களில் நிலத்தை சார்ந்து வாழ்க்கை நடத்துகிறார்கள். பெரும்பான்மையினர் கல்வி அறிவு பெறாதவர்கள் என்பதோடு வறுமையில் வாடும் விவசாயக் கூலிகள். வரலாற்றுக் காலத்தின் தொடக்கத்திலேயே இவர்களின் நிலங்கள் பறிக்கப்பட்டு கிராம ஓரங்களில், சேரிகளில் வாழும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர். இவர்கள் நிலத்தின் மீது உரிமை கொண்டாடக் கூடாது என்பதற்காக இம்மக்கள் மீது தீண்டாமை கற்பிக்கப்பட்டது. தொடர்ந்து இவர்கள் நிலஉரிமை பெறுவதிலிருந்து தடுக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வந்திருக்கிறார்கள். தீண்டாமைக் கொடுமை விலகி சமநீதி தழைக்க வேண்டுமானால் தலித்துக்கள் நிலத்தின் மீது உரிமை பெற வேண்டும். நிலத்தை சார்ந்து வாழும் இவர்களின் வாழ்வு தழைக்க வேண்டுமானால் நிலம் இவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். நில்த்தை நம்பி வாழும் தலித் விவசாயக் கூலிகளுக்கு குடும்பம் வாரியாக குறைந்தது 5 ஏக்கர் புன்செய் அல்ல 2.5 ஏக்கர் நன்செய் நிலம் என்ற கோரிக்கையை எழுப்புவதும், ஏற்கனவே ஆங்கிலேயே அரசால் வழங்கப்பட்டு ஆதிக்க சாதிகளின் பிடிக்குள் சென்றுவிட்ட பஞ்சமி நிலங்களை மீட்டெடுக்கக் கோருவதும், நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் வாழும் தலித் மக்களுக்கு குடியிருப்பு மனை வழங்கக் கோருவதும் தலித் நிலவுரிமை ஆகும்.

## 2. பிற சாதியினர் எவ்வாறு நிலத்துக்குச் சொந்தக்காரர்கள் ஆனார்கள்? தலித்துக்களுக்கு மட்டும் ஏன் அவ்வுரிமை மறுக்கப்பட்டது?

இது குறித்த உண்மை தெரிய வேண்டுமானால் சாதி வரலாறும் அதோடு இணைந்த நிலப்பங்கீடு குறித்த வரலாறும் தெரிய வேண்டியது அவசியம்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டு தொடங்கி நான்கு வர்ணங்களாக இருந்த இந்திய சமுதாயம், சாதிய சமூகமாக சீரழியத்தொடங்கியது. சாதி அடுக்குமுறையில் மேல் தட்டில் வைக்கப்பட்டிருந்த பிராமணர்கள், ஷத்திரியர்கள் ஆட்சி அதிகாரத்திலும் இருந்ததன் காரணமாக, பெரும்பாலான விளைநிலங்களை பிரம்மதேயம், கோவில் நிலம், அரசு நிலம் என்ற பெயரில் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டார்கள். தலித்துக்களின் நிலங்களைப் பறித்துக் கொண்டு அவர்களை அடிமையாக்கி அவர்கள் மூலம் விவசாயம் செய்து வந்தார்கள். மன்னராட்சி முழுவதும் இவர்களின் ஆதிக்கமே இருந்து வந்தது. முகலாயர் ஆட்சியில் நிலங்கள் மன்சப்தார்கள் எனப்படும் படைத்தளபதிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. இம்முறை காலப்போக்கில் ஜமீந்தாரி முறைக்கு வழிவகுத்தது. ஜமீந்தார்கள் ஆதிக்க சாதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதால் அந்த நிலங்களை தங்கள்சாதியாளர்ளுக்கு குத்தகைவிட்டு, வரி வசூலித்து, அதை ஆங்கிலேய அரசுக்கு செலுத்தி வந்தார்கள். ஜமீந்தார்கள் நிலவரி வசூலை முறையாக அரசிடம் ஒப்புவிக்காததால் இந்த ஜமீந்தாரி முறை ஒழிக்கப்பட்டது. ரயத்துவாரி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த ரயத்துவாரி முறை மூலம் குத்தகைக்கு நிலத்தை பயிர்செய்து வந்த பிற சாதியினருக்கு இனாமாக நிலம் பங்கிடப்பட்டு பட்டா வழங்கப்பட்டது. நிலவரியும் கணிசமாகக் குறைக்கப்பட்டது. இவ்வாறு பிறசாதியினர் இனாமாக நிலங்களைப் பெற்றதோடு அவர்களின் வரிச்சுமையும் குறைந்தது. 1798ல் சென்னை மகாணாத்தில் நடத்த ரயத்துவாரி செட்டில்மெண்ட் மூலம் பிறசாதியினர் நிலம் பெற்றனர். ஆனால் தலித்துக்களுக்கு எவ்வித நிலமும் வழங்கப்படவில்லை. ஏனெனில் தலித்துக்கள் சொத்துக்கள் வைத்துக் கொள்ளக்கூடாது என்ற சாதிச் சட்டம் இருந்த காரணத்தினால், தலித்துக்கள் குத்தகைக்குக்கூட நிலத்தைப் பயிரிட அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் அடிமைகளாக நடத்தப்பட்டதோடு தீண்டாமைக் கொடுமைக்கும் ஆளாகி வந்தனர்.

ஏறக்குறைய நூறாண்டுகளுக்குப் பிறகு 1891ல் செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் ட்ரெம்மன் ஹெரே என்பவர் கடும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட தலித் மக்களுக்கு நிலம் வழங்க வேண்டும் என்று அறிக்கை அனுப்பினார். அது கிடப்பில் போடப்பட்டது. கிறித்துவ மதகுமார்கள் ஆங்கிலப் பாராளுமன்றத்தில் தலித்தக்களுக்கு நிலம் வழங்கவேண்டும் என்ற கோரிக்கை வைத்ததின் விளைவாக தலித்துகளுக்கு நிலம் வழங்க ஆங்கில அரசு 1892ல் உத்தரவிட்டது. உத்தரவிட்டும் நீண்ட காலம் நிலம் தரப்படவில்லை. பிறகு அயோத்திதாசப் பண்டிதரின் இடைவிடாத போராட்டத்தினால் தலித்துக்களுக்கு 1927-31 கால கட்டத்தில் 3,43,000 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

### 3. பஞ்சமி நிலம் என்றால் என்ன?

பஞ்சமர்கள் என்று அந்நாளில் அழைக்கப்பட்ட தலித்துக்களுக்கு ஆங்கில அரசாங்கம் 1927-31ஆம் ஆண்டுகளில் இனாமாக வழங்கிய 3,43,000 ஏக்கர் நிலம் பஞ்சமி நிலம் என அழைக்கப்படுகிறது. இந்நிலங்களைப் பெற்ற தலித்துக்கள் இவற்றை பிறசாதியினருக்கு விற்கவோ, தானமாக கொடுக்கவோ, அடமானம் வைக்கவோ அல்லது குத்தகைக்கு விடவோ முடியாது என்ற நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அப்படி ஏதாவது ஒரு வகையில் பிறசாதியினருக்கு கைமாறினால் அந்நிலத்தை அரசு மீட்டெடுத்து பிற தலித் மக்களுக்கு வழங்க வேண்டும்.

தற்போது பாதிக்கு மேற்பட்ட பஞ்சமி நிலங்கள் பிறசாதியினர் கைக்கு மாறியுள்ளது

### 4, பஞ்சமி நிலம் எவ்வாறு பறிபோனது.?

தலித் மக்கள் தீண்டாமை காரணமாக வன்கொடுமைக்கு ஆளாகி வந்துள்ளனர். அடிமைகளாகவும், கல்வியறிவு இல்லாததன் காரணமாகவும், ஆதிக்க சாதியினரின் மிரட்டலுக்கு அடிபணிந்து நிலத்தைப் பறி கொடுத்துள்ளனர்.

பல இடங்களில் இவர்களிடமிருந்து நிலம் தந்திரமாக எழுதி வாங்கப்பட்டுள்ளது. பஞ்ச காலங்களில் பிழைப்புத் தேடி வெளியூர் சென்றபோது அவர்களின் நிலங்கள் ஆதிக்க சாதியினரால் அபகரிக்கப்பட்டுள்ளது. மேலும் கொடிய பஞ்சம், வறுமை காரணமாக தலித்துக்களே தங்கள் நிலங்களை விற்றுள்ளனர்.

### 5. பறிகொடுத்த பஞ்சமி நிலங்களை எவ்வாறு மீட்பது?

நிலங்கள் அபகரிக்கப்பட்டிருந்தால் நீதிமன்றங்களில் வழக்கு தொடுக்கலாம். விற்பனை செய்யப்பட்டிருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மீட்டுக் கொடுக்கும்படி மனு கொடுக்கலாம்.

### 6. நீதிமன்றங்களில் வழக்குப் போடுவதன் மூலமாகவும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்ததன் மூலமாகவும் பஞ்சமி நிலங்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளனவா?

ஓரிரண்டு நீதிமன்ற வழக்குகளில் பஞ்சமி நிலம் மீட்கப்பட்டுள்ளது. சில வழக்குகள் பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ளன. அரசு அதிகாரிகளிடம் கொடுத்த மனுக்கள் யாவும் கிடப்பில் போடப்பட்டுள்ளன. பஞ்சமி நிலங்களை மீட்கப் போராடிய ஜான் தாமஸ் மற்றும் ஏழுமலை ஆகிய இருவரும் 1995ஆம் வருடம் சுட்டுக் கொல்லப்பட்டனர். தமிழக அளவில் தலித்துக்கள் அனைவரும் பஞ்சமி நிலங்களை மீட்க கோரிக்கை வைத்தால் மட்டுமே, பஞ்சமி நிலங்களை மீட்டெடுக்கும் வாய்ப்பு உள்ளது.

### 7. தலித் நில உரிமை – பஞ்சமி நில மீட்பு இரண்டில் எது முதன்மையானது?

அரசின் தரிசு நிலங்கள், நில உச்சவரம்பை முறையாக அமல்படுத்தினால் கிடைக்கும் உபரி நிலங்கள் இவற்றை நிலமில்லா தலித் விவசாயக் கூலிகளுக்கு பகிர்ந்தளிக்கக் கோருவதும், பஞ்சமி நிலத்தை மீட்பதும் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியது தலித் நில உரிமை. தலித் நில உரிமை என்பது நிலமில்லாத அனைத்து தலித் விவசாயக் கூலிகளை உள்ளடக்கிய கோரிக்கையாகும். ஆனால் பஞ்சமி நில மீட்பு என்பது சுமார் ஐம்பதாயிரம் தலித்துக்களுக்கு மட்டும் பயனளிக்கக் கூடியது. பஞ்சமி நிலங்கள் இப்போதைக்கு முக்கியமான இடங்களில் இருக்கின்றன. பன்னாட்டு கம்பெனிகளுக்கு தரிசு நிலங்களை தாரை வார்த்து விடும் அபாயம் உள்ளது. அத்தோடு நகர்ப்புறங்களில் வசிக்கும் தலித்துகளுக்கு முறையாக பட்டா வழங்காமல் அவ்வப்போது அவர்கள் குடிபெயர்க்கப்பட்டு தகுந்த மாற்றிடம் வழங்கப்படாமல், வெகு தொலைவிலுள்ள குடியிருப்புகளுக்கு துரத்தப்படுகின்றனர். ஆகவே விளைநிலம், பஞ்சமி நில மீட்பு, குடியிருப்புமனை பட்டா இம்மூன்று கோரிக்கைகளுமே முக்கியமானவை, முதன்மையானவை.

### 8. தலித்துகள் நில உரிமை பெறுவது சாத்தியமா?

அண்ணல்அம்பேத்கர் 1923-ஆம் வருடம் பம்பாயில் 20,000 தலித் விவசாயக் கூலிகளைத் திரட்டிப் போராடியதன் விளைவாக ராஜஸ்தான், மகாராஷ்டிர மாநிலங்களில் நிலவிய ஜமீந்தாரி முறையை ஒழித்தது அன்றைய அரசு



படிப்பகம்

www.padippakam.com

அதேபோல், ஹைதராபாத் நிஜாம் தலித்துகளுக்கு வழங்கிய நிலத்தை பிறர் அபகரித்துக்கொண்டபோது, 1948-49இல் ஆந்திர மாநிலம் முழுவதும் சுமார் ஒரு வருடம் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒரு லட்சம் பேர்களைத் திரட்டி ஆசியாவிலேயே மிகப்பெரிய நிலப் போராட்டத்தை நடத்தினார். அதன் விளைவாக அந்நிலங்கள் மீட்டெடுக்கப்பட்டன.

அம்பேத்கர் வழியில் நின்று, நாம் இன்று குறைந்தது பத்து லட்சம் பேரையாவது அணிதிரட்டினால் தலித்துகள் இந்நாட்டில் நில உரிமை பெறுவது சாத்தியமே.

## ௯. தலித் குடும்பம் ஒன்றுக்கு 5 ஏக்கர் புன்செய் அல்லது 2.5 ஏக்கர் நன்செய் நிலம் வழங்குமளவு போதிய நிலம் உள்ளதா?

தற்போதுள்ள நில உச்சவரம்பு சட்டத்தின்படி ஒரு குடும்பத்துக்கு 45 ஏக்கர் வரை நிலம் அனுமதிக்கப்படுகின்றது. இதற்கு முந்தைய சட்டத்தில் 90 ஏக்கர் என்றிருந்ததை 45 ஏக்கராக குறைத்துள்ளனர். அவ்வாறே இப்போதுள்ள 45 ஏக்கர் என்ற வரம்பை பத்து அல்லது பதினைந்து ஏக்கர் வரை குறைப்பதன் மூலம் அதிக நிலங்களை உபரியாகப் பெற முடியும்.

கோவில் மற்றும் அறக்கட்டளைக்கு தற்போது உச்ச வரம்பு கிடையாது. அந்நிலங்களுக்கும் உச்ச வரம்பு விதித்தால் பெருமளவில் நிலங்கள் பெறலாம்.

தனியாரின் பட்டா நிலம் என்றாலும் மூன்றாண்டுகளாக தொடர்ச்சியாக பயிரிடப்படாமலிருந்தால் அந்நிலங்களை அரசு உபரி நிலங்களாகக் கருதி பகிர்ந்தளிக்கலாம்.

விவசாயத்தை சார்ந்திராது அரசு மற்றும் தனியார் துறைகளில் ஈடுபட்டிருப்பவரின் வருமானத்தை அடிப்படையாகக்கொண்டு அவர்கள் வசமிருக்கும் நிலங்களை சட்டத்தின் மூலமாகப் பெறலாம்.

விவசாயத்திற்குக் கொண்டு வரப்படாத நிலங்களையும் உபரி நிலங்களாகக் கணக்கிடலாம்.

மேற்கண்ட அல்லது இன்னும் நுணுக்கமான வழிகளைப் பின்பற்றினால் நிலமில்லாத, நிலத்தைச் சார்ந்து மட்டுமே வாழ்க்கின்ற விவசாயக் கூலிகளுக்கு பகிர்ந்தளிக்கக் கூடிய அளவிற்கு போதிய நிலம் பெற முடியும்.

## 10. தலித் நில உரிமைக்காகப் போராடுதல் என்றால் என்ன?

ஒவ்வொரு தலித் விவசாயக் கூலியும் தான் எப்படி சாதி அடிப்படையில் நிலத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டார் என்ற வரலாற்றை அறிந்து, அரசின் மேம்போக்கான திட்டங்களினால் இந்த ஐம்பதாண்டு காலமாக பயனேதுமில்லை என்பதை உணர்ந்து, தன்னெழுச்சி பெற்று தன்போன்ற பிறருடன் இணைந்து, நில உரிமைக்காக குரல் கொடுப்பேன் என முன்வருவதே தலித் நில உரிமைப் போராட்டமாகும். நில உரிமை பற்றிய அனைத்துச் தகவல்களோடு, நில உரிமை பெறும் வரையில் ஓய்வதில்லை என்று உறுதியுடன் களத்தில் நிற்க தீர்மானிக்கும்போது நில உரிமை சாத்தியமாகும்.

## 11. டிசம்பர் 12 எப்படி நில உரிமை கோரிக்கை நாளானது?

அண்ணல் அம்பேத்கரின் நினைவு தினத்தை ஒட்டியும், 2006 மே மாதம் வரவிருக்கும் தமிழக சட்டமன்றத் தேர்தலை கணக்கில் கொண்டும் நமது கோரிக்கையை தேர்தல் அறிவிப்பில் இடம்பெறச் செய்யவும் இந்நாள் தேர்வு செய்யப்பட்டது.

டிசம்பர் 12 நில உரிமை கோரிக்கை நாளில் தலித்துகள் தங்கள் நில உரிமை கோரிக்கையை முன்வைத்து அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக அணிதிரள்வோம். தேர்தல் அறிவிப்பில் இடம்பெறாவிட்டால், நில உரிமை பெறும் வரையில் மீண்டும் மீண்டும் நாம் அணி திரள்வோம்.

**தலித் நில உரிமை இயக்கம்**



படிப்பகம்

www.padippakam.com

# கேள்வி பதில்

**ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, இறுதியில் பெண்ணியவாதிகளையும் விட்டு வைக்கவில்லையே திருமாவளவன்? குமுதம் ரிப்போர்ட்டர் படித்தீர்களா?**

- ராமசுந்தரம், சென்னை.

பெண்ணியம் என்றால் பாலியல் சுதந்திரம் மட்டும் தான் என்று சில பெண்ணியலாளர்கள் புரிந்து கொள்வதுபோல் திருமாவளவனும் புரிந்து கொண்டுள்ளார். திருமாவளவனை அவர் கூறிய கருத்துக்காக எதிர்ப்பவர்கள் சாதி ஒடுக்குமுறைக் கெதிராகவும் அணிதிரள வேண்டியது அவசியம். புரட்சி வேசம் போடுபவர்கள் பெண்ணியம் என்று வந்தால் மனுவாதிகளாக வும், சாதி ஒடுக்குமுறையில் மனுவாதிகளாக இருப்பவர்கள் பெண்ணியம் என்றால் புரட்சி வேசம் கட்டுபவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் இருவருமே ஆபத்தானவர்கள்தாம்!

**கருத்துச் சுதந்திரம் என்று எதை வேண்டு மானாலும் கூறிவிட முடியுமா?**

- கோபாலன், காட்டுமன்னார்குடி.

முதலில் கருத்துச் சுதந்திரம் என்பது யாருக்கு? எல் லோருக்கும் அந்த சுதந்திரம் இருந்தாலும், தீபாவளி பொங்கல் புடவை விளம்பரங்களிலிருந்து பெண்ணியம் வரைக்கும் கருத்துச் சொல்பவர்கள் பெரும்பாலும் சினிமா நடிகைக ளாகத்தான் இருக்கிறார்கள். இதுவரை கருத்துச் சொன்னவர் களின் பின்புலத்தை ஆய்வு செய்தால், அவர்கள் சமூகத்திற் காற்றிய அரும் பெரும் தொண்டுகளின் விளைவாக கருத்துச் சொல்லும் அளவுக்கு உயர்ந்து விட்டார்கள் என்று கூற முடியாது. பணம், பதவி, குடும்பம் ஆகிய பின்னணிகளிலிருந்து தான் கருத்து சொல்கிறார்கள். இப்படி வசதி படைத்தவர்களின் கருத்துக்களை மறுத்துச் சொல்ல ஏழ்மை நிலையில் வாழ்பவர் களுக்கு வாய்ப்பு இல்லாமல்போய் விடுகிறது. ஆக அதிகாரத் தோடு பின்னப்பட்டவர்களின் கருத்துகள் அடிமட்டத்தில் வாழ்பவர்களுக்கு என்ன நன்மையைச் செய்துவிட முடியும்? மாறாக பிரபலங்களின் கருத்துக்களை ஒட்டி தங்களைத் தக வமைத்துக் கொள்வார்கள். இது எவ்வளவு பெரிய வன்முறை? இந்த வன்முறையை நிகழ்த்திக் கொண்டு உச்சாணிக் கொம் பில் நிற்பவர்கள், தங்களுக்கு உள்ளது கருத்துச் சுதந்திரம் என மார்தட்டுகிறார்கள். இத்தகைய வன்முறையை நாம் எப்படி எதிர்கொள்வது?

**வெள்ள நிவாரண உதவிக்கு ரூ.2000 வழங்கிய ஜெயா அவர்களை பாராட்டினால் என்ன?**

- பிரிட்டோ, ராஜபாளையம்.

நீங்கள் செத்த பிறகு உங்களுக்கு மாலை போட்டால் எப்படி நன்றாக இருக்குமோ அப்படித்தான் இருக்கிறது உங்கள் கேள்வி. கொள்கைகளைப் பார்த்து ஓட்டுப் போடும் மக்களை விட சின்னத்தைப் பார்த்து ஓட்டுப் போடும் மக்கள் இருக்கிற வரைக்கும் 2000 என்ன 2006 கொடுத்தாலும் பாராட்டலாம்.

**டிசம்பர் 12-க்கான ஏற்பாடு எப்படி இருக்கிறது?**

- சுப்பிரமணி, செங்கல்பட்டு.

தலித் நிலவுரிமை நாளாக டிசம்பர் 12, ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற இருப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளதோடு, வேகமும் பிடித்துள்ளது. இதுபோன்ற கேள்விகளை கேட்பதோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல், உங்கள் கிராமத்து மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டத்திற்கு செல்லுங்கள். கேள்விக்கான பதிலை உங்கள் வெற்றியாக அங்கே தெரிந்து கொள்வீர்கள்.

**அபு சலீம் கைதில் பல தீவிரவாதிகள் மாட்டுவார்கள் எனத் தெரிகிறதே. உங்கள் கருத்து என்ன?**

- சீனிவாசன், விழுப்புரம்.

அபு சலீம் தீவிரவாதியா? அவன் ஒரு மாஃபியா கும்பல் தலைவன். தீவிரவாதிகள் எல்லோரும் மாஃபியாவா என்ன? ஒரு கோரிக்கையை வலியுறுத்தி வன்முறைப் பாதையை தேர்ந்தெடுத்தவர்கள், அந்த பாதையில் உடன்பாடு இல்லாமல் போகலாம். ஆனால் அவர்கள் கோரிக்கையில் இருக்கும் நியாயத்தை விவாதிக்கக்கூட யாரும் தயாராக இல்லை. இல்லை யெனில் முஸ்லீம்களை தீவிரவாதிகளாகக் காட்டும் அவலம் நடக்காது. அது சரி, ஒரு பணக்காரனும் தீவிரவாதியாக மாற வில்லையே. ஏன்?

அபு சலீமுக்கு தீவிரவாதிகள் தொடர்பு இருக்கிறதோ இல்லையோ, நம் அரசியல் புள்ளிகளுக்கு நிச்சயம் தொடர்பிருக்கும்.

**மனிதக் கழிவை மனிதன் அள்ளும் அவலம் போராட்டம் நடத்தி விட்டால் தீருமா?**

- பன்னாரி, ராமக்காபாளையம்.

போராட்டம் நடத்தும் அளவிற்கு மக்களைத் தள் ளியது அவர்களது கோரிக்கையின் நியாயம்தான். நவம்பர் 28ல் ஆதிதமிழர் பேரவை இப்பிரச்சினைக்காக ரயில் மறியல் போராட் டம் நடத்தியது. மனித கழிவை மனிதர் அகற்றினால் அப்பணி செய்யும் தலித்துகளை மனிதர்களாக மதிப்பதில்லை.

அப்படிப்பட்டவர்கள் அந்த மலத்தை விட கேவல மானவர்கள்.

அதை நீக்க போராடாத அரசோ அதனிலும் கேவல மானது. அருவருப்பானது.

■



படிப்பகம்

www.padippakam.com

# கற்பூரம்

■ கா. வசந்த கன்னியப்பன்

"கட்டிப்போட்ட ஆடு, மாடு அப்பிடியே கெடக்குது. இந்த பசங்க எங்க போச்சிங்கனு தெரியிலையே. போவும்போது சொல்லிட்டுத்தான போனம்" என்ற கிழவி தடுமாறி நடந்து வந்தாள்.

"பாத்து அத்த. கீழ கல்லு கீது பாரு. பாத்து நடந்து வா. உன்னம் கொஞ்ச தூரந்தாம்."

"அய்யோ! அம்மா! நடக்கவே முடியிலியே. திண்ணயில படுக்க வச்சிடு தாயி."

துணியை தரையில் விரித்துப் போட்டாள் கருப்பாயி. "இப்ப படுத்துக்க அத்த"

"அப்பாடா..."

கத்திக்கொண்டு கிடந்த ஆடு, மாட்டுக்கு மல்லாட்ட கொடியை எடுத்துப் போட்ட கருப்பாயி வீட்டினுள் நுழைந்து வத்திப் பெட்டியும், விளக்கும் எடுத்து வந்து அடுப்பைப் பற்ற வைத்து தண்ணீரை சுட வைத்தாள்.

"அம்மாடி! கருப்பாயி!"

"இன்னா அத்த. தே ஆச்சி. தண்ணி சுட்டுடிச்சி. மாத்தர சாட்டு படு. அதுக்குள்ள கஞ்சியும் எறக்கிடுவன்."

"அது இல்ல தாயி. கழனி வெளியிக்கு போயி ஒரு நாலு நண்டு புடிச்சாந்து அரச்சி வேது புடிச்சா எல்லாம் செரியா போயிடும்."

"செரி. அந்த மாத்தர சாட்டு படுத்துக்க. நானு போயி வரன்." மாத்திரையை பிரித்து எடுத்து கொடுத்தாள் கருப்பாயி.

"அய்யோ, எம்மாடா" என்றபடி எழுந்து கொடுத்த மாத்திரையை வாங்கி விழுங்கினாள்.

"அத்த... பத்தரமா படுத்துக்க. நான் கழினிக்கா போயி வரேன்" என்று கிளம்பினாள்.

"பாத்து... பாம்பு கீம்பு கெடக்கப்போது" என்ற அத்தைக்காரி போர்வையை இழுத்து போர்த்தி படுத்துக் கொண்டாள்.

கழனியில் இருந்து கருப்பாயி திரும்புவதற்குள் கல்பனாவும், கவிதாவும் வீடு வந்து விட்டார்கள்.

"எங்கடி போய் சுத்திட்டு வாரீங்க. ஒங்க அப்பங்காரந் தான் ஊரு ஊரா போயி சுத்தி திரியுறான்னு பாத்தா நீங்களும் திரியுரீங்க" என்ற கருப்பாயி "யாராவது அந்த அரிக்கஞ் சட்டிய எடத்தாங்க" என்றாள். கல்பனா ஓடினாள்.

நின்றுகொண்டிருந்த கவிதாவைப் பார்த்து "தம்பி எங்கடி" என்று கேட்டாள்.

"கொடிக்கலிக்கா அறுக்க போயி இருக்கீறான்"

" பள்ளிக்கொடம் லீவு உட்டாலும் உட்டாங்க, இந்த பசங்கள அடக்கவே முடியிலடாப்பா!" என்ற கருப்பாயி பிடித்து வந்த நண்டுகளை அரிக்கஞ்சட்டியில் எடுத்துப் போட்டாள்.

"ஒருத்தரு அந்த அடுப்ப பத்த வையுங்க. ஒருத்தரு காய்கறி அரிஞ்சி வையுங்க. நான் நண்ட புட்டு அம்மியில அரைச்சி எடுத்தாரன்."

அவரவர் வேலையில் பரபரப்பானார்கள்.

"எம்மா... சைக்களுல யாரோ வாராங்கம்மா" என்றாள் கவிதா. சைக்கிள் வீட்டை நெருங்கியது.

"வா தம்பி. எப்பிடி இருக்கிர" என்றாள் கருப்பாயி.

"ஐய்யா... சித்தப்பா... சித்தப்பா" என்றாள் கவிதா.

"கல்பனா... தண்ணீ மொண்டாந்து கொடு. வா தம்பி. திண்ணைக்கா ஒக்காரு."

"அத்த... அத்த..."

"ம்... ம்... இன்னா தாயி"

"தம்பி வந்து இருக்குது பாரு"

"யாரு ஆறுமுகமா? எப்படா வந்த?"

"இப்பதாம்மா வந்தன். இன்னாம்மா ஒடம்பு சரி யில்லையா"

"ஆம்மாண்டா. முந்தாநேத்து மழயில நனைஞ்சிக்கின நடவு நட்டதுதான். புது மைய ஆவல. இன்னைக்குத்தான் ரெட்டனையில இருக்கிற கவுருமெண்டு ஆஸ்பித்திரிக்கு ஓங்க அண்ணி இட்டுக்கீனு போனா."

"செரி... அடுப்புல கீர கொழும்ப எறக்கீரம். வேது புடிக் கீரியா அத்த" என்ற கருப்பாயி கல்பனா எடுத்துத் தந்த கரித்துணியை வைத்து குழம்புச் சட்டியை இறக்கி கீழே பிரிமணையைப் போட்டு வைத்தாள். வேது பிடிக்கப்போகும் நேரம் பக்கத்து வீட்டு சுமதி "கருப்பாயி! கருப்பாயி! ஒம்பையன் மரத்தில இருந்து கீழே உழுந்துட்டான்" என்றாள்.

"ஐயோ ஆண்டவா" என்று அலறி வெளியே ஓடியவள் "எங்க சுமதி" என்று பதறிக் கேட்டாள்.

"நல்லூரு மோட்டு கொடிக்களிக்கா மரத்துலதான்."

"நான் இன்னா பண்ணுவன் ஆண்டவா. இருந்த வேலையில நானு அந்த பையன மறந்தே போயிட்டன்" என்று பசங்களையும் இட்டுக்கினு நடையும் ஓட்டமுமாக நடந்தாள் கருப்பாயி. கூடவே ஆறுமுகமும் ஓடினான்.

அங்கு போய் பார்த்த அவளுக்கு ஒன் றுமே புரியவில்லை. கூட இருந்த பையன்கள் எல்லாம் கருப்பாயைப் பார்த்த உடன் ஓடி ஒளிந்து கொண்டார்கள். மணிகண்டனின் உடல் முழுவதும் முள் சரமாரியாகக் கிழித்து ரத்தமாக இருந்தது. எழுந்திருக்க முடியாமல் ஒடிந்து விழுந்த கிளையின் நடுவே கிடந்தான்.

"ஐய்யே... ஐய்யே... ஐய்யே..." என்று எழுந்திருக்க முடியாமல் கிடந்தவனை கஷ்டப்பட்டு தூக்கினான் ஆறுமுகம்.

"சித்தப்பா... கை வலிக்குதே சித்தப்பா" என்றான் மணிகண்டன்.

"எந்தக் கை?"

"சோத்துக்கை" என்ற மணிகண்டன் கையை அசைக்கவே முடியாமல் அழுதான்.

"பாவி மகன், வூட்ல கெடந்தானா பாரு. எப்பப் பாத்தாலும் பசங்க கூடவே கூடிக்கீனு ஊர் திரியரதே குறியா இருக்கான்"



படிப்பகம்

www.padippakam.com

''அண்ணி... இவன மடியில வச்சிகீனு சைக்கிள்ள ஒக்காரு. ஆஸ்பத்திரிக்குப் போவணும்'' என்றான் ஆறுமுகம்.

''ஐயோ... காசிக்கு என்னா பண்றது. வச்சி இருந்த காச நேத்து ரேசன் கடையில அரிசி வாங்கிட்டேன'' என்று சொன்னவள் உள்ளே ஓடி தகரப் பெட்டியைத் திறந்து இருந்த சில்லறைக் காசுகளை எடுத்து தன் சுருக்குப் பையில் போட்டுக் கொண்டு கிளம்பினாள்.

ஆஸ்பத்திரியில் இருந்து அவர்கள் திரும்பி வருவதற்குள் கல்பனாவும், கவிதாவும் தூங்கிப் போனார்கள். தெரு நாயின் குரைப்பைக் கேட்டதும் விழித்தெழுந்த கிழவி இவர்களைக் கண்டதும் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

''என்ன தாயி ஆச்சி''

''ரெண்டு ஊசி போட்டாங்க. கையில கட்டுபோட்டு மாத்தர தந்தாங்க. நான் அம்பது ரூபாதான் வெச்சி இருந்தேன். தம்பிதான் மிச்ச நூறு ரூபா கொடுத்தது. பசங்க அதுக்குள்ள தூங்கிடுச் சுங்களா... செரி... வா தம்பி. சாப்பிடுவே''

''இல்ல அண்ணி. காலையில சவுக்க மரம் வெட்ட போவணும்.''

''டேய்! சாட்டு போடா. போன தடவ வந்தப்பகூட சாட்டு போகல'' என்ற கிழவியின் குரலுக்கு கட்டுப்பட்ட ஆறுமுகம் உட்கார்ந்து சாப்பிட்டான். கிளம்புகையில் தன் பாக்கெட்டிற்குள் கையை விட்டு ஐம்பது ரூபாயை எடுத்து ''இந்தாம்மா, வச்சிக்க. அடுத்த பயணம் வரும்போது வெத்தல, பாக்கு வாங்கியாறேன்'' என்று சொல்லிவிட்டு சைக்கிளை தள்ளிக் கொண்டு புறப்பட்டான்.

மறுநாளே கருப்பாயின் ஊட்டுக்காரன் முனுசாமி வந்தான். உள்ளூரில் வேலை கிடைக்காததால் மதுரைக்கு கரும்பு வெட்டச் சென்றவன் ஒரு மாதம் கழித்து இப்போதுதான் திரும்புகிறான்.

முனுசாமிக்கு இல்லாத பழக்கமே இல்லை. சாராயம், பீடி, பாக்குனு எதையும் விட்டுவைக்க மாட்டான். சம்பாதிக்கிற காசை பெண்டாட்டியிடம் கொடுக்க மாட்டான். தானே குடித்து அழிப்பான். கையில் உள்ள காசு தீர்ந்ததும், பெண்டாட்டியிடம் காசு கேட்டு உயிரை வாங்குவான். அவள் கொடுக்காவிட்டால், கையில் கிடைத்ததை எடுத்து அவள் மண்டையை உடைப்பான். அது மட்டும் இல்லாமல் ''நான் ஊரில் இல்லாத சமயத்துல யாரடி வெச்சிக்கிட்டிருந்த'' என்று வாய் கூசாமல் கேட்பான்.

அன்று மாலையே மூக்கு முட்ட குடித்து விட்டு வீட்டிற்கு வந்தவன் ''ஏய் கருப்பாயி... எங்கடி இருக்க. நான் கூட்டா இன்னானு கேக்க மாட்டையாடி. ஏய் மணிகண்டா. ஏய் பொட்டக் கழுதங்களா. வாங்கடி'' என்று கத்தினான்.

இவ்வளவையும் பார்த்துக் கொண்டிருந்த கிழவிக்கு பொறுக்க முடியவில்லை.

''ஏண்டா! திட்டமா குடிக்கரது இல்ல. குடிச்சா இப்பிடியா பேசரது. தெருவெல்லாம் உளுந்து மேல எல்லாம் சேரும் சகதியுமா இருக்கு.''

''ஏய் கெழவி. நீ பேசாத. வாய மூடு. எம் பொண்டாட்டி. எங்குடும்பம். எது வேணாலும் கேப்பன், அடிப்பன். அத கேக்க நீ யாரு''

''டேய்.. ஒன்ன பெத்தவடா''

''இன்னா பெத்தவளா. நீ பெத்ததாலத்தான் குடிக்கறன். வாய மூடுன்னா மூடு. இன்னக்கி ஒன்னு எனக்குத் தெரியனும். இல்ல இந்த வூட்ல நடக்கரதே வேற''

இதையெல்லாம் காதுகளில் வாங்கிக் கொண்டு அடுப்பங்கரையில் உட்கார்ந்திருந்தாள் கருப்பாயி. அடுப்பு எரிவதுபோல் அவள் வயிறும் எரிந்துகொண்டு இருந்தது.

''ஏய்! நேத்து ராத்திரி எவன் கூடடி போயி ஊர் சுத்திட்டு வந்த. சொல்லுடி ஊர போன தேவிடியா.''

''டேய்! நிறுத்துடா. யாரப் பாத்து சொல்லுர ஒன் நாக்கு அழுகிருண்டா''

''உடு ஆத்தா! இன்னிக்கு நேத்தா நடக்குது இது. அவர கட்டிகிட்டு வந்ததிலேருந்துதானே நடக்குது.''

''ஏய்... நடந்தத உடு. நேத்து எவன்கூட படுக்கசைக்கிளுல போன, சொல்லுடி'' ஆத்திரம் கொண்டவனாய் கேட்டான் முனுசாமி.

''ஆமாயா. வேலைக்குப் போற எடத்துல, வர எடத்துல, எல்லா எடத்திலயும் வெச்சி இருக்கேய்யா''

''ஏய்... நேத்து எந்தம்பி கூட போனையா இல்லையா''

இருவருக்கும் வாக்குவாதம் முட்டியது. கோபத்தில் முனுசாமி அருகில் கிடந்த தடியை எடுத்து கருப்பாயியின் தலையில் ஓங்கி அடித்தான். ரத்தம் பீய்த்துக் கொட்டியது. வலி பொறுக்க முடியாமல் அலறினாள்.

''அழுது பொலம்புனா விட்டுடுவேன்னு நெனக்காதடி. கன்னிமாரு கோயிலுக்கு வந்து கல்பூரத்த கொளுத்தி நான் ஒருத்தனுக்குத்தான் முந்தானிய விரிச்சவனு சத்தியம் பண்ணுடி.''

''அவ ஏண்டா வரனும். நீ போயி கல்பூரத்த கொளுத்தி சத்தியம் பண்ணுடா. அதான் நாயம்'' என்றாள் கிழவி. முனுசாமி கிழவியை நெருங்கி ஒரு நெட்டு நெட்டித் தள்ளினான். இவனின் நெட்டுகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் கிழவி வாசலில் போய் பேச்சு மூச்சில்லாமல் விழுந்தாள்.

ஆவேசம் வந்தவளாய் எழுந்தாள் கருப்பாயி. ''என்ன எது வேணாலும் பண்ணியா. அந்த கெழவி என்னையா பண்ணீச்சி''

சாக்கடைக்கு ஓடி குடத்துத் தண்ணீரை தலையில் ஊத்தியவள் கற்பூரத்தை எடுத்துக் கொண்டு கோவிலை நோக்கி ஓடினாள். முனுசாமியும் பின் தொடர்ந்தான்.

கோவிலில் கற்பூரம் கொளுத்தியவள் தன் கையால் அணைக்கப் போனாள்.

''நிறுத்தடி.அப்படியே அழிச்சா நான் ஒத்துக்குவனா. நான் இன்னா இளிச்சவாயனா. சத்தியமா என்னத் தவர யாருகிட்டயும் படுக்கலனு சத்தியம் பண்ணுடி.''

அவன் சொன்னது போலவே அவள் கற்பூரத்தை அழித்தாள். அந்த கற்பூரத்தை விட்டு அவள் கையை எடுக்காதபடி அவன் கையால் போட்டு அழுத்திக் கொண்டான். வலி பொறுக்க முடியாமல் அவள் கத்தினாள். உள்ளங்கை ரணமானது. அழுது கொண்டே வீட்டிற்கு ஓடினாள் கருப்பாயி. அவள் பின்னாலேயே போன முனுசாமி நடக்க முடியாமல் வாசலிலேயே சரிந்து விழுந்தான். காலையில் மஞ்சள் தூளையும், முருங்கைத் தளையையும் வதக்கிக் கட்டினாள் கிழவி.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த முனுசாமி கேட்டான் ''கருப்பாயி, உனக்கு உள்ளங்கையில எப்படி காயம் வந்துச்சி''


■



படிப்பகம்

www.padippakam.com

# ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலையே வலிமையான இந்தியா



**கே.ஆர். நாராயணன்**
முன்னாள் குடியரசுத் தலைவர்

தமிழில்
ஜெ. பாலசுப்ரமணியம்
மா. வேலுச்சாமி

அதிகாரமளிப்பது என்பது சமூகத்தில் தங்களுக்கும், தங்களது ஒட்டுமொத்த குடும்ப உறுப்பினர்களுக்கும், எவ்வித வாழ்வியல் ஆதாரங்களையும் நிலையாக பெற இயலாதவர்களுக்கும், சமூக பொருளாதார நிலையில் மேலெழும்ப திராணியற்றவர்களுக்கும், தினந்தோறும் அடிப்படைத் தேவைகளுக்கே அல்லலுறும் சாதாரண மக்களாகிய நலிவுற்ற (அ) ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் அவர்களது தேவைகளைப் பெறும் வாய்ப்பும், அவர்களும் இந்நாட்டின் கௌரவமான அதிகாரமுள்ள குடிமக்கள் என்ற முறையில் செயல்படும் உரிமையினையும் அளிப்பதுமே ஆகும். இந்நிலை என்று உறுதி செய்யப்படுகிறதோ அன்றுதான் அதிகாரமளிப்பது என்ற வார்த்தைக்கு முக்கியத்துவம் அதிகரிக்கும்.

இந்தியாவின் உண்மையான அதிகாரம் என்பது வரலாற்றுப் பார்வையில் சாதாரண மக்கள் மத்தியில் தோன்றிய போராட்டங்களே பின்பு விடுதலைப் போராட்டங்களாக உருவாக்கப்பட்டது. உதாரணமாக வலிமை பெற்ற ஆங்கில பேராதிக்கத்தை எதிர்த்த, அதற்கெதிராக எதிர்ப்புணர்வு கொண்டிருந்தாலும் மத ரீதியாகவும், சாதி ரீதியாகவும் பிளவுபட்டிருந்த இந்திய சமூகத்தை ஒன்றிணைத்து தேசிய கருத்துருவாக்கத்தைப் பரப்பி, புது விடுதலை நம்பிக்கையை உருவாக்கி அதனை சுதந்திரப் போராட்டமாக முன்னெடுத்து, ஆங்கிலேயே பேராதிக்கத்திடமிருந்து இந்தியர்கள் அதிகாரத்தை மீட்க போராடி பெற்றுத் தந்த மகாத்மா காந்தி அவர்களின் மகத்தான பணியினை எடுத்துக் கொள்ளலாம்.

அதிகாரமற்ற மக்களை அதிகாரமுள்ளவர்களாக மாற்றி அவர்களை தேசிய கட்டமைப்பு செயல்பாடுகளில் தகுதிபெற்ற அங்கத்தினர்களாக உருவாக்கும் நிலையே ஒரு நாட்டின் அனைத்து மக்களையும் முழுமை பெற்ற அதிகார சக்திகளாக மாற்றுவதற்கான நல் முயற்சி. இது எளிதான காரியமல்ல. ஏனெனில் அன்றாட தேவைகளுக்காக போராடும் பெரும்பான்மையான மக்களின் அடிப்படைத் தேவைகளையும் அதைப்பற்றிய கவலைகளையும் அறிந்து கொள்ளாமல், பேசாமல், அவர்களுக்கான அதிகார் வரம்பை புரிந்து கொள்வது கடினம். உதாரணமாக சமத்துவம் மற்றும் சமமான வாய்ப்புகள் எப்போதும் அன்றாடங்காய்ச்சிகளாக வாழும் பெரும்பான்மையினரை சென்றடைவதை உறுதி செய்து, அதற்கு உத்திரவாதம் அளிப்பதுமே அதிகாரமளிப்பது என்பதாகும்.

அதிகாரமளிப்பது என்பது பெண்கள் மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாப்போடு அவர்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பதுமேயாகும். எனவே அதிகாரப்படுத்தலின் எவ்வித முயற்சியும் சமூகத்தின் அடித்தளத்தில் சமூக பொருளாதார பிரச்சினையில் உழன்று கொண்டிருப்பவர்களுக்காக மேற்கொள்ளப்பட வேண்டும். மகாத்மா காந்தி, டாக்டர் அண்ணல் அம்பேத்கர் மற்றும் ஜவஹர்லால் நேரு போன்ற சிறந்த தலைவர்களின் போராட்டங்களின் நோக்கத்தை ஒட்டு மொத்த இந்திய மக்களையும் அதிகாரமுள்ளவர்களாக மாற்றுவதற்கான முயற்சிகளாகவே கொள்ளலாம்.

மேலும் விடுதலைப் போராட்டத்தின் காலத்தினை திரும்பிப் பார்க்கும்போது ஆங்கிலேயர்களின் ஆட்சியினை எதிர்த்து போராடுவதற்கான பலமோ, அவர்களின் பல்வேறு அடக்குமுறைகளை எதிர்க்கும் வலிமையோ அல்லது ஜனநாயகக் கொள்கையை போராடி வெற்றியின் மூலமாக நிறுவுவதற்கான துணிவோ இல்லாதிருப்பினும், திடீரென்று விடுதலைப் போராட்டத்தினை உருவாக்கி தங்களுக்குள் வல்லமை இருப்பதை நிரூபித்தார்கள். அது எங்ஙனம் நிகழ்ந்தது? அது நாம் அனைவரும் அறிந்ததே. விடுதலைப் போராட்டத்தில் ஆங்கிலேயர்களை எதிர்த்தால் நிகழப்போகும் உயிர் - உடைமைகள் இழப்புகள் குறித்த பயத்தைப் போக்கிக் கொண்டதனாலேயே இந்த துணிவும், நிகரற்ற ஆற்றலைக் கொண்ட மாபெரும் பேராதிக்கத்தை எதிர்க்கும் சக்தியும் அவர்களுக்குள் பிறந்தது.

இச்சூழலை சரியாக புரிந்து கொண்ட மகாத்மா காந்தி அத்தருணத்தில் மக்களுக்கான ஆறுதல் மற்றும் உந்துதல் சக்தியாக இருந்ததுடன் அந்த போராட்ட உணர்வை ஆங்கிலேயே ஏகாதிபத்தியத்திற்கு எதிரான வளமையான அறப்போராட்டமாக உருவாக்கி அதில் வெற்றியும் கண்டார். மேற்சொன்ன வரலாற்று நிகழ்வுகளில் இருந்து அதிகாரம் குறித்த புரிதல் என்பது மாபு வழி உரிமைகள் மற்றும் அவற்றின் பண்பு நலன் காத்தல் ஆகியனவே என்றுணர முடிகிறது.

அறுபது ஆண்டுகால சுதந்திர இந்தியாவில் வியக்கத்தக்க வகையில் பல்நோக்கு திட்டங்களிலும், குறிப்பாக பொருளாதார வளர்ச்சியிலும் நாம் நமது ஜனநாயகத்தினை வலுப்படுத்தியுள்ளோம் என்பதில் ஐயமில்லை. மேலும் இந்தியாவின் பெரும்பான்மையான மக்கள் இன்று இந்தியாவை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் வலிமையினை பெற்றுள்ளனர். எனவே இந்தியா பொருளாதார வளர்ச்சியில் விரைந்து வளர்ந்து வளரும் நாடுகளில் ஒன்றாகவும் அது கூடிய விரைவில் சக்தி வாய்ந்த நாடுகளில் ஒன்றாக தனது இடத்தை தக்க வைத்துக் கொள்ளும் என உலக நாடுகளே அங்கீகரித்து வியக்கின்றன. இந்நிலை மற்ற நாடுகளுடன் பரஸ்பர உறவையும், சகோதரத்துவ உறவையும் ஏற்படுத்தும் என்பதிலும் ஐயமில்லை.



படிப்பகம்

www.padippakam.com

அதிகாரமளிப்பது என்பது நமது எதிர்காலத்தைப் பற்றிய ஒரு நம்பிக்கையை வலுவூட்டுவதாகும். ஆனால் அதே தருணத்தில் சமூகத்தில் நமது பழக்க வழக்கங்கள் பற்றி உற்றுநோக்கும்போது அவை மிகவும் வேதனை யளிக்கிறது. எனவே வலிமைமிக்க இந்தியாவை வலுப் படுத்த நாம் செய்யவேண்டியது, நமது பாரம்பரிய ஒழுக் கங்களையும், பண்பாடுகளையும் மீட்டெடுத்து அவற்றை நாம் சமூகத்தில் கடைப்பிடிப்பது ஆகும். அத்தகைய ஒழுக்கங்களையும், பண்பாடுகளையும் கடைப்பிடிக்க நாம் மறந்துவிட்டோமெனில், அது அதிகார மாற்றத்தின் வழியும் பொருளும் சமூகத்திற்கு வேறுவிதமான பின் விளைவுகளையே ஏற்படுத்தும்.

இன்று உலக அளவில் அனைத்து நாடுகளும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியைக் குறித்து ஆச்சரியப்பட வைக்கும் அளவிற்கு வளர்ந்துவிட்ட அதே வேளையில், நமது சுதந்திர போராட்ட தியாகிகளும், அர, சியல் சாசன தந்தைகளும் நமக்கு வகுத்துத் தந்த வழி களை நாம் பின்பற்றி நடந்தோமா என பரிசோதனை செய்து பார்க்க வேண்டும்.

வலிமையான இந்தியாவில் பெண்கள் தங்களுக் கான உரிமைகளை இழந்துவிட்டதுடன், நாகரீகம் என்ற போர்வையில் அவர்களுக்கான மதிப்பீடுகளை இழந்த தால் அவர்களுக்கான ஒழுக்க நெறிகள் உரிமைகள் அழிக்கப்பட்டு கேட்பாரற்றவர்களாகவும், மனநிறை வற்றவர்களாகவும், பல நூற்றாண்டுகளைத்தொடர்ந்து இன்றும் பல்வேறு சோதனைகளை சந்தித்து வருகின்றனர்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்தியா 5000 வருட நாகரீகப் பழமையும் அரிய பாரம்பரியமும் கொண்ட தென்று நாம் பெருமைப்பட்டுக் கொள்வதில் இந்தியர் களாகிய அனைவரும் ஆனந்தம் கொள்கின்றோம். ஆனால் இந்தியாவில் அதிகாரம் படைத்தவர்களும், ஆளும் வர்க்கத்தினரும் சமூகத்தில் பின்தங்கிய தலித் மற் றும் ஒடுக்கப்பட்டவர்களை நடத்தும் விதத்தைக் காணும் போது இந்த பாரம்பரியத்தினைப் பற்றி பேசிக் கொள் வதே இழிவுபடுத்தும் வகையில் உள்ளது.

இந்திய அரசியல் சாசனத்தின் ஆதி கர்த்தாவான அண்ணல் அம்பேத்கர் கூறியதுபோல அரசியல் சமத்து வம் எப்போதும் சமூக-பொருளாதார சமத்துவத்தில் இருந்து வேறுபட்டது. அது ஜனநாயக அமைப்பில் பல் வேறு பிளவுகளை உருவாக்கும். எனவே இப்பிளவுகளை நாம் விரைந்து சரிப்படுத்தவில்லையெனில் இது சமூக, பொருளாதார தளத்தில் மாபெரும் தீமையை விளைவிக் கும்.

சமத்துவம் இல்லாத, சமநீதியற்ற ஒரு இருளடைந்த சூழலை கிழித்தெறிந்து வெள்ளிக் கோடுகளைப்போல் இன்று ஒடுக்கப்பட்டவர்கள் மற்றும் சுரண்டல்களுக்கு ஆளானவர்களின் போராட்டங்கள் இருக்கின்றன. இத்தகைய போராட்டங்களை ஒடுக்கப்பட்டவர்களுக் கான வலிமையான எதிர்காலத்தை தக்கவைத்துக் கொள் வதற்கான போராட்டமாக மட்டும் கருதாமல் அவற்றை அவர்களின் நம்பிக்கையூட்டும் முயற்சியாகவும் எடுத்துக் கொள்ளல் வேண்டும். இப்புரிதலே வலிமையான இந்தியாவை உருவாக்குவதற்கான முயற்சி.

இப்போராட்டங்கள் அதற்குரிய வரவேற்பையும், அழுத்தத்தையும் பெற்று இருப்பதால், ஒடுக்கப்பட்டவர் களின் எழுச்சியினையும் அவர்களது வளர்ச்சியினையும் ஏற்றுக்கொள்ள இயலாத அதிகார மற்றும் பொருளா தார பலம் பொருந்தியவர்கள் ஒடுக்கப்பட்டவர்களின் எழுச்சியைக் கண்டு பயம் கொண்டு அப்போராட்டங் களுக்கான முயற்சிக்கும், அவற்றிற்கான வெற்றிக்கும் முட்டுக்கட்டையாக உள்ளனர். தலித்துக்கள் கொல்லப் படுவதும், அவர்களுக்கு சமூக பொருளாதார அநீதிகளை இழைப்பதும், அவர்களை கொடுமைகளுக்கு உள்ளாக்கு வதும் இந்தியாவின் வலிமையினை குறைத்து அதை வலிமையற்றதாகவே மாற்றும் என்பதில் ஐயமில்லை.

மேலும் வலிமையான இந்தியா என்பது, சந்தேகத் திற்கு இடமின்றி மகாத்மா காந்தி அவர்களால் மிகவும் நேசிக்கப்பட்ட, வழிநடத்தப்பட்ட சமூக அர்ப்பணிப்புப் பணியான சர்வோதயாவை நடைமுறைப்படுத்தலில் உள்ளது என நாமனைவரும் நம்புதல்வேண்டும்.

உலக தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் என உலக வர்த்தக பெருக்கம் உருவாகிவிட்ட இச்சூழ லில் சந்தை நோக்கிய பொருளாதார வளர்ச்சிக் கால கட்டத்திலும் தினசரி தேவைகளுக்காக பிரச்சனைகளை எதிர்கொள்ளும் அன்றாடம் காய்ச்சிகளைக் குறித்து நாம் கவலை கொள்ளுதல் வேண்டும்.

அறுபது ஆண்டுகால சுதந்திரம் கொண்டாடும் இந்த தருணத்தில் சமூகத்தில் கடைநிலையில் இருக்கும் மக்களின் அதிகாரம் குறித்து நம்மை நாமே மறுபரிசீலனை செய்துகொள்வதும், அதற்கான விசாரணைகளைத் துவங்குவதும் அவசியம். அதற்கான முயற்சி களை மேற் கொள்ள முற்படும்போது அது இந்தியாவை வலிமைப் படுத்தும் முயற்சியாக மாற்றுவது மட்டுமில்லாமல் அதிகாரமற்று பல்வேறு கொடுமைகளுக்கும் இன்னல் களுக்கும் ஆளானவர்களையும் வலிமைப்படுத்துவதே ஆகும்.

ஏழைகளின், அடித்தட்டு மக்களின் வளர்ச்சியே இந்தியாவை வலிமையானதொரு நாடாக மாற்றும். இது நான் கூறியது இல்லை. நமது சுதந்திரப் போராட்ட வீரர்கள் இந்தியாவின் சமூக பொருளாதார நிலை அடித் தட்டு மக்களைச் சென்றடைய வேண்டியதன் அவசியம் உணர்ந்து கூறியது. இவ்வரிகளை உணராமல் இதைத் தவிர்க்க இளம் தலைமுறையினர் முயன்றால் அம்முயற்சி வருங்கால இந்தியாவின் வளர்ச்சிக்கு பெரும் ஆபத்தையே விளைவிக்கும்.

மேலும் ஊழலற்ற, வறுமையொழிந்த இந்தியா வினை உருவாக்க, முயலும் ஒவ்வொரு இந்திய குடிமக னும் சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களுக்கான பிரச்சினை களை சரியான வகையில் புரிந்து கொண்டு அதை நிவர்த்தி செய்ய முன்வரும் ஒரு நிலை இந்திய சமூகத்தில் உருவாகி விடும்போது இந்தியாவின் வலிமையினையும், அதன் பாரம்பரிய கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் நாம் பெரிதாகவும் பெருமையாகவும் கொள்ளுவதில் ஆனந்த மடையலாம்

இறுதியாக வலிமையான இந்தியாவை அமைக்க பாடுபடுபவர்கள் என்று சொல்ல விழைபவர்கள், எவ்வித உள்நோக்கங்களுமின்றி மேற்கண்ட தகவல்களையும் பிரச்சினைகளையும் ஆராய வேண்டும். அவ்வாறு ஆய்வு செய்தபின் அவற்றை சரியான நேர்மையான பாதையில் தகுந்து ஆதாரங்களுடன் பார்த்து உடனடியாக் சீர் செய்ய வேண்டும். இதன் மூலம் இந்தியர் அனைவரை யும் வலிமைப்படுத்துவதால் மட்டுமே சர்வதேச அரங் கில் நம்மை நாம் வலிமையான இந்தியா என நிலைநிறுத்த முடியும். ■



படிப்பகம்

www.padippakam.com

# மக்கள் அறியாத அம்பேத்கர்

சந்திரன்



நான் ஓராண்டிற்கு முன்பு சென்னை லயோலா கல்லூரியில் புத்த பண்பாடு பற்றி பேசச் சென்றிருந்தேன். அந்த நிகழ்வு தமிழ் மொழி அறியாத மாணவர் களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நானூற்றுக் கும் மேற்பட்ட மாணவர்கள் குழுமியிருந்தனர். எனக்கு முன்னர் இஸ்லாம் மற்றும் முகமதியர் பண்பாடு பற்றி ஒருவர் விரிவாகப் பேசினார். அடுத்ததாக நான் பேச வேண்டியிருந்தது. நான்தான் புத்த மார்க பண்பாடு குறித்து பேச வந்தவன் என்பதை அறியாத நிகழ்வை நடத்துபவர்கள் நான் வரவில்லை என்று முடிவு செய்து விட்டனர். சீக்கிய சமயப் பண்பாடு குறித்து ராணுவ உயர் பதவி வகித்துவரும் ஓர் அதிகாரி பேசினார். உரை ஆங்கிலத்தில் இருக்க வேண்டியிருந்தது. நிகழ்வை நடத்துபவர்களிடம் சென்று நான் பவுத்தம் குறித்து பேச வந்துள்ளேன் என்றேன். என் முறை வந்தது. மேடையில் ஏறி மாணவர்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டேன். புத்தருடன் வாழ்ந்தவர்களில் யாராவது ஒருவரது பெயர் கூறுங்கள். கூட்டத்தில் தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்த மாணவர்கள் என்னுடைய கேள் விக்குப் பிறகு தங்களுக்குள் விவாதித்துக் கொண்டனர். மூன்று நிமிடங்கள் வரை எவ்வித பதிலும் வரவில்லை.

நீங்கள் சொல்லுங்கள் என்றனர். நான் சொன் னேன் நீங்களெல்லாம் சிறந்த கல்வியை பெற்றுக் கொண்டிருக்கும் மாணவர்கள். எனவே புத்தருடன் வாழ்ந்தவரின் யாராவது ஒருவரது பெயரைக் கூறுங்கள்.

அவர் இறந்து வெகு வருடங்கள் கடந்து விட்டன, எங்களுக்கு நினைவில்லை என்ற பதிலே தொடர்ந்து வந்தது.

நான் விடுவதாய் இல்லை. சரி, ராமன் உடன் வாழ்ந்தவர்கள் - சீதை, ராவணன், லட்சுமணன்.

மகாபாரதத்தில் வருபவர்கள் - தருமன், அர்ச்சுனன், பீமன்

நீங்களெல்லாம் இலக்கியம் படித்திருக்கின்றீர்கள். வரலாறு படித்திருக்கின்றீர்கள். புத்தர் உலகம் முழுமையும் தெரிந்த இந்தியாவில் தோன்றிய மனிதர். அவர் உடன் வாழ்ந்தவர்களின் பெயரைக் கூட நீங்கள் அறியாமல் இருப்பது எப்படி சரியாகும்.

இந்தியாவில் ராமனுக்கு கோயில் உள்ளது. மகாபாரதம் பற்றி பலர் பேசுகின்றனர். காந்தி துவங்கி நேரு, ராஜாஜி என பலர் புத்தர் பற்றி யாரும் புத்தகம் எழுதவில்லை. அதனால்தான்...

நான் சொன்னேன். உலகம் முழுமையும் சென்றடைந்த புத்தரால் சொந்த நாட்டில் தன் உடன் வாழ்ந்தவர்களின் பெயர் கூற தெரியாத அளவிற்கு, அவரின் சுவடு கூட தெரியாமல் துடைத்து எறியப்பட்டுள்ளார். இது ஏன் நடந்தது? இதற்கு மூலக்காரணம் என்னவாக இருக்கும் என நீங்க இதுவரை யோசித்தது உண்டா? மாணவர்கள் மத்தியில் யோசனை ஆரம்பம் ஆனது. ஏன்? என்று என்னை திரும்பி கேள்வி கேட்டனர். இதற்கான பதிலாக அன்றைய உரையை நான் முன் வைத்து முடித்தேன் மாணவர்கள் மிகவும் வரவேற்றனர்.

இந்தக்கட்டுரையைப் படிக்கும் பலரும் இதே போன்ற கருத்தைக் கொண்டவராக இருக்கக் கூடும். தீர்வு என்ன என்பதிலேயே நமது வேலைத்திட்டம் அடங்கியுள்ளது. அதன் முகப்பாக புத்தர் காலத்து மனிதர்களை அம்பேத்கர் நமக்கு எவ்வாறு அறிமுகப்படுத்துகிறார் என்பதே இக்கட்டுரையின் முதல்.

சோபகன் (Sopaka) என்ற மனிதனை பவுத்த அறிஞர்கள் ஓர் ஏழையாக நமக்கு அறிமுகப்படுத்து கின்றனர். ஏழை சோபகன் என்றே வணக்கத்திற்குரிய டாக்டர் வால்பொல பை ஆனந்த குறிப்பிடுகிறார். பவுத்தத்தில் அன்பு என்ற நூலில் இவ்வாறு பதிவு செய்துள்ளார் புத்தரின் அன்பு மயத்திற்கு காரணம் அவரது விழிப்புணர்வே என்பது இவருடைய நிலைப்பாடு. இவர் சோபகனைப் பற்றிய வரலாற்றில்,

சோபகன் என்பவன் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவன். இவனின் ஏழாவது வயதில் தந்தை காலமானார். இவனின் தாய் மறுமணம் செய்து கொண்டார். அதன் மூலம் சோபகனுக்கு வளர்ப்புத் தந்தை ஒருவர் புதிதாக கிடைத்தார். இவர் இயல்பிலேயே கருணையற்ற கொடுமைக்காரராக இருந்தார். சோபகனின் தாய் கூடுதல் அன்புடன் சோபகனிடம் இருந்தார். அவர்களுக்கு வேறு குழந்தைகள் ஏதும் இல்லை.

சோபகனை இடையூறாக நினைத்த அவனின் வளர்ப்புத் தந்தை அவனைக் கொல்லத் திட்டமிட்டார். சோபகனிடம் அன்பாக பேசினார். தன் தாயின் அறிவுரைப்படியே தன் வளர்ப்புத் தந்தை அன்பாக நடக்கிறார் என்று சோபகன் எண்ணினான். சோபகனை



படிப்பகம்

www.padippakam.com

**சங்கம், மேம்பட்ட சமூகம் என்பது என்று எதை யும் அங்கீகரிக்காமல், பவுத்தத்தில் மேம்பட்ட நிலையே சரியான அளவுகோலாகக் கொண்டிருந்தது சங்க மானது ஜனநாயக அமைப்பாக செயல்பட்டதைக் காட்டுகிறது.**

அவன் வளர்ப்புத் தந்தை இடுகாட்டிற்கு (கவனிக்க, சுடுகாடு அல்ல) அழைத்துச் சென்றார்.

பல பிணங்கள் அழுகி துர்நாற்றம் வீசிக் கொண்டிருந்தது. சோபகனின் வளர்ப்புத் தந்தை சோபகனை ஒரு அழுகிய பிணத்துடன் இணைத்து கட்டிவிட்டு சென்றுவிட்டார். சோபகன் தனிமையில் மிகவும் அச்சமுற்றான். கூடுதல் பயத்துடன் அழுதான். அப்போது சோபகனின் வயது ஏழு. இரவின் இருட்டு சோபகனை மேலும் அச்சுறுத்தியது. நரி, புலி, சிறுத்தை உருமல்கள் பயத்தை அதிகப்படுத்தியது. சோபகனின் உடல் பயத்தால் வேர்த்து நடுங்கியது. ஓர் இனிய குரல், சோபகா அச்சம் கொள்ளற்க. பயப்படாதே நான் உன் அருகே இருக்கிறேன். அந்தக் குரல் புத்தருடையது. புத்தர் சோபகனை குளிப்பாட்டினார். உண்ண நல்ல உணவு தந்தார். நல்ல ஆடை தந்து உடுத்தச் சொன்னார். சோபகனுக்கு வேண்டிய ஆறுதல் சொன்னார். அவன் அமைதியுறச் செய்தார்.

சோபகனின் தாயார், சோபகனைத் தேடி அலைந்தார். இரவு முழுவதும் தூக்கம் இன்றி கவலைப்பட்டார். (கவலை கொண்ட மனதிற்கு தூக்கம் எப்படிவரும்) பொழுது விடிந்ததும் அம்மையார் புத்தரை தேடிச் சென்றார். புத்தர் "அழாதே சகோதரி" என்றார் உன் மகன் பாதுகாப்பாக உள்ளான். இதோ என்றார். அப்பொழுது சோபகன் துறவு ஆடை அணிந்து அமர்ந்திருந்தான். சோபகனைக் கண்ட தாய் மகிழ்ச்சி பெருக் கெடுத்து புத்தருக்கு நன்றி கூறினார். தானும் புத்தரின் மாணவியாகி துறவியானார்.

இந்த நிகழ்வு கூறல் மூலமாக நாம் சில முடிவுகளை பெறுகிறோம்.

1. அக்காலங்களில் மறுமணம், பெண்களுக்கு வாய்ப்பு இருந்தது. ஏழு வயது மகன் இருந்தும் ஓர் ஏழைப் பெண்ணால் மறுமணம் செய்து கொள்ள சமூகம் அனுமதி அளித்திருந்தது. (வாழ வழி வேண்டுவதற்காக..........)

2. ஏழைகள் இடுகாடு பயன்படுத்தி வந்திருந்தனர். அதாவது தங்களின் பிணங்களை புதைக்கும் வழக்கம் கொண்டிருந்தனர். பிணங்களை எரியூட்டும் வழக்கம் ஏழைகள் மத்தியில் இல்லை.

3. புத்தருக்கு 'அன்பு மேலிட்ட' அபூர்வ சக்தி இருந்தது. அதன் காரணமாக நிகழவிருந்த ஏழு வயது சிறுவனின் பயத்தை அறிந்து காப்பாற்றினார்.

4. புத்தர் தன்னுடைய புத்த விகாரில் போதுமான உணவு, உடை வைத்திருந்தார்.

5. ஏழு வயதில் கூட துறவியாக 'சமணராக' அனுமதி இருந்தது.

6. பெண்களும் துறவியாகலாம்.

7. சமூகப்பணியில் உள்ளளவர்கள் துறவியாவது வழக்கமாக இருப்பினும், சொந்த சிக்கல்கள் இருப்பவர்களும் துறவியாகி சமூகப்பணியில் ஈடுபட்டனர் போன்ற கருத்துக்களை நாம் பெற இயலுகிறது.



இதே நிகழ்வை அம்பேத்கர் வரையறுக்கும்போது சோபகன் 'சிராவஸ்தி'யைச் சேர்ந்த பறையர். சோபகன் தன்னுடைய தாயின் வயிற்றில் இருந்து பிறக்கும் தருவாயில் தாயார் இறந்து விட்டதாக எண்ணி அவளுடைய கணவன் அவளை இடுகாட்டில் எரிக்கும் பொருட்டு கிடத்தினார். (கவனிக்க, இடுகாட்டில் கர்ப்பிணிப் பெண்கள், முதல் குழந்தைகளின் பிணங்கள் மட்டும் எரியூட்டப்பட்டன) தொடர்ந்து மழை பெய்ததாலும், கனமான காற்று வீசியதாலும் தீ பற்றவில்லை. இயற்கையின் சீற்றம் கடுமையாக இருந்ததால் பிணத்தை பின்னர் எரியூட்டலாம் என்று அவர்கள் அங்கிருந்து அகன்றனர். சோபகனின் தாயார் சோபகனை ஈன்றுவிட்டு மரணமடைந்தார். குழந்தையின் சப்தம் கேட்டு இடுகாட்டின் காவலாளி தன்னுடைய மகன் சுப்பையாவுடன் வளர்த்தான். குழந்தைக்கு சோபகன் என்ற பெயரை சோபகனின் தாயின் சமூகம் விளங்கும் வகையில் இட்டார். சோபகன் ஏழு வயதில் புத்தரை சந்தித்து வணங்குகிறான். தான் புத்தரின் மாணவனாக விரும்புவதாக புத்தரிடம் தெரிவிக்கிறான். உனக்கு ஏழு வயது மட்டுமே ஆகிறது. எனவே நீ உன் தந்தையின் அனுமதி பெற்றுவா என்று புத்தர் கூறுகிறார். சோபகன் தன்னுடைய தந்தையை அழைத்து வந்து புத்தருக்கு வணக்கம் தெரிவிக்கின்றனர். சோபகனின் தந்தையின் வேண்டுகோளின் பேரில் புத்தர் சோபகனை தன்னுடைய மாணவனாக ஏற்றுக் கொள்கிறார். சோபகன் பின்னர் துறவியாகிறார். சுப்பையா (சோபகனின் வளர்ப்புத் தந்தையும், இடுகாட்டின் காவலாளியும் ஆனவரின் மகன்) பின்னர் சோபகனின் அனுமதி பெற்று அவரும் பவுத்த துறவியானார்.

அம்பேத்கரின் வரையறை வால்பொலவின் வரையறையின் நீட்டித்த நுட்பமாக உள்ளது. சோபகனை பாலி மொழி 'ஏழை'யாகவே அணுகுகிறது. ஆனால் அம்பேத்கர் சோபகனை சிராவஸ்தியைச் சேர்ந்த பறையன் என்று குறிப்பிடுகிறார். இடுகாட்டை காவல் செய்யும் சுப்பையாவின் தந்தை, பறையர் சமூகத்தவரின் பொருள் விளங்க 'சோபகனை' வளர்த்த தாகவும் குறிப்



படிப்பகம்

www.padippakam.com

**புத்தருக்கு முன்னர் 'பத்து நிலைகள்' உள்ளன. அவைகளின் மிக உயர்ந்த நிலை 'தேரா' எனப்படுகிறது. தேரா என்பது ஈனயானப் பிரிவின் மிகவும் உயர்ந்த நிலை. போதிசத்துவர் என்பது மகாயானப்பிரிவின் மிக உயர்ந்த நிலை. அதாவது பத்தாவது நிலையை தேரா மற்றும் போதிசத்துவர் என்று முறையே ஈனயானமும் மகாயானமும் குறிப்பிடுகின்றன.**

பிடுகிறார். (இடுகாட்டை காவல் செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை இன்றைக்கு வெட்டியான் என்று கூறும் வழக்கம் உள்ளது) அம்பேத்கர் பறையர் சமூகத்தினும் மேம்பட்ட சமூகமாகவே வெட்டியான் சமூகம் இருந்துள்ளதாக பதிவு செய்கிறார்

1. ஏழுவயதே ஆகியிருந்ததால் புத்தரின் மாணவராக அவனின் பெற்றோர் அனுமதி வேண்டும் என்பதில் புத்தர் விதி மேற்கொண்டிருந்தார்.

2. சிராவஸ்தியில் வரை பறையர் சமூகத்தவர் வாழ்ந்து வந்துள்ளனர்.

3. பறையர், வெட்டியான் சமூகத்தினரிடையே கொடுத்தல் மற்றும் கொள்ளல் உறவு இருந்து வந்திருக்கிறது.

4. புத்தருக்கு முன்னர் 'பத்து நிலைகள்' உள்ளன. அவைகளின் மிக உயர்ந்த நிலை 'தேரா' எனப்படுகிறது. தேரா என்பது ஈனயானப் பிரிவின் மிகவும் உயர்ந்த நிலை. போதிசத்துவர் என்பது மகாயானப்பிரிவின் மிக உயர்ந்த நிலை. அதாவது பத்தாவது நிலையை தேரா மற்றும் போதிசத்துவர் என்று முறையே ஈனயானமும் மகாயானமும் குறிப்பிடுகின்றன.

5. சோபகனை தேரா என்ற உயர்ந்த நிலைக்கு புத்தர் உயர்த்தியதாக அம்பேத்கர் குறிப்பிடுகிறார்.

6. மகாயானம் என்ற பிரிவு 'சமஸ்கிருத' ஆளுமையால்தான் வந்திருக்க வேண்டும் என்பது அம்பேத்கரின் கூற்று.

7. புத்தர் காலத்தில் ஈனயானம், மகாயானம் என்ற பிரிவுகள் இல்லை. எனவே மகாயானம் என்ற பிரிவு பூர்வகுடிகள் அல்லாதோர் பவுத்தத்தில் சேர்ந்த பிறகே 'அவர்களின்' வசதிக்காக ஏற்படுத்தப்பட்டதாகவே கணக்கிட முடிகிறது.

8. பழங்குடிகள் அல்லாதோர் பவுத்தம் பெருகியிருந்த காரணத்தால், புத்தரின் மீது மேம்சக்திகளைப் பொருத்தி அவைகளை சரியென ஏற்றுக்கொண்டவர்களை மகாயான பவுத்தர்கள் என்றும், புத்தரை மனிதனாகவே உணர்ந்த பழங்குடிகளை ஈனர்கள் என்றும் அவரின் பவுத்த வழிமுறையை ஈனயானம் என்றும் குறிப்பிட்டன.

9. அங்கஹீனம், ஈனப்பிறவி, ஈனச்செயல், மானம், ஈனம் உண்டா போன்ற வழக்குச் சொற்களும் இந்த முடிவை உறுதிப்படுத்துகின்றன.

10. சோபகன் என்பது பறையர்களின் சமூகச் சொல்லாக, பறையர்களின் குடிச்சொல்லாக இருந்ததாக அம்பேத்கர் பதிவு செய்கிறார்.

11. சுப்பையா என்பது வெட்டியான் தொழில் செய்பவர்களின் பெயராகவும் இருந்து வந்துள்ளது.

12. உட்சாதிப்பிரிவில் சுப்பையா வெட்டியான் மேம்பட்டு இருந்தாலும், சோபகப் பறையன் முதலில் புத்தரின் மாணவனாகி தேரா என்ற உயர்நிலையை அடைந்துவிட்டதால், சுப்பையாவை சங்கத்தில் நுழைய அனுமதி அளிக்கும் மேம்பட்ட இடத்தைப் பெற்றார்.

13. சங்கம், மேம்பட்ட சமூகம் என்பது என்று எதையும் அங்கீகரிக்காமல், பவுத்தத்தில் மேம்பட்ட நிலையே சரியான அளவுகோலாகக் கொண்டிருந்தது சங்கமானது ஜனநாயக அமைப்பாக செயல்பட்டதைக் காட்டுகிறது.

14. தேராவின் அடுத்த உயர்நிலை புத்தர். புத்தரின் நிலவரை அனைவரும் செல்ல வாய்ப்பிருந்தது சங்கத்தின் ஜனநாயகத் தன்மையை நிருவுகிறது.

15. சங்கம் நாட்டில் ஏற்கனவே நிலவி வந்த வழக்கு முறையான சாதி முறையை முழுமையாக புறக்கணித்தது.

16. வெட்டியான் என்பது பறையர்களின் ஒரு பிரிவாகவே பார்க்கப்படுகிறது.

17. பவுத்த துறவில் புத்தர் உட்பட மக்கள் நலம்பெற இடுகாடுவரை சென்று மக்களுக்கு வேண்டுவன செய்துள்ளனர். இது இன்றைய பவுத்த துறவிகளிடம் இந்தியாவில் காணப்படவில்லை.

டாக்டர் வால்பொல, சோபகனை ஏழையாக மட்டுமே பார்க்கின்றார். அம்பேத்கர் சோபகனை ஏழை என்பதையும் தாண்டி, அன்றைக்கு சமூகத்தில் சாதி என்பதனால் நிகழ்த்தப்பட்ட பிரிவுகளையும் அதன் மூலம் தரப்பட்ட மனித சமூகத்தின் மீது தொடுக்கப்பட்ட கொடுமைகளையும் பதிவு செய்துள்ளார். புத்தரை வால்பொலவால் ஏழைகளுக்கு உதவும் அரியவராகவே பார்க்க இயலுகிறது. சாதி முறைக்கு எதிராக சங்கத்தை முற்போக்கு அமைப்பாக நடத்தியதை அம்பேத்கர் மட்டுமே புரிந்து பதிவு செய்ய இயன்றிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் இன்றைக்கும் ஓர் அமைப்பில் தன் அடையாளத்துடன் இணைந்து செயலாற்றுவது இயலாததாக உள்ளபோது சோபகனை அம்பேத்கர் புத்தர் காலத்து சங்கத்தின் துறவி மற்றும் தேரா என்ற மிக உயர்ந்த நிலையை அடைந்தவர் என்ற பதிவின் மூலம் புத்தரின் போர்க் குணத்தை நிருவியுள்ளார்.

பவுத்தம் தரும் அன்பை மட்டுமே பதிவு செய்யத் தெரிந்த வரலாற்று ஆசிரியர்கள் இடையில் புத்தரின் சமூக கருத்துகளை பதிவு செய்ததன் மூலமாக, ஒடுக்கப்பட்ட சமூகம் உணர வேண்டிய அமைப்பாக சங்கம் இருந்ததை அம்பேத்கர் பதிவு செய்துள்ளார்.

சோபகனின் மீது வீசப்பட்ட இருகோணப் பார்வை பவுத்தத்தில் அன்பையும், பவுத்தத்தில் சமூக அக்கறையையும் வெளிப்படுத்துகிறது. சமூகம் என்பதில் அன்பும் ஓர் உட்கூறு என்பதால் சமூகப் பார்வையின் வெளிச்சமே சோபகனை அவசியமான பதிவாக அம்பேத்கர் நிருவுகிறார்

சோபகனின் துறவு கால வாழ்க்கை, அவர் தன் காலத்தில் புத்தரிடம் செய்த கருத்து ஆய்வு ஆகியன வருங்கட்டுரையில்.

■



படிப்பகம்

www.padippakam.com

மெய்யான போராளி

## 5

## வரலாற்றை மொழிதல்



# இளையபெருமாள்

(1924-2005)

பெரியவர் என்றும் LEP என்றும் தலித் மக்களால் புன்போடு அழைக்கப்பட்ட எல். இளையபெருமாள் புவர்கள் கடந் செப்டம்பர் மாதம் 7-ஆம் தேதி தன் ஊரான காட்டும ன்னார்குடியில் மரணம் அடைந்தார். தம்பரம் பகுதியை சுற்றிலும் உள்ள 100-க்கும் மேற்பட்ட ராமங்களிலிருந்து மக்கள் தங்கள் சொந்த வீட்டுத் துயர மென பங்கெடுத்துச் சென்றதாக அறிந்தேன். தென் ஆற் ாடுப் பகுதி தலித் மக்களுக்காக அவர் நடத்திய பாராட்டங்கள், அதன் வழியாக ஈட்டிய உரிமைகள் ண்ணற்றவை. திராவிட இயக்க பின்னணியோடும் இடதுசாரிப் பார்வையோடும் இணக்கமுள்ள இளை ஞர்கள் பலருக்கும் அவர் மீதிருந்த விமர்சனங்கள் என்னை யும் பீடித்திருந்தது. காங்கிரஸ், ஆன்மீகம் எனும் அடை யாளங்களோடு தொடர்புடையதாலேயே அத்தகு தலித்துகளை "சோரம் போனவர்"களாக கருத பழக்கி யிருக்கிறது நமது சூழல். ஆனால் தென்னாற்காடு பகுதி தலித் இளைஞர்களோடு தங்க நேர்ந்தபோதுதான் அவரின் அரசியல் நடவடிக்கைகளை அறிய நேர்ந்தது. கட்சி களை, கொள்கைகளை கடந்து அவர் மீது அம்மக்கள் கொண்டுள்ள மதிப்பினை கண்டபின்பு என் எண்ணங் களை மாற்றிக் கொண்டேன். இன்றைக்கு தலித் இயக்கங் கள் அரசியல்தளத்தில் அவற்றிற்கேயுரிய பலம் மற்றும் பலவீனங்களோடு முக்கியத்துவம் பெற்று வருகின்றன. இத்தகைய வளர்ச்சி இல்லா காலத்திலிருந்து கூட தலித் துகள் தொடர்ச்சியாக போராடியே வந்துள்ளனர். இத் தகைய போராட்டங்களின் வரலாறு இந்த தலைமுறை தலித் மக்களுக்கேகூட எடுத்துச் சொல்லப்படவில்லை, அம்மக்கள் கடந்த காலங்களில் நம்பிய இயக்கங்களால். அப்படி சொல்லப்படாத வரலாறாகவே இளையபெரு மாளின் பணிகளும் உள்ளன.

1924-ஆம் ஆண்டு பிறந்த இளையபெருமாளின் போராடும் குணம் அவரது இளவயது முதலே தொடங்கி விட்டது. இரண்டாவது மகாயுத்தத்தின்போது ராணுவத் தில் தற்காலிக சிவிலியனாக பணியாற்றியபோது கூட அவரால் அங்கும் சாதிக்கு எதிராக போராட முடிந்திருக் கிறது. 1946-ஆம் ஆண்டு சனவரி மாதம் உடையூர் என் னும் கிராமத்தைச் சேர்ந்த தலித் ஒருவர் நிலப் பண்ணை யாரால் தாக்கப்பட்டதற்கு எதிராக தனியாக அவர் நடத் திய போராட்டம் அப்பகுதி தலித் மக்களின் கூலியுயர் வுக்கு வழியேற்படுத்தியது. இதுமுதலே அவரின் அரசி யல் வாழ்வு தொடங்கியது என்று சொல்லலாம். 1948-இல் அவர் உறுதிசெய்த கூலித்திட்டம் காட்டு மன்னார்குடி ஒப்பந்தம் எனப்பட்டது. தலித் மக்களுக்கான கூலி மற் றும் நிலம் தொடர்புடைய பிரச்சினைகள் அவரால் தொடர்ந்து எடுக்கப்பட்டு வெற்றியும் ஈட்டப் பட்டுள் ளது. நிலப்பண்ணையார்களும் அரசும் அவரை கம்யூ னிஸ்ட் என்று கருதுமளவுகு இப்போராட்டங்களை நடத்தினார். அப்பகுதியில் உருவான ஆதிதிராவிடர் நல சீர்திருத்த சங்கத்தின் தலைவரான பின்பு கிராமப் பகுதி சார் பிரச்சினையை எடுத்துப் போராடினார். 70-க்கும் மேற்பட்ட ஊர்கள் இச்சங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழி ருந்து போராடின. தாழ்த்தப்பட்ட மக்களுக்கான பொது உரிமைகளை கோருதல், இழிதொழில்களான பறையடித் தல் - செத்த மாடெடுத்தல் கைவிடல், செருப்பணிய, மீசை வைக்க, வீதியில் நடக்க, கல்வி பெற என எண்ணற்ற பிரச்சினைகளுக்காக போராட்டம் நடத்தினார். மறு மலர்ச்சி என்னும் திரைப்படத்தில் பறையடிக்கும் காட்சிக்கு இப்பகுதி திரையரங்கில் எதிர்ப்பு தெரிவிக்கப் பட்டு காட்சிகளே நிறுத்தப்பட்டன. அந்த அளவுக்கு இழிதொழில் கைவிடல் போராட்டத்துக்கு தாக்கம் இன்றுமுண்டு. இதுபோன்ற போராட்டங்களை நடத்திய தலித் இயக்கங்கள் இங்கு ஏராளம். மது ஒழிப்புக்காக இளையபெருமாள் மாநாடு நடத்தியதோடு அதற்காக தாம் சார்ந்திருந்த காங்கிரஸ் இயக்கத்தில் தனியாக தீர் மானம் கொணர்ந்தவர் அவர்.

இத்தகு போராட்டத் தொடர்ச்சிகளை அறிய மறுக்கும் அறிவு ஜீவிகளும், சிற்சில அமைப்புகளும் பறை யடித்தலையும் மது அருந்துதலையும் தலித் கலாச்சார மென பேசுகின்றன. இதனை அவர்கள் மறுபார்வைக்கு உட்படுத்த வேண்டும். தலித்துகளின் பொருளாதார தற் சார்பை உறிஞ்சி ஆளுமையை சிதைக்கும் மதுவை 'கலக' உணர்வுகளுக்கு அடையாளமாக கொள்ள முடியாது.


படிப்பகம்

www.padippakam.com

தன் தரப்பு எதுவும் பாதிக்காத வண்ணம் குடித்து பேசி பிரியும் அறிவுஜீவிகள் ஆதிக்க சாதி,மேட்டுக்குடி வகுப்பினரை நோக்கி இனி இத்தகைய கலகத்தை கொஞ்ச காலத்திற்கு நிகழ்த்தட்டும்.

உண்மையில், தலித் மக்கள் மீதான கலவரங்கள் நீடித்த இடங்களில் எல்லாம் ஆதிக்க சமூகத்தினர் சாரா யப் பின்னணி கொண்டவர்களாக இருந்தமை உண்மை. இத்தகைய அனுபவங்களிலிருந்து தாம் இவைகளை புரிந்து கொள்ள முடியும்.

தலித் இயக்கங்களும், முன்னோடிகளும் தொடக்கம் முதலே கல்வியும் நிலமும் பெற்று மானமிக்க வாழ்வை நிறுவிக் கொள்ளவே போராடி வந்துள்ளன. இளைய பெருமாள் போன்றோரின் வாழ்வியலும் இன்றைக்கு அதையே வழியாக விட்டுச் சென்றிருக்கிறது.

கலவரங்கள் எழும் ஊர்களுக்கு உடனே செல்லு தல், அங்கு பாதிக்கப்பட்ட மக்களை அரசியல் ரீதியாக பாதுகாத்தல் என்று அவரின் வேலைகளை மடமடவென அடுக்கியபடியே செல்லலாம். பரங்கிப்பேட்டை பகுதி யில் இசுலாமியர்களால் 300 தலித் குடும்பங்கள் தாக்கப் பட்டபோது நடந்து சென்றே பேச்சுவார்த்தை நடத்தி யதை சிறப்பாக குறிப்பிடுவார்கள். விழுப்புரம் பெரியச் சேரி எனப்பட்ட பகுதியின் தலித் மக்கள் வாழ் விடங் களை அகற்ற நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டபோது, நேரடியாக இறங்கி இறுதியில் அன்றைய முதல்வரான எம்.ஜி. ஆரையே கீழிறங்கி வரவழைத்தவர் அவர். அப்பகுதியில் அவருக்கு தெரியாத கிராமங்களோ மக்களோ கிடை யாது. இன்றைக்கு இளைஞர்களைக்கூட அன்னார் மகன்தானே என்று அடையாளம் காணுமளவுக்கு நெருக் கம் காட்டி வாழ்ந்தவர். வட மாவட்டங்கள் மட்டுமல்லா மல் தென் மாவட்டங்களின் (மதுரை, திருச்சி, ராமநாத புரம், நெல்லை) கலவரங்களின்போதும் தலித் மக்கள் மீட்புக்காக அதிகம் பங்காற்றியவர் ஆவார். தமிழகத்தில் நடந்த எல்லா கலவரங்களின்போதும் அவர் தலையிட்டு இருக்கிறார்.

சுவாமி சகஜானந்தா, என். சிவராஜ், முனுசாமிப் பிள்ளை, பாபு ஜெகஜீவன்ராம், கக்கன், கே.பி.எஸ். மணி ஆகிய தலைவர்களோடு இயங்கியவர். பல்வேறு மாநாடு களை முன்னின்று நடத்தியிருக்கிறார். 1952 முதல் 15 ஆண்டுகள் வரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவி, 1965 முதல் 5 ஆண்டுகள் அகில இந்திய தீண்டாமை ஒழிப்புக் குழுத் தலைவர், 1979 முதல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர், 1980 முதல் சட்டமன்ற உறுப்பினர் என்று பல் வேறு பொறுப்புகளை வகித்தார். பின்னர் மனித உரிமை பாதுகாப்பு சம்மேளனம், மனித உரிமைக் கட்சி எனும் அமைப்புகளை நடத்தினார். 1985-ஆம் ஆண்டு தமிழகம் அளவில் தமிழகத்தின் பல்வேறு பகுதி தலித் தலைவர் களோடு இணைந்து SCALM எனும் தலித் ஒருங் கிணைப்பிற்கான அமைப்பை தொடங்கியதில் இவருக்கு முக்கிய பங்குண்டு. சகஜானந்தா சுவாமிகளை ஆசிரிய ராகக் கொண்டு வெளியான ஜோதி இதழிற்கு பிற்காலத் தில் இவர் சிறப்பு ஆசிரியராக இருந்திருக்கிறார்.

இத்தனைப் பொறுப்புகளை வகித்தார் என்று சொல்வது அவரைப் பெருமையாக சொல்லும் நோக்கத் தில் அல்ல. மாறாக தலித் மக்களுக்காக அவர் ஏற்படுத்திய பல்வேறு தளங்கள்ளையும், எல்லா தளங்களையுமஒடுக்கப்

- **1952 முதல் 15 ஆண்டுகள் வரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவி.**
- **1965 முதல் 5 ஆண்டுகள் அகில இந்திய தீண்டாமை ஒழிப்புக் குழுத் தலைவர்.**
- **1979 முதல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர்.**
- **1980 முதல் சட்டமன்ற உறுப்பினர்.**
- **மனித உரிமை பாதுகாப்பு சம்மேளனம், மனித உரிமைக் கட்சி ஆகியவற்றின் நிறுவனர்**

பட்ட மக்கள் மீதான அக்கறையிலே செலவிட்டார். என்பதை சுட்டிக்காட்டவுமே சொல்லப்படுகிறது.

தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி, பொருளாதார நிலைகளை கண்டறிவதற்காக மைய அரசு 1965-இல் இளையபெருமாள் தலைமையில் கமிட்டியை அமைத் தது. 1969 சனவரியில் 431 பக்கங்கள் கொண்ட இவ் வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இக்கமிட்டியின் முக்கி யத்துவம் போதுமான அளவு பேசப்படவில்லை. காங்கி ரஸ்காரர் என்று சொல்லப்படும் இவரின் கமிட்டி அறிக்கை அச்சொல்லாடலை மறுக்கிறது. அவ்வறிக்கை யின் முதல் அத்தியாயமே இந்து மதத்திற்கும், சாதியமைப் புக்குமான உறவை குறிப்பிட்டு கடுமையாக சாடவும் செய்கிறது. சமூக சீர்திருத்தத்துக்கு வழிவகுக்காத ஐந் தாண்டு திட்டங்களை அவ்வறிக்கை விமர்சிக்கத் தவற வில்லை.

1970-ஆம் ஆண்டு, கருணாநிதி தலைமையிலான திமுக அரசு, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தை இளையபெருமாள் கமிசன் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே இயற்றியது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் வரலாற்று அறிஞர்களுக்குக் கூட இந்த உண்மை தெரியாமல் போனதுதான் பரிதாபம். இளையபெருமாள் அவர்களின் மனைவி இறந்த 3 மாதங் களுக்குள் அவர் காலமாகிவிட்டார். இன்றைய தலை முறை தலித் அரசியலாளர்கள் அரசியல் ரீதியாக முன் செல்லும்போது இளையபெருமாள் போன்ற முன்னோடி களை - செயற்பாடுகளை அனுபவங்களாக கொள்ளா மல் இருக்க முடியாது.

**(11.9.2005 அன்று மதுரை அம்பேத்கர் படிப்பு வட்டம் ஏற்பாடு செய்திருந்த எல். இளையபெருமாள் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் ச. பசப்பட்டதன் கட்டுரை வடிவம் இது)**



படிப்பகம்

www.padippakam.com

■ சந்திரன்

# கடைசி குடிமகன்

பெயர் : K.R. நாராயணன் ■ பிறந்ததேதி : 27.10.1920 வயது 85 ■ தந்தை : ராமன் வைத்தியன்
மனைவி : உஷா ■ குழந்தைகள் : இரண்டு மகள் ■ படிப்பு : M.A. (ஆங்கில இலக்கியம்) (கேரளா)
B.Sc. (பொருளாதாரம்) (லண்டன்) ■ வகித்த பதவி : இந்தியாவின் முதல் குடிமகன்

நம் தாழ்த்தப்பட்ட மக்கள் திருமிகு. K.R. நாராயணன் அவர் களை இந்திய நாட்டின் உயர்பதவி வகித்த நம் சமூகத்தவர் என்று மட்டுமே அறிகின்றனர். திராவிட கட்சிகள் அரை நூற்றாண்டாக தமிழகத்தில் போராடி இதுவரை பெற்றது அவர்களின் குடும்பத்தினருக்கு மத்திய அமைச்சர் பதவிகள், அதைச் சார்ந்த மத்திய, மாநில உயர் பொறுப்புகள். நம் சமூகத்தைச் சேர்ந்த போராடும் மக்கள் இதுவரை தங்களின் நெருங்கியவர்களாக தமிழ் திராவிடர்களை நம்பி வந்தனர். திராவிட அரசியலில் கர்நாடகம், ஆந்திரா மற்றும் கேரளாவும் அங்கங்கள் என்பதை தமிழ் திராவிடரான கருணாநிதி துவக்கத்திலிருந்தே மவுனமாக பிரியவைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். சில முற்போக்கு இயக்கங்கள் கூட நம் அடுத்த மாநிலங்களை வெளிநாடுகள் போல பிரச்சாரம் செய்து வந்தன. ஆனால், MGR பாணியில் திரைப்படம் மூலமாகவே சென்றடையும் குறுக்குப் பாதையில் திசை தெரியாமல் பயணித்தனர். பாதை குறுக்காக இருந்தாலும், பாதை ரகசியமாக அமைக்கப்பட்டிருந்தாலும், அது என்னவோ வெகுமக்கள் கூடும் முச்சந்தியாகவே பெரும்பாலும் இருந்தது. காரணம், ரகசியமாய் மக்கள் ஹீரோக்கள் கூட்டம் கூட்டமாக பழைய காலச் சாராயக் கடைக்குப் போகும் பெரிய மனிதர்கள் போலவே பயணப்பட்டனர்.



புகழ், பணம், அதிகாரம் அடைய, கிடைக்கும் வழியில் தொடர்வதே புத்திசாலித்தனம் என்பதை தமிழ் திராவிடர்கள் தெரிந்து வைத்திருந்தனர். எல்லா ஹீரோக்களும் இதையே செய்து வந்ததால் திராவிடக் கழகம் வில்லன் இல்லாமல் சமீப காலமாக போரடிக்கிறது. ஏனோ தெரியவில்லை நிஜவாழ்க்கை ஹீரோக்களாக வாழ்பவர்கள் சினிமாவில் வில்லன் வேடம் கிடைத்தாலும் நடிக்கிறார்கள். பணம் கிடைக்கிறது, கொஞ்ச நாட்கள் வில்லனாக நடித்தால் பின்னால் ஹீரோவாக நடிக்க வாய்ப்பு கிடைக்கும் என்பது சமீபகால திரைப்பட வரலாறு. காமெடியன்கள் கூட ஹீரோவாக தொடர்ந்து நடிக்கின்றனர்.

சினிமாவில் எப்படி நடித்தாலும் அரசியலில் ஹீரோவாகவே நடிக்க விரும்புகின்றனர். ராதாரவி சினிமா வில்லன். இன்றைக்கு அரசியல் ஹீரோ. S.S. சந்திரன் சினிமா காமெடியன். இன்றைக்கு குடியரசு தினத்தன்று ஜனாதிபதி மாளிகையில் டீ குடிக்கும் அரசியல்வாதி. ரொம்ப நாளா 'அரசியலுக்கு வரப்போகிறேன்' பன்ச் டயலாக்கை சொல்லிக் கொண்டிருக்கும் ரஜினி.

நான் வேட்டியை மடித்துக் கட்டப்போகிறேன். அரசியலை கலக்கப்போகிறேன். நம்ம விஜயகாந்த். செப்டம்பர் மாதம் வேட்டியை மடித்துக் கட்டிக் கொள்ளப் போறான்னு பார்த்த அன்னிக்கு வந்து, மக்களை கூட்டி நான் சீக்கிரம் வேட்டி வாங்கப் போறேன்னு சொன்னார். அப்புறம் நான் வேட்டி கட்டணும்னா, அதை மடிச்சு வேற கட்டணும்னா, அதுக்கு மேக்கப் மேன் வேணும், டச்சப் பாய் வேணும், இதையெல்லாம் கேமரா முன்னாடிதான் செய்வேன்னு வேற சொல்லிட்டார். மக்களும், யாருப்பா உங்க மேக்கப் மேன்னு கேட்டால், நா இப்ப அரசியலுக்கு வந்துட்டேன். இனி அரசியல்வாதிகதான் என்னுடைய மேக்கப் மேன்னு சொல்றார். நான் வேட்டியை மடித்துக் கட்டப் போறேன். அதுக்கு கருணாநிதி உதவணும். இல்லாட்டி துண்டை உதறி தோளில் போட்டுக்கிட்டு ஜெயலலிதாகிட்ட போவேன்னு சொல்றார். அங்க போகணும்னா உங்ககிட்டே துண்டே இருக்கக் கூடாதுங்களேன்னு கேட்டா, நான் ஹீரோ, பேண்ட், சட்டை கூட போட்டுக்குவேன். அதுக்கு துண்டு வேணாம்னு சொல்றார்.



படிப்பகம்

www.padippakam.com

திகில் படங்களில் துவக்கத்தில் வில்லன்போலத் தெரியும் ஒருவர் படம் போகப்போக நம்மை குழப்புவார். மிகவும் அப்பாவியாக கடைசியில் நமக்கு புரிவார். மிகவும் நல்லவராக ஒருவர் தேவையில்லாமல் மெதுவாகப் பேசுவார். கடைசியில் அவர்தான் வில்லன்கள் கூட்டத்திற்கு தலைவராக இருப்பார். படம் முடியும்போது யார் வில்லன், யார் நல்லவர் என்பது கடைசியில் கண்டிப்பாக சினிமாவில் தெரிந்து விடும்.

ஏனோ தெரியவில்லை, சினிமாவில் இருந்து அரசியலுக்கு வரும்போதே ஹீரோவாக நுழைகிறார்கள். பழைய ஹீரோக்கள் பேசிய டயலாக்கை மீண்டும் மீண்டும் பேசுகின்றனர். இடையில் அழுகின்றனர். ஒருவரைப் பற்றி, நீதான் வில்லன். நான்தான் ஹீரோ என்று மாற்றி மாற்றி குற்றம் சுமத்திக் கொள்கின்றனர். நமக்கு கடைசி வரைக்கும் எல்லோரும் வில்லன்கள் போலவே தென்படுகின்றனர். எதிர்க்கட்சிகள் மட்டும் நாங்கள் ஆட்சிக்கு வந்தால், நாங்கள் ஹீரோ என்பது உங்களுக்குப் புரியும் என்பார்கள்.

யார் செத்தாலும் அவர்களை சொந்தம் கொண்டாடி அழுது தீர்க்கும் கருணாநிதி பெரியதாய் ஒன்றும் சொல்லக் காணோம். K.R. நாராயணன் இறந்தப்ப 'ஒரு திராவிடர்' நம்மை விட்டுச் சென்று விட்டார். அவரின் மறைவு திராவிட இனத்திற்கு இழப்பு என்றெல்லாம் கருணாநிதி அறிவிப்பார் என நம்பினோம். ஆனால் பாருங்கள், K.R. நாராயணன் ஒரு திராவிடர் என் பதைவிட தலித் என்பதே பலருக்கு மேலோங்கிய எண்ண மாக இருந்தது. தலித் ஆர்வலர்கள் இவரை 'அம்பேத்கரின் முதன்மை மாணவர்' என்றெல்லாம் புகழ்ந்து தள்ளினார்கள். நமக்கு தோன்றும் சந்தேகமெல்லாம் :K.R. நாராயணன் அம்பேத்கரின் முதன்மை மாணவர் என்பதை தன்னுடைய 80 வயதிற்கப்பால் மட்டுமே நிருவ இயன்றிருக்கிறது என்பது தான்.

| ஆண்டு | அமைப்பு |
|---|---|
| 1943 : | திருவாங்கூர் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளர் |
| 1943 : | சென்னை ஹிந்து பத்திரிக்கையின் செய்தியாளர் |
| 1944-45 : | பம்பாய் டைம்ஸ் ஆஃப் இந்தியாவின் செய்தியாளர் |
| 1945-48 : | சோசியல் வெல்பேர் பத்திரிக்கையின் லண்டன் செய்தி தொடர்பாளர் (இப்பத்திரிக்கை மு.ஆ. முன்ஷியால் நடத்தப்பட்டது) |
| 1949 : | IFS பணி (ரங்கூன், டோக்கியோ, லண்டன், கான்பெரா, ஹானோய் ஆகியவற்றின் இந்திய தூதுவர்) |
| 1954-55 : | தில்லி ஸ்கூல் ஆப் எகனாமிக்சின் விரிவுரையாளர் |
| 1967-69 : | தாய்லாந்தின் இந்திய தூதுவர் |
| 1973-75 : | துருக்கியின் இந்திய தூதுவர் |
| 1976-78 : | சீனக்குடியரசின் இந்திய தூதுவர் |
| 1976 : | இந்திய அமைச்சகத்தில் வெளியுறவுத்துறை செயலர் |
| 1978-80 : | ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் |
| 1980-84 : | அமெரிக்காவிற்கு இந்திய தூதுவர் (அரசியல் பதவி) |
| 1984 : | கேரளா ஒட்டப்பாளையம் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் |
| 1989 : | கேரளா ஒட்டப்பாளையம் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் |
| 1991 : | கேரளா ஒட்டப்பாளையம் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் |
| 1985 : | மத்திய அமைச்சர் (மாநில திட்ட அமைப்பு) |
| 1985-86 : | வெளியுறவுத் துறை அமைச்சர் (அறிவியல், அணுசக்தி, விண்வெளி, மின்னணுவியல், கடல் அபிவிருத்தித் துறைகள்) |
| 1985-86 : | துணைத்தலைவர் (விஞ்ஞானம் மற்றும் ஆராய்ச்சிக் கழகம்) |
| .1992-97 : | இந்திய அரசின் துணை ஜனாதிபதி |
| 1979 : | உறுப்பினர், ஐக்கிய நாட்டின் பொது அவை |
| 1985 : | உறுப்பினர்,ஐக்கிய நாட்டின் பாதுக்காப்புக் குழு |
| 1986 : | உறுப்பினர், அணிசேரா நாடுகளின் மாநாடு |

**இதைத்தவிர**

- ஜவஹர்லால் நேரு விருதுக்கான தலைவர்/ நீதிபதி
- இந்திரா காந்தி அமைதி விருது. தலைவர்/ நீதிபதி
- ராஜீவ் காந்தி சபவனா விருது தலைவர்/ நீதிபதி
- காந்தி விருது (குஷ்ட நோயாளிகளின் விடிவிற்காக ஆய்வு செய்யும் குழுவின் தலைவர்/ நீதிபதி
- இந்திராகாந்தி பர்யவரன் புரஸ்கார் விருது தலைவர்/நீதிபதி
- டாக்டர் அம்பேத்கர் விருது / மைய அரசு தலைவர்/நீதிபதி
- டாக்டர் அம்பேத்கர் விருது/சர்வதேசிய அமைப்பு - தலைவர்/நீதிபதி
- மு.னு. பிர்லா விருது/இந்தியப் பண்பாடு தலைவர்/நீதிபதி
- மக்கள் அமைதி மற்றும் இணக்க சம்மந்தப்பட்ட பல விருதுகள் - தலைவர்/நீதிபதி

இதைத் தவிர இவர் இந்தியாவும் அமெரிக்காவு புரிந்து கொள்ளுதல், பிம்பங்களும் உள் ஊடுருவல்களும். அணி சேரா நாடுகளின் தற்போதைய சர்வதேசிய உறவுக (இன்னொரு வருடன் இணைந்து எழுதியது) என்று மூன்று நூல்களை எழுதியுள்ளார்.

ஆயிரக்கணக்கான கட்டுரைகள் பல்வேறு தளங்களில் எழுதியுள்ளார். இவர் 20க்கும் மேற்பட்ட டாக்டர் பட்டங்கள் பெற்றுள்ளார். நூற்றுக்கும் மேற்பட்ட விருதுகள் வாங்கியுள் ளார்.

இவரின் மனைவி திருமதி உஷா நாராயணன் அவர்கள் தில்லி பல்கலைக்கழகத்தில் சமூகக் கல்வியில் முது கலைப் பட்டம் பெற்றவர். பெண்கள், குழந்தைகளுக்கு அமைப்பின் மூலமாக பணி செய்கிறவர்.

'கருணா' என்ற அமைப்பின் தலைவராக அம்மையார் இருந்தார் (1985-1992). உழைக்கும் பெண்கள் வீடு மற்றும் பல பெண்கள் அமைப்பில் அம்மையார் பணியாற்றுகிறார்.

விவசாயம், தோட்டமிடல், பழத்தோட்டம் போன்றவற்றில் அம்மையார் கவனம் செலுத்துகிறார். பர்மிய சிறுகதை


படிப்பகம்

www.padippakam.com

களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்துள்ளார். (இவைகள் Frontline பத்திரிக்கையில் வெளிவந்துள்ளன.) பல வருடங்கள் அகில இந்திய வானொலியில் பதவி வகித்தவர். செய்திகள் மொழி பெயர்ப்பு பிரிவில் பணியாற்றியவர்.

இந்த தகவல் எல்லாம் திருமிகு K.R. நாராயணன் அவர் களைப் பற்றி நமக்கு கிடைக்கும் 'சிறப்பு தரும்' தகவல்களின் ஒரு சதவீதமே. ஒரு நாளைக்கு 8 மணி கண் டிப்பாய் உழைப்பவர். மாபெரும் சிந்தனையாளர்.

இவரைப் பார்த்து திராவிடத் தமிழர்கள், ஒரு தலித்திற்கு ஜனாதிபதி பதவி தந்தோம் நாங்கள் என்கிறார்கள். இந்தியா வில் சுவாலாக உள்ள பல்வேறு பதவிகளை வகித்த ஒரு போராளியின் வீரச் செயலுக்குக் கூட, வசனம் நான்தான் எழுதினேன் என்று புலம்பும் கருணாநிதிகள்.

எவ்வித உழைப்பும் காட்டாமல், நாட்டில் சாதிக்குக் காரணம் தலித்துகளின் சாதி உணர்வு என்று கட்சி துவங்கி யிருக்கும் விஜயகாந்திற்கு முதல்வர் அவா.

உலக மக்களின் பல்வேறு தளங்களில் அயராது பணி யாற்றிய ஓர் அரிய மனிதரின் மறைவை இந்த நாடு தன் னுடைய சாதி வெறுப்பால் புறக்கணித்துவிட்டது. இழப்பிற்குக் கூட வாய்விட்டு அழாமல் ஏதும் இழக்காதது போல உள்ள இந்திய நாட்டு மக்கள்.

K.R. நாராயணன் அவர்கள்

1. பாரீஸ் நகரத்து 'பண்பாட்டு குழுமம்' அமைப்பின் உறுப்பினர்.
2. லண்டன் ஸ்கூல் ஆப் எகனாமிக்சின் கவுரவ உறுப்பினர்
3. JNU மேப்பட விஞ்ஞானம் மற்றும் ஆய்வு உறுப்பினர்
4. பெங்களூர், ஜவஹர்லால் நேரு மையத்தின் உறுப்பினர்
5. வளர்கல்வி அமைப்பின் கவுரவ உறுப்பினர்
6. 1970-72 வரை அனிசேரா நாடுகளின் செயல் ஆய்வு உறுப்பினர்
7. உலக ராஜதந்திரி விருதினை 1998ல் நியூயார்க்கில் பெற்றார்
8. காஸா நாடு டாக்டர் பட்டம் வழங்கியது
9. டோல்டா, USA டாக்டர் பட்டம் வழங்கியது
10. காஸா நாடு சட்டத்தில் உயர் டாக்டர் பட்டம் வழங்கியது.
11. ஆஸ்திரேலியா நாடு : K.R. நாராயணன் சொற்பொழிவு என்ற அமைப்பை தன் நாட்டில் நிருவியுள்ளது.
12. துருக்கி, பால்கெண்ட் பல்கலைக் கழகம் பொருளாதார அரசியலில் டாக்டர் பட்டம் வழங்கியது.
13. கைர்கிஷ் குடியரசு மானுடவியலில் பட்டம் வழங்கியது
14. பெரு நாடு டாக்டர் பட்டம் வழங்கியது
15. தில்லி பல்கலைக்கழகத்தின் கவுரவ பேராசிரியர்
16. தில்லி பல்கலைக் கழகம் - துணை வேந்தர்
17. மத்திய பல்கலைக் கழகம் - துணைவேந்தர்
18. தில்லி பல்கலைக் கழகம் - வேந்தர்
19. பஞ்சாப் பல்கலைக் கழகம் - வேந்தர்
20. பாண்டிச்சேரி பல்கலைக் கழகம் - வேந்தர்
21. அஸ்ஸாம் பல்கலைக் கழகம் - வேந்தர்
22. வடகிழக்கு மலை பல்கலைக்கழகம் - வேந்தர்
23. போபால் பல்கலைக் கழகம் - வேந்தர்
24. மெட்ராஸ் பல்கலைக்கழகம் - வேந்தர்
25. பெரு, 26. நேபால், 27. போர்ச்சுகல் ,
28. லக்ஸம்பர்க், 29. துருக்கி நாடுகளின் சிறப்பு அழைப்பாளர் மற்றும் பல்கலைக் கழகங்களின் சிறப்புப் பிரதிநிதி
30. இந்தியாவின் குடியரசுத் தலைவர் இந்தப் பதவிகளுக் கெல்லாம், கருணாநிதியோ மற்ற வருங்கால முதல்வர்கள் என்ற போதையில் உள்ளவர்கள் நினைத்துக்கூட பார்க்கவிய லாது. அங்கு அறிவும் உழைப்பும் உண்மையாக தேவைப்படு கிறது. மாறாக தலித்துகள் இடஒதுக்கீட்டில் பதவிக்கு வந்து விடு கின்றனர் என்ற அங்கலாய்ப்பு மட்டும் உண்டு.

இட ஒதுக்கீட்டின் மூலம் வராதவர்கள் அமைச்சர் பதவி பெற்றுவிட்டால் இவ்வளவு சிரமங்கள் பெற்று உழைத்ததாய் அம்பேத்கர் ஒருவரைத் தவிர வேறு ஒருவர் கூட இல்லை என்பது இந்திய வரலாறு. ம்... சந்தோசப்பட்டுக் கொள்ளலாம். நமது K.R. நாராயணன் அவர்களை அம்பேத்கரின் முதன்மை மாணவர் என்று.

இந்தக் கட்டுரை சொல்லும் வெளிப்புற உண்மை ஒருபுறம். உட்புற நிகழ்வு என்ன? இந்த நாட்டில் தலித்துகள் உயர்ந்த தெல்லாம் தங்கள் மக்களை அணி திரட்டி காண் பித்ததால் மட்டுமே. K.R. நாராயணனவர்கள் அவ்விதம் மக் களை அணி திரட்டியதில்லை. பின் அவரால் எவ்விதம் இவ் வளவு உயரம் பயணிக்க இயன்றது? நான் சில அரசு உயர் அதிகாரிகளை கண்டிருக்கிறேன். மக்கள் பணி அவர்கள் செய் கின்றனர் என்பதால் மட்டுமே அவர்கள் காத்திருக்க வைக்கப் பட்டார்கள். தலித்துக்கள் பல ஆண்டுகளாய் ரேசன் கடைகளில் உதவி பெறும் மையங்களில் காத்திருப்பது போல.

மாறாக, K.R. நாராயணன் அவர்கள் எவ்வித அரசியல் இடையூறு இல்லாமல் இவ்வளவு உயரத்திற்கு சென்றதன் கார ணம் என்னவாக இருக்கும்

■ திராவிடம் என்ற பகுதி அரசியல் இல்லாமல் காங்கிரசு என்ற தேசிய அரசியலில் அவர் பங்கு கொண்டமையா?

■ உயருங் காலங்களில் வெளிப்படையாக தலித் அரசி யல் பேசாமல் பதவிகளை மட்டும் வகித்ததாலா?

■ தன் பயணத்தில் திணிக்கப்பட்ட முரண்களை மன சமாதானம் செய்து கொண்டதாலா?

இதுபோன்ற கேள்விகள் எவ்வளவு அவசியமோ அதைவிட கூடுதல் அவசியம் வாய்ந்த கேள்வி ஒன்று உண்டு.

K.R. நாராயணன் 80 வயதில் அம்பேத்கரின் முதன்மை மாணவராக மாறியதுபோல, இன்று தங்களை தயார் செய்து கொள்ளத்தான் தலித் இயக்கங்கள் சில யுக்திகளை கையாள் கின்றன. இவர்களும் சில ஆண்டுகள் கழித்து தலித்துகளின் முழுமையான தேவையை நோக்கி செயலாற்றுவார்கள் என் பதில் நம்பிக்கை உள்ளது.

K.R. நாராயணின் 80 ஆண்டு கால 'ஜனாதிபதிக்கு முந்தைய' பயணத்தின் மீது எவ்வித வினாக்களையும் வைக் கத் துணியாத தலித் சிந்தனையாளர்கள், இன்றைய தலித் இயக்கங்களின் போக்கின் மீது கடுமையான விமர்சனம் வைப்பது நாளை இந்த தலித் அமைப்புகள் அரசியல் பலம் ஓங்கிப் பெற்றவுடன் போற்றப்படும் என்பதையே காட்டுகிறது.

இதுவே இந்தியாவின் முதல் குடிமகனின் வாழ்க்கை கடைசி குடிமகனுக்கு தரும் பாடமாக உள்ளது. ■



படிப்பகம்

www.padippakam.com

# பெரியார் வழிவந்த கொளத்தூர் மணி சாதிவெறிக்குத் துணை போகலாமா?

தந்தை பெரியார் தி.க. அமைப்பினர் சென்ற 20.8.2005 அன்றைக்கு கடலூரில் பகுத்தறிவுப் பிரச்சார பொதுக்கூட்டம் நடத்தினர். மார்க்சிய-லெனினியக் கொள்கை வழிநின்று செயல்பட்டுவரும் எனக்கு இக்கூட்டம் நடத்தப்பட்ட விதம் பல சந்தேகங்களை எழுப்பியுள்ளது. கொளத்தூர் மணி சிறப்பு பேச்சாளராக கலந்து கொண்ட இக்கூட்டம் முழுக்க முழுக்க பாட்டாளி மக்கள் கட்சியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுதான் பலத்த சந்தேகத்தை எழுப்பியது. பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன் மற்றும் அவரது ஆதரவாளர்கள்தான் இக்கூட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர். திரைப்பட இயக்குநர் சீமான் பேசும்போது மருத்துவர் ராமதாசை பாராட்டிப் பேசினார். பெரியார், காமராஜர் போன்ற தலைவர்களைப் பின்பற்றி மருத்துவர் ராமதாசு உழைத்து வருவதாக புகழ்ந்தார். மருத்துவர் ராமதாசு தலைமையில் நடைபெற்ற 'வன்னியர் சங்கம்' போராட்டத்தின்போது கடலூர் மாவட்டத்தின் பல தலித் சேரிகள் எரிக்கப்பட்டன. இதில் மிகவும் பாதிப்புக்குள்ளானது எங்கள் சேரிதான். எங்களின் வீடுகள் அனைத்தும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது இன்றைக்கும் எங்களின் நெஞ்சங்களில் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கிறது. விடுதலைச் சிறுத்தைகள் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன் சிதம்பரம் பாராளுமன்ற தேர்தலில் நின்றபோது மருத்துவர் ராமதாசு ஆட்கள் தலித்துகள் மீது ஏவிய அடக்குமுறையை இந்த நாடே அறியும்..

இக்கூட்டத்தில் வேல்முருகன் கலந்துகெண்டு பேசினார். வேல்முருகன் தனது ஆதரவாளர்களுக்கு கருப்பு சட்டை வாங்கிக் கொடுத்து அணியச் செய்து நூற்றுக் கணக்கான பா.ம.க. வினரை கூட்டத்திற்கு அழைத்து வந்திருந்தார். இதில் சிலர் நெற்றியில் விபூதி பூசிக் கொண்டு கறுப்புச் சட்டையை அணிந்திருந்தனர். பலர் தாங்கள் ஏற்கனவே அணிந்திருந்த மஞ்சள் சட்டைக்கு மேலேயே கருப்புச் சட்டையை அணிந்திருந்தனர்.

வேல்முருகன் மற்றும் அவரது ஆட்கள் சாதிவெறியோடு செயல்பட்டு வருபவர்கள் என்பதை கடலூர் மாவட்ட தலித்துகள் நன்கு அறிவர். பா.ம.கவில் மிகுந்த செல்வாக்கு உடைய வேல்முருகன் தலித்துகளுக்கு எதிராக தொடர்ந்து செயல்பட்டு வருபவர். இதற்கு அண்மைக்கால உதாரணம், கடலூர் முதுநகர் பகுதிக்கு அருகேயுள்ள ராணி காலனியில் தலித்துகளின் வீடுகளைக் கொளுத்திய வழக்கில் வேல்முருகன் முக்கிய குற்றவாளி என்பது குறிப்பிடத்தக்கது. இப்படியான சாதி வெறியர்களோடு கைகோர்க்க வேண்டிய அவசியம் கொளத்தூர் மணி போன்றவர்களுக்கு ஏன் ஏற்பட்டது.

வழக்கமாக பெரியார் இயக்க கூட்டங்கள் மிகவும் எளிமையாக நடைபெறும். ஆனால் இக்கூட்டத்திற்கு கடலூர் நகர் முழுவதும் வண்ண வண்ண டிஜிட்டல் பேனர்கள் வைக்கப்பட்டிருந்தன. பெரிய அரசியல் கட்சித் தலைவர்களுக்கு கொடுக்கப்படும் மரியாதை கொளத்தூர் மணிக்கு அளிக்கப்பட்டது. கடலூர் புறநகரில் சொகுசு பங்களாவில் கொளத்தூர் மணி தங்க வைக்கப்பட்டார். கொளத்தூர் மணி பயணம் செய்த காருக்கு முன்னும் பின்னும் ஏராளமான வாகனங்கள் அணிவகுக்க ஒரு அரசியல் தலைவருக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இறுதி காலத்தில் மூத்திர சட்டியைத் தூக்கிக் கொண்டு சாதி ஒழிப்புக்கு உழைத்த பெரியாரின் வழித் தோன்றல்கள் செய்யும் செயலா இது?

கூட்டத்தில் பங்கேற்ற பேச்சாளர்களில் ஒருவர்கூட தலித் இல்லை என்பது கேள்விக்குரியது. இப்படி வெளிப்படையாக தலித்துகளுக்கு எதிராக தந்தை பெரியார் தி.க. கூட்டம் நடத்தப்பட்டது.

25.8.2005 அன்று இதுபற்றி தந்தை பெரியார் தி.க. தலைவர் கொளத்தூர் மணி அவர்களுக்கு கடிதம் எழுதியிருந்தேன். இதுநாள்வரை பதில் இல்லை என்பதால் இதனை தங்கள் இதழில் வெளியிட வேண்டுகிறேன். சாதிவெறிக்கு துணைபுரியும் தந்தை பெரியார் தி.க. செயல்பாடுகளை அம்பலப்படுத்த வேண்டுகிறேன்.

தோழமையுடன்

**கார்வேந்தன்**
முதன்மைச் சாலை
ஆலப்பாக்கம் காலனி
கடலூர் மாவட்டம்
3.10.2005



படிப்பகம்

www.padippakam.com



# 6 மாறு வேசம்

■ சந்திரன்

கார் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. "நீங்க உங்களை சாமின்னு உயர்த்திச் சொல்லிக்கிறீங்க. இல்லாட்டி கட்டைன்னு கேவலமாக சொல்கிறீர்கள். என்னைப் போல மனுசனா எப்ப மாறப்போறீங்களோ..." இந்த எள்ளின் விமர்சனம் முகிலுக்கு மிகவும் எரிச்சல் உண்டாக்கியது. வேறென்ன அவரால் செய்ய முடியும்?

மனிதனுக்கு இளமைப் பருவத்தில் அவனுக்கு கை, கால், இதயம் போன்ற உறுப்புகள் அவனுடைய உடம்பில் இருப்பது தெரியாது. அவ்வளவு சீராக இயங்கும். முதுமைப் பருவம் வந்தவுடன் கை வலிக்கும், கால் குடச்சல் தரும், கழுத்து சதையால் பருத்து கழலை நோய்க்கு உட்படும். உடலில் இவ்வளவு உறுப்புகள் உள்ளன, அவைகளுக்கு இவ்வளவு தேவை கவனிப்பு என்பதே முதுமையில்தான் மனிதனுக்கு புலப்படும். வலி அற்ற அந்த இளமைப் பருவம் சுகமானது. வலியால் தன்னை வெளிப்படுத்த தன் இருப்பை உணர்த்தும் அவயங்கள் நிறைந்த முதுமை பொறுப்பு நிறைந்தது.

முகில், எள் மற்றும் சாமியார் சென்று கொண்டிருக்கின்ற கார் இளமையாய் விரைந்தது. மூவரும் ஏகத்துக்குப் பேசிக் கொண்டு சென்றனர்.

"சார், உங்க முகத்தில் ஒரு தேஜஸ் தெரிகிறது. உங்களிட ' சரசுவதியும் லட்சுமியும் பரிபூரணமாய் குடி கொண்டுள்ளது என் சக்திக்குப் புலப்படுகிறது" என்று சாமியார் முகிலைப் பார்த்துப் பரவசப்பட்டார்.

"பகவான் படைப்பில் மனிதன் மிகவும் அபூர்வமானவன். அவனுடைய இடுப்புக்கு மேலே உள்ள அவயங்கள் யாவும் புனிதமானவை. வாய் எச்சில் உடையதாக இருந்தாலும், அது இறைவனின் திருப்பெயரை உச்சரிப்பதால் அதுவும் புனிதமானதாகவே கொள்ளப்படுகிறது. இறைவனின் நாமத்தை உச்சரிக்காத வாய் பாவம் கொண்டது. பேராசிரியர் சார்... நீங்கள் இறைவனின் நாமத்தை தொடர்ந்து சொன்னால் உங்கள் உடல் முழுவதும் மணம் பெருகுகிறது."

சாமியாரின் வார்த்தைகளால் முகில் நெளிந்தார். ஆனாலும் "இங்க பாருங்க, நான் ஒரு கம்யூனிசவாதி. எனக்கு பொதுவுடைமைச் சமூகம், சுரண்டலற்ற, வறுமையற்ற, சமமான வாழ்வை உறுதி செய்யும் தத்துவமான கம்யூனிசமே பெரிது " என்றார்.

"புரபஸர் சார்... இங்க பாருங்க. நாங்க மட்டும் என்ன சொல்றோம்? எங்களுடைய சொர்க்கம் என்பது என்ன? இங்கு எல்லாம் இருக்கும். அமைதி, வறுமையற்ற வாழ்க்கை, ஏமாற்றுத்தனம் இல்லை, சுரண்டல் இல்லை. எல்லோரும் சமம். எங்கும் இன்ப மயம். இதை பல கோடி வருடங்களாக சொர்கம் அல்லது இறைவனின் திருவடி என்கிறோம். உங்கள் கம்யூனிசத்தின் உலகத்திற்கும், எங்களது சொர்க்கத்திற்கும் என்ன வித்தியாசம்?"

"இரண்டுமே சாத்தியமில்லாத நிலை" என்று எள்ளுக்கு கத்த வேண்டும்போல் இருந்தது.

"உங்கள் சொர்கத்தில் உழைப்பு என்பதே இல்லையே.."

"யார் சொன்னது? சொர்கத்தில் உழைப்பு, உழைப்பிற்கேற்ற இறைவனின் திருவருள் எல்லாம் உண்டு. நீங்கள் கிருஷ்ண புராணம் படித்ததில்லையா?"

"கம்யூனிசம் பற்றி நீங்கள் படித்திருக்கிறீர்களா? அது கிடக்கட்டும், நீங்க என்ன சொல்றீங்க? பொது உடைமைச் சமூகம் என்பது ஒரு மிகவுயர்ந்த நிலை என்று. நாங்க சொல்றோம், கடவுளின் திருவடி மிக உயர்ந்தது என்று. ஒரு ideal society சாத்தியம் என்னும்போது, அது ஏன் சொர்கமாக இருக்கக் கூடாது?"

"எல்லாமே கடவுளை நோக்கிய தீர்ப்பாக இருக்கும்போது அதன் வழி குறித்து உங்களுக்குள் ஏன் இவ்வளவு உட்பிரிவுகள், முரன்பாடுகள், பரஸ்பர குற்றச் சாட்டுகள்...?

"என்ன இருந்தாலும் கம்யூனிசத்தின் இலக்கு மக்களின் சமத்தும் என்பதுதானே?"

"ஆமாம். எங்களின் பக்தியிலும் இறுதி இறைவனின் திருவடிதானே."

"இங்க பாருங்க, இந்தவுலகத்தில் இதுவரை 100% சரியான கம்யூனிசவாதி யாரும் இல்லை. உண்மையை நோக்கி நகரும் ஒரு முயற்சிதான் கம்யூனிசம்."

"நானும் அதையேதான் சொல்கிறேன். இதுவரை 100% சரியான இறைகோட்பாட்டின்படி வாழும் மனிதன் தோன்றவில்லை. அந்த முழுமையை நோக்கிய ஒரு பயணம்தான் மனிதர்கள் செய்யவேண்டுவது."

சாமியாருக்கும், முகிலுக்கும் இடையே நடக்கும் வாதத்தைக் கண்ட எள்ளிற்கு சிரிப்பு வந்தது. கட்டுப் படுத்திக் கொண்டான்.

"உங்க சநாதன வாழ்க்கையில் மனிதர்களை நீங்கள் மதிப்பதேயில்லை. மனிதர்களை மிகவும் கேவலமாக நடத்துகிறீர்கள் குறிப்பாக பெண்களை போகப் பொருளாக மட்டுமே நீங்கள் அணுகுகிறீர்கள். சந்திரசேகர சரஸ்வதி என்ற காஞ்சி காமகோடி சாமியார் விதவைப் பெண்களை மிகவும் கேவலமாக பேசியுள்ளார். விதவைகள் களர் நிலம் என்று கூறியுள்ளார். விதவைப் பெண்ணை பார்த்து விட்டால் அவர் அன்று முழுவதும் எந்த ஆகாரமும் சாப்பிட மாட்டார். இது பெண்கள் சமூகத்திற்கே இழைக்கப்பட்ட அவமானம் இல்லையா? "

"இங்க பாருங்க பேராசிரியர். நீங்கள் சொல்வது பாதிதான் சரி. விதவைப் பெண் என்றாலும் அவளும் ஒரு



படிப்பகம்

www.padippakam.com

**"இங்க பாருங்க, நான் ஒரு கம்யூனிசவாதி. எனக்கு பொதுவுடைமைச் சமூகம், சுரண்டலற்ற, வறுமையற்ற, சமமான வாழ்வை உறுதி செய்யும் தத்துவமான கம்யூனிசமே பெரிது"**

பெண்தானே. நம்ம ஜெயேந்திரர் ஓர் இடத்தில் சொன்னார் `மகாப் பெரியவர் விதவையைப் பார்த்தால் அன்றைக்கு முழுவதும் ஆகாரம் கொள்ள மாட்டார். ஆனால் இன்னிக்கு காலம் சேஞ்ச் ஆயிக்கிட்டேப் போகுது. நான் விதவைப் பெண்கள் என்னுடைய தரிசனத்திற்கு வந்திருப்பதாய் கேள்விப்பட்டால் முதலில் போஜனத்தை முடித்துவிட்டு பின்னர் அவர்களுக்கு தரிசனம் தருவேன்' என்று. காலம் மாற மாற, நாமளும் இப்படி கொஞ்சம் மாத்திக்க வேண்டியிருக்கு."

எள் வாய்விட்டு சிரித்துவிட்டான்.

"சாமி, புருசன் செத்துட்டா பெண்கள் விதவைன்னு சொல்றீங்க, விதவைகளுக்கு மிகக் கூடுதல் அமங்கல வாழ்க்கை. பூ, பொட்டு அணியக் கூடாது, நகை அணியக் கூடாதுன்னு சொல்றீங்க. மத்த ஆம்பளங்களைப் பார்த்து பேசக்கூடாதுன்னு சொல்றீங்க. இதையெல்லாம் செஞ்சாலும் அவர்களை களர் நிலம்ன்னு சொல்றீங்க. அப்ப விதவைகள் எப்படித்தான் வாழணும்னு சொல்லுவாங்க."

"பேராசியர் சார், அதனால்தான் சதி வழக்கத்தை நம் முன்னோர்கள் நடைமுறையில் வைத்திருந்தனர். அதாவது உடன்கட்டை ஏறுதல் மூலம் பெண்கள் இது போன்று விதவை என்று அவமானப்பட வேண்டாம் பாருங்கள்."

"நல்லவேளை விதவைக்கு ஆண்பால் இருந்திருந்தால் நீங்களெல்லாம் தப்பித்தீர்கள்" சாமியார் வாய் பிளந்து சிரித்தார்.

"சாமி, யாகவா முனிவர்னு ஒருத்தர் இருந்தார். அவர் ஒருமுறை விதவைகள் எல்லாம் களர் நிலங்கள் என்றால் சாமியார்களும் களர் நிலங்கள்தானே? அவர்களுக்கு பிள்ளை குட்டி யார் இருக்கிறார்கள்? யாகவா முனிவருக்கு இந்த களர் நிலம் உதாரணம் பொருந்தாது." முகிலும் சிரித்துக்கொண்டே சிரித்தார். காரணம் பிராமண சாமியார்களைத் தவிர பிற சாமியார்கள் பாலியல் குற்றங்கள் பெருமளவு புரிகின்றனர் என்பது முகிலின் உள் நம்பிக்கை. அதுதான் இந்த parallel laughing-க்குக் காரணம்.

எள் பேசத் துவங்கினான். "சார், இந்த தங்கர் பச்சான்னு ஒருத்தர் நடிகைகள் பணத்திற்காக மட்டும் நடித்தால் அவங்க விபச்சாரிகளுக்குச் சமம்ன்னு சொன்னார். நம்ப புரட்சி சினிமா கலைஞர் தங்கர்பச்சானை சிலர் காலில் விழுந்து மன்னிப்பெல்லாம் கேட்க வைத்தார். யாராவது களர் நிலம்ன்னு சொன்னதுக்காக இதுவரை போராட்டம் அறிவிக்கவில்லை, கொதித்து எழவில்லை, யார் காலிலேயும் விழவில்லை.

விபச்சாரிகள் என்பது பாலியல் குற்றச்சாட்டு. இதற்கு ஆதாரம் இருக்கு. ஆனால் விதவைகள் என்பது உளவியல் குற்றச்சாட்டு. பெண்ணின் பங்கெடுப்பே இல்லாமால் நிகழ்வது. அதைக்கூட களர் நிலம் என்று கூறியவர்களை சும்மா விடலாமா?

தகப்பன் இல்லா எல்லா பிள்ளைகளின் தாய்மார்களும் விதவைகள்தானே ? இவர்கள் பிள்ளைகளை மிக உயர்ந்த நிலைக்கு வளர்த்து ஆளாக்கவில்லையா? எவ்வித சப்போர்ட் இல்லாமல் பிள்ளைகளை வளர்ப்பவர்கள் எப்படி களர் நிலங்களாக முடியும்? களர் நிலம் உலக மேதைகளை எப்படி உருவாக்கிடும்" எள் உணர்ச்சி வசப்பட்டு பேசினான்.

எள்ளின் பேச்சால் அங்கு ஓங்கிய நிசப்தம் நிலவியது. தன் தாயை யாரால் விட்டுத் தர முடியும், அது முகிலாய் இருந்தால் என்ன? சாமியாராய் இருந்தால் என்ன?சாமியார் எள்ளைப் பார்த்தார்.

"தம்பி, உனக்கு அறிவியல் தெரியுமா?"

"தெரியும்"

"எங்கே அறிவியல் பற்றி ஒரு வார்த்தை சொல் பார்ப்போம். எங்கு அறிவியல் முடிவடைகிறதோ, அங்கு தத்துவம் பிறக்கிறது. எங்கு வெளிச்சம் முடிவடைகிறதோ, அங்கிருந்து இருட்டு துவங்குகிறது... இந்த அறிவியலில் ஒரு பேதமை இருக்கிறது."

"என்ன?"

"பூனை தெளிவாகப் பார்க்கும். அதற்கு இருட்டு என்பதே கிடையாது. நாய்க்கு வண்ணங்களை பிரித்துப் பார்க்கத் தெரியாது. இவற்றையெல்லாம் உன்னுடைய அறிவியல் கோட்பாடு எப்படி விளக்குகிறது."

"இதற்குப் பதில் தெரிய வேண்டுமென்றால் நீங்கள் விஞ்ஞான ஆய்வுகள் பற்றி படிக்க வேண்டும். அல்லது அறிவியல் ஆராய்ச்சிகள் கூட செய்யலாம். மாறாக தேவையில்லாமல் இப்படி சாமியாராய் போயிருக்கக் கூடாது."

எள் மேலும் தொடர்ந்தான் "விஞ்ஞானம் உங்களுடைய ஆன்மீகம் போல ஒரு சாராருக்கு மட்டும் சொந்தமல்ல. அது எல்லோருக்கும் பொருந்தும். யாரும் ஆராய்ச்சி செய்யலாம்."

"எனக்கும் தெரியும், யார் தொட்டாலும் கரன்ட் shock அடிக்கும்னு"

"இதிலியாவது ஒரு மீனிங் இருக்கு. கரன்ட் கூட இல்லாம, தொட்டா தப்புன்னு மிகப்பெரிய shock-ஐ ஒரு சாரார் மீது இந்த ஆன்மீக சமூகம் ஏவி விட்டுள்ளதை யார் கேட்கிறது?"

"தம்பி, நாய்க்கு வண்ணங்கள் தெரியாது. ஆனால் அது நிறக் குருடு. அதுபோல மனிதர்களுக்கும் வண்ணம் இருக்கு. அதை வர்ணமுன்னு சொல்லுறாங்க. வர்ணத்துக்கு ஏத்த குணம் உள்ளுக்குள் இருந்துக்கிட்டேயே இருக்கும்"

"இது என்ன விஞ்ஞான ஆன்மீகமா?" முகில் கேட்டார்.

"தம்பி... சிங்கம், புலி, சிறுத்தை இவையெல்லாம்



படிப்பகம்

www.padippakam.com

எந்த family-ஐ (குடும்பம்) சேர்ந்தது தெரியுமா?"

"தெரியும். இவையெல்லாம் CAT (பூனை) குடும்பத்தைச் சேர்ந்தது."

"இதற்காக பூனையை சிங்கத்திற்கு திருமணம் செய்து வைக்க முடியுமா? ஒரே குடும்பமாக இருந்தாலும் வண்ணம் வேறு வேறு அல்லவா?"

"மனிதனுக்கு வர்ணம் மாத்தி, அதாவது உங்களது மேல் வர்ணத்து பெண்ணை எங்களது வர்ணத்து ஆணுக்கு திருமணம் செய்து வைத்தால் கண்டிப்பாய் குழந்தை பிறக்கும். வர்ணம் உடைந்த மனித குழந்தை பிறக்கும்."

"தம்பி, மனிதன் social animal, அதாவது சமூக மிருகம். மிருகங்களுக்கு உடல்பூர்வமானதாகச் சொன்னது, மனிதனுக்கு social-ஆக பொருந்தும். உடல்பூர்வமாய் குழந்தை பிறக்கும். அது எல்லோருக்கும் தெரியும். ஆனால் சமூக ரீதியான வர்ணம் பல்வேறு வகைகளில் அந்த குடும்பத்திற்கு ஏற்படுத்தும்.

அதனால்தான் மனிதன் social animal என்று உங்கள் விஞ்ஞானிகளே ஒத்துக்கொண்டுள்ளனர்.

பூனைக்கும் புலிக்கும் திருமணம் எப்படி உடற்பொருத்தமற்றதோ, அப்படியே வர்ணம் உடைத்த திருமணம் மனிதருக்கும் சமூக ரீதியில் பொருத்தமற்றதே."

"சரிங்க... நான் வெளிப்படையாகவே கேட்டுவிடுகிறேன். சாதி மனிதனிடம் எங்கே இருக்கிறது?"

சாமியார் பதில் சொன்னார். "பகுத்தறிவு எங்கே இருக்கிறது? அது மனிதனின் செயல்பாட்டில் இருக்கிறது. அப்படித்தான் சாதியும். அதை வெளிப்படையாகக் காட்ட முடியாது. செயலில்தான் புரிந்துகொள்ள முடியும். ஆடையின்றி பிறக்கிறோம். பின்னர் விவரம் வந்தவுடன் ஆடை தரித்துக் கொள்கிறோம். அது போலத்தான் சாதியும். சாதியின்றி பிறக்கிறோம். விவரம் தெரிந்தவுடன் சாதியை ஆடையாக, மானம் காக்கும் கவசமாக மதித்து வாழ்கிறோம்."

"மனிதன் நிர்வாணமானவன்தான் - விலங்குகள் போல. ஆனால் பழக்கத்தில் ஆடை அணிய பழகிய மனிதன் அதைத் துறந்து வாழ்ந்தால் என்ன என்று யோசிப்பது கூட இல்லை. காரணம், இது மனித உறவுகளில் சிக்கல் ஏற்படா வகையில் உதவுகிறது. இதைப் போலவே வர்ணம், சாதி ஆகியன மனித உறவில் சிக்கல் ஏற்படா வகையில்...."

"ஆடையின்றி மனிதனால் வாழ இயலுமானால் சாதி கண்டிப்பாய் ஒழிந்துவிடும்"

முகில் கொதித்தே விட்டார் அவர் தொடர்ந்தார்.

- தொடரும்



# வீரவணக்கம்

'பரட்டை' என்று பட்டிதொட்டி முதல் பல்கலைக் கழகங்கள் வரை முத்திரை பதித்துள்ள அறிவர் ஜேம்ஸ் தியாபிலஸ் அப்பாவு அவர்கள் 4.11.2005 காலை 4.00 மணியளவில் அமெரிக்காவில் உள்ள ஒக்லஹாமா நகரில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தலித் விடுதலை, தலித் பண்பாடு, தலித் சமயம், தலித் கலைகள், தலித் அரங்கியல், தலித் இறையியல் ஆகியவற்றுடன் தொடர்பியல், சுற்றுப்புறச் சூழல், மாற்று மருத்துவம், பெண்ணியம், இசை, பாடல், நாடகம் என பன்முகத் தளங்களில் பங்களிப்பை செய்துள்ள முனைவர் பரட்டை அவர்களுக்கு, விடுதலை முழக்கமிடும்

எம் வீர வணக்கம்.

தலித் ஆதார மய்யம்



படிப்பகம்

www.padippakam.com

■ முனைவர் கே.ஏ. குணசேகரன்

# பெண்ணியப் பார்வையில் நாடகங்கள்

## அன்று முதல் இன்று வரை

இருபதாம் நூற்றாண்டுப் பெண்ணிய நாடகங் கள் என்று சொல்லும் வகைப்பாடு உறுதியுறவில்லை. மாறாக, இருபத்தோராம் நூற்றாண்டுப் பெண்ணிய நாடகங்கள் என்று சொல்ல இடமுள்ளது. எனினும் இவ்வாறு சொல்வதற்கு இருபதாம் நூற்றாண்டுப் பெண்கள் குறித்த நாடகங்களின் தொடர்ச்சியினை நாம் மறுதலித்துவிட இயலாது. இருபதாம் நூற்றாண்டு நாடகங்களில் பெண் பாத்திரங்களை பெரும்பாலும் பெண்கள் முன்வந்து நிகழ்த்தவில்லை. ஆண்களே பெண் பாத்திரங்களை வேடமிட்டு நிகழ்த்தியுள்ளனர் என் பதை நமது இந்திய மரபின் நெடுகிலும் காண முடிகிறது.

சங்க இலக்கியங்களில் பாடினி, விறலி, ஆடு மகள் எனப் பெண்கள் கலைகளில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடப்படுகின்றன. பெண்கள் ஆடுகளங்களில் ஆடவும் பாடவும் முன்வந்துள்ளனர். இந்தச் செய்தி களை நாம் சமணக் காப்பியமாகக் கருதப்படும் சிலப்பதி காரத்தின் அரங்கேற்று காதையில் காண முடிகிறது. மாதவி தலைக்கோல் பெற்றவள், பதி னொரு வகை ஆட்டங்களை ஆடியுள்ளாள் எனக் காண்கிறோம். தொடர்ந்து சமணர்கள் மற்றும் பௌத்த காலங்களில் பெண்கள் கலை நிகழ்த்த முன் வந்துள்ள குறிப்புகளைக் காண்கிறோம். மணிமேகலையை இந்த வரிசையில் நாம் அடக்கலாம்.

சைவ இலக்கிய காலகட்டங்களில் பெண்கள் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற குறிப்புகளைப் பெரிதும் காண முடியவில்லை. சோழர் காலங்களில், குறிப்பாக கோயில்களில், சதிர் ஆடிய மகளிர் பற்றிய பதிவுகளை நாம் காண்கிறோம். கோயில் மகளிர் சதிர் ஆடியமை முன்னேறிய சமூகத்தினரால் குறைத்து மதிப்பிடப்பட்டு தடை செய்யப்பட்டதைக் காண்கிறோம். தேவதாசி மரபினரின் சதிராட்டம் இன்று பரதநாட்டியம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பெற்று முற்பட்டோரின் சமூக மதிப்பினைப் பெற்றுள்ளமை யினைக் காண்கிறோம். பரதமுனி நாட்டிய இலக்கணத்தில் பெண்களின் பாத்திரங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் உத்தம, மத்யம, அதம எனும் முதன்மை, இடைநிலை, கடைநிலை என்ற மூன்று பிரிவுகளில் பிரித்துக் காட்டுகிறார்.

பேரரசுகள் சிதைவுற்ற காலத்திற்குப் பின் குறிப் பாக 17, 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் நடைபெற்ற கூத்துக்கள், ஆட்டங்களில் ஆங்காங்கு பெண்கள் இடம் பெற்றுள்ளனர். குறவஞ்சி, பள்ளு போன்ற கலை வடிவங்களில் பெண்கள் இடம் பெற்றுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சில சம்பவங்கள் கதைப் பாடல்களாக உருப்பெற்றன. அவை நிகழ்த்துக்கலை வடிவங்களாயின். காட்டாக, காத்தவராயன் கதை, மதுரைவீரன் கதை, நல்லதங்காள் கதை, வீரபாண்டிய கட்டபொம்மன் கதை போன்றவை நிகழ்த்துவதற்குரிய பிரதிகளாயின. இவைகளில் ஆண்களே பெண்கள் பாத்திரத்தை எடுத்தனர். எனினும் ஆண்கள் உருவாக் கிய நிகழ்த்துக்கலைப் பிரதிகளில் பெண்கள் பற்றிய சித்தரிப்புகள் இங்கு கவனத்திற் கொள்ளத் தக்கன.

மதுரைப் பகுதிகளில் நடந்தது எனக் கருதும் நல்ல தங்காள் கதை நாடக வடிவமானது. இதில் நல்ல தங் காள் குழந்தைகளுடன் அண்ணன் வீடுவர, அண்ணி படுத்தும் பாடு பாடுபொருளானாது.

நல்லதங்காள்

அருமை மக்களை நீங்களடிக்க லாமா
அடிக்கலாமா கையை ஒடிக்க லாமா (அரு)

அலங்காரி

இந்தச் சிறுக்கி மக்களை நன்றாயடிக்க வேணும்
அடிக்க வேணும் கையை ஒடிக்க வேணும் (இந்த)

நல்லதங்காள்

என்னை அடித்தாலும் தோஷமில்லை அண்ணி
எள்ளத்தனையும் வித்தியாசமில்லை (என்)

அலங்காரி

ஏழுபிள்ளை பெற்ற நாயே போடி
எதுக்கு நீ இங்கு வந்தாயோடி (ஏழு)]

நல்லதங்காள் (வசனம்)

அண்ணி, சிறுவர்கள் தெரியாது சொல்லி விட்டாலும் நீர்தானே பொறுத்துக்கொள்ள வேண்டும்

இந்நாடகத்தில் குடும்ப உறவுகளில் நாத்தனார், மாமியார் கொடுமை சித்தரிக்கப்பட்டது. பெண்ணுக்கு சொத்துரிமையற்ற சமூக அமைப்பாக இருந்தபோது பெண்கள் தங்களது உடைமைகளைத் தற்காத்துக் கொள்ளும் தேவையைத் தேடியதன் விளைவு இந் நாடகத்தில் காட்டப்பட்டது. ஆண்களைச் சார்ந்தே பெண்கள் இயங்க வேண்டிய சமூகச் சூழல் ஏற்பட்டது. அண்ணன்-தங்கை, கணவன்-மனைவி எனும் உறவு களில் ஆண் (நல்லண்ணன்) நல்லவனாகக் காட்டப் பட்டு பெண்களின் உறவுகளில் விரிசல் ஏற்பட்ட சமூ கம் எனக் காட்டப்பட்டுள்ளது. பொருளாதாரம் சார்ந்த சிந்தனையற்ற பெண்ணிய நாடகமாக அவலத்திற்குரிய பாத்திரமாக நல்லதங்காளும், வெறுப்புக்குரிய பாத்திரமாக அலங்காரியும் நல்லதங்காள் நாடகத்தில் காட்டப்பட்டுள்ளனர்.

காத்தவராயன் பறையன் எனும் தலித் சமூகத் தவன். ஆரிய வம்சமான ஆரியமாலா எனும் பெண்ணை திருமணம் செய்து கொள்வதனால் சாதி மீறித் திரு மணம் செய்து கொண்டதால் ஏற்படும் விளைவைக் காட்டுவதாக இந்நாடகம் அமைந்துள்ளது.



படிப்பகம்

மறவர் பெண்கள் என்னுடன் பிறப்பாயே - தாயே
ஏதேது சொன்னாலும் எதிர் வார்த்தை பேசுகிறாய்
என்ன அவள் மயக்கம் - என் மகனே!
பூதலம் புகழ்ந்த ஆரிய மாலையைப்
புணர்ந்தால் தீரும் மயக்கம் - என் தாயே!

காத்தவராயன் பற்றி கதை, கதைப்பாடல், நாடகப் பிரதி எனப் பல உருவாயின. அவற்றில் பல சாதி சார்ந் தனவாகக் காத்தவராயனைக் காட்டினா லும், தாழ்ந்த சாதியினன் என்பதிலேயே கதை உருக்கொள்கிறது. சாதி மீறலாகாது எனத் தாய் மறுத்துரைத்தும் தாயிடமே மகன் கூறும் வார்த்தைகளாக மேற்கூறியவை அமை கின்றன. தாழ்த்தப்பட்டவர்களின் வார்த்தைகள் இப் படித்தான் இருக்கும் எனக் காட்டும் மோசமான பார்வையினைப் பள்ளு, குறவஞ்சி முத லாகவே நாம் காணமுடிகிறது.

ஆணும் பெண்ணும் காதல் கொண்டு அவர்தம் வாழ்க்கையைக் கட்டமைக்கும் சுதந்திரம் மறுக்கப்பட் டுள்ளது. ஆணாதிக்கம் வழியிலான சொத்துடைமை மற்றும் சாதிய ஆதிக்கம் கொண்டு விளங்கிய இந்நாட கத்தில் பெண்ணுரிமை என்பதே கேள்விக்குறியான நாடகப் பிரதிகளாக இவை போன்றவற்றைக் கவ னிக்க முடிகிறது.

மகாபாரதம், இராமாயணம் போன்றவற்றில் இருந்து பல கிளைக் கதைகளை நாடகங்களாகச் செய் துள்ள மையினை நமது கூத்துப் பிரதிகளில் காண முடி கிறது. திரௌபதி வஸ்திராபகரணம், சூர்ப்பநகை, குந்தி தேவி போன்ற பெண் பாத்திரங்களை மையமாகக் கொண்டு விளங்கும் நாடகங்களை இன்றளவும் தமிழகத்தின் வட பகுதியில் விளங்கும் கூத்துக்களில் காணலாம். நமது கூத்துக்களே நாடகங்கள் எனத் தமிழ்ச் சூழலில் விளங்கிக் கொள்ளப்பட்டது இங்கு நினைவு கொள் ளத்தக்கது.

ஐந்து பேருக்கு மனைவியான பாஞ்சாலி கதை, சபை யில் பெண்ணை (பாஞ்சாலி) ஆண்கள் துகில் உரி யும் கதை போன்றவை இங்கு கூத்து வடிவில் நிகழ்த்தப் படுவதன் வழியே பெண்கள் விழிப்படைந்து சமூகப் பார்வையுடன் பெண்ணியச் சிந்தனை வளர்ச்சி கொள்ள தடைகளாகவே அமைந்திருந்தன.

தர்மபத்தினி, பதிவிரதை, கல்லானாலும் கண வன், புல்லானாலும் புருசன் என்பன போன்ற கருத் தியல் கள் பெண்ணியத்துக்கு எதிரானவையாகும். இறந்த கணவருக்காக எமனிடம் போராடி உயிர் பெறுவதான கதை சத்தியவான் சாவித்திரி நாடகம். கணவனுக்காக கணவனின் சுயமரியாதைக்காக மனைவி தியாகம் செய் வதைப் பல நாடகங்களில் நாம் காண முடிகிறது. அரிச்சந்திரன் நாடகத்தில் சந்திரமதி தன் கண வனா லேயே ஏலம் போட்டு விற்கப்படுகிறாள். இறுதியில் கணவனால் வெட்டுப்படப் போகிறாள் என்று தெரிந் தும் கணவனை வெட்டச் சொல்கிறாள்.

இவை போன்ற நாடகக் கதைகளும் பிரதிகளும் பெண்ணியத்துக்கு எதிரானவை எனப் பெண்கள் விளங்கித்திட மதம், பழக்க வழக்கம், நம்பிக்கை போன்ற வைகளால் தயக்கம் கொள்கின்ற நிலை தொடர்கிறது.

என் காதலனுயிர் தனைத் தாருமையா - இந்
நாளினிலே கண் பாருமையா எமன் - நாடிய யெனை
நீ தொடரலளினது மடாது
சாவித்திரி - நான் வருவேன் போகுமிடம் யாவினும்
விடாது
எமன் - நலமல மொழிவதை விடு விடுபோ போ
சாவித்திரி - என் நாதனுயிர்
எமன் - வேறு வரங்கேள் தருவேன் மாறு சொல்லேன்
மாதே
சாவித்திரி - வேணுமென் தந்தைக்கு மைந்தர் நீர்
கொடுமிப்போதே
எமன் - மிக மகிழொடு மகவருளினேன் நீ போ போ
நாதனுயிர்
(எமதர்மன் மறைகிறார்)2

கற்புடைய மங்கை என்னும் கருத்தியலை விதைத்து அதனை மக்களிடம் நிலைபெறச் செய்ய பெண்கள் அனு பவிக்கும் துன்பங்களையே நாடகங்கள் விதந் தோதின. இன்றைய பெண்ணியலாளர் பார்வைக்கு வேடிக்கையானதாக இருக்கும். அரிச்சந்திரா நாடகத் தில் இக் கருத்தியல் சந்திரமதி பாத்திரத்தின் வழியாக வெளிப் படுவதைக் காணலாம்.

சந்திரமதி: நாதா, கற்புடைய மங்கைக்கு கணவனே துணை என்னும் நீதிக்கிணங்க உமதடியே சத மென சதாகாலமும் தியானித்துக் கொண்டிருக்கி றேன். இன்று உமது திருக்கரத்தால் என்னுடைய உயிர் மோஷ வீட்டிற்குப் போகப் போகிறது. இந்த மாயமான இல் வாழ்க்கையை இன்றோடு வெறுத்தேன். இன்னும் ஒரு கடைசி வேண்டுகோள். அதாவது இப்பத்தினியாள் உயிர் பிரிந்துபோய் விட்டதே என்று சத்தியத்தினின்று தளரா திருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இனிமேல் உங்களுக் கிட்ட கட்டளையை நிறைவேற்றுங்கள்.

அரிச்சந்திரன்: ஆஹா ஆஹா
பாரமோ கனமுமில்லை பாலனும் இறந்த தொல்லை
நேரமோ உன்னை யன்றி ஒருவரும் இங்கு இல்லை
சோரமோ நிறைந்த நீயு மிறப்பதில் ஐயமில்லை
கோரமாய் உன்னை வெட்ட குனிந்து நிற் பாயிங்கு3

இசை நாடகங்கள் அருகிவந்து நவீன நாடகங்கள் தமிழகத்தில் 1970களுக்குப்பின் தோன்றிய பிறகு புதிய சிந் தனை உருப்பெறலானது. பழங்கதைகள் மறு வாசிப்புக்கும், தழுவி எழுதுவதற்கும் ஆட்பட்டன. கிரேக்க நாடகமான ஆன்டிகனி என்பது டாக்டர் மு.ராம சாமி, செண்பகம் இவர்களால் பெண்ணியப் பார்வை யில் செய்யப்பட் டது. மீடியா எனும் நாடகம் தமிழில் டாக்டர் எம்.ஜீவா அவர்களால் செய்யப்பட்டது. இவை கிரேக்கப் பழம் பெரும் நாடகப் பிரதிகளாக இருப் பினும் தமிழ்ச் சூழலின் பெண்ணிய நாடகப் பிரதி களாக இனங்காணப்பட்டன.

பேரா. சே. இராமானுஜம் அவர்களது வெறியாட்


படிப்பகம்

www.padippakam.com

டம் எனும் நாடகம் 'டிரோஜன் வார்' என்னும் கிரேக்க நாடகத்தின் தழுவலாக எழுதப்பட்டது. இந்நாடகத்தில் பெருந்தேவியின் புலம்பலில் நம்பிக்கை தெறிக்கக் கூடிய செய்திகளைக் கூறியது. பெருந்தேவி வருந் துன்பங்களை எதிர்கொள்ள மற்ற பெண்களையும் அழைக்கும் 'வாருங்கள் பெண்களே வரும் விதியை எதிர்கொள்வோம்' எனும் கூற்று பெண்ணியக் குர லாக ஒலிக்கிறது.

பெருந்தேவி
ஆகவே இளங்குருத்தை
அழித்திடவே வேண்டுமென்றே
அஞ்சிப் பயந்து நீங்கள்
பிஞ்சதைக் கொன்ற போதே
பேடிமகன்கள் நீங்கள்
பெரியதொரு கோழை நீங்கள்
என்றே உணர்ந்து உங்கள்
ஈனத்தைப் புரிந்து கொண்டேன்
கோழைக்கு முன்னாலே
கண்ணீர் உகுப்பதில்லை
வீரத்தின் திருநிலத்தில்
விளைந்ததிது எங்கள் பண்பு
இங்கென்ன வேலையுண்டு
வாருங்கள் பெண்டுகளே
வரும்விதியை எதிர்கொள்வோம்
வலுவேதும் உள்ளவரை
விதியையும் எதிர்த்து நிற்போம் 4

அரிச்சந்திரனின் மனைவி சந்திரமதியும் ஒரு சத் திய சோதனை வாழ்க்கை வாழ்ந்தவளாக எனக்குப் பட்டது. மகாத்மா காந்தி முதல் இன்று வரை அரிச்சந்திரன் சத்திய வாழ்க்கை வாழ்ந்தான் என்றே பேசினார்கள். எழுதி வருகிறார்கள். சந்திரமதி ஒரு பெண்ணாக இருப் பதால் அவளது வாழ்க்கையைப் பற்றி யாரும் அறியத் தவறி விட்டார்கள். அதைத்தான் நான் நாடகமாக்கிட எண்ணினேன். அக்காலச் சந்திரமதியாகத்தான் இன் னும் பல பெண்கள் நம்மிடையே உள்ளார்கள். அந்தச் சந்திரமதியாக, தலைகுனிவோராக இவர்கள் இல்லை. பிரச்சினைகளை எதிர்கொள்வோராக உள்ளனர். (சத்திய சோதனை - கே.ஏ. குணசேகரன், என்.சி.பி.எச், சென்னை) கே.ஏ. குணசேகரனின் சத்திய சோதனை நாடகம் பெண்ணியப் பார்வையில் பழங் கதையை மறு வாசிப்புக் குள்ளாக்கியுள்ளது.

மா.வீ.பெ.1: பொண்ணுகன்னா நம்ம நாட்டுல ஒரு பாரம்பரியம் இருக்குமா. நீ என்ன படிச்சே. நம்ம தமிழ் பெண்கள் பரம்பரையிலே வந்த பெண்ணா நீ? பாஞ் சாலி, சீதை, சந்திரமதி இவுங்கல்லாம் நம்ம மண்ணுல பொறந்தவுங்க. இவ்வளவு பேசுற ஒனக்கு இந்தப் பதி விரதைகள் வரலாறு கொஞ்சம் கூடத் தெரியலையே.

சந்திரிகா: ஆமா, நீங்க குட்டக் குட்டக் குனிய ணும். அதுதான் தமிழ்ப் பெண்கள் அடையாளமா? இராம யாணத்திலே சீதையைத் தீக்குளிக்கச் சொன்னது, மகாபாரதத்தில் பாஞ்சாலி சேலையை உரிஞ்சது, சிலப் பதிகாரத்தில் கண்ணகி நகையைப் பறிச்சு விலைமாது கிட்டே கோவலன் போனது, நடக்க முடியாதபோதும் விலைமாதுகிட்டேப் போகணும்னு மனைவி நளாயினி யை கொடுமைக்கு ஆளாக்கியது, தன் சுய கௌரவத் தைக் காப்பாத்த ஒரு சத்திய வாழ்க்கை வாழுவதற்கா கத் தன் சொந்த மனைவி சந்திரமதியை அடகு வச்சது போன்ற இந்தப் பரம்பரைப் பொண்ணுக வரலாற்றை நான் படிக்காம இல்லே. ஆண் வர்க்கம் காலங்கால மாய் பெண் சமூகத்தை தங்களுக்கு அடிமைகளாக்கிய வரலாறு எனக்கு தெரியாமலோ புரியாமலோ இல்லே. அந்தப் பொண்ணுக பரம்பரயப் படிச்சத னாலத்தான் புதுமைப் பெண் பரம்பரைய உருவாக்க என்னைய மாதிரி சந்திரிகாக்கள் வந்திருக்கோம். (மூளை ஓடுகள் கொண்டு குழுக்கள் ஆடி வருதல், முளைப்பாறி, கும்மி இசை வாசிக்கப்படுகிறது)

கூத்துக்களில் பெண்ணியப் பிரச்சினைகள் பேசப்பட்டன. அவை சனாதன முறைமைகளுக்குள் சமரசமாகிப் போவதும், பெண்ணியம் கேள்விக்குள் ளாக்கப்படுவதுமான பெண்ணியத்துக்கு எதிரான கருத் துக்களை கொண்டிருந்தன.

பெண்களின் புலம்பல்கள் கட்டபொம்முவில் வெள்ளையம்மாளின் ஒப்பாரியாகவும், நல்லதங்கா ளில் பெண்ணுக்குப் பெண்ணே எதிர்நிலை கொள்வ தால் எழும் புலம்பலாகவும் அமைகின்றன. பவளக் கொடியில் அர்ச்சுனன் ஆறு மனைவிகள் கட்டிச் செல்வதும், கடைசியில் அனைவரும் சமரசம் கொண்டு வாழ்வதாகவும் காட்டப்படுகிறது. பெண்கள் வாழ்க் கைப் பிரச் சினைகளைத் துணிச்சலோடு எதிர்கொள்ப வராகவும், துணிச்சல் கொண்டு பெண்ணியத்துக்கு ஆதரவான குரல்கள் எழுப்புபவராகவும் மரபு வழி நாடகங்களில் காணப்படவில்லை.

பவளக்கொடி அல்லது குடும்பவழக்கு எனும் கே.ஏ. குணசேகரனது நாடகம் ஆறு மனைவிமார்கள் கணவனையும், பல பெண்களை மணக்க அனுமதிக்கும் கள் எத்தன வழிமுறைகளைச் சொல்லிக் கொடுத்த கிருஷ்ண னையும் விமர்ச்சித்து தண்டிக்க முற்படு வோராக காட் டப்பட்டுள்ள மறுவாசிப்பு நாடகமாக உள்ளது.

வைத்தியர் : (கிருஷ்ணன் அல்லியைச் சுட்டிக் காட்டி) இந்தப் பெண்ணுக்கு இறந்தவன் மேல் அடங்கா கோபமிருக்கு என்று என் புத்திக்குப்படு கிறது.

அல்லி : *(மனதில் தெளிவு பெற்றவளாய் பெருமூச்சு விட்டு)* என் புத்திக்கு இப்பத்தான் பட்டது. நீ இந்த ஆளை உயிர் பெறச் செய். இந்த ஆள அப்புறம் வந்து நான் பார்க்கிறேன். அதுக்கு முன்பு ஒப்பனை அறைக்குள்ளே ஒரு ஆள் இருந்தான். அவனை ஒரு கை பார்க்கணும். இதோ வந்துவிடுகிறேன். (உள்ளே வேகமாய்ச் செல்கிறாள்)

வைத்தியர் : சரி நீங்கள் எல்லோரும் மறைவாக இருங்கள், நான் ஒரு மந்திரம் ஓத வேண்டும் (அனை



படிப்பகம்

www.padippakam.com

வரும் ஒதுங்கித் திரும்பி நிற்கின்றனர்)

(ஒப்பனை அறைக் காட்சிக்கும் மேடைக் காட்சிக்கும் சமகாலத்தில் ஒளி பாய்ச்சப்பட்டுப் பார்வையாளர்களை இருவித மேடைத் தளங்களையும் கவனிக்க செய்ய வேண்டும்.

ஒப்பனைக் காட்சி அறையிலிருந்து 'அய்யோ, அம்மா, என்னைய விட்டுடு. ஒன்னைய கும்பிடுறேன். செண்பகம், இனிமே இப்படி வம்பு செய்ய மாட்டேன்.' செண்பகத்தின் குரல் ஓங்கி ஒலிக்கிறது. 'நில்லுடா பொறுக்கி நாயே, ஓடாதேடா... டேய்...' எனக்குரல்கள் கேட்கின்றன (அல்லி)

அவனைத் துரத்திய கையோடு மேடையில் ஓடி வருகிறாள். அனைத்துப் பெண்களும் பார்த்துத் திகைக் கின்றனர். அர்ச்சுனன் உயிர்பெற்று எழுந்து நிற்கிறான். மற்ற பெண்கள் கோபப்பார்வை கொண்டு ஒருமித்து அர்ச்சுனனைப் பார்க்கின்றனர். அர்ச்சுனனும் கிருஷ்ணனும் பயந்து ஒடுங்கி மேடையின் முன்புறம் நோக்கி அவர்களைப் பார்த்து நகர்ந்து வருகின்றனர்.

அல்லி : (வசனம்) டேய் பொறுக்கிகளா, பொம்பளைங்கள ஏன்னடா நெனச்சீங்க. சாது மிரண்டால் காடு கொள்ளாது. ஒங்கள மாதிரிப் பயக இங்க மட்டுமல்ல, எங்கேயுமே இருக்கக் கூடாது (எனக்கத்தியைக் கொண்டு விளாசுகிறாள்).

இதுபோலவே இவரது சத்தியசோதனை, பலி ஆடுகள் போன்ற நாடகங்களில் காணமுடிகிறது. பெண்ணிய விழிப்புணர்வு கருத்துக்களை கந்தன் ஒ வள்ளி எனும் இவரது நாடகம் வள்ளி கந்தனை மணக்க முடியாது என மறுத்துரைக்கும் பெண்ணியப் பார்வையைக் கொண்டுள்ளது.

வள்ளி (பாடல்):

புலியது பசுவின் தோலைப்போர்த்தி முன் திரிவதைப் போல்

வலிபெறு தவ வேடத்தை வஞ்சனையாகக் கொண்டு

நலியவும் இதங்கள் பேசி நயமொழி யுரைக்கின்றீர்

புலிபெரும் பிச்சையாண்டியை மணஞ் செய்வேனோ..

வள்ளி (வசனம்): சுவாமி, தங்களுக்கு இந்தக் காரியமெல்லாம் எதற்கு. என் தோழி சாமியார்களைப் பற்றி சொன்னது மிகவும் சரிதான்.

கோமாளி (வசனம்): அப்படிப் போடு அருவாள. அது அதுக விரும்புனபடி காதல் பண்ணிக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுகிற சாதி இது. குறக்குலத்தில் பொறந்தது குற்றம்னு சொல்றாரு நாரதரு. முருகன் கலியாணம் செய்யணுமா? அவருக்குத்தான் ஏற்கனவே தெய்வானையோட கல்யாணம் ஆயிடுச்சே. சாமியாரு நல்லா காது குத்துறாரே. முற்றும் தொறந்த முனிவருக்கு இந்த மாமா வேலை எதுக்கு. பொம்பளைங்க விசயத்தில் அன்னியல இருந்து இன்னக்கி வரைக்கும் சாமியாருக சிலபேரு இப்படித் தான் போலிருக்கு.

வள்ளி: தங்களுக்கு இந்த காரியமெல்லாம் எதற்கு? இல்லறத்திலுள்ளவர்கள் முயற்சிக்க வேண்டிய காரியத் துக்கு துறவியாகிய தாம் ஏன் இவ்வளவு சிரமமெடுத்துக் கொள்ள வேண்டும்? அன்றியும் பிச்சைக்காரன் பிள்ளை யாகிய முருகனைக் கல்யாணஞ் செய்து கொள்ள என் மனமிசையாது.5

சே. இராமானுஜம், மு. இராமசாமி, அவ்வை நாடகாசிரியர் இன்குலாப் என பெண்ணிய நாடகாசிரியர்களின் வரிசை மெல்ல நீள்கிறது. பெண்கள் பெண்ணிய நாடகப்பிரதிகள் எழுத முன்வருவது இன்றியமையாத தேவையாக உள்ளது. கவிதை, நாவல், சிறுகதை எனப் பெண்களின் படைப்புக்கள் தமிழில் வெளிவருவது ஆரோக்கியமாக உள்ளது. எனினும் நாடகம் என்பது மக்களோடு நேரிடையாகவே உலவும் உன்னத ஊடகம். இந்த ஊடகத்தில் பெண்கள் நிறையப் பேர் எழுதவும் இயக்கவும் நடிக்கவும் முன்வரவேண்டும்.

மங்கை, ஜீவா, ப்ரீதம், பிரசன்னா ராமசாமி போன்ற பெண் நாடக இயக்குநர்கள் இன்று நவீன நாடக உலகில் பெண்ணிய நாடகம் பற்றிப் பேசவும் எழுதவும் இயக்கவும் செய்வது நம்பிக்கையளிக்கிறது.

மேலை நாடகங்களில் பெண்ணிய (Women's Theatre) நாடகம் என்று இயக்கங்களும் செயற்பாடுகளும் கருத்தியல்களும் அழுத்தம் பெறுகின்ற நிலையை ஒப்பிடும்போது தமிழ்ச் சூழலில் பெண்கள் பெண்ணிய நாடக இயக்கங்களை கூடுதலாகக் கட்டமைக்க வேண்டியுள்ள அவசரமும் அவசியமும் உள்ள காலமிது.

---

*1. டி.டி. சங்கரதாஸின் நல்லதங்காள் நாடகம் ப.31, 1937, கிருஷ்ணபிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டது.*

*2. சங்கரதாஸ் சுவாமிகள் நாடகம் - சத்தியவான் சாவித்திரி, ப.81, மு. கிருஷ்ணப்பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டது (1935)*

*3. சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய 'அரிச்சந்திரா' மயானகாண்டம், ப. 53, மு. கிருஷ்ணப்பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டது (1938)*

*4. கே. இராமானுஜம், ப.26-27, வெறியாட்டம்*

*5. தொடு நாடகங்கள், ப.75, (கந்தன் ஒ வள்ளி), NCBH வெளியீடு (2004)*



படிப்பகம்

www.padippakam.com

# தமிழக பழங்குடியினர் நிலவுரிமை

**2**

■ சிவகாமி

ஆறாவது 5 ஆண்டுத் திட்டம் முதல் ஒன்பதாவது 5 ஆண்டுத் திட்டம் வரை ஒதுக்கப்பட்ட நிதி புதிய பள்ளிக்கூடங்கள் , உண்டு உறைவிடப் பள்ளிகள் தொடங்கவும், விடுதிகள் கட்டவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெரிய பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கும் (ITDP இல்லாத பகுதிகளில்), மலைப்பகுதி பழங்குடிகள் கூட்டுறவு விற் பனைச் சங்கங்கள், வன ஊழியத் தொடர்பு கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்துவதற்கும், பழங்குடிப் பகுதிகளில் அடிப்படை வசதிகள், தொகுப்பு வீடுகள், மருத்துவ வசதிகள் ஆகியவற்றுக்கு செலவிடப் பட்டது. பெரிய பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயக் கடனுதவிகளும் வழங்கப்பட்டன. இவ்வளவு திட்டங்கள் செயல் படுத்தப்பட்ட பிறகு பழங்குடி மக்களின் நிலை என்ன?

- மேய்ச்சல், கைத்தொழில், மீன் பிடித்தல் போன்ற தொழில் களில் ஈடுபட்டிருந்தவர்கள் எண்ணிக்கை குறைந்து, விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 40 சதவிகிதம் அதி கரித்தது. (பாதுகாக்கப்பட்ட வனங்களில் செல்ல தடை ஏற்பட்ட தன் விளைவே இது.)

- பழங்குடி மக்களில் விவசாய உற்பத்தியாளர்களாக இருந் தவர்கள் கூலிகளாக மாறியுள்ளனர். அதேபோல் பெரிய சிறிய விவ சாயிகளின் எண்ணிக்கையும் குறைந்து வந்துள்ளது. ஆனால் மிகச் சிறிய அளவில் நிலம் வைத்திருப்பவரின் எண்ணிக்கை அதிகமாகி யுள்ளது. (அதாவது பெரிய அளவில் நிலம் வைத்திருந்தவர்கள் தங் கள் நிலத்தின் ஒரு பகுதியை இழந்து சிறு மற்றும் குறு விவசாயிகளா கவும், குறு சிறு விவசாயிகள் தங்கள் நிலங்களை முற்றிலும் இழந்து விவசாயக் கூலிகளாகவும் ஆகியுள்ளனர்.) இது கீழே உள்ள அட்ட வனை மூலம் விளங்குகிறது.

**1979-80, 1990-91 தமிழக ஆதிவாசிகள் கையிலிருந்த நில அளவுகள் .**

| அளவு/ஆண்டு | எண்ணிக்கையில் இருப்பது | மொத்தத்தில் % | மொத்த நிலப்பரப்பு | மொத்தப் பகுதியிலிருந்து% |
|---|---|---|---|---|
| விளிம்பு நிலையில் | | | | |
| 1979-80 | 25,446 | 53.06 | 11,675 | 14.99 |
| 1990-91 | 36,703 | 55.05 | 16,600 | 19.15 |
| சிறிய அளவில் | | | | |
| 1979-80 | 11,520 | 24.02 | 16,076 | 20.64 |
| 1990-91 | 17,370 | 26.05 | 27,275 | 29.59 |
| அரை நடுத்தரம் | | | | |
| 1979-80 | 7,175 | 14.96 | 19,658 | 25.23 |
| 1990-91 | 9,416 | 14.12 | 25,657 | 29.59 |

**1979-80, 1990-91 தமிழக ஆதிவாசிகள் கையிலிருந்த நில அளவுகள்**

| அளவு/ஆண்டு | எண்ணிக்கையில் இருப்பது | மொத்தத்தில் % | மொத்த நிலப்பரப்பு | மொத்தப் பகுதியிலிருந்து% | | |
|---|---|---|---|---|---|---|
| நடுத்தரம் | | | | | | |
| 1979-80 | 3,253 | 6.78 | 18,920 | 24.29 | 1990-91 | 2,948 |
| 4.42 | 16,476 | 19.00 | | | | |
| அதிக அளவில் | | | | | | |
| 1979-80 | 561 | 1.17 | 11,577 | 14.86 | | |
| 1990-91 | 240 | 0.36 | 3,686 | 4.25 | | |
| மொத்தம் | | | | | | |
| 1979-80 | 47,955 | 100.00 | 77,906 | 100.00 | | |
| 1990-91 | 66,677 | 100.00 | 86,694 | 100.00 | | |

ஆதாரம்: உலக விவசாயக் கணக்கெடுப்பு 1979-80, தமிழ்நாடு மாநில மற்றும் கோட்ட அளவிலான பட்டியல் 1989,



படிப்பகம்

www.padippakam.com

இம்மாற்றங்களுக்குக் காரணம் 1980-க்குப் பிறகு காய்கறிகள், பழவகைகள், காப்பி, தேயிலை மற்றும் மரவள்ளிக்கிழங்கு போன்ற வைகளை அதிக அளவில் பயிரிடத் தொடங்கியதாகும். 1980-க்கு முன்போ விவசாயத்தில் தானியப்பயிர்கள் 84.39 சதம் நிலங்களில் பயிராகி வந்தன. வணிகப் பயிர்கள் அதிகமாகப் பயிரிடத் தொடங் கியதும் கடன் ஏறியது. வணிக மையத்தின் விளைவாக பழங்குடி மக்கள் நிலங்களை சமவெளி மக்களுக்கு விற்கத் தொடங்கினர்.

*1979-80* மற்றும் *1990-91* காலகட்டத்தில் பழங்குடிகள் வசமுள்ள மொத்த நிலப்பரப்பு *8789* ஹெக்டேர் உயர்ந்துள்ளது. இதற்குக் குறிப்பான காரணம் தெரியவில்லை. பழங்குடிகளுக்கென நிலங்களை ஒதுக்கியதற்கான அரசு ஆணைகளும் இந்தக் காலகட் டத்தில் பிறப்பிக்கப்படவில்லை. திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும், கானிக்காரர்களை வனப்பகுதியில் சுமார் 400 ஏக்கர் பரப்பில் விவசாயம் செய்ய அனுமதித்துள்ளது மட்டும் தெரிகிறது. ஒருவேளை, வனப்பகுதியின் விளிம்பு பரப்புகளில் விவசாயம் செய்யத் தொடங்கியிருக்கலாம். எனினும் இதற்கான தீர்மானமான காரணங்களை சிறப்பு ஆய்வுகள் மூலமே பெற முடியும்.

விவசாயத்தைச் சார்ந்த கால்நடைத் தொழில்களிலும், வன விளை பொருள்களைச் சேகரிக்கும் தொழிலும் ஈடுபட்டிருந்த கோத்தர்கள், குறும்பர்கள், பனியர்கள் மற்றும் புலையர்கள் போன்ற வர்கள் தங்கள் பாரம்பரியத் தொழில்களை கைவிட்டு விவசாயக் கூலிகளாகியுள்ளனர். 1991-இல் மொத்தத்தில் 4% பேர் மட்டுமே இரண்டாம் நிலை என்று சொல்லப்படுகின்ற வருவாய் சிறிதளவு பெறக்கூடிய தொழிலுக்கு மாறியுள்ளனர். ஐந்து சதவிகிதம் பேர் சர்வீஸ் செக்டர் என்று சொல்லப்படுகிற, ஓரளவு வருமானம் பெறக்கூடிய தொழில்களுக்கு மாறியுள்ளனர். மீதி 91 விழுக்காடு பழங்குடிகள் நிலத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

ஆக, ஆங்கிலேயருக்குப் பிறகு, பழங்குடி மக்களைப் பொறுத் தவரை தெளிவான அரசியல் சாசனம் / வரையறுக்கப்பட்டும், 5-ஆவது அட்டவணைக்குள் தமிழகப் பழங்குடிகளைக்கொண்டு வராமல், அவர்களின் கல்வி, அடிப்படை வசதிகள், மருத்துவ வசதிகள் மற் றும் மேம்போக்கான சில மேம்பாட்டுத் திட்டங்களே அறிமுகப் படுத்தப்பட்டன. இதன் விளைவாக பழங்குடி மக்கள் மேன்மேலும் நிலத்தை இழக்க ஆரம்பித்தனர்.

கார்டைட் என்ற தொண்டு நிறுவனம் 2001-ஆம் ஆண்டு தமிழகத்தின் *13* மாவட்டங்களில், 27 பிரிவினரிடையே, 1527 கிராமங் களில் உள்ள 62,143 பழங்குடி மக்களை ஆய்வு செய்தது. அந்த ஆய் வறிக்கை பழங்குடிகளில் 67 சதவிகித மக்கள் வேலையற்றவர் களாக இருக்கிறார்கள் என்று கூறுகிறது. அவ்வறிக்கையின்படி,15 சத விகிதம் மட்டுமே பயிரிடுபவர்கள். நிலங்களை இழந்ததன் காரண மாகவே இவர்களில் பெரும்பகுதியினர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர் எனக் கூறுகிறது.

ஆங்கிலேயர் காலத்தில் உருவாக்கப்பட்ட வனத்துறையினால் நிலம் அந்நியமாக்கப்பட்டது. இது ஆங்கிலேயர்களுக்குப் பிறகும் தொடர்ந்தது. 1972-இல் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் உருவாக்கப்பட்டு வன சரணாலயங்கள், தேசியப் பூங்காக்கள் உருவாக்கப் பட்டன. 1991 வரை 17 சரணாலயங்கள் அமைக்கப் பட்டன. பழனி மலையில் புதிதாக 420 ச.கி.மீ. பரப்பு உள்ள புதிய வனவிலங்கு சரணாலயம் அமைக்கப்பட்டது. அதனால் வனங்களுக்குள் வாழ்ந்து வந்த பழங்குடிகள் செட்டில்மென்ட் பகுதியிலும், தொகுப்பு வீடுகளிலும் குடியமர்த்தப்பட்டனர். தமிழக அரசின் அணைக்கட்டு களினாலும், மின் உற்பத்தியினாலும் மேலும் நிலம் பறிபோனது. காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் இருளர்கள் அரிசி ஆலைகளிலும், செங்கற் சூளை களிலும் கொத்தடிமைகளாகத் துவங்கினர். மலைப் பகுதிகளில் பழங்குடி நிலங்களுக்கு பட்டா இல்லாததால், பழங்குடி அல்லா தோர் இந்நிலையைப் பயன்படுத்தி அவர்களது நிலங்களைப் பெற் றுக்கொண்டனர். நீலகிரி மலையில் பல இடங்களில் பழங்குடி மக் களின் நிலங்களை நீண்டகால குத்தகை என்ற அடிப்படையில் பழங்குடி அல்லாதாரே அனுபவித்து வருகின்றனர்.

தொடர்ந்து பழங்குடி மக்களிடமிருந்து நிலங்கள் பறிபோவது தடுக்கப்படாவிடில் பழங்குடி இன அழிவை தடுத்து நிறுத்த முடி யாது என்று 1960-இல் பழங்குடி மக்களுக்கான தேசிய கமிசன் கூறி யிருந்தாலும், 1969-இல் 'சிலு ஆவோ' கமிட்டி, 1972-இல் 5-ஆவது அட்டவணைப்படுத்தலை திறனாய்வு செய்து, இதே கருத்தை வலி யுறுத்தி வந்தாலும், 1976-இல் 5-ஆவது அட்டவணைப் பிரிவுக்கு திருத்தம் கொண்டு வந்து அங்கங்கே பெருவாரியாக சிதறி வாழ்ந்த பழங்குடி மக்களையும் அட்டவணைக்குள் கொண்டு வரவேண்டும் என்றதன்படி மத்தியப் பிரதேசம், ஒரிசா, பீகார், ராஜஸ்தான், குஜராத், மகாராஷ்டிரம், இமாசலப் பிரதேசம் போன்ற மாநிலங்கள் 5-ஆவது அட்டவணை விரிவுபடுத்தல் செயல்பாட்டைத் துவக்கினா லும், தமிழகம் மட்டும் பழங்குடிகளை 5-ஆவது அட்டவணைக்குள் கொண்டு வராமல் மௌனம் சாதித்து வருகிறது. 1989-இல் தமிழக அரசு மலைப்பகுதிகளில் அரசு நிலங்கள் வனச் சொத்து ஆக்கிர மிப்பு மற்றும் இயற்கை வளங்கள் பாதுகாப்பு என்றதொரு ஆய்வை மேற்கொண்டது. திரு. சி. தங்கராஜ், இ.ஆ.ப. தலைமையில் உயர் மட்டக்குழு ஒன்று ஆய்வினை மேற்கொண்டு 1990-இல் தமது அறிக்கையை சமர்ப்பித்தது. அதில் மிகவும் முக்கியமானது ஒவ் வொரு பழங்குடி குடும்பத்திற்கும் நீலகிரி, கொடைக்கானல், கன்னி யாகுமரி பகுதிகளில் 2 ஏக்கர் வரையும், மற்ற மாவட்டங்களில் வாழும் பழங்குடி மக்களுக்கு 5 ஏக்கர் நிலமும் வழங்க வேண்டும் என்பதாகும். 1999-



படிப்பகம்

www.padippakam.com

இல் பழங்குடி ஆலோசனைக் குழு ஏற்படுத்தப் பட்டது. ஆனால் பழங்குடி பகுதிகளை 5-ஆவது அட்டவணையில் கொண்டு வருவதும், நிலம் பகிர்ந்து வழங்குவதும் இதுவரை பரிசீலிக்கப்படவே இல்லை என்பது ஆய்வுக்குறியதாக இருந்து வருகிறது.

■

## IV. தமிழகப் பழங்குடிப் பகுதிகளை 5-ஆவது அட்டவணைக்குள் ஏன் கொண்டுவரவில்லை?

அரசியல் சாசனத்தின் 244 (1) பிரிவின்படி, குடியரசுத் தலைவர் மாநில ஆளுநர்களைக் கலந்தாலோசித்து பழங்குடிகளுக் காக அட்டவணைப் பகுதிகளை அறிவிப்பார்.

ஒரு பகுதியை 5-ஆவது அட்டவணையின்கீழ் அட்டவணைப் பகுதியாக அறிவிக்க வேண்டுமானால் கீழ்க்கண்ட வரையறைகளுக் குள் அது அடங்க வேண்டும்.

◆ பழங்குடி மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியாக இருக்க வேண்டும்.

◆ இப்பகுதி போதுமான பரப்பளவைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

◆ நிர்வாக ரீதியாக அடையாளம் காணும் வண்ணம் மாவட்ட மாகவோ பஞ்சாயத்து ஒன்றியம் அல்லது தாலுக்கா என்ற நிர்வாக அளவுகளில் அடங்க வேண்டும்.

◆ பிற பகுதிகளைக் காட்டிலும் பொருளாதாரத்தில் பின் தங்கியதாக இருக்க வேண்டும்.

இந்த வரையறைகளுக்குள் அடங்குமானால் மாநில அரசின் தீர்மானத்துடன் இவை பரிசீலிக்கப்பட்டு குடியரசுத் தலைவரால் அறிவிக்கப்படும். ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட பகுதிகளை நீக்கு தல், மாற்றம் செய்தலுக்கும் இவ்விதிகள் பொருந்தும்.

***இந்த 5-ஆவது அட்டவணையின் கீழ் பழங்குடிப் பகுதிகள் வருவதால் என்ன லாபம்?***

1. பழங்குடிகளின் நிலங்களைப் பிறர் அபகரிக்க முடியாது.

2. இப்படி அறிவிக்கப்பட்ட பகுதிகளில் பழங்குடிகளுக்கு கடன் கொடுப்பது-வாங்குவது என்ற விதிகள் நெறிமுறைப்படுத் தப்படும்.

இதனால் பழங்குடி மக்கள் கடனாளிகளாவது தவிர்க்கப்படும்.

***தமிழகத்தில் இதுவரை 5-ஆவது அட்டவணைப் பகுதி நடைமுறைக்கு வராததற்கான காரணங்களாவன:***

❖ மற்ற மாநிலங்களைக் காட்டிலும் பழங்குடிகளின் மக்கள் தொகை மிகக் குறைவு. மொத்த மக்கட்தொகையில் பழங்குடியினர் ஒரு சதவிகிதம் மட்டுமே.

❖ பழங்குடி மக்கள் பெரும்பாலும் மலைப்பகுதிகளில் வசிப் பதால் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது ஒரே இனப் பழங்குடி மக்களில் பாதிப் பேர் ஒரு மாநிலத்திலும், மீதிப் பேர் அண்டை மாநிலத்திலும் வாழும் சூழல் உருவாகியது. நீலகிரி மாவட்டப் பழங் குடிகள் கேரளம், கர்நாடகம், தமிழ்நாடு என்று மூன்றாகப் பிரிக்கப் பட்டுவிட்டனர். இதேபோல் மாவட்ட வாரியாகவும் பழங்குடிகள் பிரிக்கப்பட்டனா. சேர்வராயன் மலை பழங்குடிகள் தர்மபுரி மாவட் டத்திற்கும், சேலம் மாவட்டத்திற்கும் சிதறடிக்கப்பட்டனர். ஒரே பஞ்சாயத்து ஒன்றியத்தில் இருக்க வேண்டியவர்கள் வெவ்வேறு பஞ்சாயத்து ஒன்றியங்களிலும், ஒரே கிராமப் பஞ்சாயத்தில் இருக்க வேண்டிய பழங்குடிகள் வெவ்வேறு கிராமப் பஞ்சாயத்திலும் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்தகைய பிரித்தாளும் முறையினால் பழங் குடிகள் நிலப்பகுதி என்று தனியாக எதையும் வரையறுக்க முடியாத சூழல் உருவாகியுள்ளது.

❖ ஆதிவாசி உறைவிடங்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று தொலைவிலும் மலைப்பகுதிகளிலும் வனப்பகுதிகளிலும இருப் பதால் அவர்கள் ஒன்றுசேர்ந்து தங்கள் கோரிக்கைகளை முன் நிறுத்த வில்லை.

❖ 5-ஆவது அட்டவணை நடைமுறைக்கு வந்தால் தங்களுக்கு அதிகாரம் இல்லாமல் போகும் என அரசு நிர்வாகங்கள் இதனை ஆதரிப்பதில்லை என்பதோடு அட்டவணைச் செயல்பாட்டுக்கு முட்டுக்கட்டைகளும் விதிக்கின்றார்கள் என ஆய்வாளர்கள் சிலர் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

❖ நிலம் பறிபோனதால் பழங்குடியினர்கள் சிதறி வாழ தலைப் பட்டதும் இது கைகூடாமல் போனதற்குக் காரணம்.



படிப்பகம்

இதற்கிடையில் 1998-இல் அக்கார்டு என்ற தொண்டு நிறு வனம் 9 மாவட்டங்களின் உள்ள பழங்குடிகளிடமிருந்து நிலம் பறிக்கப்பட்டதைக் குறித்த ஆய்வு செய்தது. அவ்வாய்வறிக்கையின் படி கணக்கெடுப்புக்கு உட்படுத்தப்பட்ட 3341 குடும்பங்களில் 1535 குடும்பங்கள் நில இழப்புக்கு ஆளாகி உள்ளார்கள். பெரும்பாலும் பட்டா நிலங்களே கைமாறியுள்ளன. இந்த நிலப்பறிப்புக்கு உடந்தையாக கிராம நிர்வாகம் இருந்துள்ளது. சில மாவட்டங்களில் கிராம நிர்வாகமே காரண கர்த்தாவாகவும் இருந்துள்ளது. பழங்குடி அல்லாதோர் ஆயுதங்களுடன் வந்து மிரட்டி வெற்றுத்தாளில் கை யெழுத்து வாங்கியது விவசாயிகள் ஆய்வில் பதிவு செய்யப்பட்டுள் ளது. வரி செலுத்தாமல் பட்டாக்கள் ரத்து செய்யப்பட்ட நிகழ்வு களும் இதில் அடக்கம். ஒப்படை கடனுக்காக நிலத்தை எழுதிக் கொடுத்தவர்களும், சாராயம் குடிக்கவென்று நிலத்தை விற்றவர் களும் இதில் அடக்கம்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாக ITDP பகுதிகளில் பழங் குடியினிரிடமிருந்து நிலம் வாங்குவது தடை செய்யப்பட்டிருந் தாலும், இந்த ஆணைக்கு சட்டப்பாதுகாப்பு இல்லாததால் பழங் குடியினரின் நிலம் தொடர்ந்து கைமாறி வருகிறது.

இவ்வகையில் நிலம் பறிக்கப்பட்ட விவரம் பின்வருமாறு:

### *பழங்குடி நிலங்கள் பறிக்கப்பட்டதில் 1980-க்குப் பிறகு நடந்த சில நிகழ்வுகள்*

#### *நீலகிரி மாவட்டம்*

1984-இல் 75 சென்ட் பழங்குடியினர் நிலம் ரூ.100-க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

பழங்குடி மக்கள் தங்கள் நில ஆவணங்களை (பட்டா போன்றவைகள்) செட்டிகளிடம் பாதுகாப்புக்காக கொடுத்து வைத் துள்ளனர். இவை தவறாகப் பயன்படுத்தப்பட்டதால் நிலங்களை இழந்துள்ளனர்.

பழங்குடி அல்லாதவரின் பசு மாடு ஒன்று பழங்குடியின் பரா மரிப்பில் இறந்ததன் காரணமாக, அப்பழங்குடியின் நிலம் பசு மாட்டு சொந்தக்காரரால் அபராதம் என்ற வகையில் எழுதி வாங்கப் பட்டது.

பழங்குடி அல்லாதார் தங்கள் எல்லைகளுக்கு அருகாமையில் உள்ள நிலங்களை, தங்களது வேலிகளை அங்குலம் அங்குலமாக நகர்த்தி பறித்துள்ளனர்.

குடியிருக்க இடமில்லை என்று பழங்குடி மக்களிடம் இலவசமாக சிறிதளவு நிலம் பெற்றவர்கள் அவர்களின் மொத்த நிலங்களையும் உரிமை கொண்டாடி உள்ளனர்.

கடலூர் தாலுக்காவில் கேரளாவில் வயநாடு செட்டிகள் பழங்குடி நிலங்களை குத்தகை என்ற பெயரில் பறித்ததோடு அவர் களைக் கொத்தடிமைகளாக்கினர்.

#### *கோவை மாவட்டம்*

நிலவரி செலுத்தாத காரணங்களினால் பட்டாக்கள் ரத்து செய்யப்பட்டு பழங்குடி அல்லாதாருக்கு வழங்கப்பட்டன. பழங்குடி நிலங்கள் கூட்டுப்பட்டாவில் இருந்த நிலையில், ஒரு பட்டாதாரர் பிற பட்டாதாரருக்கு தெரியாமல் பழங்குடி அல்லா தாருக்கு நிலத்தை விற்ற செயல்களை ஆய்வுகள் கண்டிறிந்துள்ளன.

கோவை விலங்கியல் பூங்காவிற்கு 250 ஏக்கர் மட்டுமே அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்தும் பழங்குடி மக்களுக்குச் சொந்தமான நிலங்களையும் சேர்த்து 400 ஏக்கரில் இப்பூங்கா 1986-இல் உருவாக்கப்பட்டது. இது குறித்த பழங்குடி மக்களின் தொடர்ந்த புகார்களை மாவட்ட நிாவாகம் புறந்தள்ளியுள்ளது.

#### *ஈரோடு மாவட்டம்*

பத்திரங்கள், நில ஆவணங்கள் பற்றிய விதிமுறைகள் தெரி யாததால் நிறைய சோழகர்கள் நிலங்களை இழந்துள்ளனர். குத்தி யானத்தூர் தாலுக்காவில் பழங்குடி மக்களிடையே ஏற்பட்ட பகை மையை சாதகமாக்கி தண்டபாணி கவுண்டர் என்பவர் நிலத்தைத் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

ஆறு குழந்தைகளின் தாயான ஒரு விதவைப் பெண் தனது ஐந்து ஏக்கர் நிலத்தை வெறும் 1,400 ரூபாய்க்கு விற்றார். ஆனால் கையில் கிடைத்ததென்னவோ ரூ.700 தான்.

பத்து பேருக்கு சொந்தமான தலா பத்து ஏக்கர் நிலம் வறுமை காரணமாக கேழ்வரகு தானியத்துக்காக விற்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் பழங்குடி மக்களிடமிருந்து நிலங்களைப் பெற துப்பாக்கியைக் காட்டி மிரட்டிய செய்திகளையும் கள ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

www.padippakam.com

சில இடங்களில் கிராம நிர்வாக அதிகாரி பழங்குடி மக்களி டம் நயமாகப் பேசி, அவர்களுக்கு அதிக அளவில் நிலங்கள் தேவை யில்லை என்ற கருத்தைப் பதிய வைத்து அந்நிலங்களை பிறருக்கு விற் பதற்கு காரணமாக இருந்துள்ள செய்தியும் ஆய்வில் வெளியாகி உள்ளது.

*சேலம் மாவட்டம்*

இங்குள்ள பழங்குடிகளில் 40% பேர் நிலமற்றவர்கள். இவர்கள் அனைவரும் நிலப்பறிப்பின் காரணமாக தங்கள் நிலங்களை இழந்துள்ளனர். சிலர் வன இலாக்காவிடம் தங்கள் நிலங்களை இழந் துள்ளனர். சுமார் 171 குடும்பங்கள் பழங்குடி அல்லாதாருக்கு தங்கள் நிலங்களை சொற்ப விலைக்கு விற்றுள்ளன. வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தாத வகையில் நிலங்களை இழந்தவர்களே அதிகம்.

*தர்மபுரி மாவட்டம்*

இங்குள்ள பழங்குடிகள் 1 முதல் 5 ஏக்கர் நிலங்களை வைத் திருந்தனர். ஆனால் கடந்த நான்கு வருடங்களாக இந்நிலங்கள் பெரு மளவில் பழங்குடி அல்லாதாருக்கு மாற்றம் செய்யப்பட்டு வந்துள் ளது ஆய்வின் மூலம் புலப்படுகிறது. வன இலாக்கா 1975-இல் பழங் குடி நிலங்களில் காற்றாடி மரங்கள் (சில்வர் ஓக்) நட்டுள்ளது. கொல்லிமலை நீர்மின் திட்டத்திற்காக பழங்குடி மக்கள் அவர்கள் நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு இருந்தனர். பிறகு இது V.R.D.P. (Village Reconstruction and Development Project) போன்ற அமைப்பு களினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் பாக்ஸைட் கம்பெனிகளுக்கு (சுரங்கங்கள் தோண்டு வதற்காக) பழங்குடி மக்கள் தங்கள் நிலங்களை குத்தகைக்கு விடுவ தோடு விற்றும் வருகின்றனர்.

*செங்கல்பட்டு மாவட்டம்*

ஸ்ரீபெரும்புதூர் ராஜீவ் வாந்தி நினைவுச் சின்னம் எழுப்பு வதற்காக 50 பழங்குடி குடும்பங்கள் தங்கள் உறைவிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டன. அவர்களுக்கு மாற்று வாழ்வாதாரங்கள் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை.

சென்னையிலிருந்து 41 கி.மீ. தொலைவிலுள்ள தண்ணீர்குளம் கிராமத்தில் இருளர்கள் பல வருடங்களாக விவசாயம் செய்து வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு பட்டா தொடர்ந்து மறுக்கப்பட்டு வந்தது. சில வருடங்களுக்கு முன் 5 பேருக்கு சொந்தமான நிலங்களை டி.ஐ. சைக்கிள் நிறுவனம் எடுத்துக்கொண்டது.

*வட ஆற்காடு மாவட்டம்*

இங்கு இருளர்கள் அதிகம் வசிக்கின்றார்கள். கணக்கு எடுக் கப்பட்ட 96 குடும்பங்களில் 9 குடும்பங்கள் நிலப்பறிப்புக்கு ஆளாகி யுள்ளன. ஆனால் 66 சதவிகிதம் பேர் நிலமற்றவர்கள். இவர்கள் எப்படி தங்கள் நிலங்களை இழந்தார்கள் என்ற விவரம் தெரிய வில்லை.

*விழுப்புரம் மாவட்டம்*

1976-இல் மறு நில அளவை செய்தபோது பழங்குடி மக்கள் தங்கள் நிலங்களுக்கான ஆதாரங்களை சமர்ப்பிக்காததால் அந்நிலங் கள் வனப் பகுதியில் சேர்க்கப்பட்டு விட்டன. இதை எதிர்த்து தென் னாற்காடு சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழு சென்னை உயர் நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்று தாக்கல் செய்து தடையாணை பெற் றது. பிறகு சமரசம் ஏற்பட்டு ஒரு குடும்பபத்திற்கு 2 ஹெக்டேர் வீதம் 5000 பழங்குடி குடும்பங்களுக்கு நிலம் வழங்கலாம் என தீர்மானிக் கப்பட்டது. இத்தீர்மானம் காட்டுத் தீ போல் பரவியதால் பழங்குடி யல்லாதார் இந்நிலங்களில் ஊடுருவினர். இன்று வரை பழங்குடி மக்களுக்கு நிலம் வழங்கப்படவில்லை. 5000 பழங்குடி குடும்பங்களும் சிதறிவிட்டதால், அவர்களை அடையாளம் காணமுடியவில்லை.

## V. நிலப் பறிப்பு - சில உண்மைகள்

இதுவரை ஆங்கிலேய ஆட்சியிலும், சுதந்திர இந்தியாவிலும் பழங்குடி நிலங்கள் பறிக்கப்பட்ட ஐம்பதாண்டு கால நிகழ்வுகளைக் கண்டோம். இதன் மூலம் பெறப்படும் முடிவுரைகளையும் படிப் பினைகளையும் பற்றி இனி காண்போம்.

▲ காலனியாதிக்கத்தில் பழங்குடி மக்களின் அறியாமை யினால்தான் நிலம் பறிக் கப்பட்டது என்பது தவறு. 'ஆங்கிலேயர் களின் பேராசையால் விளைந்த சூழ்ச்சியினால்தான் பழங்குடி மக் களிடமிருந்த நிலங்கள் பறிக்கப்பட்டன.

▲ பழங்குடிப் பகுதிகளில் பயிரிடப்பட்ட காப்பி, தேயிலை போன்ற பணப்பயிர்கள் பழங்குடி அல்லாதாரின் பொருளாதாரத்தை உயர்த்தவே பயன்பட்டன என்பதோடு பழங்குடி மக்களை தோட் டக் கூலிகளாகவும், பழங்குடி அல்லாதாரைச் சார்ந்தே வாழ்க்கை நடத்த முடியும் என்ற நிலைக்கும் தள்ளியுள்ளன.


படிப்பகம்

www.padippakam.com

▲ பழங்குடிகள் நிலம் பழங்குடி அல்லாதாருக்கு சென்று சேர்ந்ததில் விவசாயம் வணிகமயமானது ஒரு உதாரணம் என்றாலும் அரசாங்கத்தின் வரிவிதிப்புக் கொள்கையோடு கீழ்மட்ட அதிகாரி களின் முழு ஒப்புதலுமே முக்கியக் காரணங்கள்.

▲ பழங்குடி மக்கள் நிலங்களை காலனியாதிக்கத்தின் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், நீதிபதிகளும் வாங்கியதுபோல, காலனி யாதிக்கத்திற்குப் பிறகும் அரசியல்வாதிகள், செல்வாக்குள்ள தொழி லதிபர்கள், அரசு அதிகாரிகள் பலர் பழங்குடி நிலங்களை வாங்கி யிருக்கலாம். இவ்வாறு இவர்கள் வாங்குவதற்கு தடைகள் ஏதும் இல் லாதிருப்பதும் ஒரு காரணம்.

▲ காலனியாதிக்கத்திற்குப் பிறகு நடந்த நிலக் கொள்ளைக்கு அரசின் சட்டதிட்டங்கள், நடைமுறைகள் பழங்குடி மக்கள் அறியாத நிலையும், அவற்றை அவர்களுக்கு விளக்கிச் சொல்ல பிரத் யேகமாக எந்த நடவடிக்கைகளும் எடுக்காததுமே காரணம் என்ப தோடு, அவர்களுக்கு விளக்கிச் சொல்ல வேண்டிய நில வருவாய் அதிகாரிகள் தாங்களே உடந்தையாக இருந்திருக்கிறார்கள் என்பதும் அறியப் படுகிறது.

▲ ஏறக்குறைய 90 சதவிகிதம் பழங்குடிகள் இன்றும் நிலத்தை நம்பியே வாழ்க்கை நடத்துகிறார்கள். அரசின் பலவிதத் திட்டங்களால் அவர்கள் பொருளாதாரம் முன்னேற்றமடை யவில்லை. பாதிப்பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கிறார்கள்.

▲ பழங்குடிகளுக்கான கல்வி, அரசு வேலை வாய்ப்பில் ஒதுக்கீடு மிகச் சிறிய அளவிலேயே பயனளித் துள்ளது. பழங்குடிகளின் பொருளாதார நிலை இவற்றால் மேம்படவில்லை.

▲ அரசின் வனக் கொள்கை பழங்குடி மக்கள் வாழ்வைச் சீரழித்துள்ளது. பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி, வன விலங்குகள் சரணாலயங்கள், வனப்பூங்காக்கள் அமைப்பதில் பழங்குடி மக்கள் கலந்தாலோசிக்கப்படவில்லை.

▲ அரசின் வனக்கொள்கையில் வனப்பகுதியில் உள்ள தாவரங்களும், விலங்குகளும் பாதுகாக்கப்பட வேண்டியவை என்ற கருத்து மட்டுமே பதிந்துள்ளது. வனத்தோடு இணைந்து வாழ்க்கை நடத்தும் பழங்குடி மக்களை வனத்தில் ஒரு பகுதியாக கவனிக்கப்படவில்லை. இதன் விளைவாகவே அவர்கள் வனப்பகுதியிலிருந்து வெளியேற்றம் செய்யப்பட்டனர்.

▲ வீ. கார்த்திகேயன் கமிட்டி, சி. தங்கராஜ் கமிட்டி, பூரியா கமிட்டி என்று பலவித மத்திய-மாநில அரசுகளின் கமிட்டிகளினால் மேற்கொள்ளப்பட்ட பழங்குடி மக்கள் பற்றிய ஆய்வு முடிவுகளை பழங்குடி மக்களுக்கு சென்று சேர்க்காததோடு, அவைகளை நடை முறைப்படுத்த இதுவரை எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை அரசுகள்.

▲ ஐந்தாவது அட்டவணைப்படுத்துதல் என்பது பழங்குடி மக்கள் முன்னேற்றத்திற்கு மிகவும் அடிப்படையான ஒன்று. பல மாநிலங்கள் இதில் ஆர்வமும், அக்கறையும் காட்டி வரும்போது, தமிழகம் மட்டும் மௌனம் சாதித்து வருகிறது.

▲ அணைக்கட்டு, நீர்மின் திட்டம் போன்ற பல அரசு திட்டங்களுக்காக பழங்குடி நிலங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவர்களுக்கு அதனால் நன்மை ஏதும் விளையாததோடு, உரிய இழப்பீடும் கொடுக்கப்படவில்லை.

▲ தொடர்ந்த நிலப்பறிப்பின் மூலம் பழங்குடிகள் அடை யாளமற்ற உதிரிகளாக்கப்பட்டதினால், அவர்களுக்கு பழங்குடிச் சான்று வழங்குவதில் தாமதமும் சிக்கலும் ஏற்பட்டுள்ளது.

▲ பழங்குடிப் பகுதிகளில் பழங்குடி அல்லாதோர் குடியேற்றம் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே வருகிறது. விளைவாக பழங்குடிகள் நிலமிழப்பது தொடர்கிறது.

## VI. பழங்குடிகள் செய்ய வேண்டியது என்ன?

இக்கேள்விக்குள் போகுமுன்பாக இதையொட்டிய வேறு சில கேள்விகளும் எழுகின்றன.

● முதலில் பழங்குடி மக்கள் தங்கள் நிலங்கள் பல வகையிலும் பறிக்கப்படுவதை அறிந்திருக்கிறார்களா?

● அப்படி அறிந்திருந்தால், அவர்கள் மேற்கொண்ட நடவடிக் கைகள் என்ன?

● பழங்குடி மக்களுக்காகத் தொண்டாற்றும் நிறுவனங்கள் இவ்விஷயத்தில் எவ்வகையில் கவனம் செலுத்தியிருக்கிறார்கள்?

பழங்குடி மக்கள் தங்கள் நிலங்கள் பறிக்கப்படுவதை அறிந்திருக் கிறார்கள். நிர்வாக இயந்திரத்தின் அணுகுமுறைகள் விதிமுறை களைப் பற்றியும் பரவலாக அறிந்து இருக்கிறார்கள். புதிய கோடாங்கி மாத இதழ் பழங்குடி மக்களின் வாய்மொழிப் பதிவுகளைத் தொகுத்தபோது, வன இலாக்காவையும், பழங்குடி அல்லாதோரின் வஞ்சகச் செயல்பாடுகளையும் பழங்குடி மக்கள் துணி வுடன் விவரித் தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com
அப்பதிவுகள் தனிப் புத்தகமாக தொகுக்கப்பட்டுள்ளது. நிலம்தான் தங்கள் வாழ்க்கையின் ஆதாரம் என்பதையும் அம்மக்கள் அறிந்திருக்கிறார்கள். அதிகாரத்தில் இருப்பவர்களின் ஊழல்கள் அவர்களிடையே பிரசித்தம். ஆகையால் நிலப்பறிப்பு பற்றிய விழிப் புணர்வு அதிகமாகவே உள்ளது.

ஆனால் கடன் தொல்லை, வறுமை இவற்றிலிருந்து நிலங்களை விற்க இவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறாகள் என்பதே உண்மை.

அறிதலுள்ள மக்கள் தங்கள் எதிர்ப்புகளை பல வழிகளில் வெளிப்படுத்தியுள்ளார்கள். சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் களின் அலுவலகங்களில் குவிந்து கிடக்கும் புகார் மனுக்கள் ஒரு வகை என்றால், கோரிக்கைகளை வலியுறுத்தப் போராடியது மற் றொரு வகை. திருநெல்வேலி கானிக்காரர்கள் நிலப்பறிப்புக்கெதி ராக திரண்டெழுந்திருக்கிறார்கள். 2001 முதல் நாளது வரை தொடரு கிறது கோவை மாவட்டத்திலுள்ள தூவைப்பதி இருளர்கள் போராட்டம். கோவையைச் சேர்ந்த தொழிலதிபரின் தன்முனைப் பில் தோன்றிய தனியார் உயிரியல் பூங்காவுக்கு பழங்குடி மக்கள் நிலங்கள் அபகரிக்கப்பட்டன. நடந்த போராட்டத்தில் அப்பகுதி இருளர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். கொடைக்கானல் பகுதியிலுள்ள பலியர் நிலங்களை மன்னாடியார்கள் அனுபவித்து வருவதை எதிர்த்தும், ஜே.ஸி. நாடார் என்பவர் வளைத்துப்போட்ட பழங்குடி நிலங்களை மீட்கவும் நடந்த போராட்டத்தில் பங்கு கொண்டு திரளான பலியர்கள் சிறை சென்றார்கள். தர்மபுரி மாவட் டத்திலும் நிலப்பறிப்பை எதிர்த்துப் போராட்டம் நடந்துள்ளது. அவர்களின் போராட்டச் செய்திகள் விரிவாக தொகுக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது.

அதேபோல் பழங்குடி மக்களுக்காக தொண்டாற்றும் தன் னார்வ நிறுவனங்களும் இந்நிலப்பறிப்பு விஷயத்தை முழுமையாக உணர்ந்தவர்களே. விளைவாக கார்டைட் (CORDAID) நிறுவனமும், அக்கார்ட் (ACCORD) தொண்டு நிறுவனமும், தமிழகப் பழங் குடியினர் சங்கமும் இணைந்து ஆய்வுகள் நடத்தி நிலப்பறிப்பு விஷ யங்களை அம்பலப்படுத்தி உள்ளார்கள்.

சமீபத்தில் இருளர் பாதுகாப்பு சங்கமும் புதிய கோடாங்கியும் இணைந்து பழங்குடியினர் நிலவுரிமை கருத்தரங்கை தொட்டித் தோப்பு என்னும இருளர் கிராமத்தில் நடத்தியது.

மேற்கண்ட நடவடிக்கைகள் தமிழகப் பழங்குடி சமூகத்தில் மிகப் பெரிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சமீபத்தில் மத்திய அரசு தேசியப் பழங்குடிக் கொள்கை உருவாக்கத்திற்கான விவாதத்தை ஊட்டியில் நடத்தியபோது கர் நாடகா, கேரளா, தமிழ்நாட்டைச் சேர்ந்த பல பழங்குடித் தலைவர் கள், தமிழகம் 5-ஆவது அட்டவணைத் திட்டத்தை செயல்படுத் தாததை வன்மையாகக் கண்டித்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நாம் மேற்கொண்டு செய்ய வேண்டியது என்ன? நமது இலக்குகள் யாவை?

நமது இலக்குகளை கீழ்க்கண்டவாறு வரையறுக்கலாம்.

● முதல் இலக்காக பழங்குடிப் பகுதிகளை அரசியல் சாசனப் பிரிவின் 5-ஆவது அட்டவணைக்குக் கீழ் கொண்டு வருதல்.

● சிதறி வாழும் பழங்குடியினர் குடும்பம் ஒன்றுக்கு சி. தங்கராஜ் கமிட்டி பரிந்துரையின்படி 5 ஏக்கர் நிலம் வழங்கச் செய்தல்.

● மேற்கண்டவை நிறைவேறவும், அவற்றைப் பாதுகாக்கவும் தமிழக அளவில் தகுந்த சட்டங்கள் இயற்ற நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல்.

இம்மூன்று இலக்குகளையும் அடைய தகுந்த செயல் திட் டங்கள் வகுக்கப்பட வேண்டும். இல்லாவிடில் இந்த இலக்குகள் நிறைவேறாத நம் பல கனவுகளில் ஒன்றாக இடம் பிடித்து விடும் அபாயம் உள்ளது.

### செயல் திட்டங்கள்

● முதலில் எல்லாவித பழங்குடி இன மக்களின் தலைவர் களையும், முக்கிய பிரதிநிதிகளையும் இணைத்த பழங்குடி நில வுரிமை மாநாடுகளை மாவட்ட வாரியாக பழங்குடிகள் அதிகமாக வாழும் 13 மாவட்டங்களிலும் நடத்த வேண்டும். இதன் மூலமாக இலக்குகள் குறித்த பரவலான விழிப்புணர்வு உருவாகும்.

● அடுத்த கட்டமாக அந்தந்த இனங்களின் பிரத்தியேக நிலப் பிரச்சினைகளை மையப்படுத்தி ஒவ்வொரு இனக் குழுவிற்கான கருத்தரங்குகள் நடத்தப் பெறுதல் வேண்டும்.

● இம்மாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் விவாதிப்பதற்கான ஆய்வறிக்கைகளையும், கையேடுகளையும், துண்டுப் பிரசுரங்களை யும், இதர ஆவணங்களையும் தயார்படுத்துதல் அவசியம்.

● பத்திரிக்கைகள், தொலைக்காட்சி, வானொலி போன்ற தொடர்பு சாதனங்கள் மூலம் பழங்குடி


படிப்பகம்

www.padippakam.com

நிலவுரிமையை அரசு மற் றும் பழங்குடி அல்லாதோர் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

● இத்தகைய நடவடிக்கைகளினால் பழங்குடி நிலவுரிமையை வலியுறுத்தும் பழங்குடியினர் தலைமையை உருவாக்க வேண்டும்.

● இத்தகைய தலைவர்கள், பழங்குடி நிலவுரிமை ஆதர வாளர்கள், ஆதரவு அரசியல் இயக்கங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கொண்ட மாநில பழங்குடி நிலவுரிமைக் குழுவை உரு வாக்க வேண்டும். (தற்போது இனக்குழுக்களின் பண்பாட்டு கலாச் சார ரீதியான தலைமைகளே உள்ளன.)

● இதன் கிளைகளாக அந்தந்த இனக்குழுவிற்கான குழுக்களை உருவாக்க வேண்டும். மாநில பழங்குடி நிலவுரிமைக் குழுவானது தொடர்ந்து இக்குழுக்களுடன் பலவிதங்களில் தொடர்புகளை வலுப்படுத்த வேண்டும்.

● மேற்கண்ட நடவடிக்கைகள் பழங்குடி நிலவுரிமைக்கான வலுவான இயக்கத்தைக் கட்டமைக்கும் என்பது உறுதி.

● இந்த இயக்கங்கள் மூலமாகவும், தன்னார்வ குழுக்கள் மூலமாகவும் அந்தந்தப் பகுதியில் நிலம் சம்பந்தமான கணக்கெடுப் புகளை/ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். வலுவான இயக்கம் உருவாகும் வரை ஆய்வுகள் காத்திருக்க வேண்டிய தில்லை.

● கள ஆய்வுகளின் அடிப்படையில் மாவட்ட நிர்வாகத் திற்கும், அரசிற்கும் தொடர்ந்த நெருக்கடிகள், நிர்ப்பந்தம் உரு வானாலே இந்த இலக்குகளை நோக்கி அரசின் கவனத்தைத் திருப்ப முடியும்.

5-ஆவது அட்டவணைப்படுத்துதலில் முக்கிய இடையூறாக இருப்பது பழங்குடிகள் ஒரே பஞ்சாயத்தில், ஒரே ஒன்றியத்தில், ஒரே மாவட்டத்தில் இல்லாததாகும். உதாரணமாக, கள ஆய்வு செய்தவர் கள் ஈரோடு மாவட்டத்தில் தளவாடி மற்றும் கடம்பூர் பகுதிகளில் உள்ள பழங்குடி கிராமங்களை ஒரே ஒன்றியமாக்குவதையும், கோவை மாவட்டத்தில் வெள்ளியங்காடு முதல் ஆணைக் கட்டிவரை ஒரே ஒன்றியத்தை உருவாக்குவதையும் பரிந்துரைத்து உள்ளார்கள். அதே போல் திருவள்ளூர், காஞ்சிபுரம், பெரம்பலூர் போன்ற மாவட் டங்களில் சமவெளிகளில் நிலமின்றி வாழும் ஆதிவாசிகளுக்கு தரிசு நிலம் வழங்கப்பட்டு தரிசு நிலம் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அவர் கள் கொண்டுவரப்பட வேண்டும் என்று கூறி இருக்கிறார்கள். ஆகை யால் 5-ஆவது அட்டவணைப்படுத்துதலை அடிப்படை யாகக் கொண்ட கள ஆய்வுகள் அவசியம்.

மேலும் பழங்குடிகள் தங்கள் நிலங்களை தொடர்ந்து இழப் பதைத் தவிர்க்க, புது விவசாய உத்திகளையும், பயிர் பாதுகாப்புத் திட்டங்களையும் செயல்படுத்தபழங்குடி கிராம வாரியாக குழுக்கள் அமைக்கப் பெறுதல் வேண்டும்.

இச்செயல் திட்டங்கள் வரிசைக்கிரமமாக, தாமதமின்றி, உறுதியுடன் செயல்படுத்தப்பட்டால், பழங்குடி மக்கள் தாங்கள் இழந்த உரிமைகளைப் பெறுவதுடன் மேலும நிலங்களை இழப்பது தடுக்கப்படும்.

**இறுதியாக,**

நமது இருப்பு என்பது நம்மை அறிவதோடு, நாமல்லாத பிற வற்றை அறிதலும் அதை எதிர்கொள்ளுதலும் ஆகும். பழங்குடி களின் தனித்தன்மையோடு கூடிய சமூக வாழ்க்கை, பழங்குடி அல் லாதாரை, அவர்சார்ந்த அரசியலை தக்க வகையில் எதிர்கொள் ளும்போதுதான் உறுதிபடுத்தப்படும் என்பதால், பழங்குடிகளே, இழந்த நில உரிமையை மீட்க நாம் நம்மை பலமுடன் தகவமைத்துக் கொள்வோம்.

**அறிவிப்பு**

கட்டுரைகளையும் படைப்புகளையும் அனுப்புவோர், ஒவ்வொரு மாதமும் 10 தேதிக்குள் எங்களுக்குக் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவும்.

சந்தாதாரர்கள் தங்களின் ஆண்டுச் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

புதிய வாசகர்களுக்கு இதழை அறிமுகப்படுத்தி அவர்களைச் சந்தாதாரர் களாக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**– ஆசிரியர்**



படிப்பகம்

www.padippakam.com

**தலித் நிலஉரிமை கருத்தரங்கம்**

**2, டிசம்பர் 2005 மாலை 2.30**

**ADMS Hall, சமாதானபுரம்**

**பாளையங்கோட்டை, திருநெல்வேலி**

**தொடர்பு - பரதன் 94433-38086**

**தலித் நிலவுரிமை கருத்தரங்கம்**

**2005 டிசம்பர் 2 காலை 10 மணி**

**நற்செய்தி நிலையம், தூத்துக்குடி**

***ஸ்பின்னிங் மில் எதிரில்***

**தொடர்பு: பேச்சிமுத்து**

**04639 -246677, 04639 - 246799**

**தலித் நிலவுரிமை கருத்தரங்கம்**

**டிசம்பர் 8, 2005, தஞ்சாவூர்**

**தொடர்பு: ரவிச்சந்திரன் 94431-51135**

**தலித் நிலவுரிமை மய்யக்குழு கூட்டம்**

**டிசம்பர் 17, 2005**

**இடம் - இக்ஸா மய்யம்**

**நேரம் மாலை 2.30**

**தலித்மக்கள் இயக்கத்தினர்**

**'செயல் வீரர்களுக்கு பயிற்சி முகாம்'**

***நாள் :* டிசம்பர் 28.-29**

***இடம் :* ஏற்காடு, சேலம் மாவட்டம்**

***தொடர்பு :***

**வழக்கறிஞர் முத்துசாமி 94432-01866**

மனித உரிமை நாள் மாநாடு

**டிசம்பர் 10, 2005**

**கிறிஸ்து அரசர் வளாகம் விழுப்புரம்**

**பொருள் : தமிழக தலித் கத்தோலிக்கர்களின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்கான செயல்திட்டம்**

தலைமை : **பேராயர் அந்தோணி ஆனந்தராயர் (புதுவை - கடலூர்)**

முன்னிலை:

**அருட்திரு. அந்தோணிசாமி**

**அருட்திரு. மு.ஆ. ஜோஸ்**

சிறப்புரை : **சிவகாமி**

தொடர்பு : **அருட்திரு. வளன், 94435-97394**

# முகத்தில் முகம்

புதிய கோடாங்கியை மாதந்தோறும் தவறாது படிக்கிறேன். எனது நண்பர்களுக்கும் அறிமுகப்படுத் துகிறேன் அவர்களின் வரவேற்பையும் ஆதரவையும் அது பெற்று வருகிறது. நவம்பர் இதழ் பற்றி சில கருத்துக்கள். தலித் நில உரிமை பற்றிய கருத்தரங்குகளைப் பல இடங்களில் தலித் அமைப்புகள் நடத்தி வருவது பெரிதும் பாராட்டத்தக்கது. இத்தகைய கருத்தரங்கு கள், தலித் நில உரிமைப் போராட்டத்திற்கு மக்களை அணி திரட்டுவதில் முக்கிய பங்காற்றும் என்பதில் ஐயமில்லை. தலித் விடுதலையே நாட்டின் விடுதலை எனும் தலைப்பில் வந்துள்ள ரூத் மனோரமாவின் நேர்காணல் இந்த இதழின் தலைசிறந்த அம்சம். அம்பேத்கர் வகுத்த பாதையில் உண்மையாக உழைக்க வேண்டும், மார்க்ஸியம் மற்றும் தலித் விடுதலைக்கு ஏதுவான அனைத்துக் கருத்தியல்களை ஏற்றுக் கொள்வதும் இதில் அடக்கம் என்று தலித் விடுதலைப் போராளி ரூத் மனோரமா கூறுவது புதிய கோடாங்கி வாசகர்களுக்கு புதிய சிந்தனை களைத் தரும். மிகவும் ஆக்கபூர்வமான அனுபவ உரை இது. ரூத் மனோரமாவுக்கும் புதிய கோடாங்கி ஆசிரியர் குழுவுக்கும் என் உளங்கனிந்த வாழ்த்துக்கள்.

- தி.க.சி., நெல்லை.

திருமதி.சிவகாமியின் வரலாற்றில் யூகங்கள் ஆய்வுப் பான்மையுடன் வெளிவந்துகொண்டு இருக்கிறது. 'மார்க்ஸியர் களின் வாய்பாடு' என்பதை 'கம்யூனிஸ்ட்டுகளின் வாய்பாடு' என்று அவர் குறிப்பிட்டு இருந்தால் சிறப்பாக இருந்து இருக்கும்

- சோதிப்பிரகாசம், சென்னை.

நவம்பர் 2005 தலையங்கத்தில் உயர்பதவியில் இருக்கும் மாவட்ட ஆட்சியர்கள் இது நியாயம் அது அநியாயம் என்று எளிய மக்களின் பால் அக்கறை காட்டுவதில் தயக்கம் காட்டுவது பயத்தினால்தான் என்று குறிப்பிட்டுள்ளது தனிச் சிறப்பு. அந்தந்த ஆட்சிக்கு தகுந்தவாறு தன்னை குறுக்கிக் கொள்ளா விடில் தண்ணியில்லாக் காட்டுக்குத்தான் போகவேண்டும். இதில் தன்மானமும் முதுகெலும்பும் உள்ள **IAS/IPS** ஒருசிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். தயங்காமல் உண்மை நிலையை தோலுரித்துக் காட்டிக் கொண்டிருக்கிறது புதிய கோடாங்கி தலையங்கம்

- நவீன்குமார், நடுவிக்கோட்டை.

நிலம் பற்றிய சிவகாமி அவர்களின் செய்திகள் மற்றும் தலித்துகள் பற்றிய விரிவான ஆய்வு சில கேள்விகளையும் எழுப்பி வருகிறது. குடியரசனின் கணிதம், மக்கள் அறியாத அம்பேத்கர் தொடர் சிறப்பு. தச்சூரின் போராட்டம் பற்றிய சன்னா வின் கட்டுரை கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. அனித்ராவின் செயல்பாடுகள் பாராட்டும்படியாய் உள்ளது. அவர்கள் பணி தொடர வேண்டும். இன்னமும் தலித் மக்களிடையே தேர்தலுக்கு முன் சரியான விழிப்புணர்வு போய்ச் சேர வேண்டும். பஞ்சமி நிலம், கல்விக் கட்டணம் குறைப்பு, வேலைவாய்ப்பு பற்றி தொடர் முயற்சி செய்ய வேண்டும். அதற்கு முயற்சிக்க வேண்டும்.

- வை. சரவணன், மேட்டூர் அணை.

படிப்பகம்

www.padippakam.com




Postal Regn No. TN/PMG(CCR)/842/03-05 Registrar of Newspapers for India Regn. No. TNTAM/2001/4926

படிப்பகம்